பூமாலையே தோள் சேரவா

அழகவல்லி கல்யாணசுந்தரம்



பூ மாலையே தோள் சேரவா



1

''அழைக்கிறான் மாதவன்! ஆநிரை மேய்த்தவன்! மணி முடியும். மயில் இறகும், எதிர் வரவும், துதி புரிந் தேன்! மாதவா கேசவா ஸ்ரீதரா ஓம்!'' என்று ஜேசுதாஸ் கணினியில் தன் தேன் குரலை கசியவிட இடையில் குருவே சரணம் என்று மலேசியா வாசுதேவனின் குரலும் இணைந்து ஒலித்து, அந்த வியாழக்கிழமையின் காலைப் பொழுதை வேளச்சேரியில் இருந்த அந்த அடுக்கு மாடி குடியிருப்பில் பக்தி மணம் கமழ வைத்துக் கொண்டு இருந்தது.

'சத்யா, தர்ஷினி, எழுந்திருங்க. பாட்டு முடியப் போகுது. யாராவது ஒருத்தர் குளிக்க பாத்ரூமிற்குப் போங்க.

அம்மாவை டென்ஷன் படுத்தக்கூடாது'' என்று யோசனை குருமூர்த்தியின் குரலுக்கு செவி மடுக்க இருவருமே தயாராக இல்லை.

''முன் ஏர் செல்லும் வழியே பின் ஏர் செல்லும். நீ போ சத்யா முதலில்'' என்று சொன்ன ப்ரியதர்ஷினி. மூன்று மாதங்களுக்கு முன்பு, சத்யபாமா பொறியியல் கல்லூரியில் விஷுவல் கம்யூனிகேஷனில், இளங்கலை பட்டம் பெற்றவள். படிப்பை முடிக்கும் முன்பே ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் கேம்பஸ் இன்டர்வியூ மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அலுவலகத்தில் தனக்கென்று ஒரு இடத்தை பெற்ற புத்திசாலி. அப்பாவின் செல்லம். இருபத்தி இரண்டில் அடி அடுத்து வைத்து நான்கு மாதங்களாகிறது.

''மிச்ச எல்லாத்துக்கும் நான்தான் சின்ன பொண்ணு. எனக்குதான் முதலில் கொடுக்கணும் என்று சண்டை பிடிக்கத் தெரியுது. இப்ப நீ முன்னாடி போ...'' என்று சொன்ன சத்யபிரபா, பையோடெக்னாலஜியில் முது கலை பட்டம் பெற்று, சென்னை பல்கலைக் கழகத்தில் ஓராண்டாக உதவி பேராசிரியராகப் பணிபுரிபவள். இருபத்தி நான்கு வயதாகிறது.

கல்லூரியில் எத்தனையோ விதமான மாணவர்களைச் சமாளிக்கும் ஆசிரியப் பணி புரியும் அவளால் விதம் விதமாக பேசி, மல்லு கட்டினாலும், தங்கையை அவள் நினைக்கும் எந்த விஷயத்தையும் செய்ய வைக்க முடியாது. இருவருக்கும் இடையே ஒன்றரை ஆண்டுகள் வித்தியாசம். பெரியவளுக்கு வரன் பார்க்க ஆரம்பித்து ஐந்து மாதங்களாகிறது. சரியாக அமையவில்லை. யார் பேப்பரை முதலில் படிப்பது? யார் முதலில் குளிப்பது?

யார் அம்மாவிற்கு சமையலில் என்ன உதவி செய்வது? போன்ற தங்கையுடன் நடக்கும் சின்னச் சின்ன சண்டைகளில் தோற்பதனால் அம்மாவின் செல்லம்.

''மணி எட்டாகப் போகுது. மூணு பேரும் ஹாலை விட்டு அசையாமல் உட்கார்ந்து இருந்தால் என்ன அர்த்தம்? யாருக்கும் இன்னிக்கு வேலைக்குப் போகும் எண்ணமே இல்லையா?'' என்று அதட்டியது அந்த இல்லத்தரசி புவனேஸ்வரி. அகிலம் காக்கும் அன்னையின் பெயருக்கேற்ற கம்பீரம் தோற்றத்திலும் குரலிலும் இருக்கும்.

''நான் இன்னிக்கு சத்யாக்கு வரன் பார்ப்பது சம்பந்தமா, ஒருத்தரை வரச்சொல்லி இருக்கிறேன். அதனால் நான் இன்று லீவு'' என்று சொன்னார் குருமூர்த்தி.

''இதை ஏன் நேற்றே சொல்லவில்லை? நான் மதிய உணவு கட்டி வச்சு இருக்கேனே?'' என்று கணவரை முறைத்தவரின் கண்ணில் ப்ரியதர்ஷினி கண்ணாடி டீபாயின் மேல் காலை போட்டு இருப்பது பட. ''ஏய் தர்ஷினி காலை எடு. நாலு பேர் வரப்போக இருக்கும் இடத்தில் இது என்ன போஸ்? எழுந்திரிச்சு குளிக்கப் போ. உனக்கு ஆபீஸ் இல்லையா?'' என்று அதட்டினார்.

''உங்களுக்கு எப்பப் பார்த்தாலும் அவதான் உசத்தி'' என்ற வாசகத்தை சத்யா அப்பாவிடமும், தர்ஷினி அம்மாவிடமும், ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் பத்து முறை சொல்வார்கள். அந்தக் கணக்கு இந்த வினாடியில் ஆரம்பித்தது.

''பாருங்கப்பா. அம்மா எப்பப் பார்த்தாலும் என்னையே ஏதாவது சொல்லிட்டு இருக்காங்க. கால் தெரியுது என்று சொல்ல நான் நைட்டி கூட போடலை. அப்புறம் எதுக்கு

என்னைத் திட்டுறாங்க. அவள் சோபாவில் கால் போட லாம். நான் டீபாயில் போடக் கூடாதா?'' என்று பஞ் சாயத்திற்குப் போனாள் தர்ஷினி.

''ஹேய் அது கண்ணாடி என்பதால் கால் வைக்காதே என்று சொன்னாங்க. சோபாவில் கால் வைத்தால் என்ன? அம்மா உன்னை ஏதாவது சொன்னால் அவங் களிடம் பதில் சொல்லு. எதுக்கு அப்பாவிடம் பேசுற? தேவை இல்லாமல் என்னை இழுக்கிற?''

''நான் அப்பாவிடம் பேசினால் நீ ஏன் நடுவில் வரு கிறாய்?''

''நீ என் பேரை இழுத்ததால் தான் வந்தேன். நீயும் உங்க அப்பாவும் மான்செஸ்டர். செல்சீ. நானி. ரூனி என்று வெட்டிக் கதை பேசி இருந்தால் நான் ஏன் வரேன்?''

''கால்பந்து பிரீமியர் லீக் பற்றி பேசினால் வெட்டிக் கதையா? ப்ளேயர்ஸ் பேர் தெரியலை என்று உனக்குப் பொறாமை. பேசறது வெட்டிக் கதை என்று சொல்ற'' மாறி மாறி பேசும் இரண்டு மகள்களுக்கும் இடையே அமைதி காக்க வேண்டும் என்று நினைத்தாலும், சத்யா வின் சில கருத்துக்கள் அவரை தர்ஷினிக்கு ஆதரவாகப் பேச வைத்து விடும்.

''விளையாட்டு பற்றி பேசுறதை எப்படிம்மா வெட்டிக் கதை என்று சொல்ற? அது ஒரு ஆர்வம் தானே?'' என்று குருமூர்த்தி ஆரம்பிக்க, புவனேஸ்வரி குரல் கொடுத்தார்.

''இன்னும் இந்த வெட்டி மன்றம் முடியலையா? சத்யா, நீ இந்த பாத்ரூமிற்குப் போ. தர்ஷினி நீ அப்பா ரூமிற்குப் போ. இன்னும் பத்து நிமிஷத்துல ரெண்டு பேரும் குளிச்சுட்டு வரணும்'' என்று போட்ட அதட்ட லில் இருவருமே முகத்தை சுளுக்கினர்.

''நான் அப்பா ரூமில் குளிக்க மாட்டேன். அப்புறம் 'இங்கே சோப் இருக்கு. அங்கே முடி இருக்கு' என்ற உங்க குற்றப் பத்திரிகைக்கு பதில் சொல்ல என்னால் முடி யாது. வேணும்னா உங்க செல்லப் பொண்ணை போகச் சொல்லுங்க'' என்று தர்ஷினி அவசரமாகச் சொன்னாள்.

''உன்னால் முடியாது என்றால் அதோட நிறுத்து. நான் எங்கே குளிக்கணும் என்பதை நீ சொல்லத் தேவை இல்லை. நான் நம்ம ரூமில் தான் குளிப்பேன்.''

''இப்ப வந்தேன். ரெண்டு பேருக்கும் இருக்கு. ரெண்டு பொம்பளைப் பிள்ளைங்க இருக்கீங்க. ஒருத்தி யாவது காலையில அம்மா சமையல் கட்டுல வேலை பார்க்கிறாங்களே கூட வந்து ஒத்தாசை பண்ணுவோம் என்று நினைக்காதீங்க. ஒருத்தி சட்டமா பேப்பர் படிப்பா. ஒருத்தி ட்ரெட் மில்லில ஓடுவா. யாராலையும் எனக்கு பிரயோஜனம் கிடையாது. இங்கே யாரு சின்ன ஜார் மிக்சியை கழுவாமல் வச்சது? தர்ஷினி நீதானா?''

''நோம்மா, இந்த வெங்காயம் அரைச்சுப் பூசுறது, வெள்ளரிக்காய் கடிச்சுத் திங்குறது எல்லாம் நம்ம வேலை இல்லை. நாங்க எல்லாம் பொறக்கும் போதே அழகு. எங்களுக்கு இந்த அழகு பராமரிப்பு கலை எல்லாம் தேவைப்படாது. ஐ ஆம் மிஸ் வேர்ல்ட்...''

''நீ மிஸ் வேர்ல்டா? கண்ணாடியே பார்க்க மாட் டாயா? இல்ல கண்ணு சரியா தெரியாதா?''

''ஏன் என் அழகுக்கு என்ன குறைச்சலாம்...''

''இப்ப ரெண்டு பேரும் வாயை மூடிட்டு குளிக்கப் போகலை. ரெண்டு பேருக்கும் ப்ரேக்பாஸ்ட் கிடை யாது'' என்ற புவனேஸ்வரியின் சத்தம் அவர்களின் வாயை அடக்கியது.

ஒருவருக்கொருவர், கடித்துக் கொண்டாலும், விடு முறை நாளில் சேர்ந்து வீட்டைச் சுத்தம் செய்வதிலும் வெளியே நண்பர்களோடு போகும்போது ஒருவருக்கொரு வர் விட்டுக் கொடுக்காமல் பழகுவதிலும் அவர்களை மிஞ்ச பூலோகத்தில் சகோதரிகள் புதிதாக பிறந்துதான் வரவேண்டும்.

அன்று மாலை அலுவலகத்தில் இருந்து வந்த போதே வீட்டில் ஒரு அசாதாரண அமைதி நிலவியதை ப்ரியதர் ஷினியால் உணர முடிந்தது குருமூர்த்தி - புவனேஸ்வரி இருவருமே அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றியவர்கள். ஒரு ஆண்டுக்கு முன்பு, சத்யா பணியில் சேர்ந்த உடனே அம்மாவை வற்புறுத்தி விருப்ப ஓய்வு பெற வைத்தாள்.

''நமக்கு என்னம்மா கஷ்டம்? இத்தனை நாள் எங்களுக் காக ஓடி ஓடி உழைச்சீங்க. இனிமேல் ஜம்முன்னு கால் மேல் கால் போட்டு ரெஸ்ட் எடுங்க. அதான் நானும் இப்போ வேலைக்குப் போய் விட்டேனே? தர்ஷினிக்கு இன்னும் ஒரே செமஸ்டர். தேவையான பணத்தை நான் கொடுக்க மாட்டேனா?'' என்று வாதாடி அவரை சம்மதிக்க வைத்தாள்.

இருவருமே பள்ளி ஆசிரியர் என்பதால், மாலையில் சீக்கிரமே வீடு திரும்பி விடுவார்கள். பெற்றோரை பின் பற்றி, சத்யாவும் ஆசிரியப் பணியையே மேற்கொள்ள, அவளும் ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்து விடுவாள். தர்ஷினிக்கு வரையறை செய்யப்படாத வேலை நேரம். ஒரு நாள் வேலையே இருக்காது. வேலை இருந்தாலும் செய்ய மூட் இருக்காது. சில நேரம் கற்பனை குதிரை ஓடும் போது, அதை குறித்து வைக்காவிடில், தேவைப்படும் போது நினைவில் உதிக்காது.

அவளும் எட்டு மணிக்குள் வீட்டுக்கு வந்து விடு வாள். அவள் வந்த பின்புதான் இரவு உணவு நடக்கும். அன்று எட்டேகால் ஆகி விட, அம்மாவிடம் மண்டகப்படி கிடைக்கும் என்று பயந்தபடி, உள்ளே நுழைந்த தர்ஷினி, ''ஹாய்-மா. சாரி கொஞ்சம் லேட் ஆகிடுச்சு. என்னோட பிரெண்ட் நிஷாவை பொண்ணு பார்க்க இந்த வாரக் கடைசில வராங்களாம். அதுக்கு கொஞ்சம் பர்சேஸ் பண்ணனும் என்று சொன்னாள். கிளம்பிட்டேன். என் வாட்ச் ஓடலை. வாங்கி ஒரு வருஷம் தானே ஆச்சு? மணி ஆனது தெரியாமல்...'' தான் பேசும் எந்த வார்த் தையும் யார் காதிலும் ஏறவில்லை என்பதை உணர்ந்து பேச்சை நிறுத்தினாள்.

தமக்கையை ஜாடையில் உள்ளே வரவழைத்து, ''என்ன ஆச்சு? ஒரே மயான அமைதி?'' என்று கவலை யோடு கேட்டாள்.

''காலையில் யாரோ வராங்க என்று அப்பா சொன் னாங்க இல்லையா? அந்த பேச்சு வார்த்தை சுமுகமா போகவில்லை போல. நான் ஊகமா தான் சொல்றேன். இப்ப என்ன? எனக்குன்னு ஒருத்தன் இனிமேலா பொறக்க போறான்?'' என்று அலட்சியமாக சொல்வது போல தோன்றினாலும், அவளுக்குள் ஒரு அடிபட்ட வலி இருந்தது.

'இவங்க இன்னும் பழைய வட்டத்தை விட்டு வெளியே வர மாட்டேங்கறாங்க. அந்த ப்ரோக்கர் பொன்னுசாமியை விட்டால் மாப்பிள்ளை சொல்ல வழியா இல்லை? எவ்வளவு படிச்சு என்ன? தெரிஞ்சவங்க சொந்தக் காரங்களுக்குள் சொல்லி வரன் அமையணும் என்று

எதிர்பார்ப்பது சரியா? நெட்ல தேடலாம் என்று ஆயிரம் வாட்டி சொல்லியாச்சு. கேட்டால்தானே? பயம், தெனாலி கமல் மாதிரி எடுத்ததுக்கு எல்லாம் பயம். படிப்பைக் கூட்டி சொல்லிடுவாங்களோ? வேலையில் இல்லாமல் போய் விடுவானோ? குடும்ப விபரங்கள் பொய்யாய் இருந்தால்... மாப்பிள்ளை நல்லபடியாக பெண்ணை வைத்துக் கொள்ளா விட்டால்... என்று தொட்டது தொண்ணூறுக்கும் பயம். இன்னிக்கு இவங்களை ஒரு வழி பண்ணிடறேன்' என்று மனதிற்குள் முடிவெடுத்து முகம் கழுவி உடை மாற்றி வெளியே வந்தாள்.

''புளிக்காய்ச்சல் மணம் ஆளை தூக்குதே! இடியாப்பமா? நாளைக்கு லஞ்ச் புளிசாதத்தோடு வடகம் நிறைய வைங்க. அனேகமா எனக்கு வடகம்தான் கிடைக்கும் என்று நினைக்கிறேன். புளிசாதம் வாசனை தான் நான் பிடிக்கலாம். இப்ப இடியாப்பம் நான் சாப்பிட ரெடி. என்னோட 'யார் அதிகமா சாப்பிடறது' என்று போட்டி போட யார் வரா?'' என்று இரண்டு கைகளையும் தேய்த்த படி உணவு மேஜைக்கு வந்தாள் தர்ஷினி. அலுவலகத்தில் நடந்த பல கதைகளைப் பேசி தீர்த்த தர்ஷினி. கடைசியாய் சத்யா விஷயத்திற்கு வந்தாள்.

''அப்பா, நாங்களும் வளர்ந்தாச்சு. நாங்க சொல்றதையும் காது கொடுத்து கேட்கலாம். நாங்க உங்க பசங்க என்பதால், அப்படியே ஏற்றுக் கொள்ளவோ, ஒதுக்கவோ தேவை இல்லை. சத்யாக்காக நீங்க ஆறு மாசமாக அந்த ப்ரோக்கரை நம்பி வரன் தேடுறீங்க. அவர் கொண்டு வரும் வரன் ஏதோ காரணத்துனால நமக்கு செட் ஆகலை. அதனால...''

''இன்டர்நெட்ல பதிவு பண்ற கதை வேண்டாம்...'' அவசரமாக வந்தது புவனேஸ்வரியின் குரல்.

''ஏன் வேண்டாம்? நீங்க டீச்சர் தானே? உங்க பிள்ளைகளைக் கேள்வி கேட்க ஊக்கப்படுத்தி இருப்பீங்க தானே? முதலில் எனக்கு ஏன் வேண்டாம் என்பதற்கு ஒரு உருப்படியான காரணம் சொல்லுங்க'' என்று அவருக்கு மேலே குரல் உயர்த்தினாள் தர்ஷினி.

''பொண்ணை பெத்தவங்களுக்கு அவங்க சந்தோஷமா இருக்கணும் என்று ஆயிரம் கவலை இருக்கும் தர்ஷினி. அம்மா மேலே கோபப்படாதே. நீ சின்ன பொண்ணு. உனக்குப் புரியாது...'' என்று குருமூர்த்தி இடையில் புகுந்தார்.

''நான் ஒண்ணும் சின்னப் பொண்ணு இல்லை. எனக்கு புரியாத விஷயத்தைப் புரிய வைங்க என்று தான் கேட்கிறேன்.''

நேரில் பார்த்து நல்லா விசாரிச்சு நடக்கும் திருமணங்களிலேயே எத்தனையோ தவறுகள் நடக்குது. நெட்ல அவங்க கொடுக்கிற விபரம் எல்லாம் உண்மை என்று யாருக்குடா தெரியும்?''

''அ..ப்..பா...! அவங்க கொடுக்கும் விபரங்களை அப்படியே யார் எடுத்துக்கச் சொன்னா? படிச்ச சர்ட்டிபிகேட் உண்மையா என்று பல்கலைக் கழகத்தில் கேட்கலாம். பார்க்கும் வேலை உண்மையா என்று அலுவலகத்தில் விசாரிக்கலாம். வீட்டு முகவரியில் நேரே போய் பார்க்கலாம்...''

''நேரில் போக முடியாத தூரத்தில் இருந்தால்...''

''அம்மா! நீங்க சொல்றது வெளிநாட்டு வரனுக்குப் பொருந்தலாம். நாம் உள் நாட்டிலேயே வேலை பார்க்கும் மாப்பிள்ளை தேடலாமே? இந்தியாவிற்குள் எங்கே இருந்தாலும் போய் விசாரிக்கலாமே? ஒரு நிறுவனத்தில்

பதிவு பண்ணும்போது அவங்களும் விசாரணை பண்ணு வாங்கம்மா.''

''ஆயிரக்கணக்கில் விண்ணப்பங்கள் இருக்கும்போது அவன் ஒவ்வொண்ணையுமா பார்ப்பான்...''

''அவன் பார்க்கவே வேணடாம் நாம் துப்பறியும் நிறுவனம் வைத்து நாம் விசாரிப்போம். அதுல என்ன பிரச்னை? ஆனால் நீங்க சொல்றதுல ஒண்ணு நான் ஒத்துக் கொள்கிறேன். அவங்களையும் மீறி சிலர் தவறு செய்யத் துணிந்தால் நிறுவனம் பொறுப்பேற்காது. நாம் ஏற்கனவே பெரிசா இருக்கிற நிறுவனம் இல்லாமல், ஆரம்பித்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆன, ஒரு வளரும் நிறுவனத்திற்குப் போகலாம். தங்களின் பேர் கெட்டு விடக்கூடாது என்பதற்காக கூடுதல் கவனம் எடுத்துப்பாங்க.''

''அவங்களிடம் அதிக விண்ணப்பங்கள் இருக்காதே...?'' என்ற புவனேஸ்வரியின் ஆட்சேபணையை ''என்னதான் சின்ன நிறுவனமாக இருந்தாலும் நம்ம பொன்னுசாமி ஆறு மாசத்தில் காட்டிய பதினைந்து வரன்களை விட நிச்சயம் ஜாஸ்தி இருக்கும் புவனா. அவள் சொல்வதை கேட்கக் கூடாது என்று உனக்கு விரதமா?'' என்று குரு மூர்த்தி அடக்கினார்.

''அதில்லைங்க...''

''அம்மா, சத்யா மேலே உங்களுக்கு எவ்வளவு பாசம் இருக்கோ, அதுல பாதியாவது எனக்கும் இருக்கும்மா. நான் வரனைப் பார்க்கலாம் என்றுதானே சொல்றேன். அதுக்கே முடியாது என்று சொன்னால் எப்படி? ஆரம்பிக்கும்போதே அஸ்து போடாதீங்க. நான் சொல்வதற்காக ஒரு முயற்சி எடுத்துதான் பாருங்களேன். ஆறு

மாசம் அந்த பொன்னுசாமியை நம்புவீங்க. ஆனால் பெற்ற பொண்ணு சொல்வதை செஞ்சு பார்க்கலாம் என்று முயற்சி கூட பண்ண மாட்டீங்களா? புவனேஸ் வரி நல்ல டீச்சரா இருக்கலாம். ஆனால் மக்கு ஸ்டூடன்ட். எத்தனை தடவை சொன்னாலும் புரியவே மாட்டேங்குது...'' என்று தர்ஷினி அலுத்துக் கொள்ள, மூவருக்குமே சிரிப்பு மலர்ந்தது.

''சரி, இன்னிக்கு நீ சொல்லும் இடத்தில் பார்க்கலாம். போன் காலிற்கு பேசுறவங்க ரெஸ்பான்ஸ் எனக்கு பிடிக்கலை என்றால் விட்டு விடணும். தொடர்ந்து கட்டாயப் படுத்தக் கூடாது...''

''இன்னிக்கு நிச்சயம் கட்டாயப்படுத்த மாட்டோம்...'' என்று அவசரமாக தர்ஷினி ஒத்துக் கொள்ள, 'ஹா! இந்த வார்த்தை விளையாட்டு எல்லாம் என்னிடம் வேண்டாம். இன்னிக்கு ஆரம்பம் சரி இல்லை என்றால் இந்த முறையே வேண்டாம்'' என்று தன் நிலையை தெளிவு படுத்தினார் புவனேஸ்வரி.

''ஹய்யோ அம்மா! சரி, உங்களுக்கு எப்படி இருந்தால் பிடிக்கும்? அதை முதலில் சொல்லிடுங்க. அப்புறம் எப்படி இருந்தாலும், அது சரி இல்லை. இது சரி இல்லை என்று நீங்க டபாய்த்து விட்டால்...'' என்று கிடுக்கிப் பிடி போட்டாள் தர்ஷினி.

''போன் மணி அடித்த மூன்று ரிங்கிற்குள் எடுக்க வேண்டும். வெளிவரும் முதல் வார்த்தை, மங்களமாக இருக்க வேண்டும். அது ஒரு சுப சகுனம் என்று எடுத்து இந்த முயற்சியில் இறங்குவேன். இது கட்டாயத் தேவை. மிச்ச விசாரணை அப்புறம்'' என்று கண்டிப்பாகச் சொன்னார் புவனேஸ்வரி.

''சென்டிமென்ட் குவீன். அவங்க எதிர்பார்ப்பைச் சொல்லிட்டாங்க. அப்பா உங்களுக்கு ஏதாவது ஆசை இருக்கா?''

''பதிவு பண்ணிய குரல் முடிந்து பேசப்படும் முதல் வார்த்தை 'ஹலோ'வாக இல்லாமல் இருக்க வேண்டும்....''

''ஹா! ஹா! ஹா! அப்பா உலகத்துல இருக்கும் முக்கால் வாசி ஆட்கள் போனில் பேசும் முதல் வார்த்தை அதுதான்பா. நீங்க தமிழ் ஆசிரியர். அதனால் வணக்கம் சொல்லி ஆரம்பிக்கறீங்க. அம்மா வாழ்க வளமுடன் சொல்லி ஆரம்பிக்கிறாங்க. அதனால் எல்லோரும் வேற வார்த்தை சொல்லணும் என்று எதிர்பார்ப்பது உங்களுக்கே கொஞ்சம் ஓவரா தெரியலை...'' என்று சிரித்த தர்ஷினி, சத்யாவிடம் திரும்பினாள்.

''அவங்க ரெண்டு பேரும் சொல்லிட்டாங்க. முக்கியமான ஆள் உங்க எதிர்பார்ப்பையும் சொல்லிடுங்க. அப்பதானே நான் பாஸ் மார்க் வாங்க முடியும்?''

''எனக்கு ஏதாவது பாடல் வரிகள் காதில் விழணும். அந்த பாட்டை வச்சு, அந்த போனை பயன்படுத்து பவரின் குணாதிசயத்தை என்னால் ஓரளவிற்கு ஊகிக்க முடிம்...''

''தாயே! இந்த டெஸ்ட்டை நீ மாப்பிள்ளைக்கு வச்சுக்கோ. கல்யாணம் நடத்த துணை செய்யும் நிறுவனத்திற்கு வேண்டாம்...''

''அம்மா பாருங்கம்மா. நான் ஏதாவது சொன்னால்...'' என்று சத்யா அம்மாவிடம் திரும்பும் போதே, ''உங்க நிபந்தனையும் சேர்த்தாச்சு மேடம். நிஷாவோட அலையன்ஸ், பூமாலை டாட் காமில் பார்த்துதான் செட் ஆச்சு

என்று சொன்னாள். அதையே முயற்சி பண்ணலாமா?'' என்று கேட்டு விட்டு தன்னுடைய மொபைலில் சேமித்து வைத்து இருந்த எண்ணை அழுத்தினாள் ப்ரியதர்ஷினி.



2

திருமண மண்டபத்தின் வாயிலில் இருந்த, விளம்பரப் பலகையில் 'அர்ஜுன் வெட்ஸ் அபூர்வா' என்ற வாசகத்தை, மெரூன் வண்ண வெல்வெட் துணியில் தெர்மோகோலினால் செய்யப்பட்ட எழுத்துக்களை பதித்து, சீரியல் விளக்குகளாலும், பூ தோரணங்களினாலும் அழகு படுத்தி இருந்ததை வீடியோ கேமராவில் பதிவு செய்த பிரேம்குமாரின் அருகில் தவிப்போடு நின்று இருந்தான் தினேஷ்.

''சார், சாரி சார். ஒரு போன் கால் பேச போய் இருந்தேன் சார். அந்த நேரத்தில், இந்த சின்ன இன்சிடென்ட் மிஸ் ஆகிடுச்சு...'' என்று இறைஞ்சும் குரலில் சொல்ல அவன் திரும்பி முறைத்தான்.

''எது சின்ன இன்சிடென்ட் எது பெரிசு என்று நீங்க முடிவு பண்ண முடியாது தினேஷ். நம்மை வேலைக்கு அழைத்தவர்கள் சொல்லணும். அவங்களுக்கு மெஹந்தி வைப்பது முக்கியம். இதை எடு என்றால் எடுக்க வேண்டியதுதான் நம் வேலை'' என்று கடினமான குரலில் சொல்ல அவனின் முகம் மேலும் வாடியது.

''சாரி சார், இனி நான் எங்கேயும் போக மாட்டேன் சார். நானே பண்றேன் சார். நீங்க பண்ணினால் எனக்குக்

கஷ்டமா இருக்கு சார். இனிமேல் கவனமா இருப்பேன் சார்...''

''வேலை செய்ய வந்த இடத்துல அதை கவனிக் காமல் சொந்த வேலை பார்க்க போன நேரம் இந்த கவனம் இருக்கணும்'' என்று கடுமையாகப் பேசும்போது அவன் மொபைல் அழைத்தது. மணியைப் பார்த்ததும் அம்மாவாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்ற, ஹெட் செட்டை காதுக்குக் கொடுத்தபடி, வேலையில் கவனமாகவே 'ம்ம், சொல்லுங்கம்மா. அப்பாவை மாத்திரை போட்டுக்கச் சொல்லிடறேன். வேற என்ன?'' என்று சுருக்கமாகக் கேட்டான்.

''என்னடா பிசியா? இப்படி வார்த்தைகளை எண்ணி எண்ணி பேசுற?'' என்று கேட்டவர் யசோதா. எதையும் யாரையும் ஒரு தடவைக்கு நாலு தடவை சரி பார்த்து எந்த வேலையையும் செய்ய வேண்டும் என்ற பிரேம் குமாரின் கொள்கைக்கு நேர் எதிர் சுபாவம் கொண்ட தாய்.

''ம்ம். ஆமாம். அப்புறமா பேசறேன்.''

''என்னிடம் பேசக் கூட முடியாமல் அப்படி என்னடா வேலை பார்த்துட்டு இருக்க?''

''கல்யாண வீட்டுல வீடியோ கவரேஜ் பண்ணிட்டு இருக்கேன்.''

''தினேஷுக்கு என்ன ஆச்சு?'' என்று பதறிய தாயை எண்ணி பல்லைக் கடித்தான் பிரேம்.

''அவனுக்கு ஒண்ணும் இல்லை. முழுசா இங்கே என் கண் முன்னால தான் இருக்கான்.''

''அப்புறம் ஏன் அவன் வேலையை நீ பார்த்துக்கிட்டு இருக்க?''

''அவன் முக்கியமான நேரத்தில் இங்கே இல்லாமல் காணாமல் போய்ட்டான்...''

''கல்யாணத்துல தாலி கட்டுவதுதான் முக்கியமான நேரம். அந்த நேரத்துல அவன் இல்லாமல் போனால் அடிச்சுத் துரத்த வேண்டியதுதான். அவனை ஏன் உன் முன்னால் இன்னும் நிக்க வச்சுட்டு இருக்க? அது சரி, சாயங்கால நேரத்துல இந்துக்கள் கல்யாணம் பண்றாங் களா என்ன?'' என்று பேச்சை வளர்த்த யசோதாவின் திட்டம் அவனுக்குப் புரியாமல் இல்லை.

''அ...ம்..மா! உங்களுக்கு என்ன வேண்டும்?''

''அந்த அபூர்வா கழுத்துல தாலி ஏறியாச்சா என்று தெரியணும்...''

''நாளைக்குக் காலை ஒன்பது பத்தரை முகூர்த்தம்...''

''ஓ! இதுக்குத்தான் இப்படி குதிச்சியா? உனக்கு தான் கேர்ள் பிரெண்ட்ஸ், பாய் பிரெண்ட்ஸ், ஓல்ட் பிரெண்ட்ஸ் யாருமே கிடையாது. வீடு, ஆபீஸ், அம்மா அப்பா, கம்ப்யூட்டர், போன் இதை விட்டால் ஒண்ணுமே தெரியாது. அவனுக்கு இருக்க திறமைக்கு பிரெண்ட் பிடிக்கிறான். அவங்களோட பேசறான. உனக்கு ஏன் பொறாமை?''

''எனக்கு அவன் மேலே பொறாமையா? நேரம்தான்.''

''சரி சரி. பொழச்சு போறான் விடு. சின்ன பிள்ளை மாதிரி அவனிடம் மூஞ்சியைக் காட்டாமல், அடுத்த வேலையைப் பாரு. பூமாலை வந்துடுச்சா? தோரணம் கட்டியாச்சா? சமையல் சாமான் எல்லாம் போதுமா? உங்க சமையல் விருந்துக்கு வந்தவங்க சாப்பிடற மாதிரி இருக்கா என்று டெஸ்ட் மட்டும் இல்லாமல் டேஸ்ட்டும் பண்ணு. அப்படியே நீயும் உங்க அப்பாவும் மறக்காமல்

சாப்பிடுங்க. அப்பாவை மாத்திரை போட்டுக்கச் சொல்லு போ...''

''சரி, உபதேசம் ஊருக்குதான் என்று நீங்க சாப்பிடா மல் படுத்துடாதீங்க. நாங்க இன்று இரவு வீட்டுக்கு வர முடியாது. வர நாளை மதியமாகி விடும். கதவை பூட் டிட்டு ஜாக்கிரதையா சாப்பிட்டுட்டு மாத்திரை போட் டுக்கங்க.''

''ஜாக்கிரதையா சாப்பிடுவதா? அப்படின்னா என்ன? ரெண்டு பேரை காவலுக்கு வச்சுட்டு சாப்பிடறதா? ஒருத்தரை பார்க்க வச்சுட்டு சாப்பிட்டால் எனக்கு வயிறு வலிக்காதா?'' என்று கண்களை விரித்த யசோதா, அவன் கண் முன்னால் இல்லை. இருந்தால் அங்கேயே அவர் பிடி சாம்பலாகி இருக்க வேண்டும்.

''நீ ரொம்ப டென்ஷனா இருக்க போல, தினேஷை ஒரு கூல் ட்ரிங்க்ஸ் வாங்கி வரச் சொல்லி குடிச்சுட்டு வேலையைப் பாரு. அவன் வீடியோதான் உருப்படியா எடுக்கலை. உனக்குக் கோபம் குறைக்கும் இந்த வேலையையாவது செய்யட்டும். நான் போனை வச்சுட றேன்'' என்று சிரித்து விட்டு போனை வைத்த யசோதா வின் முகம் பெருமிதப் புன்னகையில் மிளிர்ந்தது.

தவமிருந்து கிடைத்த அருமையான மகன். படிப்பில், அவனது நடத்தையில், செய்கையில், எதிலுமே குற்றம் சொல்ல முடியாது. அவனே அதற்கு இடம் கொடுக்க மாட்டான் என்பது வேறு விஷயம். ஆனால் ஒரு வார்த்தை மகனைப் பற்றி சொல்லிவிட்டு ஒருத்தர் ஓரடி தூரம் கூட நகர்ந்து விட முடியாது. என்னதான் தான் சொன்னதில் கொஞ்சம் கோபம் குறைந்தாலும், இன் னொருவர் தார் குச்சி போடவில்லை என்றால்

தினேஷின் கதி அதோ கதி என்பதை உணர்ந்த யசோதா, மகனிடம் பேசிவிட்டு உடனேயே, தன் கணவரை அழைத்தார்.

யசோதாவைக் கைப்பிடித்த நாளில், விழுப்புரத்தில் நடக்கும் சின்னச் சின்ன விசேஷங்களுக்கு தனி ஆளாய் சமையல் செய்து கொண்டு இருந்தவர், முப்பது ஆண்டு களில், தன் கடின உழைப்பில், படிப்படியாக முன்னேறி, இன்று நாற்பது நபர்களுக்கு தொடர்ந்தும், முன்னூறு நபர்களுக்கு திருமண சீசனிலும் வேலை வழங்கி வரும் ஒரு தொழில் அதிபர் நந்தகோபால்.

'பந்தம்' என்ற பெயரிட்டு சென்னையில் சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறு வனம். திருமண வீட்டில் தேவைப்படும் எல்லாப் பொருட்களையும் ஒரே குடையின் கீழ் வழங்கத் துவங் கப்பட்டது. செயல்பாடு சிறப்பாக அமைந்ததால், திருமண காண்ட்ராக்ட் ஏற்று நடத்தும் நிறுவனங்களில் தன் தனி முத்திரையை மிக அழுத்தமாக பதித்து விட்டது.

வாசலில் வரவேற்பிற்காக வைக்கப்படும் சந்தனம், குங்குமம், கல்கண்டு, பன்னீர், பூ வைக்கும் தட்டில் இருந்து வழி அனுப்பும்போது கொடுக்கப்படும் தாம்பூல பை வரையில், பூ, தோரணங்கள், உணவு, பானங்கள், வீடியோ, இசை, மங்கள வாத்தியம், ஐயர், அம்மி என்று அனைத்தையும் உள்ளடக்கிய சேவையை செய்வதில் கணவன் மனைவி இருவருக்குமே மனம் கொள்ளாத பெருமை உண்டு. இதை பணம் சம்பாதிக்கும் ஒரு தொழி லாக மட்டும் கருதாமல், மன வருத்தம் இன்றி, சிறந்த முறையில் திருமணத்தை நடத்தி வைக்க கிடைத்த ஒரு வாய்ப்பாக நினைத்துச் செய்து வருகின்றனர்.

''என்ன யசோ மேடம் போன் நம்பர் மாத்தி அடிச்சுட்டீங்களா?''

''வழக்கம் போல் ஊகம் தப்பு. நான் அவனிடம் பேசி விட்டு தான் உங்களைக் கூப்பிட்டேன்.''

''ஏன் என்ன ஆச்சு? கண்ணனுக்கு கோபமா?''

''மனைவியின் எண்ணங்கள் புரியவில்லை என்றாலும் மகனின் மனசாவது புரிஞ்சு வச்சு இருக்கீங்க. அது வரைக்கும் சந்தோஷம். நான் சொன்னேன் என்று போட்டு உடைச்சுடாதீங்க. அங்கே தினேஷை காய்ச்சி எடுக்குறான். பாவம், வேற ஏதாவது வேலை கொடுத்து அவனை ஒரு அரை மணி நேரம் வெளியே அனுப்பி வைங்க'' என்று சொல்லி போனை வைத்த யசோதாவின் மனம் மகனை எண்ணி உருக ஆரம்பித்தது.

கணவனுக்குப் பிறகு இவன் தொழிலை தனியாக நடத்தும்போது இன்னும் கொஞ்சம் பக்குவமாய் நடந்து கொண்டால் நன்றாக இருக்குமே? இவனுக்கு வரப் போறவள் எப்படி இருக்கப் போறாளோ? இவனுக்கு ஏற்ற மாதிரி மிஸ் பெர்பக்டோ? இல்லை நேர் மறையாக துள்ளி குதிச்சு சிரிக்கப் போறாளோ? ரெண்டு பேரும் சந்தோஷமா இருந்தால் அது போதும். முதலில் அவன் பேரை அவனுடைய வெப்சைட்டில் பதிவு பண்ண சொல்ல வேண்டும் என்று நினைத்தபடி அடுப்படிக்கு இரவு உணவு தயாரிப்புக்கு போன யசோதாவின் எண்ணம் முழுவதும் தன் ஆசை மகனைச் சுற்றிச் சுற்றி வந்தது.

''சார் உங்களை பெரிய அப்பா கூப்பிடுறாங்க'' என்று வந்த பையனைப் பார்த்த உடனே என்ன நடந்து இருக்கும் என்பதை ஊகிக்க முடியாவிட்டால், அவன்

யசோதையின் மகனாக வளர்வதில் அர்த்தமே இல்லையே?

''வரேன்னு போய் சொல்லு...'' என்று சுருக்கமாக முடித்தவனுக்கு வரும் அபிப்ராயம் இல்லை என்பதை பணியாள் வந்து அவனுடைய பதிலைச் சொன்ன உடனே புரிந்து கொள்ளா விட்டால், இந்த மகனை இருபத்தி ஆறு ஆண்டுகள் வளர்த்ததில் நந்தகோபாலுக்கு அனுபவம் போதவில்லை என்று அர்த்தம். அடுத்த சில வினாடிகளில் பிரேமின் போன் அடித்தது.

''ராஜா, நாளைக்கு முகூர்த்த மாலை இன்னும் வரலை. மணவறை அலங்காரத்திற்குச் சொன்ன பூக்களில் பச்சை வண்ணம் மட்டும் வந்து சேரவில்லை. ஒரு எட்டு பார்த்துட்டு வந்துடு. அவசரம்'' என்று நந்தகோபால் பேசியதை அலட்சியப்படுத்த முடியவில்லை.

பொய்யாகக் கூட இருக்கலாம். ஆனாலும் ரிஸ்க் எடுக்க முடியாது. வீடியோ கேமராவை, தினேஷிடம் கொடுத்து, ''பார்த்து கவனமா எடு'' என்று அறிவுரையுடன் பொருட்கள் வைக்கும் அறைக்கு நகர்ந்தான் பிரேம்குமார். சாமான்கள் அறைக்குள் போன மகன் திரும்ப எப்படி வருவான் என்பதைப் பார்க்க ஆவலுடன் காத்து இருந்த நந்தகோபாலுக்கு ஏமாற்றம் இல்லை.

ஆறடி உயரம் அளவான நிறம். அடர் நீல நிற டி-ஷர்ட்டில் இளமஞ்சள் நிற பட்டையான கோடுகள் குறுக்கே ஓட. ப்ளூ ஜீன்சும் ஷூவுமாய் வந்த மகனின் அழகை வைத்த கண் வாங்காமல் பார்த்தார் நந்தகோபால். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற வாசகம் உண்மை. மனதில் யாரையும் கெடுக்கும் எண்ணம் இல்லை என்பதாலும், தினமும் செய்யும் யோகாசன

பயிற்சியினாலும் முகம் பொலிவாகவே இருக்கும். புன்னகைக்கும்போது முகத்தின் அழகு பல மடங்கு கூடி தெரியும் என்பதை இவன் படித்த சைக்காலஜி சொல்லித் தரவில்லையோ?

''என்ன அப்படிப் பார்க்கறீங்க? நீங்களும் அம்மாவும் நினைச்ச மாதிரி தினேஷிடம் வீடியோ கேமராவைக் கொடுத்து விட்டேன். சந்தோஷம்தானே?'' என்று சின்னப் புன்னகையோடு கேட்டபடி அருகில் வந்தவன் கையில் ஒரு ப்ரெட் பாக்கெட் இருந்தது.

''ஐம்பது பெர்சன்ட் சந்தோஷம் இருக்கு. அதை நூறு சதவிகிதம் ஆக்குவது உன் கையில் தான் இருக்கு...''

''ப்ச்! பேச்சை மாத்தாதீங்க. இதுல நாலு ஸ்லைஸ் சாப்பிடுங்க. டின்னர் சாப்பிட நேரம் ஆகலாம். எப்படித் தான் தப்பு பண்ணும் அடுத்தவங்களுக்காக நீங்களும் அம்மாவும் இப்படி மாஞ்சு மாஞ்சு சப்போர்ட் பண்றீங்களோ தெரியலை?'' என்று அங்கலாய்த்தான்.

''அப்படி இல்லை ராஜா. அவங்க எல்லாம் நம்மை நம்பி வேலை செய்பவங்க. அவங்களுக்கு நாமதான் பாதுகாப்பு அரணா இருக்கணும். இது சின்ன விஷயம் தானே? ரெண்டு தடவை சொன்னால் புரிஞ்சுக்குவான். அவனும் சின்ன பையன் தானேடா...''

''எப்படிப்பா இது சின்ன விஷயம் என்று சொல்றீங்க? வேலை பார்க்க வந்த இடத்தில் அதை மட்டும்தான் செய்யணும். அவங்க எடுக்கச் சொல்லும் எல்லாத்தையும் நாம எடுக்க வேண்டாமா?''

''கண்ணா, அந்தக் காலத்துலேயே கிருஷ்ணர் வாய்க்குள்ளே டி.வி. காட்டி இருக்கார் என்று புராணங்கள் சொல்லுது. நீ என்னமோ இந்த ஐ.டி. யுகத்துல வந்து

ஒரு மெஹந்தி எடுக்க மிஸ் ஆகிடுச்சு என்று இவ்வளவு பீல் பண்ற? இதை எடுக்க மிஸ் ஆகி விட்டாலும், இதை நம்மால உருவாக்க முடியாதா?''

''ம்ம்ம் அது பிராட்...''

''வாடிக்கையாளரிடம் நீ படித்த உளவியலைப் பயன்படுத்தி சிரித்த முகமாக எல்லா வேலைகளையும் செய்து, கனிவான வார்த்தைகளை மட்டும் பேசி நல்ல பெயர் எடுப்பவன் பணியாளர்களிடமும் அதைப் பயன்படுத்தினால் என்ன குறைந்து விடுமோ?''

''நான் குறைகிறேனா இல்லையா என்பது இருக்கட்டும். இப்படி நீங்க இருவரும் நான் கண்டிக்கும் போது தட்டிக் கொடுத்தால், அவனுக்கு மீண்டும் தவறு செய்து விட்டு உங்களின் பின்னால் ஒளிந்து கொள்ளத் தோன்றும். அது நிர்வாகத்திற்கு ஆரோக்கியம் இல்லையே?''

''உனக்கு எதிரா பணியாளர்களிடம் எங்க எண்ணத்தை ஜாடையாக வெளிப்படுத்துவது கூட கிடையாது. இது நாங்க உன் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உன்னை நல்ல நிர்வாகியாக உருவாக்க எங்களுடைய முயற்சி. அதை புரிஞ்சுக்கோ முதலில்...''

''அப்பா! நீங்களும் அம்மாவும் இவ்வளவு இரக்க சுபாவத்தோடு இருக்க வேண்டாம். நீங்க என்னை ராட்சசன் மாதிரி காட்டுவீங்க போல இருக்கு. ஆளை விடுங்க...''

''ம்ஹூம் உன்னை மாத்த இனி உன் பெண்டாட்டி வந்தால் தான் உண்டு'' என்று சலித்துக் கொண்டார் நந்தகோபால்.

''பார்க்கலாம், அவள் என்னை மாற்றுகிறாளா? நான் அவளை மாற்றுகிறேனா என்று அதை நடக்கும்போது

பார்த்துக் கொள்ளலாம்'' என்று சொன்னவனின் மொபைல் அழைத்தது.

அது இரண்டு சிம் இருக்கும் மொபைல். ஒன்று தனது சொந்த பயன்பாட்டிற்கு, மற்றொன்று, பூமாலை டாட் காமில் வரும் விசாரணைகளுக்கென்று பிரத்யேகமானது. அதில் பதிவு செய்யப்பட்ட கணினியுடன் இணைக்கப் பட்ட வாய்ஸ் ரெஸ்பான்ஸ் சிஸ்டம் இருக்கும். ஆனா லும் சில வாடிக்கையாளர்கள் நேரிடையாக தொடர்பு கொள்ள வேண்டும் என்று நினைக்கும் பட்சத்தில் ஒரு பத்து சதவிகித கால்கள் இங்கே வரும்.

அழைப்பு வந்த உடனே அது தனக்கு வரும் என்ற எதிர்பார்ப்புடன் தயாராகக் காத்திருப்பான். அவனுடைய வலைத்தளம் பற்றிய புள்ளி விபரங்கள், எப்போதும் விரல் நுனியில் இருக்கும். தன் வலைதளத்தில் பதிவு செய்யப்பட்ட நபர்கள். ஆண் பெண், படிப்பு, வயது, இனம், மொழி, மதம், என பல்வேறு விதமாக வகைப் படுத்தி, கடந்த மூன்று வருடங்களில் நடந்த அனைத் துமே அவனுக்கு மனப்பாடமாகத் தெரியும். தன் இணைய தளத்துக்கு வந்தவர், தன்னை விட்டு வேறொரு இடத்திற்கு போகக் கூடாது என்பதை முழு கவனமாகக் கொண்டு ஒவ்வொரு நாளும் தன்னுடைய அந்த இணைய தளத்தின் அமைப்பையும், செயல்பாட்டையும் தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டு இருந்தான்.

* * *

'ஆர் யு ரெடி?' என்று கேட்டு விட்டு தர்ஷினி அழுத்திய மொபைல் எண்ணில், முதல் மணி அடிக்கத் துவங்கிய உடனே ஸ்பீக்கர் மோடில் தர்ஷினி போட் டாள். அதில் இருந்து நாதஸ்வரமும் தவிலும் இணைந்து

ஒலிக்கும் பின்னணியில் 'மாங்கல்யம் தந்துனானே மமஜீவன ஹேது நா. கண்டே பத்நாமி ஸுபகே த்வம் ஜீவ சரதஸ்சதம்'' என்ற மந்திர சத்தமும் சேர்ந்து வந்த வினாடியில் வேளச்சேரி வீட்டில் புவனேஸ்வரி, சத்யப்ரபா இருவரின் விக்கெட்டும் விழுந்து விட்டது.

தன்னுடைய எண்ணுக்கு முதலில் அழைப்பவர்கள் நூறு சதவிகிதம் பேர், பெண்ணுக்கோ பையனுக்கோ மணம் செய்ய நினைப்பவர்கள். அவர்களின் நோக்கம் தன்னை அழைத்த உடனே நிறைவேறி விட்டது என்று சொல்லாமல் சொல்லும் விதமாக, அந்த நாதஸ்வரமும், மேள சத்தமும் இணைந்த அந்த மந்திர உச்சாடனம் அவனும் யசோதாவும் இரண்டு தினங்கள் கலந்து ஆலோசித்து முடிவு செய்த பாடல், இதுவரை அவனின் தொழிலை வெற்றிப் பாதையில் செலுத்தி வந்து இருக்கிறது.



3

முதல் மணி அடிக்க ஆரம்பித்ததா இல்லையா என் பதே தர்ஷினிக்கு சந்தேகமாக இருந்தது அவள் ஸ்பீக்கர் மோடில் போட்ட உடனே, மங்கள இசை முழங்க மந்திர கோஷம் காதில் விழ, அந்த நொடியே புவனேஸ்வரியின் முகம் மலர்ந்ததைப் பார்க்க தர்ஷினிக்கு பெருமை தாங்க முடியவில்லை.

'நான்தான் சொன்னேனே' என்ற பெருமிதம் முகத் தில் வழிய சத்யாவின் புறம் திரும்பினாள். 'சின்சியர்

சிகாமணி போல நம்ம பாஸ். இணைய தளத்துக்கு பேரே 'பூமாலை டாட் காம்' என்று அமர்க்களமா வச்சு இருக்கார். உள்ளே வருபவர்களை வரவேற்கும் விதமும் அமோகம். இல்லம்மா?'' என்று சத்யா அம்மாவை கேட்க, ஏற் கனவே உற்சாகத்தில் இருந்த புவனேஸ்வரி வேகமாக தலை அசைத்தார்.

''அப்பா, முக்கியமான ஆட்கள் ரெண்டு பேரும் பிளாட். இனிமேல் உங்க கண்டிஷன் நிறைவேறவில்லை என்றாலும் உங்களுக்கு மெஜாரிட்டி கிடைக்காது. நீங்க அவ்ளோதான்...'' என்று தர்ஷினி சிரிக்க, மங்கள இசை முடிந்து, பதிவு செய்யப்பட்ட குரல் ஒலிக்க ஆரம்பித்தது.

'பூமாலை இணைய தளம் உங்களை அன்புடன் வரேவற்கிறது. தமிழில் தொடர, எண் ஒன்றை அழுத் தவும். ஆங்கிலத்திற்கு எண் இரண்டை அழுத்தவும். பிற மொழிகளுக்கு எண் மூன்றை அழுத்தவும்.' என்று இனிமையான குரல் உத்தரவினைப் பிறப்பிக்க, தமிழ் மொழி ஆர்வத்தினால் எண் ஒன்றை அழுத்தினார் குருமூர்த்தி.

''நீங்கள் ஏற்கனவே உங்களின் பெயரை பதிவு செய்து இருப்பின், அதன் தற்போதைய நிலை அறிய எண் ஒன்றை அழுத்தவும். புதிதாக பதிவு செய்ய எண் இரண்டை அழுத்தவும். அல்லது நேரடியாக சேவை அலுவலரைத் தொடர்பு கொள்ள எண் மூன்றை அழுத் தவும்'' என்று உத்தரவு வர, சத்யாவை கை காட்டினாள் தர்ஷினி.

''எஸ் மேடம் உங்களின் பொற்கரத்தால் எண் மூன்றை அழுத்துங்க பார்ப்போம்'' என்று தர்ஷினி

சிரிக்க, ''அம்மா நீங்க செய்ங்க'' என்று அழைத்தாள் சத்யா.

அவசரமாக இறைவனை வேண்டியபடி, எண் மூன்றை புவனேஸ்வரி அழுத்த, ''அப்பா உங்க விருப்பம் நிறை வேறும் நேரம் இது. கவுண்ட் டவுன் ஸ்டார்ட் த்ரீ, டூ, ஒன்'' என்று பாவனையோடு முடித்தபோது பிரேம்குமாரின் தெளிவான கம்பீரமான குரல் ஒலித்தது.

''வணக்கம். உங்களுக்குச் சேவை செய்ய பூமாலை இணைய தளம் காத்திருக்கிறது. நான் பிரேம்குமார்'' என்ற அந்தக் குரலில் மேலும் ஒரு விக்கெட் விழ தர்ஷினி சத்தமாகவே சிரித்தாள்.

''வாவ்! பிரேம்குமார், ஹாட்ரிக்தான் போங்க. வெல் டன்' என்று ஆரம்பித்த தர்ஷினியை புவனேஸ்வரியின் முறைப்பு அமைதி ஆக்கியது.

''சாரி...'' என்று அவன் எதிர்முனையில் என்ன பேசுகிறார்கள் என்று புரியாமல் தவிக்க, குருமூர்த்தி இடையில் புகுந்து நிலைமையைச் சீராக்கினார்.

''வணக்கம் மிஸ்டர் பிரேம்குமார். என் பெயர் குரு மூர்த்தி. வேளச்சேரியில் இருந்து பேசறேன். என் பெண்ணுக்கு வரன் பார்ப்பது சம்பந்தமா கால் பண்ணி னோம்'' என்று பேச்சைத் துவக்கும் வேளையில், புவ னேஸ்வரி சத்தமின்றி தர்ஷினியை அறைக்குள்ளே அனுப்ப முயன்றார்.

''நான் இனிமேல் பேச மாட்டேன். ப்ராமிஸ்'' என்று ஜாடையிலேயே தன் தலையில் அடித்து தர்ஷினி சத் தியம் பண்ணிய பின், அங்கேயே அமைதியாக இருக்க அனுமதி கொடுத்தார். சத்யாவின் முகத்தில் பொங்கிய சிரிப்பை பார்த்து தர்ஷினி, 'உன்னை அப்புறம்

வச்சுக்கறேன்' என்று ஒற்றை விரல் காட்டி மிரட்ட அங்கே ஒரு மௌன நாடகம் அரங்கேறியதை கவனிக் காமல் தொலைபேசியில் பேச்சு தொடர்ந்தது.

''வணக்கம் சார். நீங்க உங்க பொண்ணு பற்றிய விபரங்களை போட்டோவுடன் மெயில் அல்லது நேரில் கொடுத்தீங்கன்னா, பதிவு பண்ணிடலாம். கட்டணம் முதல் பதினைந்து நாட்களுக்கு ஐநூறு ரூபாய். என் னிடம் தற்போது முந்நூறு பையோ டேட்டா இருக்கும். நீங்க நாளை மாலை நேரில் அலுவலகம் வந்தால் உங்க விருப்பத்திற்கேற்றாற் போல இருப்பதில் ஒன்றை தேர்வு செய்யலாம். அல்லது புதிதாக விண்ணப்பங்கள் கோர லாம். இதில் உங்களுக்கு எது வசதி படுதோ அதை செய்யலாம். வேளச்சேரியில் இருந்து பக்கம் தான். சின்னமலை சர்ச்சுக்குப் பக்கத்தில் எங்கள் அலுவலகம் இருக்கு. நாளை நேரில் சந்திக்கலாமா?''

''உங்கள் அலுவலக நேரம் என்ன? எப்போ வரட்டும்?''

''வீட்டின் முன்புறமே அலுவலகம் தான். நீங்க எப்போது வேண்டுமானாலும் வரலாம். உங்களின் வசதி தான் முக்கியம்...''

''ஓ! ரொம்ப நல்லதா போச்சு. அப்ப நாளைக்குக் காலை நான் பள்ளிக்குக் கிளம்புவதற்கு முன்பு ஏழு மணி அளவில் வரட்டுமா?''

''சரி சார். எங்க இணைய தளம் மூலமா நடக்கும் ஒரு திருமணத்துல நான் இருக்கிறேன். நாளை பிற்பகல் மூன்று மணி ஆகிவிடும். உங்களுக்கு அவசரம் என்றால் தி.நகரில் இந்தக் கல்யாண மண்டபத்துக்கு வரலாம். கையில் மடி கணினி வைத்து இருக்கிறேன். விபரங்கள் இங்கேயே கூட என்னால் காட்ட முடியும்.''

''கல்யாண வீட்டுக்கா? அங்கே யாரையும் எனக்குத் தெரியாதே? அவங்க உங்க நெருங்கிய சொந்தக்காரங் களா? திருமணம் முடிந்த உடனே அலுவலகம் வந்து விட மாட்டீர்களா? அப்ப அங்கே பார்க்கலாமே?'' என்று கேட்டார் குருமூர்த்தி.

''சொந்தக்காரங்க இல்லை சார். கஸ்டமர்தான். பூமாலை இணைய தளம் மூலமா திருமணம் நிச்சயம் ஆனது மட்டுமே நான் இங்கே இருக்க காரணம் இல்லை. 'பந்தம்' என்ற திருமண காண்ட்ராக்ட் நிறுவனம் அப்பா நடத்தி வருகிறார். அதை நானும் கூட சேர்ந்து பார்த்துக் கொள்கிறேன். நாளை மதிய உணவு முடியும் வரைக்கும் நான் மண்டபத்தை விட்டு அசைய முடியாது சார்.''

பிரேம்குமாரின் உறுதியான நிலைப்பாட்டை அங்கீ கரித்த குருமூர்த்தி, மனைவியைப் பார்த்தார். ''பதிவு பண்ணலாமா? நாளை போய் வரட்டுமா?'' என்று கண் ணாலேயே கேள்வி கேட்டார். அவருக்கு பிரேம்குமார் பேசிய விதத்தில் திருப்திதான். மனைவி இதுவரை அமைதியாக இருந்ததே அவருக்கு ஆச்சரியம். புவ னேஸ்வரி ஒப்புதலாக தலை அசைக்க, ''சரி மிஸ்டர் பிரேம்குமார். நாளை மாலை ஆறு மணி அளவில் உங் களை அலுவலகத்தில் சந்திக்கிறேன்'' என்று முடித்தார்.

''உங்களுக்குத் தொடர்ந்து சேவை செய்ய பூமாலை இணைய தளம் காத்திருக்கிறது. சேவையில் குறைகள் இருந்தால் எங்களிடம் சொல்லுங்கள். நிறைகள் இருந் தால், உங்கள் உற்றார் உறவினர் நண்பர்களிடம் சொல் லுங்கள். அதுவே எங்களுக்கு செலவில்லாத மிகச் சிறந்த விளம்பரம். நன்றி சார். நாளை சந்திக்கலாம்'' என்று முடித்து போனை வைத்தான்.

பிரேம்குமார் போனை வைத்து விட்டான் என்பது உணர்ந்த வினாடியில், முதலில் வெளிவந்த குரல், தர்ஷினியினுடையது. ''உங்களுக்குத் தொடர்ந்து சேவை செய்ய பூமாலை இணைய தளம் காத்திருக்கிறது. மேலும் மேலும் சேவை செய்யக் காத்திருக்கிறார். நீங்க ரெண்டு ரெண்டு பொண்ணு தான் வச்சு இருக்கீங்க? ஹய்யோ பாவம் பிரேம்குமார். இவ்வளவு சின்ன குடும்பத்துல இப்படி ஒரு வார்த்தையை வேஸ்ட் பண்ணிட்டோமே என்று ரொம்ப பீல் பண்ணப் போறார்...'' என்று சோகமாகச் சொல்லிச் சிரித்தாள் தர்ஷினி.

''செய்யும் தொழிலை தெய்வமா நினைச்சு, பேசுற ஒரு ஆளை இஷ்டத்துக்கு கிண்டல் பண்றதை நிறுத்து. எல்லாமே ஜோக் தான் உனக்கு. இந்தக் கல்யாணம் முடியும் வரைக்கும் உன் வாலை சுருட்டி வச்சுட்டு இரு. இங்கே முதலில் ஸ்பீக்கர் போனில் உளறின மாதிரி இஷ்டத்துக்கு உளறி வைக்கக் கூடாது. புரிஞ்சுதா?'' என்று புவனேஸ்வரி அதட்டினார்.

தர்ஷினி அம்மாவிடம் வேகமாக தலை அசைக்க, ''உனக்கு என்ன புரிஞ்சுது? இவ்வளவு வேகமா பூம் பூம் மாடு மாதிரி தலை ஆட்டுகிறாய்?'' என்று சந்தேகத்துடன் கேட்டாள் சத்யா.

''ஸ்பீக்கர் போனில் எல்லோரும் பேசும்போது நான் நடுவில் உளறக் கூடாது. அந்த பிரேம்குமாருக்கு தனியா போன் போட்டு இஷ்டத்துக்கு உளறலாம். கரெக்ட் தானேம்மா?'' என்று அப்பாவியாய் கேட்ட தர்ஷினியின் முதுகில் ஒரு அடி விழுந்தது.

''ஸ்பீக்கர்ல உளறாதே என்றால் போன் தனியா போட்டு பேசுவியா? உன்னை...'' என்று மீண்டும்

அடிக்க கை ஓங்கிய அம்மாவின் கை பற்றி, ''போனில் பேசக் கூடாதா? சரி, நாளைக்கு மாலை அப்பாவோடு நேரில் போய் அந்த ஹேட்ரிக் விபரம் சொல்லி அதுக்கு ஒரு வாழ்த்துச் சொல்லி விட்டு வருகிறேன். இதுக்கு ஏன் டென்ஷனா ஆறீங்க? வர வர புவனா டீச்சருக்கு ரொம்ப கோபம் வருது'' என்று சிரித்தாள் தர்ஷினி.

இவளிடம் எதையாவது செய்யாதே என்று சொல்லப் போனால் வேண்டும் என்றே அதை மீண்டும் மீண்டும் செய்வாள் என்பதை மறந்த தன்னுடைய முட்டாள் தனத்தை நொந்தபடி அவள் சொன்னதே காதில் விழாதது போல கணவனிடம் திரும்பினார் புவனேஸ்வரி.

''போனில் அந்த பிரேம்குமார் ரொம்ப பொறுப்பா பேசினது மாதிரி இருந்தது. எனக்குப் பிடிச்சு இருந்தது. நாளைக்கு நீங்க முதலில் அவரைப் பார்த்து, நம்முடைய தேவையைச் சொல்லிடுங்க. பட்டதாரி, நல்ல வேலை, முப்பதாயிரமாவது கையில் வர மாதிரி இருக்கணும். பைக் நாம் வாங்கிக் கொடுக்கலாம். சென்னையாக இருந்தால் நல்லா இருக்கும். வெளியூர் என்றாலும் பரவாயில்லை. பார்க்கவும் கொஞ்சம் நல்லா இருக்கணும். வேறென்ன? சத்யா உனக்கு ஏதாவது சொல்லணும் என்றால் சொல்லு...''

''ஐ டி செக்டார் வேண்டாம்மா...''

''ஏன் ஏன் வேண்டாம்? அங்கே இருக்கவங்க எல்லாம் மனுஷங்க இல்லையா?'' என்று அவசரமாக தர்ஷினி சண்டைக்கு வரிந்து கட்ட குருமூர்த்தி அடக்கினார்.

''தர்ஷினி, உனக்கு மாப்பிள்ளை பார்க்கும்போது உன் அபிப்ராயம் கேட்போம். இப்ப அவள் சொல்லட்டும். கொஞ்ச நேரம் சும்மா இரு'' என்று அதட்ட, ''அவளுக்கு

பார்க்கும் மாப்பிள்ளை எப்படி இருக்கணும் என்று நான் அபிப்ராயம் சொல்லக் கூடாதா அப்பா?'' என்று பரிதாப மாகக் கேட்டாள் தர்ஷினி.

''சொல்லலாம். ஆனால் அவளுக்கு தான் முதல் உரிமை. உன் கல்யாணத்தில் நீ சொல்வதுதான் கடைசி வார்த்தை. இப்ப அவள் பேசும்போது குறுக்கே பேசாதே'' என்று முடித்தார்.

''அடிக்கடி வெளியூர் / வெளிநாடு போற மாதிரி இருக் கலாம். நேரம் காலம் இல்லாத வேலையா இருக்கும். ஒரு வேலையில இருக்கும்போது அதுக்கு நூறு பெர்சன்ட் உண்மையா உழைக்கணும் இல்லையாப்பா. அது என்னுடைய குணத்துக்கு ஒத்து வராது. எனக்கு வீட்டுல சுத்தி ஆட்கள் இருக்கணும். இது வேணும் அது நல்லா இருக்கு என்று கேட்டு வாங்கிச் சாப்பிடணும். சாயங்காலம் ஆன உடனே வீட்டுக்கு வரணும். எனக்கு வேலைக்குப் போகணும் என்று கட்டாயம் கூட இல்லை. பொருளாதார தேவை இருந்தால் போகிறேன்...'' என்று சத்யா தன் தேவையைப் பட்டியலிட குருமூர்த்தி இடையிட்டார்.

''சொந்த தொழில் ஓகேயாம்மா?''

''ம்ம்ம். நானும் அங்கே போகலாம் என்றால் ஓகே தான் பா. எனக்கு என்னுடைய கணவன் என்னுடனேயே இருக்கணும் என்ற உணர்வு ஜாஸ்திப்பா. அதனால் பிரெண்ட்ஸ், பார்ட்டி என்று போகும் ஜாலியான...''

''அப்ஜெக்ஷன் அப்பா, பிரெண்ட்ஸ் வேண்டாம் என்று இவள் சொன்னால் அவருக்கு எப்படி இருக்கும்? அதைப் பத்தி நினைச்சுப் பார்த்தாளா?''

''நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. பிரெண்ட்சை விட குடும்பத்தை முக்கியமா நினைக் கணும். இது என்னோட ஆசை. அபிப்ராயங்கள் மாறு படலாம்...''

''சத்யா, உன்னோட அந்தக் குடும்பம் என்ற அமைப் பில் மாமனார் மாமியார் நாத்தனார் கொழுந்தனார் எல் லாம் இருக்காங்க இல்லையா?'' என்று புவனேஸ்வரி இடையிட்டார்.

''என்னம்மா இப்படி கேட்டுட்டீங்க? நிச்சயமா உண்டு. நல்ல நாள் பெரிய நாள் என்றால் வீடு நிறைய ஆட்கள் வந்து விருந்து சமைக்கணும். நல்ல குடும்பத்துல நானும் ஒரு அங்கத்தினரா ஆகணும். அப்பா குறைந்த பட்சம் ஒரு ஆணோ பெண்ணோ கூட பிறந்தவங்க இருக்கணும் என்பது என்னுடைய அடிப்படை கண்டிஷன். அதுக்கு மேலே இருந்தால் சந்தோஷம். இதையும் சேர்த்தே சொல்லுங்க...''

''அப்பா என் கல்யாணத்துக்கு மாப்பள்ளை பார்க்கும் போது அவர் ஒரே பையனா இருக்கணும். இப்பவே சொல்லிட்டேன். நமக்கு முடிசூடா ராணியா இருக் கணும், என்று ஆசை...''

''உனக்குப் பார்க்கும்போது அதைப் பத்தி யோசிக் கலாம். கம்முன்னு இரு'' என்று புவனேஸ்வரி அதட்ட '''கம்'முன்னு எல்லாம் என்னால் இருக்க முடியாது. நான் தூங்கப் போறேன். சத்யாக்கு வர மாப்பிள்ளை. என் னோட எப்பப் பார்த்தாலும் அவளை மாதிரி மூடியா இருந்து சண்டை போடக் கூடாது. சந்தோஷமா கல கலப்பா பேசி சிரிக்கணும். அவ்ளோதான் ஒரே கண் டிஷன்...''

''இவ வெள்ளை காக்கா பறக்குது பாருங்க அத்தான் என்று கை காட்டினால், ஆமா தர்ஷினி ரெண்டு இருக்கு என்று சொல்லணும். அப்பத்தான் அவர் நல்ல மாப் பிள்ளை...'' என்று சத்யா சிரிக்க 'கரெக்ட். இப்பதான் நீ நம்மளைப் பற்றி தெளிவா புரிஞ்சு வச்சு இருக்கே குட் நைட்...'' என்று சொல்லிவிட்டு அறைக்குள் போனாள் தர்ஷினி.

மறுநாள் மாலையில் கிளம்பும்போது, ''முதலில் சத்யாக்கு பாருங்க. கைவசம் தர்ஷினி ஜாதகமும் எடுத் துட்டுப் போங்க. அவளிடம் இப்பவே சொல்ல வேண் டாம். ஒரு வேளை ரெண்டு பேருக்கும் செட் ஆற மாதிரி இருந்தால் யோசிக்க வேண்டாம். இரண்டு கல்யாணத் தையும் சேர்த்தே கூட முடிச்சுடலாம்'' என்று சொன்னார் புவனேஸ்வரி.

''இல்லை புவனா, அது சரிப்படாது. அவளுடைய எதிர்பார்ப்புகள் ஜாஸ்தி. சத்யா மாதிரி அட்ஜஸ்ட் செய் வோம் என்று நினைக்க மாட்டாள். அதில் நியாய மானவற்றை நிறைவேற்ற வேண்டிய கடமையும் நமக்கு இருக்கு.''

''ஒரே பையனா இருக்கணும் என்று நேத்து சொன்னா பாருங்க. எனக்கு அப்படியே ஓங்கி ஒரு அறை விடணும் போல இருந்துச்சு...''

''எனக்கும் சங்கடமாதான் இருந்துச்சு. பார்த்துப் பக்குவமா சொல்லணும். சின்ன பொண்ணுதானே? குடும்ப அமைப்பு முக்கியம். அதிலும் கணவனுடன் கூடப் பிறந்தவர்களை அனுசரித்துப் போவது அவசியம் என்பதை சீக்கிரம் புரிந்து கொள்வாள். அவளுக்கு அப்புறமா செய்யலாம். முதலில் அவ மனசுல யாராவது இருக்காங்களா என்றும் கேட்டுக்கணும்...''

''என்னது! அதெல்லாம் முடியாது...''

''ஷ்! சத்தம் போடாதே. நம்ம பார்த்துட்டு அவளுக் குப் பிடிக்குதா என்று கேட்போம் தானே? அது மாதிரி அவள் பார்த்துட்டுச் சொன்னால், நாம விசாரித்து அதன் பிறகு, இன்ன காரணத்தினால் பிடிச்சு இருக்கு. அல்லது பிடிக்கலை என்று சொல்லலாமே? ஏதாவது லவ் இருந்தால் சொல்லும்மா என்று நான் சத்யாவிடமும் தான் கேட்டேன். அதுல என்ன தப்பு? சத்யாக்கு முத லில் முடியட்டும். உடனேயே அடுத்த நாளே தர்ஷினிக் குப் பார்க்க ஆரம்பித்து விடுகிறேன். அவளுக்கும் அந்த பிரேம்குமார் கையாலதான் அமையணும் என்று இருக்கோ என்னவோ?''

''சரி, கிளம்புங்க. ஏற்கனவே இருக்கும் பயோ - டேட் டாவில் நம்ம எதிர்பார்ப்புக்கு ஏற்ற மாதிரி இருந்தால், நாலஞ்சு செலக்ட் பண்ணி எடுத்துட்டு வாங்க. நைட் பேசிட்டு முடிவு பண்ணலாம்'' என்று வழி அனுப்பி வைத்தார் புவனேஸ்வரி.



4

பிற்பகல் மூன்று மணி அளவில், இரவு முழுவதும் நடந்த திருமண ஏற்பாடுகளை விழித்து இருந்து மேற் பார்வையிட்டதில் லேசாக சிவந்த விழிகளுடன் வந்து சேர்ந்த பிரேம்குமாரைப் பார்க்க யசோதாவிற்கு பாவமாக இருந்தது. குளித்து விட்டு படுக்கப் போகும் முன்பு மாலை ஆறு மணிக்கு வேளச்சேரியில் இருந்து ஒருவரை

திற்கு மன்னிக்கணும்'' என்று கரம் குவித்தபடி வெளியே வந்த பிரேம்குமாரைப் பார்த்த குருமூர்த்தி யின் ஆச்சரியம் இன்னும் கூடியது.

''அம்மா சாருக்கு சாப்பிட ஏதாவது...'' என்று ஜாடை காட்டிய மகனைப் பார்த்து தலை அசைத்து விட்டு ''உங்களுக்கு ஷுகர் இல்லையே?'' என்று விசாரித்தார்.

''ஆண்டவன் புண்ணியத்துல எதுவும் இல்லை. பர பரப்பில்லாத பள்ளி ஆசிரியர் வேலை. நல்ல மனைவி, அழகான குழந்தைகள். ரெண்டு பேரும் படிப்பை முடித்து வேலை செய்றாங்க. ஒண்ணும் பிரச்னை இல்லைம்மா'' என்று புன்னகையோடு சொன்னார் குருமூர்த்தி.

''ரொம்ப சந்தோஷம் இனியும் உங்களுக்கு எந்தக் குறையும் வராது. எல்லாம் நல்லபடியா நடக்கும். நீங்க பேசிட்டு இருங்க'' என்று வாழ்த்திவிட்டு உள்ளே சென் றார் யசோதா.

''வாங்க சார் ஆபீஸ் ரூம் போய்டலாம்'' என்று அழைத் துச் சென்ற பிரேம்குமார், அவர் சோபாவில் அமர்ந்ததும், அருகில் அமர்ந்து மடி கணினியை உயிர்ப்பித்தபடி ''சார், தப்பா நினைக்கவில்லை என்றால் ஒரு விஷயம் உங்களிடம் சொல்லணும்...'' என்று ஆரம்பித்தான்.

''உங்களை தப்பா நினைக்க என்ன இருக்கு? சொல் லுங்க மிஸ்டர் பிரேம்குமார்.''

''இந்த மிஸ்டர் வேண்டாம் சார், பிரேம் என்றே சொல்லலாம்'' என்று அனுமதி கொடுக்க அவர் புன்னகை யுடன் தலை அசைத்தார். ''நான் எம்.ஏ. சைக்காலஜி படித்து இருக்கிறேன்...'' என்று மீண்டும் ஒரு இடை வெளி விட்டான் பிரேம். இப்போது இவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரிய அவர் சிரித்தார்.

''புரியுது பிரேம். நான் உங்களைக் குறைவாக மதிப்பிடவில்லை. ஆனால் என்னுடைய மனைவி இதை எப்படி எடுத்துப்பாங்க என்று தெரியவில்லை. எப் பொருள் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய் பொருள் காண்பதறிவு என்று என்னுடைய மாணவர் களுக்கு பல்லாயிரக் கணக்கான முறை சொல்லித் தந்து விட்டு, அதை மறந்தால் எப்படி? நான் உங்க வயதை வைத்து உங்களின் வேலையின் தரத்தை நிச்சயம் மதிப்பிட மாட்டேன். நாம் வேலையைப் பார்க்கலாமா?'' என்று கேட்க நீங்களும் சைக்காலஜி படித்து இருக் கீங்களா?'' என்று சிரிப்போடு கேட்டான் ப்ரேம்.

''நமக்கு அனுபவப் பாடம் தான். என்ன இருந்தாலும் உங்களை மாதிரி இரு மடங்கு வயசாகி விட்டதல் லவா?'' என்று சிரித்தபடி தனது மகளுக்கு தாங்கள் தேடும் வரனின் குறைந்த பட்ச தகுதிகள் மற்றும் எதிர் பார்ப்புகளைப் பற்றி ஒவ்வொன்றாகச் சொல்லச் சொல்ல அவனுக்கு அவர் மேலும் அந்தக் குடும்பத்தின் மேலும் இருந்த மதிப்பு ஏறிக் கொண்டே போனது.

* * *

குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா, குறை ஒன்றும் இல்லை கண்ணா. குறை ஒன்றும் இல்லை கோவிந்தா...'' என்று கண்ணனை வாழ்த்தியபடி காலை நேர வேலைகளில் இருந்த யசோதாவை, 'குட் மார் னிங்மா' என்ற பிரேமின் குரல் திரும்பிப் பார்க்க வைத்தது.

''குட்மார்னிங், என்ன கண்ணா, இன்னிக்கு லேட்? டயர்டா இருந்ததா?''

''இந்தக் கேள்வியும் நானே பதிலும் நானே என்ற பாலிசியை எப்பம்மா விடுவீங்க? அதுக்கு பதில்

சொல்றதுக்கு முன்னாடி, ஹேப்பி அன்னிவேர்சரி'' என்று சொல்லியபடி அவரின் கையில் ஒரு தங்க வளை யலை மாட்டினான்.

''டேய்! இதெல்லாம் நீ ஞாபகம் வச்சு இருக்கியா? திருட்டு பயல்டா. நேற்று ஒண்ணுமே வாயைத் திறக்கலை. அப்பாக்கு ஒண்ணும் வாங்கலையா? இல்ல இல்ல சாரி என்ன வாங்கி இருக்க?'' என்ற யசோதாவை கன்னத்தில் செல்லமாகத் தட்டிக் கொடுத்தான்.

''அப்பாக்கு செலவு கம்மிதான். அவர்தான் ஒண் ணுமே போட்டுக்க மாட்டேங்கறாரே? நான் முதல் முத லில் வாங்கிக் கொடுத்த மோதிரத்தை பர்சில பத்திரமா வச்சு இருக்காரே தவிர விரலில் போட மாட்டேங்குறார். நான் என்ன பண்ண? வழக்கம் போல ஒரு கதர் வேஷ்டி, வெள்ளை அரைக்கை சட்டை. ஏன்மா அப்பா எதுவுமே போட்டுக்கறதில்லை?''

''ப்ச்! அதை விடு. எத்தனை தடவை சொல்றது? காசி யாத்திரை போய்ட்டு வரும்போது எதையாவது ஒன்றை விடுவாங்க இல்லையா? அவர் தங்கம் போடுவதை விட்டு விட்டார். இருபத்தி ஐந்து வருஷம் ஆச்சு'' என்று சொன்னவரின் குரலில் ஈரம் சேர்ந்து, அதை அவன் கவனிக்கும் முன்பு காய்ந்தது.

''அவருக்கு அப்ப முப்பது வயதுக்குள் தானே இருக் கணும்? அதுக்குள்ளே என்ன காசி யாத்திரை? எத்தனை தடவை கேட்கிறேன் ஒழுங்கா பதில் சொல்றீங்களா?''

''பெரிசா ஒண்ணும் இல்லை. நம் முன்னோர்களுக்கு ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று தர்ப்பணம் பண்ணனும். ஒருவேளை எல்லா அமாவாசை தினத்

தன்றும் ஞாபகமா செய்ய முடியாதவங்க. வாழ்க்கையில் ஒரு முறை கயாவில் கங்கை தீர்த்தத்தில் தர்ப்பணம் செய்து விட்டால், அதற்கு ஈடானது என்று சொன்னாங்க. அதுக்காக போனோம். அப்ப விட்டதுதான்...'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே ''யசோ, காபி எடுத்துட்டு வா'' என்ற நந்தகோபாலின் குரல் கேட்டு ''இதோ வரேங்க. உனக்கும் காபி அங்கேயே எடுத்துட்டு வரேன். அப்பாக்கு கிரீட் பண்ணு போ'' என்று அனுப் பினார் யசோதா.

''அப்பா, இந்த திருமண நாள் உங்களுக்கு மேலும் பல சந்தோஷத்தை அள்ளித் தரட்டும். நீங்க நினைச்ச தெல்லாம் நடக்கட்டும். குளிச்சுட்டு புது டிரெஸ் போட்டு வாங்கப்பா, கோவிலுக்குப் போய் வரலாம்'' என்று வாழ்த்தியபடி அப்பாவின் அருகில் அமர்ந்தான் பிரேம்.

''எங்களுக்கு பலப் பல சந்தோஷங்கள் எல்லாம் தேவை இல்லை. இப்போதைய தேவை ஒரே ஒரு சந்தோஷம் தான். அதுவும் உன் கையில் தான் இருக்கு'' என்று காபி கோப்பைகளோடு வந்து அமர்ந்த யசோதா சிரிப்போடு சொல்ல அவன் ஒரு விரல் காட்டி மிரட்டி னான்.

''இது ப்ளாக்மெயில்.''

''இது எங்க தேவை. உன்னிடம் இல்லாமல் தெருவில் போறவனிடமா சொல்ல முடியும்? கண்ணா கரண்ட் பில் கட்டணும். ராஜா போன் பில்லுக்கு இன்னிக்கு லாஸ்ட் டேட். நீல்கிரிஸ்ல இந்த லிஸ்ட் சாமானை டோர் டெலிவரி பண்ணச் சொல்லிடு. இதை எல்லாம் உன் னிடம் தானே கேட்கிறோம்? அப்ப எங்களுக்கு பேர பசங்

களோடு விளையாடணும் என்று தோணுது. இதையும் நீதான் செஞ்சு கொடுக்கணும்...''

''எனக்குப் பிடிச்ச மாதிரி ஒரு பொண்ணை நான் இன்னும்...'' என்று ஆரம்பித்த பிரேம்குமாரை இடை யிட்டார் நந்தகோபால்.

''டேய்! நீ உங்க அம்மாக்காக பொண்ணைத் தேடுற. பிள்ளையாருக்கு அமையும்**போதுதான்** உனக்குக் கல்யாணம் நடக்கும். மனு**ஷங்க** என்றால் நூறு சத விகிதம் சரியா இருக்க முடியாது. கொஞ்சம் கூட குறை யத்தான் இருக்கும். அனுசரிச்சுப் போவதுதான் வாழ்க்கை. உன்னிடமே இந்த மூணு வருஷத்துல எத்தனை வரன்கள் ஆணும் பெண்ணுமாய் வந்து இருக்கு. அதுல அவங்க எதிர்பார்க்கும் எல்லா விஷயமும் கிடைக்குதா? ஆனா லும் முக்கியமான சில விஷயங்கள் இருந்தால் அதை அனுசரிச்சு கல்யாணங்கள் நடக்கவில்லையா? நீ ஒருத்தன் தான் இந்த உலகத்துலேயே உங்க அம்மா அப்பா மேலே பாசம் வச்சு இருக்கியா?''

''நீங்க சும்மா இருங்க நான் பேசிக்கறேன். ஏன் கண்ணா! நேற்று வந்தவர் அவங்க பொண்ணுக்குதானே வரன் பார்த்தார். அவர் ரொம்ப நல்ல மாதிரி. குடும்பம் பிள்ளைகள் என்று பாசமா பேசினார். அந்தப் பொண்ணு போட்டோ கூட நான் பார்த்தேன்...''

''அ..ம்..மா! நம்மிடம் பதிவு பண்ண வரும் பெண் களை எல்லாம்...''

''ஹேய் லூசு. பதிவு பண்ண வரும் எல்லாப் பெண் களையும் கல்யாணம் பண்ணிக்க நீ என்ன கலியுகக் கண்ணனா? ஒரு பேச்சுக்கு கண்ணா என்று கூப்பிட் டால் நீயும் அந்தக் கண்ணன் மாதிரி கோபியர்கள்

எல்லாத்தையும் சைட் அடிக்கலாம் என்ற எண்ணமா? பிச்சு பிடுவேன் பிச்சு...''

''நீங்க நல்லவங்களா கெட்டவங்களாம்மா? நீங்க எனக்கு சப்போர்ட் பண்றீங்களா? ஆப்பு வைக்கறீங்களா என்றே எனக்குப் புரிய மாட்டேங்குது'' என்று சிரித்தான் பிரேம்குமார்.

''உனக்குக் கடைசி வரை புரியவே வேண்டாம். பெத்தவங்க என்னைக்குமே பிள்ளைங்க கெட்டுப் போகணும் என்று நினைக்க மாட்டாங்க என்று நம்பி, நாங்க சொல்வதைக் கேளு. நேற்று வந்தவரை எனக்கு ரொம்பப் பிடிச்சு இருக்கு. அந்தப் பொண்ணு போட்டோ அதை விட ரொம்பப் பிடிச்சு இருக்கு. நாங்க ரெண்டு பேரும் அவங்க வீட்டுல போய் பேசட்டுமா? உனக்கு அந்தப் பொண்ணை பிடிச்சு இருக்கா என்று மட்டும் சொல்லு...''

''என்னிடம் தொழில் ரீதியா வரும் பெண்களின் போட்டோக்கள் நான் அந்த கோணத்தில் பார்ப்பதே இல்லை. நீங்க நினைப்பது நிச்சயம் நடக்காது. அந்தப் பொண்ணோட முதல் முக்கியமான கண்டிஷனே, பைய னுக்குக் குறைந்த பட்சம் கூட பிறந்தவங்க ஒருத்தராவது இருக்கணும். அதுக்கு நான் சரி வர மாட்டேன். நேற்றே ஆறு ஜாதகம். முகவரி கொடுத்து அனுப்பி இருக்கிறேன். பூந்தமல்லி கிருஷ்ணகுமாரை அவங்களுக்குப் பிடிச்சுப் போக வாய்ப்பு ஜாஸ்தி இருக்கு. அந்த பெண்ணைப் பற்றி இந்த மாதிரி அபிப்பிராயம் வச்சு இருந்தா, அதை இந்த நிமிஷமே அழிச்சுடுங்க...'' என்று அழுத்தம் திருத்தமாக பிரேம்குமார் சொல்ல 'கூடப் பிறந்தவங்க ஒருத்தராவது இருக்கணும்' என்று தொடரில் யசோதா

வின் முகம் ஒரு கணம் வாடி அவசரமாக இயல்புக்கு மீண்டது.

''நேற்று வரன் தேடி வந்தவங்களுக்கு உன் கை ராசி, இன்னிக்கு மாப்பிள்ளை கிடைச்சுடும் போல இருக்க. நானும் என் பையன் ஜாதகத்தையும் போட்டோவையும் தருகிறேன். பூமாலை டாட் காமில் போட்டு வை. ரெண்டு வாரத்துக்கு ஐநூறு ரூபாய் என்ன? ஐயாயிரம் ரூபாய் தருகிறேன். சீக்கிரம் ஒரு பொண்ணு பார்த்துக் கொடு'' என்று யசோதா சொல்ல, ''பணத்தால் என்னை விலைக்கு வாங்க முடியாதும்மா'' என்று சிரித்தபடி நழுவினான்.

''டேய் இந்த சமாளிப்பு எல்லாம் செல்லாது. இதுதான் எங்களுக்கு நீ கொடுக்கும், வெட்டிங் டே கிப்ட். உன் பேரை உன்னோட வெப்சைட்டில இன்னிக்கே போட ணும். அதுல வரும் விண்ணப்பங்களில் நாங்க ஒண்ணை செலக்ட் பண்ணுவோம். எப்படிப் பார்த்தாலும் இன்னும் ரெண்டு மாசத்துல வர தீபாவளிக்குள்ளே உனக்குக் கல்யாணம் முடிச்சே ஆகணும்'' என்று யசோதா முடித் தார்.

''அம்மா, இது அவசரப்பட்டு செய்யும்...''

''அவசரமே வேண்டாம். மெல்ல செய்யலாம். அறு பது நாள் இருக்கே? எங்களுக்கு வெளியில் ப்ரோக்கரிடம் சொல்லவோ, பேப்பரில் விளம்பரம் கொடுக்கவோ எவ்வளவு நேரம் ஆகும் சொல்லு? நீ இந்த மாதிரி ஒரு வெப்சைட் நடத்தும் போது நாங்க வெளியில் போனால் உனக்கு கௌரவக் குறைச்சல் என்று உன்னிடமே சொல் றோம். அதைப் புரிஞ்சுக்க மாட்டேங்குறியே? வேற யாராவது பெண்ணைப் பார்த்து பிடித்து இருந்தாலும்

சொல்லலாம். உனக்கு ஒரு மாசம் டைம். முப்பது நாளுக்குள் நீ யாரையாவது முடிவு பண்ணு. இல்லை என்றால் நாங்க பார்த்து முடிவு பண்ணும் பொண்ணு கழுத்துல நீ தாலி கட்டு. இதுக்கு மேலே பேச்சே இல்லை. அரை மணி நேரத்தில் கோவிலுக்குப் போக லாம்'' என்று முடித்து விட்டு நந்தகோபால் ஒரு புறமும், யசோதா மறுபுறமும் செல்ல, அவன் சோபாவில் திகைத்துப் போய் அமர்ந்து இருந்தான்.

இத்தனை நாள் கல்யாணம் பற்றி எண்ணியதே இல்லை. எனக்கென்று ஏற்கனவே பிறந்தவள் எங்கே இருக்கிறாளோ? அவளை எப்படிக் கண்டு பிடிப்பது? அதுவும் ஒரு மாசத் துக்குள்... என்று தலையை உலுக்கி விட்டு நிமிர்ந்தவன் பார்வையில் கீதா உபதேசம் தென்பட்டது. கண்ண னிடமே அடி பணிந்தான். கேட்டதும் கொடுப்பவனே கண்ணா! கீதையின் நாயகனே! நீயே வழி காட்டு!



5

குருமூர்த்தி, சத்யாவின் ஜாதகத்தையும் போட்டோ வையும் எடுத்துக் கொண்டு பிரேம்குமாரை சந்திக்கச் சென்ற தினம் மாலை சீக்கிரம் வந்த தர்ஷினியைப் பார்த்து சத்யா புவனேஸ்வரி இருவருமே ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தனர்.

''ஹேய் தர்ஷினி என்ன அதிசயம்? ஏழு மணிக்கே வீடு வந்துட்ட?'' என்று ஆச்சரியமாகக் கேட்ட அம் மாவைப் பார்த்து அர்த்த பாவத்தோடு சிரித்தாள்.

''எத்தனை நாள் லேட்டா வந்து உங்களை டென்ஷன் படுத்துறது? இன்னிக்கு ஒரு நாள் சீக்கிரம் வந்து உங்க மனசைக் குளிர வைக்கலாம் என்று நினைத்தேன். சீக்கிரம் வந்ததுக்கு ஏதாவது ஸ்வீட் தருவீங்களா?'' என்று கேட்டபடி வந்து சோபாவில் அமர்ந்தாள் தர்ஷினி.

''உனக்குக் கூட அம்மா சொல்றதைக் கேட்கலாம் என்று தோன்றி விட்டதே? எட்டாவது உலக அதிசயம் போ'' என்று அடுப்படிக்கு நகர்ந்தார் புவனேஸ்வரி.

''தர்ஷினி, எங்க அம்மா எனக்கு இருபத்தி மூணு வருஷம் முன்னாடியே காது குத்திட்டாங்க. நீ இப்ப குத்த வேண்டாம். நீயாவது அம்மா பேச்சை கேட்பதாவது? இந்த உலகம் தலை கீழாய் சுத்த ஆரம்பிச்சுடாது? என்ன விஷயம்'' என்று அருகில் அமர்ந்தவளின் காதை வலிக்காமல் திருகியபடி விசாரித்தாள் சத்யா.

''வர வர இந்த டீச்சருங்க தொல்லை இந்த வீட்டுல தாங்கலைப்பா. காலேஜ் பசங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் டீச்சர் துப்பறிஞ்சு கண்டு பிடிக்க வேண்டியதுதானே?'' என்று கண் சிமிட்டினாள் தர்ஷினி.

''இதுல என்ன துப்பறிதல் வேண்டி கிடக்கு? அப்பா இன்னிக்கு மாப்பிள்ளை போட்டோ வாங்கிட்டு வருவாங்க. அதைப் பார்த்து ஜொள்ள விட சீக்கிரம் வந்த? எனக்குத் தெரியாதா?''

''இங்கே பாருடா, சத்யா துப்பறியும் வேலை செய்றாங்க. ஆனால் அதுல ஒரு சின்ன திருத்தம் இருக்கு. முதலில் உனக்குப் பிடித்த மாப்பிள்ளையை நீ தேர்ந்தெடுத்த பிறகே நான் பார்க்கிறேன். எதுக்கு நமக்குள் அனாவசிய சண்டை?'' என்று சொல்ல, சத்யா சிரித்தாள்.

''உன்னை எல்லாம் திருத்தவே முடியாது. பாவம் உன்னைக் கட்டிக்கப் போறவன்'' என்று தலையில அடித்துக் கொண்டு நகர, ''ஹேய் சத்யா நின்னு ஒரு சாரி சொல்லிட்டுப் போ'' என்று அதட்டலாகச் சொன்னாள் தர்ஷினி.

''சாரியா? எதுக்கு?''

''பின்னே என்னைக் கட்டிக்கப் போறவனைக் கொஞ்சம் கூட மரியாதையே இல்லாமல் பேசினால் சும்மா விடுவாங்களா?''

''தோடா! வரவே இல்லாத பதி மேலே என்ன பக்தி? என்ன அப்படி அவரை மரியாதை இல்லாமல் பேசிட்டேன்?''

''அவன் இவன் என்று பேசுவது ரொம்ப மரியாதை ஆக்கும்? முதலில் சாரி சொல்லு...''

''கடவுளே! என்ன ஆச்சு உனக்கு?''

''அம்மா வரப் போகும் வீட்டு மாப்பிள்ளையை சத்யா கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல் பேசுறா. சாரி சொல்லச் சொன்னால் சொல்ல மாட்டேங்கறா'' என்று சிற்றுண்டி எடுத்து வந்த அம்மாவிடம் தர்ஷினி புகார் பத்திரம் வாசிக்க, புவனேஸ்வரி சத்யாவை முறைத்தார்.

''சத்யா என்ன இது?''

''அடிப் பாவி இப்படி புளுகுற? வந்த உடனே உன் வேலையை ஆரம்பிச்சாச்சா? உனக்கு நூறு சாரி. உனக்கு வரப் போறவனுக்கு ஆயிரம் சாரி. சந்தோஷமா இருதாயே'' என்று சொல்லி விட்டு நகர, தர்ஷினி, 'அந்த பயம் இருக்கட்டும்' என்று சிரித்தாள்.

கொஞ்ச நேரத்தில் சத்யா தன் கல்லூரி வேலையிலும், அம்மா சமையலிலும் மூழ்கி விட, தர்ஷினிக்கு

அப்பா இல்லாமல் போர் அடித்தது. அடுப்படிக்குப் போனால், அம்மாவிடம் வேலை செய்ய வேண்டுமே என்ற பயத்தில் கணினியை நோண்டி, பூமாலை டாட் காமை அக்கு வேறு ஆணி வேறாக அலச ஆரம்பித்தாள்.

நிறுவனம் ஆரம்பித்த விதம் அதன் நிறுவனர் பற்றிய விபரம், பதிவு செய்யப்பட்டு இருக்கும் விண்ணப் பங்கள் தற்போதைய நிலை என்று பார்த்துக் கொண்டே வந்தவளுக்கு புகைப்படங்கள் எதுவும் கிடைக்க வில்லை. 'என்ன இவ்வளவு செக்யூரிட்டி போட்டு பூட்டி வச்சு இருக்கான்?' என்ற சலிப்புடன் எழுந்தவள் காதில் அப்பாவின் குரல் விழ உற்சாகமாக வாசலுக்கு ஓடிச் சென்றாள்.

குருமூர்த்தி கொண்டு வந்த புகைப்படங்களை ஒரு மணி நேரம் அலசி, புவனேஸ்வரி கேட்ட குறுக்கு கேள்விகளுக்கு பதில் சொல்லி முடித்த பின், குடும்பத் தினர் ஒரு மனதாக ஆறு படங்களில் மூன்றை விசா ரணைக்கு என்று தேர்ந்தெடுத்தனர். அடுத்த வாரத்தில், மூன்று வரன்களையும் நேரில் விசாரித்த பின், பிரேம் குமாரின் உள்ளுணர்வு சொன்ன கிருஷ்ணகுமாரை குருமூர்த்தி தம்பதியினர், மகளின் சம்மதத்துடன் தேர்ந்தெடுத்தனர்.

மணமாகி மூன்று வயது குழந்தையுடன் இருக்கும் ஒரு அக்கா, மருத்துவம் இறுதி ஆண்டு படிக்கும் ஒரு தம்பி, விதவை தாய் ஆகியோர் அடங்கிய அந்த குடும் பத்தில், இரண்டாவது பையனான கிருஷ்ணகுமார், ட்ரக் ஸ்டாக்கிஸ்டாக இருப்பவன். மணமகனை முடிவு செய்த பின்பு திருமண வேலைகள் மிக விரைவாக நடந்தது. ஒரே மாதத்தில் திருமண நாள் குறித்த பின்பு, தன்

செல்ல மகளின் திருமணத்தை விமரிசையாக நடத் துவது குறித்த யோசனையில் அமர்ந்து இருந்த குரு மூர்த்திக்கு, கையில் இருந்த பேப்பரில் கவனம் பதிய வில்லை.

''என்னப்பா ரொம்ப டல்லா இருக்கீங்க? உங்க பெரிய பொண்ணுக்கு கல்யாணம் பண்ணும் ஜோரில் சின்ன பொண்ணை மறந்தே போய்டுவீங்க போல?'' என்று அவரின் தோளில் சாய்ந்து செல்லம் கொஞ்சினாள் தர்ஷினி.

''அப்படி இல்லைடா. கல்யாணம் பண்ணிப்பார். வீட்டைக் கட்டிப்பார் என்று சொல்வாங்க. நாங்க ரெடி மேடா வீட்டை வாங்கிட்டோம். அந்த கஷ்டம் தெரி யலை. இப்ப சத்யாக்கு கல்யாணம் பண்ணனும் என்று நினைச்ச உடனே கவலையா இருக்கு. நிறைய வேலை இருக்குடா. அதான் எது எதுக்கு யார் யாரை பார்க்கலாம் என்று யோசித்துக் கொண்டு இருந்தேன். நீ ஒரு நோட்டு எடுத்துட்டு வா லிஸ்ட் போடலாம்'' என்று மகளையும் ஆலோசனைக்கு அழைத்தார்.

''ரெடிமேடா கட்டின வீட்டை வாங்கின மாதிரி, ரெடி மேடா கல்யாணம் ஏற்பாடு பண்ணி தரும் காண்ட்ராக் டர்களும் இருக்காங்கப்பா. அவங்களிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியா இருப்பதை விட்டுட்டு, நமக்கு ஏன்பா இந்த லிஸ்ட் போடும் வேலை? நாம் வரவங்களை வாங்க என்று கேட்டுச் சாப்பிடச் சொல்வதோடு நிறுத் திக்கலாம். அதுதான்பா பெஸ்ட்.''

''நாலு பக்க லிஸ்ட் எழுத சோம்பல் பட்டுகிட்டு, காண்ட்ராக்ட் விடலாம் என்று ஐடியா கொடுக்கிறியா? எப்படிப் பார்த்தாலும் அவங்க அதுல பத்து பதினஞ்சு

பெர்சன்ட் எக்ஸ்ட்ரா வச்சு ரேட் சொல்வாங்க. அதை யோசிக்க மாட்டாயா?'' என்று சொன்னபடி நாலு பேருக்கும் காபி எடுத்து வந்து அருகில் அமர்ந்தார் புவனேஸ்வரி.

''தர்ஷினி சொல்வதில் ஒரு பாயிண்ட் இருக்கும்மா. அவர்கள் கொஞ்சம் காசு கூட கேட்டாலும், கவலை இல்லாமல் இருக்கலாம். சொந்த ஊர் என்றால் கூடமாட ஒத்தாசை செய்ய உறவினர்கள் வருவாங்க. சென்னையில் யாரு வருவாங்க? அப்படியே வந்தாலும், அந்த பத்து பேர் தங்க இடம், வாகன வசதி, உணவு எல்லாம் ஏற்பாடு செய்யணும். அவர்களோடு நீங்களும் கூட அலையணும். உங்களுக்கு அலைச்சல் ஜாஸ்தி ஆகும்...''

''நீங்க மூணு பேரு இருக்கீங்களே? மாறி மாறி ஆளுக்கு ஒரு வேலை என்று போகக் கூடாதா?''

''அப்படி இல்லை புவனா, நாங்க போனாலும் இறுதி முடிவெடுக்கும் முன்பு உன்னோட ஆலோசனை மூன்று பேருக்குமே தேவைப்படும். ஒவ்வொண்ணுக்கும் போன் பண்ணினால் உனக்கு டென்ஷன் கூடும். இது வரைக்கும் நாங்களா ஒரு ட்ரெஸ் கூட எடுத்ததில்லை...''

''அது மட்டுமல்லைம்மா. கல்யாண பெண்ணை வெளி வேலைக்கு உங்களால் அனுப்ப முடியுமா? மாப்பிள்ளை வீட்டார் முகூர்த்த புடவை எடுக்கும்போது அதுக்கு நான் மட்டும் போனால் போதுமா? நல்லா யோசிச்சுப் பாருங்க. சில ஆயிரங்கள் கூட போனாலும் ஏஜென்சியில் விடுவது நமக்கு சௌகரியமா இருக்கும். சத்யா கல்யாணத்துக்கு மாப்பிள்ளை தேடும்போது நெட்டில போட எவ்வளவு யோசிச்சீங்க? ஒரே வாரத்துல

வேலை முடியலையா? இதுவும் நல்லபடியா முடியும். அப்புறம் உங்க இஷ்டம். ஆனால் சும்மா டென்ஷனாகி, எங்களைத் திட்டக் கூடாது சொல்லிட்டேன்.''

''மூணு பேரும் ஒண்ணா சேர்ந்துட்டீங்க. அப்புறம் நான் மட்டும் ஏன் தனியா இருக்கணும்? தினசரி கொஞ்சம் கொஞ்சமா டென்ஷன் வேண்டாம் என்று கல்யாணத்தன்னிக்கு மொத்தமா அவன் டென்ஷன் ஏத்திடாமல் இருக்கணுமே? நம்பிக்கையான ஆளா இருக்க வேண்டாமா?'' என்று கேட்டபோது புவனேஸ்வரியின் குரலில் சம்மதம் இருந்தது.

''அம்மா, இந்த ப்ரேம்குமார் மறுநாள் அப்பா பார்க்க வருகிறேன் என்று சொன்ன பொது என்ன சொன்னார் என்று கொஞ்சம் நினைவு படுத்திப் பாருங்க'' என்று சொல்ல, புவனேஸ்வரி குருமூர்த்தி இருவரின் கண்களிலும் மின்னல் வெட்டியது.

''ஆமா! அவங்க அப்பா மேரேஜ் காண்ட்ராக்டர் என்று சொன்னார் இல்ல...'' என்று குருமூர்த்தி ஆரம்பிக்க, ''பேர் கூட ரொம்ப நல்லா பாந்தமா இருந்தது'' என்று புவனேஸ்வரி தொடர, ''பாந்தம் இல்லை பந்தம்'' என்று முடித்தாள் சத்யா.

''ஓ! மூணு பேருக்குமே ஞாபகம் இருக்கா? நான் தான் புத்திசாலி என்று நினைத்தேன். பரவாயில்லை என்னோடு சேர்ந்து நீங்களும் கொஞ்சம் புத்திசாலி ஆகிட்டீங்க போல'' என்று சலித்துக் கொள்ள எல்லோரும் சிரித்தனர்.

''சரிங்க, இன்று சனிக்கிழமை தானே? கல்யாணம் எதுவும் இருக்காது. இன்னிக்கே வரச் சொல்லுங்க. பேசி முடிச்சுடலாம்'' என்று புவனேஸ்வரி சம்மதம் சொன்னார்.

''அப்பா நாளைக்கு வரச் சொல்லுங்கப்பா. நாங்களும் இருப்போமில்ல'' என்று சிணுங்கிய தர்ஷினியை புவனேஸ்வரி சட்டை செய்யவில்லை.

''உனக்கு என்ன சொல்லணுமோ அதை இப்பவே சொல்லிடு. பெரியவங்க பேசும்போது குறுக்கே நீ வரக்கூடாது என்று உனக்கு பயந்துதான் நான் இன்றே வரச் சொல்கிறேன்'' என்று முடித்து விட்டார். என்னதான் மகளின் பேச்சை கத்தரித்து விட்டாலும், அவள் சொன்ன விபரங்களைக் குறித்து கொள்ளவோ, அது குறித்து பிரேம்குமாருடன் விவாதிக்கவோ அவர் மறக்கவில்லை.

* * *

அன்று பிற்பகல் மூன்று மணி அளவில் வீட்டுக்கு வந்த பிரேம்குமாரையும் நந்தகோபாலையும் பார்த்துத் திகைத்தார் புவனேஸ்வரி. இவனா இந்த வெப்சைட் வைத்து நடத்துகிறான்? இவனுக்கு வயசு ரொம்ப கம்மியா இருக்கும் போல? முப்பதைத் தாண்டாது. ரெண்டு மூணு குறைவாகத்தான் இருக்கும். கல்யாணம் ஆகி இருக்குமா? அவருடைய முகத்தில் அவநம்பிக்கை வெளிப்படையாகத் தெரிந்தது.

''நீங்களா இந்த பூமாலை இணைய தளத்தை நடத்துவது?'' என்று கேட்ட புவனேஸ்வரியின் குரலில் ஒலித்த சந்தேகத்தை அளந்த நந்தகோபால் பேசினார்.

''ஆமாம்மா. என் பையன் தான். சின்ன வயசு என்று நினைக்காதீங்க. இவனோட பொறுப்புணர்வும், இவனுடைய இணைய தளத்தில் பதியப்படும் பெண்களின் போட்டோக்கள் மற்றும் விபரங்களின் பாதுகாப்பிற்காக இவன் எடுக்கும் நடவடிக்கைகள் தெரியாததால் இந்தக் கேள்வி கேட்டுட்டீங்க. எங்க இணைய தளத்தில் இருந்து

ஏதாவது ஒரு பெண்ணின் போட்டோவைக் காபி எடுக்க முடியுதா என்று பார்த்துவிட்டு வந்து பேசுங்க'' என்று சவால் விடும் தொனியில் சொன்னார் நந்தகோபால்.

''இல்லை, ஏற்கனவே எங்க சின்ன பொண்ணு முயன்று பார்த்து இருக்கிறாள். தெரியும். செக்யூரிட்டி பலமாக இருக்கிறது என்று சொன்னாள். அதன் பிறகுதான் நாங்கள் நேரில் பேசினோம்...'' என்று தயக்கத்துடன் சொன்னார் புவனேஸ்வரி.

''இணைய தளத்தில் விபரங்கள் போடும்போது கூடிய வரையில், அந்த விபரங்கள் மற்றவர்களால் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்ற எண்ணத்தில் போட்டோக்களை பாஸ்வோர்ட் வைத்து லாக் பண்ணி இருக்கிறோம். கடைசி பட்சமாக தான் புகைப்படங்களைக் கொடுப்போம். யார் யாருக்கு எந்தப் புகைப்படங்களைக் கொடுத்து இருக்கிறோம் என்பதற்கான கணக்கு வைத்து இருக்கிறோம்...'' என்று நந்தகோபால் விளக்க பிரேம் இடையிட்டான்.

''மேடம். உங்களை மாதிரி வரும் வாடிக்கையாளர்களுக்கு, நான் திருமணம் ஆகாதவன் என்பதனால் தவறான எண்ணம் வந்து விடக்கூடாது என்பதற்காகவே. என் பையோ டேட்டாவை நான் இதில் பதிவு செய்ய வில்லை. பெண் தேட ஆரம்பித்து விட்டால், வரும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும், இந்த பெண் தனக்குப் பொருத்தமாக இருப்பாளா என்று பார்க்க மனம் அலை பாயும் என்பதால் நான் என்னுடைய விபரங்களை இங்கே பதியவில்லை. இதில் என் பெற்றோருக்குக் கூட என் மீது வருத்தம் தான். என்னுடைய தொழில் பக்தியையும் அடிப்படை குணத்தையும் விளக்க இந்த விளக்கம்

போதும் என்று நினைக்கிறேன். இதற்கு மேலும் உங்களுக்குத் தயக்கமாக இருந்தால், நாங்க கிளம்புகிறோம். எங்க அப்பாவின் நண்பர் முகவரி தருகிறேன். அவரிடம் பேசிக் கொள்ளுங்க'' என்று எழுந்தான்.

''உட்காருங்க சார். என்ன விசுக்குன்னு எழுந்து விட்டீர்கள்? ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைக்கும் போது சுலபமா தூக்கிக் கொடுத்துட முடியுமா? நாம் கொடுக்கும் வேலையை இவங்க சரியா செய்வாங்களா என்று நான் பார்க்க மாட்டேனா? எந்த வேலைகள் நீங்க செய்வீங்க? எந்த வேலைக்கு என்ன ரேட்?'' என்று தொழில் விபரம் புவனேஸ்வரி பேச ஆரம்பிக்க அடுத்த இரண்டு மணி நேரங்கள் பயனுள்ள பேச்சு வார்த்தைகளில் கழிந்தது.

''ரெண்டாவது பொண்ணு பந்தியில் வீணாகிப் போகும் உணவு பற்றி ரொம்ப கவலைப்பட்டாள். பஃபே முறையில் உணவு வழங்கினால் என்ன?'' என்று விசாரித்தார் குருமூர்த்தி.

''நீங்க சொல்றது சரிதான். வயதானவர்கள் கையில் உணவு தட்டை ஏந்திச் சாப்பிடுவதையும், நின்று கொண்டே சாப்பிடுவதையும் அவ்வளவாக விரும்ப மாட்டார்கள். அதை கௌரவக் குறைச்சலாக நினைக்கலாம். சாப்பாட்டு செலவு கம்மியாகும். நூறு பேர் பந்தியில் சாப்பிடுவதை நூற்றி இருபது பேர் பஃபேயில் சாப்பிடலாம். முடிவு நீங்க தான் சொல்லணும். எங்களுக்கு ஒன்றும் பிரச்னை இல்லை...'' என்று இழுத்தார் நந்த கோபால்.

''பஃபே உணவு முறை உங்களுக்குப் பிடித்தம் இல்லையோ?'' என்று கேட்டார் புவனேஸ்வரி.

''இதுல எங்க விருப்பம் முக்கியம் இல்லை மேடம். திருமணத்திற்கு வருபவர்கள் மன நிறைவோடு போக வேண்டும் என்பதுதான் முக்கியம். எங்களின் அனுபவத்தைச் சொன்னோம். நீங்க என்ன முடிவு பண்ணினாலும், அதை சந்தோஷமாகச் செய்து தருவோம்.''

''விருந்துக்கு எத்தனை பேர் எதிர்பார்க்கிறீர்கள் சார்?'' என்று பிரேம் யோசனையோடு கேட்டான்.

''முதல் நாள் மாலை ஐநூறு. மறுநாள் காலை எழுநூறு, மதியம் நூற்றி ஐம்பது. பத்து சதவிகிதம் கூட குறைய இருக்கலாம்'' என்றவர் மனைவியைப் பார்த்தார். புவனேஸ்வரியின் பார்வையில் ஒப்புதல் இருந்தது.

''ஒன்பது பத்தரை முகூர்த்தம். உங்களின் கணக்கு சரிதான் சார். மதிய உணவுக்கு நிறைய பேர் இருக்க மாட்டார்கள். இருபது சதவிகிதம் மேஜையிலும், எண்பது சதவிகிதம் பஃபேயிலும் ரெடி பண்ணலாம். கவலையை விடுங்க சார்'' என்று உற்சாகமாகச் சொன்னான் பிரேம்.

''கண்ணா! இரண்டும் ஏற்பாடு செய்வதென்றால்...'' என்று இழுத்த அப்பாவை, ''பார்த்துக்கலாம்பா'' என்ற ஒரே வார்த்தையில் முடித்தான். அந்த முதல் பேச்சில் மட்டும் இல்லாமல், அடுத்தடுத்து போனிலும் நேரிலும் தொடர்ந்த பேச்சுக்களில், பிரேம்குமார் படிப்படியாக புவனேஸ்வரியின் மனதில் இடம் பிடித்தான்.

''சும்மா சும்மா மேடம் என்று சொல்லாதீங்க பிரேம் எனக்கு இன்னும் ஸ்கூல் வேலை பார்க்கிற மாதிரி இருக்கு. நீங்க மேடம் என்று சொல்வதால் நானும் மரியாதையை இழுத்துப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கு'' என்று போனில் ஒரு முறை சலித்துக் கொண்டார் புவனேஸ்வரி.

''சொந்த வேலையையும் தொழிலையும் இணைக்கக் கூடாது என்பதில் நான் தீவிரமாக இருக்கிறேன். நீங்க என்னை ஒருமையில் கூப்பிடுங்க மேடம். இந்தக் கல்யாணம் முடியும் வரைக்கும் நான் மேடம் என்று சொல்கிறேன். அதன் பிறகு பார்க்கலாம். சாரி மேடம்'' என்று தீர்மானமாக மறுத்து அவரின் மதிப்பில் மேலும் சில படிகள் ஏறினான்.

சந்தித்த நாளில் இருந்து திருமண நாள் வரையிலான சுமார் நாற்பது நாட்கள் இடைவெளியில், போனிலும், நேரிலும் பல வேலைகள் குறித்துப் பேசி இருந்த பிரேம் குமார், திருமண தினத்தன்று, அவரின் நன்மதிப்பைப் பெற்று இருந்தாலும் ஒவ்வொரு நாளும் இரவு உணவு வேளையில், பிரேம் இதைச் சொன்னார். பிரேம் அதைச் சொன்னார் என்று அவரை ஜெபிக்க வைத்து, தர்ஷனி யின் வெறுப்பையும் சம்பாதித்து இருந்தான்.

''அம்மா, உங்களுக்கு அவரை ரொம்பப் பிடிச்சு இருந்தால், எங்க ரெண்டு பேரையும் கல்யாணம் பண்ணி அனுப்பிட்டு, அவரைக் கூட்டி வந்து உங்க கூடவே வச்சுக்கோங்க'' என்று எரிச்சலோடு சொல்லும் அள வுக்கு புவனா அம்மாவின் பிரேம் புராணம் அமைந்தது.



6

சத்யப்ரபா - கிருஷ்ணகுமார் திருமணத்திற்காக வீட்டில் இருந்து மண்டபத்திற்குக் கிளம்பும் அவசரத்தில், புவ னேஸ்வரி, வீட்டில் இருந்த மூவரையும் ஏவியபடி இருந் தார்.

''என்னங்க, நகைப் பெட்டி பத்திரமா எடுத்து வச்சுட் டீங்களா?''

''சத்யா துணிப் பெட்டி உன் பொறுப்பு. அங்கே வந்து அதைக் காணோம் இதைக் காணோம் என்று என் உயிரை வாங்கக் கூடாது இப்பவே சொல்லிட்டேன்...''

''தர்ஷினி, பிரேம்குமாருக்கு போன் போட்டு, மண் டபத்துக்குப் போக வண்டி எத்தனை மணிக்கு வரும் என்று கேளு. அப்படியே மாப்பிள்ளை வீட்டுக்காரங்க தங்க நாலு ரூம் ஹோட்டலில் போடச் சொல்லி இருந் தேன். போட்டாச்சா என்று கேளு. சும்மா முறைக்காதே தர்ஷினி. இந்த சின்ன வேலை கூடச் செய்ய மாட் டாயா?'' என்று அதட்டிய அம்மாவை முறைத்து விட்டு, கழுத்தை வெட்டினாள்.

''பிரேம் பிரேம் பிரேம்! எதுக்கு எடுத்தாலும் அவர் தானா? என்னால் அந்த ஆளுகிட்டே எல்லாம் பேச முடி யாது. நீங்களே பேசிக்கோங்க. சரியான மண்டைக்கனம் பிடித்த ஆளு'' என்று முனகியவளை ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தார் குருமூர்த்தி.

''தர்ஷினி. நீதானே அவரை பரிந்துரை செய்தாய். அவர் நல்ல பேர் வாங்கினால் உனக்கு சந்தோஷமாகத் தானே இருக்கணும்?''

''அவரை நான் பரிந்துரை செய்தேன் என்பது உங் களுக்கு ஞாபகம் இருக்கா? பரவாயில்லையே? அதை அம்மாவும் மறந்தாச்சு. அந்த பெரிய மனுஷனும் மறந் தாச்சு'' என்று எரிச்சலாகச் சொன்னாள் தர்ஷினி. அந்த எரிச்சலுக்கான காரணம் புரியவில்லை என்றாலும் பிரே மின் மேல் அவளுக்கு ஏதோ கோபம் என்ற அளவில் புரிந்தது.

நிஷா சொன்னாள் என்று சத்யாவிற்கு இவனுடைய இணைய தளத்தில் மாப்பிள்ளை பார்க்கச் சொன்னது நான். அதை அவளும் இவனிடம் சொல்லி இருக்கிறாள். போனிலோ, நேரிலோ, அட்லீஸ்ட் ஒரு எஸ்.எம்.எஸ். சிலோ, என்னுடைய நிறுவனத்தை பரிந்துரை செய்ததற்கு நன்றி என்று ஒரு வார்த்தை சொன்னால் இவன் தேய்ந்து விடுவானா? வாய் மட்டும் கிழியுது. அவன் வெளி ஆள். ஆனால் இந்த அம்மா பஃபே வேண்டும் என்று கேட்டது நான். அவன் சொன்னான் என்று மேஜையிலும் சாப்பாடு ஏற்பாடு பண்ணச் சொல்லியாச்சு. அவன் சொல்ற ஒவ்வொரு வார்த்தையும் அவங்களுக்கு வேத வாக்கா போச்சு. அவரை அறிமுகப்படுத்திய நான் வேண்டாதவளாகப் போய் விட்டேன் என்று மனதிற்குள் பொருமியவள், கடைசி வரை அம்மா சொன்ன வேலையைச் செய்யவே இல்லை.

ஆனால் சில நிமிடங்களிலேயே அவனே போன் பண்ணி, குறிப்பிட்ட வேலைகள் இரண்டுமே முடிந்து விட்டதைச் சொல்ல, புவனேஸ்வரியின் நன்றி உணர்வும், தர்ஷினியின் எரிச்சலின் அளவும் மேலும் சில படிகள் ஏறின.

முதல் நாள் மாலை மாப்பிள்ளை அழைப்பிற்கு ஜரிகை வேலைப்பாடு செய்த குங்கும நிற சாட்டின் துணியில் ஆன முழு நீளப் பாவாடையும், க்ரீம் வண்ணத்திலான காக்ரா சோளியும், பாவாடை வண்ணத்திலான துப்பட்டாவும், செயற்கை கற்கள் பதித்த நெக்லஸ், நெற்றி சுட்டி உள்ளிட்ட பொருத்தமான நகைகளும், தங்க நிறத்தில் வட்ட வட்ட பில்லைகள் வைத்து தைத்த நீண்ட பின்னலும், ஒற்றைச் சரமாய் தொங்கிய

மல்லிகைப் பூவுமாய் வந்து நின்ற தர்ஷினியைப் பார்த்து புவனேஸ்வரி பிரமித்தார்.

''ஹேய் தர்ஷினி, நாலு வயசு குறைஞ்ச மாதிரி இருக்கடா. இப்பதான் காலேஜில் அடி எடுத்து வைத்த மாதிரி அவ்வளவு அழகா இருக்க. என் கண்ணே பட்டுடப் போகுது'' என்று அவளின் கன்னத்தில் வழித்து திருஷ்டி கழித்தார் புவனேஸ்வரி.

''சொன்னது நீதானா? சொல் சொல் என்னுயிரே'' என்று அம்மாவை அணைத்துக் கன்னத்தில் செல்லமாக முத்தமிட்டாள் தர்ஷினி.

''ஹேய், பட்டுப் புடவை கசங்குது பாரு. விடு விடு. சரி கிளம்பியாச்சு இல்லையா? வாசலில் இருக்கும் வரவேற்பு மேஜையில் போய் நில்லு. வரும் எல்லாரையும் வாங்க என்று கேட்கணும். அதே மாதிரி போகும் போது சாப்பிட்டீங்களா என்று விசாரிக்கணும். தெரிஞ்ச வங்க தெரியாதவங்க பார்க்காதே. முக்கியமான வேலை சொதப்பாமல் செய். அந்த இடத்தை விட்டு அசையக் கூடாது புரிஞ்சுதா?'' என்று அதட்டினார் புவனேஸ்வரி.

''அது புரிஞ்சுது. ஆனால் புடவை கட்டாமல் இந்த ட்ரெஸ் போட்டதற்கு திட்டுவீங்க என்று நினைத்தேன். ஏமாற்றி விட்டீர்களே? எப்படி?'' என்று ஆச்சரியமாக விசாரித்தாள் தர்ஷினி.

''அம்மா என்ன நினைக்கிறாங்க என்று வயசுப் பொண்ணுங்களுக்குப் புரியாது. இந்த ட்ரெஸ் நீ இன்னும் எத்தனை நாளுக்குப் போட முடியும் சொல்லு? நாளைக்கே கல்யாணம் ஆகி விட்டால் போட முடியாது. அதனால இப்ப போட்டுக்கோ. ட்ரெஸ் பாந்தமாவும் இருக்கு. எதுக்குத் திட்டணும்? உன்னை திட்டிக்

கொண்டே இருக்கணும் என்று எனக்கு வேண்டுதலா என்ன?'' என்று கன்னத்தில் தட்ட, அவள் புன்னகை செய்தாள்.

மகளுடன் கூடவே வந்து வரவேற்பில் நின்றவர். வாசலில் வைக்கச் சொல்லி இருந்த பன்னீர் சேர்த்த வாசனையாக குளிர் நீரை தூவும் ஏர் கூலர் இன்னும் காணோமே என்று முனகியபடி பிரேமை போனில் அழைத்து, ''பிரேம் வாசலில் வைக்கச் சொன்ன ஏர் கூலர் இன்னும் வரலை பாருங்க'' என்று சொன்ன உடனே வாசலை நோக்கி நடந்தான் பிரேம்குமார்.

* * *

''ஹாய் குட்டி ஹவ் ஆர் யூ? ஸ்கூல் பிள்ளைங்களை எல்லாம் ரிசப்ஷனில் நிறுத்தியாச்சா?'' என்று கேட்டபடி வந்தான் மாப்பிள்ளையின் தம்பி வெங்கடேஷ்.

''வாங்க சின்ன மாப்பிள்ளை! நான் உனக்கு குட்டியா? நான் உன்னை விட ரெண்டு வயசு பெரியவ தெரியுமா? அத்தான் ரெடி ஆகிட்டாரா? இல்லை போனில் சத்யாவை சைட் அடிச்சுட்டு இருக்காரா?'' என்று சிரித்தபடி வரவேற்றாள் தர்ஷினி.

''ரெண்டு வயசு பெரியவங்களா இருந்து என்ன பிரயோஜனம்? என்னை விட ரெண்டடி குள்ளமா இருக்கீங்க. அது போகட்டும். போனில் எப்படி சைட் அடிக்கலாம் என்று கொஞ்சம் சொல்லி தரீங்களா சீனியர்...''

''யார் நான் ரெண்டடி குள்ளமா? உனக்கு கண்ணு தெரியாதா இல்லை கணக்குத் தெரியாதா?''

''என்னோட கண் என்னை ஏமாற்றி விட்டது தர்ஷினி. நான் ஏதோ ஸ்கூல் பைனல் படிக்கிற பொண்ணு என்று

கம்பெனி கொடுக்க வந்தேன். பார்த்தா நீங்க'' என்று கண் சிமிட்டினான்.

''இந்த ஐஸ் எல்லாம் இங்கே வேண்டாம். உங்க சைட் சொந்தக்காரங்களை கும்பிடு போட்டுக் கூப்பிட உங்க அக்கா அடிச்சுத் துரத்தி இருப்பாங்க. எனக்குத் தெரியாதா? எங்கே விக்கி?''

''ட்ரெஸ் மாத்தினாங்க. ஒரே அழுகை கொஞ்ச நேரத்துல கொண்டு வந்து விடுறேன் என்று சொன்னாங்க. இதோ வராளே...'' என்று கை காட்டினான் வெங்கடேஷ்.

''வாங்க குட்டி செல்லம். விக்கிக்கு, ரோஸ் வைக்கலாமா?'' என்று மண்டியிட்டு விக்னேஷின் அடர் நீல ஷெர்வானியில் ஒரு குட்டி வெள்ளை ரோஜாவை தேர்ந்தெடுத்து செருகி அவனது கன்னத்தில் முத்தமிட்ட வினாடியில் பிரேம்குமாரின் கண்ணில் பட்டாள் தர்ஷினி.

சாண்டல் வண்ண காக்ரா சோளியின் நடுவே ஓடிய அடர் குங்கும வண்ணத்திலான துப்பட்டாவும், கருகருவென நீண்ட பின்னலில், நான்கு அங்குல இடைவெளியில் செயற்கை கற்கள் மின்னிய தங்க வண்ணத்திலான வட்ட வட்ட பில்லைகளும், நீண்டு தொங்கிய அடர்ந்த மல்லிகைச் சரமும், காதிலும் நெற்றியிலும் ஆடிய பொருத்தமான நகைகளும், அவனை பல நிமிடங்கள் சிலையாக நிற்க வைத்தது.

அவளிடம் இருந்து கண்களை விலக்கவும் முடியவில்லை. வெகு நேரம் பார்ப்பதும் ஒரு மாதிரி இருக்க, அருகில் இருந்த வீடியோ கேமராவை எடுத்து வரவேற்பை நோக்கிக் கோணம் பார்க்கையில் அவள் யாரோ ஒரு பெண்ணை அணைத்து, ''ஹேய் ராதிகாக்கா, வாங்க வாங்க. நைட் இங்கே தங்க மாமாவிடம் பெர்மிஷன்

வாங்கி விட்டீங்க தானே? வீட்டுக்கு விட முடியாது. நீங்க இருந்தால் சத்யாக்கு கம்பெனி கிடைக்கும்'' என்று மலர்ந்த முகத்தோடு வரவேற்று கொண்டு இருந்தாள்.

''ஹேய் தர்ஷினி இந்த ட்ரெஸ் சூப்பரா இருக்கு. வாசலில் வேறு நிற்கிறாய். எத்தனை பசங்க மயக்கம் போட்டு விழப் போறாங்களோ? எத்தனை வயசு பையன் களோடு அம்மா உன்னைப் பார்த்துப் பெருமூச்சு விடப் போறாங்களோ? அனேகமா அடுத்த முகூர்த்தத்திலேயே உனக்கும் கல்யாணம் செட் ஆகிடும் என்று நினைக் கிறேன்'' என்று சிரித்தபடி கன்னத்தில் தட்டினாள்.

''அக்கா, என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப் படும் மாப்பிள்ளைகளை எல்லாம் க்யூவில் நிற்கச் சொல்லுங்க. நான் பார்த்து செலக்ட் பண்றேன்'' என்று சிரிப்போடு சொன்னவளைப் பார்த்து ரசித்துக் கொண்டு இருந்த பிரேமை, தினேஷின் குரல் கலைத்தது.

''சார், சார், நான் எங்கேயும் போகலை. இங்கேதான் இருக்கேன்'' என்று பதட்டத்தோடு சொன்னவனை தோளில் தட்டி, ''ஹேய் டென்ஷன் ஆகாதே. அம்மா வரும்போது போட்டோ எடுக்கலாமே என்று பார்த்தேன்'' என்று சொல்லிவிட்டு கேமராவை அவன் கையில் கொடுத்து விட்டு நகர்ந்தான்.

இவள்தான் தர்ஷினியா? கல்யாணப் பெண்ணின் தங்கை. அந்த நிஷாவின் சினேகிதி. பஃபே முறையில் உணவு அளித்தால் வீணாவதைத் தவிர்க்கலாமே என்று ஐடியா கொடுத்தவள், மூன்று முறை இவர்கள் வீட்டிற்குப் போயும் இவளை நான் பார்த்ததே இல்லை.

அழகாக அலங்கரித்த இளம் பெண்களைப் பார்ப்பது இதுதான் முதல் முறை என்று இல்லை. சாதாரணமாக

வயசுப் பையன்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பை விட தனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம். தை மாதத்தில் குறைந்தது பத்து முகூர்த்தங்கள் இருக்கும். ஆனாலும் இவளிடம் ஏதோ ஒன்று தன்னை ஈர்த்தது. குழந்தையிடம் மண்டியிட்டு கொஞ்சியது. ஒத்த வயதினருடன் சிரித்தபடி கேலி பேசியது. இதெல்லாம்...

பிரேம், இதென்ன வேலை நேரத்தில், வேலை செய் யும் இடத்தில் சம்பந்தம் இல்லாத யாரோ ஒரு பெண்ணை ரசித்துக் கொண்டு இருக்கிறாய் என்று தலையை உலுக்கியவனுக்கு சற்று முன் புவனேஸ்வரி அம்மா சொன்ன கோரிக்கை நினைவு வந்தது. ஏர் கூலர் ஏன் வரவில்லை என்று போனில் விசாரித்துத் திரும் பியவன் கண்கள் மீண்டும் வரவேற்பிற்குச் சென்றது.

இதென்ன இவள் அம்மாவின் கால்களில் விழுந்து நமஸ்காரம் செய்கிறாளா? அம்மாவை ஏற்கனவே இவ ளுக்குத் தெரியுமா? கண்களைச் சிமிட்டிப் பார்த்தான். அவன் கண்ட காட்சி பொய் இல்லை. அம்மா அவளைத் தூக்கி நிறுத்தி தோளில் தட்டி ஏதோ பேசிக் கொண்டு இருந்தார்கள். திகைப்புடன் அவர்கள் என்ன பேசி இருக் கலாம் என்ற யோசனையில் கண் இமைக்காமல் அங் கேயே பார்த்துக் கொண்டு இருந்தவன் அம்மா அருகில் வந்ததைக் கவனிக்கவில்லை.

''டேய் கண்ணா! நான் இங்கே வந்து நிற்பது கூடத் தெரியாமல் என்னடா அப்படிப் பார்க்கிற?'' என்று அவன் தோளில் செல்லமாய் ஒரு அடி வைத்தவர் அவனின் பார்வை போகும் திசையை ஆராய்ந்தார். இவன் அந்தப் பொண்ணையா பார்த்துக் கொண்டு இருக்கிறான்? அவருக்கு அவரின் கண்களையே நம்ப முடியவில்லை.

''அம்மா, நீங்க எங்கே இங்கே?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான்.

''ஏன்? நான் இங்கே வந்தால் உன் திருட்டுத்தனம் எல்லாம் அம்பலத்துக்கு வந்து விடும் என்ற பயமா?'' என்று கேட்டபடி தர்ஷினியின் மேல் பார்வையைச் செலுத்தினார் யசோதா.

''இதென்ன உளறல்? உங்களைப் பார்த்து நான் ஏன் பயப்படணும்? என்ன தப்பு செய்தேன்?''

''இனிமேல்தான் செய்யப் போகிறாயோ என்னவோ? சரி நீ என்ன ரொம்ப நேரமாக வாசலை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாய்? நான் வந்தது கூடத் தெரியவில்லை. என்ன விஷயம்?''

''வாசலில் பன்னீர் தூவ ஒரு ஏர் கூலர் சொல்லி இருந்தேன். அதை இன்னும் காணோமே என்று போன் பண்ணி விட்டு அது வருவதற்காக காத்து இருக்கிறேன்'' என்று கோர்வையாகப் பதில் சொல்ல, காமாலை கண் போல எல்லாவற்றையும் வித்தியாசமாகப் பார்க்கிறோமோ என்று யசோதாவிற்கே சந்தேகம் வந்து விட்டது.

''நான் கூட வாசலில் நிற்கும் அந்தப் பெண்ணைத் தான்...'' என்று ஆரம்பித்தவர் அவன் முறைப்பில் பேச்சை நிறுத்தி, ''சரியான விஸ்வாமித்திரர் பரம் பரைடா...'' என்று சொன்னார்.

''அந்த பொண்ணு உங்களுக்கு நமஸ்காரம் பண்ணினாங்க போல. உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?'' என்று சின்ன குறுகுறுப்போடு கேட்டான் பிரேம்.

''நமஸ்காரம் பண்ணினாளா? எப்போ? நான் பார்க்கவே இல்லையே?'' என்று சிரித்த யசோதாவை எரிச்சலோடு முறைத்தான்.

''நான் பார்த்தேன். நீங்க என்ன கதை விடுறீங்க?''

''சரி சரி. அவள் நமஸ்காரம் பண்ணலை. எனக்கு பன்னீர் தெளித்த போது, அந்த செம்பின் மேல் மூடி கழன்று விட்டது. அதைத் தேடி எடுத்தாள். அது என் மேல் பட்டு விட்டதோ என்ற பதட்டத்தில் நூறு சாரி சொன்னாள். நான் பரவாயில்லை என்று சொல்லி அவள் கன்னத்தில் தட்ட சற்று முன்பு நான் தொட்ட சந்தனம். அவள் கன்னத்தில் தீற்ற, அதற்கு நான் சாரி சொன்னேன். மாறி மாறி, சாரியும் பரவாயில்லையும் ரெண்டு பேரும் சொல்லிக் கொண்டோமா? ஒரே சிரிப்பு, நல்ல கலகலப்பான பெண். பார்க்கவும் அழகாக இருக்கிறாள். இன்னும் கல்யாணம் ஆகவில்லை போல...''

''போதும்மா விட்டால் அவளைப் பற்றி ஒரு பெரிய புராணமே எழுதுவீங்க போல. சரி நீங்க எங்கே இங்கே வந்தீங்க?''

''என்னடா இது அர்த்தமில்லாத கேள்வி? என் பையன் சேர்த்து வைத்த திருமணம். என் கணவர் எடுத்துச் செய்யும் விருந்து. பையனோட அம்மாவும், பொண்ணோட அப்பாவும் நேரில் வந்து எனக்குப் பத்திரிகை கொடுத்து அழைச்சு இருக்காங்க. நான் இந்தக் கல்யாணத்துக்கு வரக் கூடாதா?''

''ஆமா, நான் நேற்றுதான் ஏஜன்சி ஆரம்பித்தேன். இதுதான் முதல் கல்யாணம் பாருங்க. பொய் சொன்னால் பொருத்தமா சொல்லணும். இதுவரைக்கும் முன்னூறு அலையன்ஸ் முடிந்து இருக்கும். அப்பா அதுக்கும் மேலே கல்யாணம் பண்ணி இருப்பாங்க. என்னவோ அது அத்தனைக்கும் நேரில் வந்த மாதிரி என்ன கதை இது? உண்மையைச் சொல்லுங்க. என்ன விஷயம்?'' என்று விடாமல் நெருக்கினான்.

''உண்மையைச் சொல்லணுமா? சரி. உனக்குக் கல்யாணத்துக்கு பொண்ணு பார்க்க வந்தேன். வெப் சைட்டுல போட நீ ஒத்துக் கொள்ளவில்லை. அதுக்கு ஒரு ஓட்டை காரணமும் சொல்லி விட்டாய். வெளியில் போட உங்கப்பா ஒத்துக் கொள்ளவில்லை. என்னை வேறு என்ன பண்ணச் சொல்கிறாய்? அதான் இங்கே வந்து சுத்திச் சுத்தி பொண்ணு தேடப் போறேன். போதுமா?'' என்று சொன்னவரின் பார்வை வாசலில் நின்று இருந்த பெண்ணிடம் தாவித் திரும்பியது.

இந்தப் பொண்ணு யாராக இருக்கும்? அந்தப் பெண்ணின் உடையும் அலங்காரமும் மனதைக் கவர, அவசரமாகத் திரும்பி மகனை எடை போட்டார். வழக்கம் போல ஒரு ஜீன்ஸ். ஒரு டி ஷர்ட். இவனுக்கு இங்கே பொண்ணு தேடும் பட்சத்தில் பொண்ணு வீட்டுக்காரர்கள் இவனை இங்கே பார்த்தால் அசந்து போக வேண்டாமா?

''ப்ச்! இது என்னடா ட்ரெஸ்? ஆம்பளைப் பசங்களுக்கு பொண்ணுங்க மாதிரி விதம் விதமா ட்ரெஸ் கிடையாதுதான். ஒத்துக்கறேன். ஆனாலும் கொஞ்சம் பளிச்சின்னு ட்ரெஸ் பண்ணிக்கக் கூடாதா? அப்பா பெட்டியில் பட்டு வேஷ்டி சட்டை வச்சு இருக்கிறேன். மாற்றிக் கொண்டு வா'' என்று விரட்டிய யசோதாவை வேற்று கிரக வாசியைப் பார்ப்பது போலப் பார்த்தான் பிரேம்.

''நான் என்ன இங்கே அலங்கார பொம்மையா நிற்கவா வந்து இருக்கிறேன்? தோரணம் கட்ட ஆள் இல்லை என்றால் பிடிக்கணும். போர்ட் சரிஞ்சால் நிமிர்த்தணும். பந்தியில் ஆள் குறைந்தால் கை கொடுக்கணும். இன்ன வேலைதான் என்று இல்லாமல், கல்யாணம் சுமுகமாக

நடக்க என்ன வேலை என்றாலும் செய்யத் தயாரா இருக்கணும். இதுக்கு வேஷ்டி, கட்டினால் சரியா வருமா? அதுவும் பட்டு வேஷ்டி, போய் உங்க வீட்டுக்காரர் சமையல் எப்படி இருக்கு என்று டேஸ்ட் பண்ணிப் பாருங்க'' என்று அம்மாவை அந்த இடத்தில் இருந்து நகர்த்தினான்.

அம்மா போன பின்பு தன்னையே குனிந்து ஒரு முறை பார்த்துக் கொண்டவனுக்கு உடை மாற்றலாமா என்று தோன்றியது. ஆச்சரியம்தான். அதை விட, குழந்தையிடம் மண்டியிட்டு ரோஜா வைத்தவள், தன் வயதொத்த பெண்ணை அணைத்து வரவேற்றவள், வயதில் பெரியவர்களை நமஸ்காரம் செய்து கொண்டவள், இள வயது ஆணான தன்னை எப்படி வரவேற்பாள் என்று பார்க்கும் ஆசை வந்தது அதை விட ஆச்சரியம்.

அவளை தனக்குத் தெரியாதது போலவே தன்னையும் அவளுக்குத் தெரிய வாய்ப்பில்லையே? எப்போதும் திருமணம் முடிந்த பின்பும் ஒரு மரியாதைக்காக, தேங்காய் பழத்துடன், தாம்பூலத் தட்டில் பணம் வைத்துக் கொடுப்பார்கள். அந்த சமயத்தில் போடுவதற்கென்று பிரத்யேகமாக ஒரு உடை - சந்தன நிறத்தில் பைஜாமா குர்த்தா எப்போதும் அவன் பெட்டியில் இருக்கும்.

அந்த எண்ணம் வந்த உடனேயே பொருட்கள் இருக்கும் அறைக்குப் போனவன், உடை மாற்றி, முகம் கழுவி, வாசலுக்கு வர ஆன அந்த சில நிமிடங்களில் ஏர் கூலர் வந்து சேர்ந்து இருந்தது. பக்கவாட்டு வழியாக முன்புறம் சென்றவன், வரவேற்பு மேஜையை நெருங்கினான்.

வாசலில் நிற்கும்போது தெரிந்தவர் தெரியாதவர் என்ற பாகுபாடு இன்றி, எல்லாரையும் வரவேற்க

வேண்டும் என்று அம்மா சொல்லி இருந்ததால், ஒரு மலர்ந்த புன்னகையையும், கை கூப்பலையும் வயதிற் கேற்ப கொடுத்து வரவேற்றுக் கொண்டு இருந்தாள். ஏர்கூலர் வைத்துச் சென்றவனுடன் சில வார்த்தைகள் பேசிவிட்டு வரவேற்பு மேஜையை நெருங்கியவனை, பன்னீர் தெளித்து, ''ஹலோ வெல்கம்'' என்று புன்னகை யோடு சொன்னாள் தர்ஷினி.

''ஹலோ! நீங்க ஒவ்வொரு முறையும் பன்னீர் தெளிக்க சொம்பை உயர்த்தி, அதன் மூடி கழன்று, அதைத் தேடி நீங்க சிரமப்பட வேண்டாம் என்று உடனே கூலர் வைக்க ஏற்பாடு செய்து விட்டேன். சந்தோஷமா? கல்யாண வேலைகள் எப்படி நடக்கிறது? இன்னும் ஏதாவது பாக்கி இருக்கிறதா?'' என்று விசாரித்தவனை வியப்பாகப் பார்த்தாள்.

ஏர்கூலர் நாம் வைக்கச் சொன்னதுதானே? என்னவோ இவன் தனக்காக தனியாக வைக்கச் சொன்னது மாதிரி பீற்றிக் கொள்கிறான்? ஆளைப் பார்த்தால் பொறுக்கி மாதிரியும் தெரியவில்லை. எளிமையான உடை என் றாலும், அது அவனுக்குப் பாந்தமாக இருந்தது. கண்கள் மேலே கீழே என்று அலைபாயவில்லை. ஆனாலும் வார்த்தைகள் ரொம்ப உரிமை எடுத்துப் பேசுவது மாதிரி இருக்கிறதே?

''எக்ஸ்கியூஸ் மீ. என்னை யார் என்று தெரியவில்லை என்று நினைக்கிறேன். ஐ ஆம் பிரேம்குமார். நான் பூமாலை டாட் காம் இணைய தளத்தின் உரிமையாளர். நீங்கதான் உங்க சகோதரிக்கு எங்கள் நிறுவனம் மூலம் மாப்பிள்ளை தேடலாம் என்று பரிந்துரை செய்ததாக உங்க அப்பா சொன்னார். அதற்கு என்னுடைய தனிப்

பட்ட நன்றிகள். இந்த நன்றியைச் சொல்ல இப்போது தான் நேரம் கிடைத்து இருக்கிறது'' என்று கரம் குவித்துப் புன்னகை செய்தான் பிரேம்குமார்.

''வாட்? யு! பிரேம்குமார்? என்ன விளையாடுறீங் களா?'' என்று குழப்பத்தோடு கேட்ட தர்ஷினியை அதைவிடக் குழப்பத்தோடு பார்த்தான் பிரேம்குமார்.



7

தன்னை பிரேம்குமார் என்று அறிமுகப்படுத்திய பின்பு, ப்ரியதர்ஷினியின் வரவேற்பான புன்னகை மேலும் சில சென்டிமீட்டர் விரியலாம். உற்சாகமாகப் பேச்சைத் தொடரலாம் என்று எதிர்பார்த்த பிரேம்குமார், அவளது அதிர்ச்சியையும், 'என்ன விளையாடுறீங்களா?' என்ற கேள்வியில் குழம்பினான்.

''நான் ஏன் விளையாடணும்? அதாங்க என் பேர், பூமாலை இணைய தளம் என்னுடையதுதான். உங் களுக்கு சந்தேகமா இருந்தால், இங்கே இருக்கும் பணி யாளர்களிடம் அல்லது உங்க பெற்றோரிடம் கேட்டுப் பாருங்க. இதுக்கு ஏன் இவ்வளவு அதிர்ச்சி?'' என்று முகம் வாடச் சொன்னவன் அந்த இடத்தில் இருந்தும் நகர்ந்து விட்டான்.

இவனுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது? இவனா பிரேம்குமார்? அன்று அவள் வெப்சைட்டில் பார்த்த போது, நாற்பத்தி ஐந்து வயது என்பது மாதிரி அல்லவா பிறந்த தேதி இருந்தது? அதனால் தானே அவள் ஒரு

மத்திய வயது ஆணை எதிர்பார்த்தாள். அவளின் ஞாபக சக்தி பற்றி அலுவலகத்திலும் வீட்டிலும் பெருமையாகச் சொல்வாங்களே? உடனே அந்த இணைய தளத்தைப் பார்க்க வேண்டும்.

தன்னை ஒருவர் விரல் நீட்டி குற்றம் சொல்வதா? தப்பை இவன் மேல் வைத்துக் கொண்டு, இவன் என் கேள்வியை குறை சொல்வதா? இங்கே எங்கே இணைய தள வசதி இருக்கும்? கண்கள் அலைபாய, அவன் வார்த்தைகளே காதில் ஒலித்தது.

''ரொம்ப அவசரம் என்றால் கல்யாண மண்டபத்துக்கே வாங்க சார். இங்கே மடி கணினி வைத்து இருப்பேன்...''

''வரேண்டா, எங்கே இருக்க நீ?'' என்று தேடினாள். இரண்டு வீடியோ கேமராக்களில் இருந்து வரும் காட்சிகளை இணைக்கும் வேலை நடந்து கொண்டு இருந்த மேஜையில் அமர்ந்து இருந்தான், அங்கே கணினியும் இருக்க அங்கே சென்றாள்.

''மிஸ்டர் பிரேம்குமார், எனக்கு ஒரு உதவி வேண்டும்'' என்று கேட்டாள் தர்ஷினி.

அவளை நிமிர்ந்து பார்த்தவனின் முகம் இறுக்கமாக இருந்தது. 'இங்கே எதுக்கு வந்தாய்?' என்று கேட்காமல் கேட்டன கண்கள். இருந்தாலும் தனது வாடிக்கையாளரின் மகள் என்பதை மனதில் நிறுத்தி 'சொல்லுங்க' என்று சுருங்கமாகக் கேட்டான்.

''உங்களின் மடி கணினியை நான் சில நிமிடங்கள் பயன்படுத்திக் கொள்ளலாமா?'' என்று கேட்டவளை வியப்பாகப் பார்த்தான். என்னவோ கேட்க போகிறாள் என்று எண்ணி இருக்க கணினி கேட்டது ஆச்சரியமாக

இருந்தது. எதற்காக இருக்கும் என்ற கேள்வி மனதில் எழுந்தாலும், மௌனமாக தலையை அசைத்து விட்டு அந்த மேஜையில் இருந்து எழுந்தான்.

''பரவாயில்லை. நான் ரகசியமா எதுவும் பார்க்கப் போவதில்லை. சொல்லப் போனால் உங்களுக்குத் தான் ஒன்று காட்டணும்...'' என்று நகர முற்பட்டவனைத் தடுத்து நிறுத்தினாள்.

''என்ன விஷயம்?'' என்று குறுகுறுப்போடு பார்த்தவனுக்கு, அவள் தன்னுடைய இணைய தளத்தைத் திறக்கவுமே மின்னல் அடித்தது. அவள் தன்னை பிரேம்குமார் என்று நம்ப மறுத்ததன் காரணம் உடனடியாகப் புரிந்தது.

''ஓகே மிஸ் ப்ரியதர்ஷினி, நீங்க என்ன காட்டப் போறீங்க என்று எனக்குப் புரிந்து விட்டது அது வந்து...'' என்று தயக்கத்தோடு பேச்சை ஆரம்பித்தான் பிரேம்.

''உங்க வியாக்கியானம் எல்லாம் எனக்கு வேண்டாம். நீங்க உங்க இணைய தளத்தில் உங்களைப் பற்றி என்ன வேண்டுமானாலும் போட்டு வைப்பீங்க. அதைப் பார்ப்பவங்க, படிப்பவங்க எல்லாம் கேனையா? இதுல நான் ஏதோ தப்பு பண்ணின மாதிரி என்னை முறைச் சுட்டுப் போனால் என்ன அர்த்தம்?'' என்று அதட்டலாகக் கேட்டாள் தர்ஷினி.

''லுக் ஹியர் மேடம். நான் இந்தத் தொழிலுக்கு வந்து மூன்று வருடம் ஆகிறது. முதல் ஆறு மாதங்கள் நாற்பது விண்ணப்பங்கள் மட்டுமே வந்தது. அந்த நாற்பதில் முப்பத்தி இரண்டு பையன்களின் ஜாதகம். ஏன் பெண்களின் விண்ணப்பம் வரவில்லை என்று ஒரே மண்டை குடைச்சல். வந்த விண்ணப்பதாரர்களிடம் என்னுடைய இணைய தளத்தில் என்ன பிடித்து இருக்கு. என்ன

பிடிக்கவில்லை என்று சர்வே எடுத்தேன். அதில் நாற்பது பேரும் ஒரே மனதாகச் சொன்ன நெகடிவ் விஷயம் என்ன தெரியுமா? என் வயதுதான். மக்களுக்கு இள வயது ஆண்கள் நல்லவர்களாக இருக்கக் கூடும் என்பதை நம்ப முடியவில்லை. எங்கேயோ போவானேன்? உங்க அம்மா அப்பவே எத்தனை கேள்விகள் கேட்டாங்க தெரியுமா?''

''அதனால் நீங்க உங்க வயசை மாற்றிப் போடலாமா? இது ஏமாற்றுவதாகாதா?''. என்று கேட்ட தர்ஷினியின் குரலில் கோபம் இருந்தது.

''இருக்கலாம். இப்ப நான் வேலை செய்வதை அருகில் இருந்து பார்த்த பின்பு அவங்க அபிப்ராயம் மாறி விட்டது. ஆனால் எல்லோரிடமும் என்னைப் பற்றி நான் விளக்கம் சொல்லிக் கொண்டு இருக்க முடியுமா? என்னிடம் வருபவர்களிடம் தானே நான் விளக்கமும் சொல்ல முடியும்? வராமலேயே விலகிப் போகும் நபர்கள் எத்தனை பேர் என்று நான் எப்படிக் கண்டு பிடிப்பேன்?''

''சரி, அதனால்...''

''என்னுடைய எல்லா திறமையையும் இள வயது என்று ஒரு விஷயம் அடிச்சுட்டுப் போய்டுச்சு. அதனால் என் தொழிலை விருத்தி பண்ண யோசித்தேன். எங்க அம்மாவிடம் பேசிக் கொண்டு இருந்தபோது அவ்வை யார் இளமையில் முதுமை பெற விநாயகரிடம் தவம் செய்து வரம் பெற்ற கதை சொன்னாங்க. அது எனக்கு பிடித்து இருந்தது. என் வயதை இருபது ஆண்டுகள் கூட்டிப் போட்டேன். அடுத்த ஒரே மாதத்தில் நாற்பது ஜாதகங்கள். பொண்ணு மாப்பிள்ளை சரி பாதியா

இருந்தது. இது பொய் என்று நினைத்தால் பொய். வியாபார நுணுக்கம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். நீங்க எப்படி எடுத்துக் கொண்டாலும் சரி. வேறே ஒன்றும் இல்லையே? எனக்கு நிறைய வேலை இருக்கிறது. நான் கிளம்புகிறேன்'' என்று ஒரே மூச்சில் பொரிந்து தள்ளி விட்டு நகர்ந்த பிரேம்குமாரை பிரமிப்புடன் பார்த்து நின்றாள் தர்ஷினி.

''தர்ஷினி நான் உன்னை என்ன சொல்லி விட்டுப் போனேன்? நீ இங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?'' என்ற அம்மாவின் அதட்டல் காதில் விழும் வரை சில வினாடிகளோ, சில நிமிடங்களோ அதே இடத்தில் அசையாமல் நின்று கொண்டு இருந்தாள்.

''இதோ போறேன்மா. பிரேமைப் பார்க்க வந்தேன்'' என்று சொல்லி வரவேற்பு மேஜைக்கு நகர்ந்த தர்ஷினியின் காதுகளில் அவனின் குரல் மீண்டும் மீண்டும் ரீங்காரமும் இட்டது.

என்ன ஒரு வேகம்? எதிராளியை பேசவே விடமாட்டான் போல? என்ன மாதிரி ஒரு விளக்கம்? அவனின் கோபம் பிடித்து இருந்தது. அவனின் விளக்கமும் பிடித்து இருந்தது. பொய்மையும் வாய்மை இடது புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் என்ற தொழில் தர்மமா? யார் அவங்க அம்மா? நல்ல பிசினெஸ் ஐடியா கொடுக்குறாங்களே? பார்க்க வேண்டும் போல இருந்தது.

லுக் ஹியர் மேடமா! நல்லாத்தான் மிரட்டுகிறான். அம்மா அப்பாவே நம்பவில்லையா? அம்மா ஓகே. ஆனால் அப்பா கூடவா? அவன் பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? உன் வயசே உனக்கு எதிரி என்று நினைக்காதே மேன். என்னைப் பொறுத்தவரை இந்தத்

தொழில் பக்திதான் உனக்கு கூடுதல் அழகை கொடுக் கிறது. கண்கள் அவனைத் தேடியது. மணமேடையின் அருகே இருந்தான். மீண்டும் ஒருமுறை இங்கிருந்து நகர்ந்தால் அம்மாவிற்கு பதில் சொல்ல முடியாது. மொபைலில் அவனை அழைத்தாள்.

''பிரேம் நான் தான். அம்மா என்னை இங்கே இருந்து அசையக்கூடாது என்று கண்டிப்பா சொல்லி இருக் காங்க. அதனால் தப்பா எடுத்துக்காமல் எனக்கு ஒரு சின்ன உதவி செய்ய முடியுமா? நிஜம்மாவே சின்ன உதவிதான். ப்ளீஸ்...'' என்று கொஞ்சலாகச் சொன்னது தர்ஷினி என்பது அவள் பேர் சொல்லாத போதும், புரிந்தது. கண்கள் வாயிலை நோக்கித் திரும்பியதுஉ

உற்சாகமாகக் காற்றில் கை அசைத்து, 'ஹாய்' என்று ஜாடை காட்டினாள் தர்ஷினி.

அவளின் மலர்ந்த முகமும் சிரிப்பும், ஜாடையும் மனதிற்குள் என்னவோ செய்ய, 'ம்ம், சொல்லு' என்று முணுமுணுத்தான்.

''பிரேம். அரை மணி நேரமா வாசலில் நின்று, எல் லோரையும் வாங்க வாங்க என்று சொல்லி எண் தொண்டை காய்ஞ்சு போச்சு, எனக்கு ஒரு மேங்கோ ப்ளேவேர் ஜூஸ் தரமுடியுமா?''

''அனுப்புகிறேன்'' ஒற்றை வார்த்தையுடன் முடித்து போனை வைத்தவனுக்கு புன்னகை மலர்ந்தது.

''அனுப்புகிறானா? அவனவன் வலியப் போய் வயசு பெண்களிடம் வழியுறாங்க. இவனிடம் தானே போன் பண்ணி ஜூஸ் கேட்டால் அனுப்புகிறேன் என்று சொல் றானே லூசு'' என்று முகத்தை சுளுக்கிக் கொண்டாள் தர்ஷினி.

பணியாளரை அழைத்து, ''ரிஷப்சனில் நிற்கும் மேடத் திற்கு ஒரு மேங்கோ ஜூஸ் கொடு'', என்று பிரேம் சொன்னது சரியாக யசோதாவின் காதுகளில் விழ அவர் ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தார். அவனது மாற்றிய உடை கண்ணில் பட ஆச்சரியம் மேலும் கூடியது.

''ஹேய் கண்ணா! எப்பவும் போல் என் பேச்சை கேட்க மாட்டாய் என்று நினைத்தேன். பரவாயில்லையே மாற்றி விட்டாயே? இப்ப பாஸ் மார்க் வாங்கி விடுவாய்'' என்று அருகில் வந்த அம்மாவைப் பார்த்து புன்னகை செய்தான்.

''தேங்க்ஸ் நீங்க என்னிடம் என்ன கேட்க வேண்டும் என்றாலும் நாளை மதியம் நம் வீட்டில் போய் வைத்துக் கொள்ளலாம். இப்ப எனக்கு நிறைய வேலை இருக்கு. இப்ப என்னைத் தொந்தரவு பண்ணாதீங்கம்மா'' என்று அவரின் கன்னத்தைப் பிடித்துச் செல்லமாக ஆட்டினான்.

''சரி நீ உன் வேலையைப் பாரு. நான் என் வேலையைப் பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டு வரவேற்பை நோக்கி நடந்தார் யசோதா. போகும்போது ஒரு மேங்கோ ஜூஸ் எடுத்துக் கொள்ள மறக்கவில்லை.

''ஹலோ, உங்களுக்காக இந்த மேங்கோ ஜூஸைக் கொடுத்து அனுப்பினார் அந்த சார்'' என்று பிரேம்குமாரை கை காட்டிய யசோதாவிடம், ''தேங்க்ஸ் ஆன்ட்டி'' என்று முணுமுணுத்தாள். வேறு புறம் திரும்பி அவள் பல்லைக் கடிக்க, அதைப் பார்த்த யசோதா, ''ஏன்மா உனக்கு மேங்கோ ஜூஸ் பிடிக்காதா? பைனாப்பிள் இருக்கு. கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்று துருவினார்.

''இல்லை ஆன்ட்டி, எனக்கு மேங்கோ தான் பிடிக்கும். தெரிஞ்சுதான் அனுப்பி இருக்கார். ஆனால்...'' நேரில்

வரச் சொன்னால் ஜூஸ் கொடுத்து அனுப்புகிறானே என்ற கோபத்தில் அவள் கோபத்தில் பல்லைக் கடித்த காரணம் அவருக்குப் புரியவில்லை.

''உனக்கு மேங்கோ ஜூஸ் பிடிக்கும் என்று அவருக்கு எப்படித் தெரியும்?''

''இதென்ன கேள்வி? நானே அவரிடம் சொன்னேன். அது சரி நீங்க விருந்தாளி இல்லையா? உங்களிடம் ஜூஸ் கொடுத்து அனுப்பி இருக்கிறார்? நீங்க அவங்களுக்குத் தெரிஞ்சவங்களா? சொந்தமா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

''ஆமா! கொஞ்சம் துரத்து சொந்தம்...'' என்று சின்ன சிரிப்போடு சொன்னார் யசோதா.

''ஓ!'' என்று சுருக்கமாக முடித்தவள் ஜூஸை குடிக்க வில்லை. அவருடன் பேசிக் கொண்டே இருந்தாள். பத்து நிமிஷங்களாக அம்மா அங்கேயே நின்று அவளுடன் பேசிக் கொண்டு இருந்தது. பிரேம்குமாரைத் தொந்தரவு செய்தது. அவரை அங்கிருந்து உடனே நகர்த்த வேண்டும். ஆனால் அங்கே நேரில் போக இஷ்டம் இல்லை. ஒரு பணியாளை அழைத்து, அம்மாவை அப்பா கூப்பிடுவதாகச் சொல்ல சொல்லி, அவர் அந்த இடத்தில் இருந்து நகர்ந்த உடனே நிம்மதிப் பெருமூச்சோடு திரும்பினான்.

''பிரேம் ஒரு நிமிஷம்...'' என்று கை காட்டி அழைத்தாள் தர்ஷனி. ''கிட்டே போகாதடா!'' என்று உள்மனம் சொன்ன அறிவுரையை அலட்சியப்படுத்தி கால்கள் அந்த திசையில் நகர்ந்தது.

''பிரேம், பெரிய லெக்சர் அடித்து களைத்துப் போய் இருக்கீங்க. இன்னும் விடிய விடிய வேலை வேறு

இருக்கு. உங்களுக்காக தான் ஜூஸ் கேட்டேன். குடிச்சுட்டுப் போய் வேலையைப் பாருங்க. பேச்சுல என்ன ஒரு வேகம்? என்ன சூடு? குடிங்க. கொஞ்சம் கூல் ஆகட்டும்'' என்று சற்று முன்பு யசோதா கொண்டு வந்து கொடுத்த ஜூஸ் டம்ளரை எடுத்து நீட்டினாள் தர்ஷினி.

அவன் வாங்க தயங்க, ''அட! நீங்க போட்ட ஜூஸைக் குடிக்க நீங்களே இப்படித் தயங்கினால், நாங்க எல்லாம் எப்படி நம்பிக் குடிப்பது? சும்மா பந்தா பண்ணாமல் குடிங்க பிரேம்'' என்று தர்ஷினி அவன் கைக்குள் டம்ளரைத் திணித்ததை அந்த மண்டபத்தில் இருந்த க்ளோஸ்ட் சர்க்கியூட் டி.வி. வஞ்சனை இன்றி ஒளிபரப்ப, அதை இருந்த இடத்தில் இருந்தே தனித் தனியாகப் பார்த்த யசோதாவும் குருமூர்த்தியும் ஆச்சரியத்தில் விழி விரித்தனர்.

முதல் நாள் மாலை ஏழு மணி முதல், மறுநாள் திருமணம் நடக்கும் முகூர்த்த நேரம் வரையில் ஆன இடைவெளியில், அவள் தூங்கிய நாலு மணி நேரம் தவிர, மிச்ச நேரத்தில், இருநூறு முறை தர்ஷினி பிரேமை அணுகி இருந்தாள். அதில் ஐம்பது முறையாவது குருமூர்த்தி கண்ணிலோ, யசோதா அம்மாவின் கண்ணிலோ அது பட்டும் இருந்தது.

''பிரேம் வாசலில் இருக்கும் வரவேற்பு போர்டிற்கு வெளிச்சம் போதாது போல இருக்கே? மணவறையில் சீரியல் லைட் எதுக்கு? அதை அங்கே போடச் சொல்லலாமா?''

''சரி...''

''பெரியவங்க எல்லோரும் சாப்பிட்டு முடிச்சாச்சு என்று நினைக்கிறேன். டெசெர்ட் கியூ நிறையா இருக்கு.

இந்தப் பணியாளர்களை அங்கே பஃபெக்கு மாற்றினால் நல்லா இருக்கும்.''

''சொல்றேன்...''

''பிரேம் எனக்கு அர்ஜெண்டா ஒரு மெஹந்தி கோன் வேணுமே?''

''வாட்?''

''எதுக்கு இவ்வளவு ஷாக் ரியாக்ஷன் கொடுக்கிறீங்க? இது உங்க வேலை இல்லை தான். ஆனால் எனக்காக வாங்கித் தரக்கூடாதா?''

''.....''

''நீங்க என்ன நினைக்கறீங்க என்று தெரியுது. இவள் கையில் தான் ஏற்கனவே முழங்கை வரை இருக்கே இப்ப எதுக்கு மெஹந்தி? அதானே! அது எனக்கில்லை. மாப் பிள்ளையோட அக்கா பையன் விக்கிக்கு சின்னக் குழந்தை கேட்கும்போது எப்படி முடியாது என்று சொல் வது? ப்ளீஸ்ப்பா'' என்று கண்ணைச் சுருக்கி கேட்ப வளிடம் எப்படி மறுப்பது? உடனே ஆள் அனுப்பி வாங்கி வரச் செய்தான்.

''வரிசை தட்ட வைக்கக் கொண்டு வந்த ஜெம்ஸ் பாக்கெட் தொலைஞ்சு போச்சு. பசங்க எடுத்து சாப்பிட் டுட்டாங்க என்று நினைக்கிறேன், நாலு பாக்கெட் வேணுமே?''

''கொண்டு வந்த பொருளை பத்திரமா...''

''சும்மா முறைக்காதீங்க. எங்க அம்மா தான் உங் களைக் கேட்கச் சொன்னாங்க. பிரேம் வாங்கித் தர மாட் டேன் என்று சொல்லிட்டார் என்று அம்மாவிடம் சொல் லிடட்டுமா?'' என்றவளை அந்த நேரத்தில் முறைத்

தாலும் அவள் நகர்ந்த உடனே சிரிப்பு வந்தது. வாங்கித் தந்தான்.

''அய்யருக்கு வச்சு இருக்கும் சாமானில் பால், தயிர், கோமியம் இல்லை. நாளைக்குக் காலையில் கிடைக்கும் தானே?''

''ம், தயிர் உரை ஊற்றணும். மிச்சம் காலையில் சொல்லி இருக்கு.''

''ஸ்டேஜ்ல இருக்கும் குத்து விளக்கு கொஞ்சம் டல்லா இருக்கு பிரேம். இப்ப லைட் வெளிச்சத்துல ஒண்ணும் தெரியாது. காலையில் நல்லா இருக்காது. கொஞ்சம் ப்ராசோ போட்டு தேக்கச் சொல்றீங்களா?''

''கூட்டம் குறையட்டும். நைட் பண்ணச் சொல்றேன்.''

முதல் சில மணி நேரம் திருமணச் சடங்குகள், அதற்குச் செய்ய வேண்டிய வேலைகள், என்று அதை ஒட்டியே அமைந்த பேச்சு வார்த்தை நேரம் ஆக ஆக, நண்பர்களுக்கு இடையே உள்ளதைப் போல மாறிப் போனது.

''சத்யா காலையில் சாப்பிடக் கூடாதாம். இன்னொரு கப் காபி தரீங்களா?'' என்று கேட்டபோது, ''நான் என்ன சர்வரா? கிச்சன்ல போய் எடுத்துக்கோ'' என்று சொல்ல முடியவில்லை.

''அந்த பிங்க் ட்ரெஸ்ட போட்ட குட்டி பொண் ணோட ஹேர் ஸ்டைல் பார்த்தீங்களா? ஹய்யோ! சோ! கியூட்'' என்று குதூகலித்தபோது கூட சேர்ந்து ரசிக்கத் தோன்றியது.

''நாலாவது ரோவில் இருக்கும் கிரே சபாரிக்கு மிஸ்டர் மெட்ராஸ் என்று நினைப்பு'' என்று கேலியாகப் பழித்த போது புன்னகை வந்தது.

''உங்க ஷர்ட் காலர்ல ஒரு பூச்சி இருக்கு'' என்று தட்டிவிட, அந்த அக்கறை இனித்தது.

''ஒரு நாள் இந்த மாதிரி பத்து பந்தி பரிமாறுவதைப் பார்த்தாலே ஒரு மாதிரி இருக்கு. நீங்க எப்படித்தான் வருஷம் பூராவும் இதை பார்த்துட்டே இருக்கீங்களோ?'' என்றபோது அவளின் பாவனையை ரசித்துச் சிரித்தான்.

''நீங்க எப்பவுமே இப்படித்தான் பேசாமலே சிரித்தே சமாளிப்பீங்களா பிரேம்? கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் இருப்பதுதான் இந்த உலகத்திலேயே எனக்கு முடியாத ஒரே கஷ்டமான வேலை. ஆனால் என்னையே நேற்று வாய் அடைக்க வைத்த சாமர்த்தியம் உங்களுக்கு இருக்கு. வெல்டன் பிரேம்'' என்று அவனின் கையைப் பற்றிக் குலுக்கிய போது யசோதா இங்கேயே பார்த்துக் கொண்டு இருப்பது கண்ணில் பட்டது.

''சட்டுன்னு திரும்பாதீங்க. மூன்றாவது வரிசையில் தூணுக்கு. அருகில் உள்ள சேரில் டார்க் கிரே கலர் சாரி கட்டிக் கொண்டை போட்டு ஒரு அம்மா இருக்காங்க. அவங்க நேற்று மாலையில் இருந்து அவங்க என்னையே நோட்டம் விட்டுட்டு இருக்காங்க. அவங்களுக்கு என்ன வேண்டுமென்று போய் கேட்டுட்டு வரட்டுமா?'' என்று தர்ஷினி சொல்ல பிரேமின் மூளைக்குள் அபாய விளக் கெரிந்தது.

அவசரமாகத் திரும்பிப் பார்த்தவன், ''அது எங்க அம்மா...'' என்று முணுமுணுத்தான்.

''உங்க அம்மாவா? நேற்று அவங்க உங்களைத் துரத் தும் சொந்தம் என்று சொன்னாங்களே? அவங்க உங்க அம்மா என்று தெரியாமல் அவங்களிடம் நான் என் னென்னவோ... ஹய்யோ!'' என்று முகத்தை மூடி

கூச்சத்தில் சிவந்து சிரித்தவளை ஆச்சரியமாகப் பார்த் தான் பிரேம்.

முதல் நாள் மாலையில் அவள் பேசியபோது, அதைத் தொழில் ரீதியில் எடுத்துக் கொண்டு, ஒன்று இரண்டு வார்த்தைகளில் பதில் சொல்லி அவற்றை நிறைவேற்றி வைத்தவன், இன்று காலையில் அவளைத் தேட ஆரம் பித்து இருந்தான். பதினைந்து நிமிடங்கள் அவள் குரல் நேரிலோ போனிலோ ஒலிக்காமல் இருந்தால் என் னவோ இழந்ததைப் போல மனம் வாடியது. இப்போது கூச்சத்தில் சிவந்தவளை அள்ளி அணைக்க வேண்டும் என்ற ஆவல் பெருகிய வினாடியில் அந்த வாட்டத்துக் கான காரணம் புரிந்து விட, திகைத்துப் போய் நின்றான் பிரேம்.



8

தர்ஷினியின் முக பாவனைகள் தன்னை பாதிக்கும் விதத்தையும் அதன் காரணத்தையும் உணர்ந்த பிரே மிற்கு தன் மீதே ஆச்சரியம் வந்தது. இவளைப் பார்த்து அரை நாள் இருக்குமா? அதற்குள் இவள் மீது காதல் வந்து விட்டதா? நான்சென்ஸ் இந்தக் கல்யாண மண் டபத்தில் இருந்து கிளம்பி விட்டால், இவளை மீண்டும் சந்திக்கும் வாய்ப்பே கிடைக்குமோ கிடைக்காதோ? 'டீன் ஏஜ் பையன் மாதிரி காதல் ஊதல் என்று பிதற் றாதே பிரேம்' என்று தன்னைத் தானே மானசீகமாகக் குட்டி கொண்டு பேச்சை தொடர்ந்தான்.

''ஏன் மேடம் அவங்க என் அம்மா என்பதற்கு இவ்வளவு ஆச்சரியம்?''

''என்னது மேடமா?''

''அதுக்கும் ஆச்சரியமா? மேடம் வேண்டாம் என்றால் மிஸ் ப்ரியதர்ஷினி சொல்லட்டுமா?''

''என்ன திடீர்னு மரியாதை எல்லாம்?''

''திடீர்னு மரியாதையா? நான் எப்பங்க உங்களை மரியாதையை குறைச்சலா பேசினேன்? நீங்க என்னுடைய கேரக்டரையே ஸ்பாயில் பண்ணிடுவீங்க போல?''

''ப்ச்! பி..ரே..ம்...''

''சொல்லுங்க. அம்மா என்னை மாதிரி சீரியஸ் டைப் இல்லை. கலகலப்பா இருப்பாங்க. நீங்க ஏதாவது சொல்லி இருந்தாலும் அதைத் தப்பா எடுத்துக்க மாட்டாங்க. வரீங்களா? அறிமுகப்படுத்தி வைக்கிறேன்'' என்று அழைக்க 'இவனுக்கு என்ன ஆச்சு?' என்று குழம்பிய தர்ஷினியை புவனேஸ்வரியின் குரல் ஈர்த்தது.

''அம்மா கூப்பிடுறாங்க. அப்புறமா பேசலாம்'' என்று நகர்ந்தவளுக்கு எண்ணம் முழுவதும் அவனையே சுற்றிச் சுற்றி வந்தது. முதல் நாள் அவன் அவ்வளவாகப் பேசவில்லை. ஒரு வார்த்தை அல்லது சில வார்த்தைகள் மட்டும் தான். மௌனமே பதிலாக அமைந்த பல கேள்விகளும் உண்டு. ஆனாலும் அப்போது அது அவனுடைய இயல்பு என்று புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் சில நிமிடங்கள் முன்பு அவன் நிறையப் பேசினான். ஆனால் அவளை தூரத்தில் நிற்க வைத்து செயற்கையாகப் பேசியது மாதிரி இருந்தது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை.

* * *

பிரேம்குமார் தன்னை ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்த்ததை யசோதாவும் கவனித்தார். ஆனால் அவர் பிரேமிடம் பேச முற்படவில்லை. பிரேம் தன்னை அவளுக்கு அறிமுகப்படுத்தும் தருணத்தை எதிர்நோக்கி காத்து இருந்தார். அவருக்கு மகனின் ஒவ்வொரு அசைவும் தெரியும். அதன் அர்த்தமும் புரியும். முன்தினம் மாலையில் இருந்து பிரேம்குமாரின் நடவடிக்கைகள் வித்தியாசமாக இருந்தது. அதற்கு பல சான்றுகள் கிடைத்தது.

அவன் தன்னைக் கண்டதும் ''நீங்க எங்கே இங்கே?'' என்று பதறிப் போய் விசாரித்தான். ஆனால் அந்தக் கேள்வியை தன்னிடம் கேட்பதற்கு சில நிமிடங்கள் முன்பு, தினேஷிடம் வீடியோ கேமராவை கொடுத்தபடி, 'அம்மா வராங்களா என்று பார்த்தேன் என்று சொல்லி இருக்கிறான். இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டது. தினேஷ் தன்னிடம் நலம் விசாரித்தபோது, 'சார் உங்களை எதிர்பார்த்து ரொம்ப நேரமா காத்து இருக்காங்க' என்று சொன்னான். அவன் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. மாற்றிச் சொன்னது பிரேம். ஏன்? தினேஷ் இருக்கும்போது அவன் வீடியோ கேமராவை வைத்து என்ன பண்ணினான்?

தான் உடை மாற்றச் சொன்ன போது தன்னிடம் அவசியம் இல்லை என்று மறுத்தவன். சில நிமிடங்களில் மாற்றி இருந்தான். விசாரித்த போது ஜூஸ் கொட்டி விட்டதாகச் சொன்னான். 'எந்த பிரகஸ்பதி இன்று அவனிடம் திட்டு வாங்கியது?' என்று விசாரித்தபோது யாருமே வாங்கவில்லை.

அவன் உடையில் ஜூஸ் கொட்டிய பின்பு அவன் திட்டவில்லை என்பது உலக அதிசயம். ஒருவேளை தானாகவே கை தவறிக் கொட்டி இருக்கலாமோ என்ற சந்தேகத்தில் அவனுடைய உடையையும் பரிசோதித்துப் பார்த்தாகி விட்டது. அப்படி எந்த அடையாளமும் இல்லை. ஜூஸ் கொட்டாமல் கொட்டிடுச்சு என்று பிரேம் பொய் சொன்னால் அது அதைவிட பெரிய அதிசயம் தானே?

அதற்கும் மேலே பணியாளரை அழைத்து தர்ஷினிக்கு மேங்கோ ஜூஸ் கொண்டு போய் கொடு என்று சொன்னதும் அதிசயம் தான். தான் அவளிடம் பத்து நிமிஷம் பேசுவதைக் கூடப் பொறுக்காமல் அப்பா கூப்பிடுவதாகச் சொன்னது அதை விடவும் பெரிய ஆச்சரியம். தான் நந்தகோபாலை விசாரித்தபோதுதான் அவருக்கு தான் வந்த விஷயமே தெரிந்தது. பின்னே அவர் எப்படி தன்னை முன்பே கூப்பிட்டு இருக்க முடியும்?

கொசுறாக தர்ஷினி பிரேமுக்கு ஜூஸ் கொடுத்து கரிசனமாகப் பேசியதும் கண்ணில் பட்டது. ஓடி ஓடி அவனிடமே தனது தேவைகளைச் சொல்லி நிறைவேற்றிக் கொண்டதும் தெரிந்தது. நெருக்கமாகத் தொட்டுப் பேசியோ, வேலை நேரத்தில் அரட்டை அடித்துக் கொண்டு வேலையை கவனிக்காமலோ இல்லை. தனியிடம் தேடி மறைவாக நின்று கூடிப் பேசினார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆனாலும் இருவருக்கும் இடையே பரஸ்பர ஈர்ப்பு தெரிந்தது.

'தனது வாடிக்கையாளரே கண்கண்ட தெய்வம்' என்று நினைக்கும் அவனின் தொழில் பக்தி அவனை

அவளிடம் கடுமையாகப் பேச விடாமல் தடுத்து இருக்கலாம். ஆனால் அதையும் தாண்டி அவன் அவளிடம் சில வார்த்தைகள் பேசினான். தர்ஷினியின் கலகலப்பான சுபாவம் அவனை கவர்ந்து இருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை.

தர்ஷினியிடம் அவர் சில நிமிடங்கள் பேசியதில், நினைத்ததைச் செய்யும் சுதந்திரம் கொடுத்த நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்ட கலகலப்பான பெண் என்பது புரிந்தது. தான் செய்யும் காரியத்தில் எந்தத் தப்பும் இல்லை. அதை பெற்றவருக்கோ மற்றவருக்கோ மறைத்துச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற தன்னம்பிக்கை அவளின் முகத்தில் சுடர் விட்டது. அது அவருக்குப் பிடித்து இருந்தது. தான் பிரேமின் அம்மா என்பது தெரியாததால், தன்னிடமே அவனைப் பற்றிப் பெருமையாகப் பேசினாள். தான் அவளிடம் தூரத்துச் சொந்தம் என்று சும்மா சொல்லி வைக்க, அவள் பெருமையாகத் தொடர்ந்து பேசியதைக் கேட்க சந்தோஷமாக இருந்தது.

''பார்க்க சின்ன பையன் மாதிரி இருந்தாலும் கமிட்மென்ட் ஜாஸ்தி ஆன்ட்டி. எங்க அம்மாவிடம் எங்க அம்மாவிடம் நல்ல பேர் வாங்குவது எவ்வளவு கஷ்டம் என்று எனக்குத்தான் தெரியும் ஆன்ட்டி. அப்பேற்பட்ட பெருமை வாய்ந்த புவனேஸ்வரி அம்மாவின் வாயால், 'பிரேம் பொறுப்பு' என்று பேர் வாங்கி இருக்கார் என்றால் வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் வாங்கிய தற்கு சமம்' என்று பெருமையாகப் பேசினாள்.

தர்ஷினியைப் பொறுத்த வரையில் பிரேமை பிடித்து இருக்கிறது. அவன் மேல் எனக்கு நல்ல அபிப்ராயம்

இருக்கிறது என்பதை வெளிப்படையாகக் காட்டி விட்டாள். மனசுக்குள் வைத்து பூட்டிக் கொள்வதும், பொய் சொல்லி திருட்டுத் தனமாக ரசிப்பதும் பிரேம்தான். எண்ணங்கள் அவனையே சுற்றி வர, அவன் சில நிமிடங்களிலேயே அருகில் காலியாக இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தான்.

''ஹாய்ம்மா, காலையில் சாப்பிடலை போல? ஏன்?'' என்று விசாரித்தான் பிரேம்.

''அதெல்லாம் கவனிக்கிறாயா நீ? சரியான திருடன்டா...'' என்று ஆரம்பித்தவர் அவனின் முறைப்பில் சிரித்தார். ''என்ன கோபம் வருதுடா உனக்கு? பாவம் உனக்கு வரப் போற பொண்டாட்டி பார்வையிலேயே பிடி சாம்பலா ஆக்கி விடுவாய் போல. சரியான துர்வாசர். முகூர்த்தம் முடிந்த உடனே கிளம்பணும். அதனால் நேர லஞ்ச் சாப்பிடலாம் என்று ஐடியா. சாப்பாடு எனக்கு இருக்குமா?'' என்று கேலியாகக் கேட்கும் போதே, வரப் போற பொண்டாட்டி என்ற தொடரின் போது தர்ஷினியை தொட்டு திரும்ப அவரின் கண்கள் மறையவில்லை.

''உங்களுக்கு இல்லாததா? இங்கே சாப்பாடே இல்லை என்றாலும் அப்பா உங்களுக்காக ஸ்பெஷலா சமைச்சுத் தர மாட்டாரா என்ன? அது சரி என்ன சீக்கிரம் கிளம்புறேன் என்று சொல்றீங்க? வந்த வேலை முடிஞ்சுடுச்சா?'' என்று அவரின் பார்வை போன இடத்தை அறிந்தே, தர்ஷினியைப் பற்றி அம்மாவின் மனதில் இருப்பதை அழித்துவிட வேண்டும் என்று கவனமாகக் கேள்வியைக் கோர்க்கான் பிரேம்.

''கல்யாணத்திற்கு வந்தேன். இன்னும் தாலி கட்ட வில்லையே? கட்டி விட்டால் கிளம்ப வேண்டியதுதான். நீ என்ன இந்நேரத்தில் சாவகாசமா உட்கார்ந்து இருக்கிறாய். உனக்கு வேறே வேலை இல்லையா?'' என்று அவனிடம் திரும்பினார்.

''விருந்தினரா வருபவர்களுக்கு தான் தாலி கட்டுவது முக்கியம். எங்களைப் பொறுத்த வரையில் கல்யாண தினத்தை விட முந்தைய நாள் தான் அதிகம் வேலை இருக்கும். காலை சாப்பாடு முடிஞ்சாச்சு. மதிய உணவு ரெடி. இனிமேல் என்ன வேலை? இனி மணமக்களோட பெற்றோருக்கு தான் வேலை. நானே கிளம்பலாமா என்று பார்க்கிறேன்'' என்று சொன்ன பிரேமை ஆச்சரியத்துடன் பார்த்தார் யசோதா.

''யாரையாவது வரச் சொல்லி இருக்கிறாயா பிரேம்? அவசரமா கிளம்புவது மாதிரி இருக்கே?''

''ஆமாம்மா. மூணு மணிக்கு வரச் சொல்லி இருக்கேன். கொஞ்சம் தூங்கி எழுந்தால் நல்லா இருக்கும். நீங்க கிளம்பும்போது சொல்லுங்க. வண்டியிலேயே போய் விடலாம். அப்பா இருந்து கணக்கு செட்டில் பண்ணி விட்டு வரட்டும்'' என்று சொல்லி விட்டு எழுந்தான்.

இப்படி முன்னால் கிளம்புவது இவனுக்குப் பழக்கம் இல்லை. பொதுவாக இருவரும் சேர்ந்துதான் வருவார்கள். தவிர்க்க முடியாத காரணம் இருந்தால், அப்பாவை முன்னால் அனுப்பி விட்டு இவன் தாமதமாக வருவான்.

இன்று இவனுக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை. ஏன்? யோசனை நீண்டது.

* * *

''கெட்டி மேளம்... கெட்டி மேளம்...'' என்று மேடையில் இருந்த மணமக்களின் பெற்றோர் உள்ளிட்ட பத்து பேருக்கும் அதிகமானவர்கள் ஜாடையிலும் உரத்த வார்த்தைகளாலும் சொன்ன அந்த சுப முகூர்த்த வேளையில், மங்கள வாத்தியத்தின் பின்னணியில், 'மாங்கல்யம் தந்துனானே மம ஜீவன ஹேதுனா...' என்ற மந்திர கோஷம் முழங்க, சத்யபிரபாவின் சங்கு கழுத்தில் மங்கள நாணை பூட்டி தன்னுடையவளாக்கிக் கொண்டான் கிருஷ்ணகுமார்.

திருமண மந்திரம் ஒலிக்கும்போது யார் யாருக்கு என்ன தோன்றியதோ, தர்ஷினிக்கு பிரேம்குமாரின் முகம் வந்து போனது. அம்மா அவளை மணவறையில் நிறுத்தி, மாப்பிள்ளைக்குப் போட வேண்டிய செயின், கட்ட வேண்டிய பட்டம். வேல முடித்து செல்பவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணம் என்று பெரிய பொறுப்பை ஒப்படைத்து, 'மணவறையை விட்டு யார் சொன்னாலும் நகராதே. இங்கேயே இரு'' புவனேஸ்வரி சொல்லி இருந்ததால், அவளால் அந்த இடத்தை விட்டு நகர முடியவில்லை.

மகளுக்கு திடீர் என்று திருமணம் முடிவாகி விடலாம். யார் மனதும் நோகாமல் நல்ல விதமாக திருமண விழாவை நடத்தி முடிக்க வேண்டுமே என்ற கவலையில் இருந்த குருமூர்த்தி - புவனேஸ்வரி தம்பதியினரின் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிந்தது.

''அண்ணி வெங்கடேஷுக்கு நாலு வயசா இருக்கும் போது அவர் இறந்து விட்டார். எப்படி இந்த மூணு பசங்களையும் ஆளாக்கப் போறோமோ என்று பயந்துட்டே இருந்தேன். விதிக்குக் கல்யாணம் பண்ணும் போதே கிருஷ்ணா தலையெடுத்து என் சுமையில் பாதியை வாங்கிட்டான். இன்னிக்கு அவனுக்கும் நல்ல படியா கல்யாணம் முடிஞ்சுடுச்சு. இனி அவனும் சத்யாவும் பார்த்து வெங்கடேஷுக்கு ஒரு வழி பண்ண வேண்டியதுதான். என் கவலை தீர்ந்தது'' என்று புவனேஸ்வரியின் கை பற்றி நெகிழ்வோடு சொன்னார் காவேரி.

''மாப்பிள்ளை உங்களிடம் வாங்கிகிட்ட மாதிரியே மிச்ச இருக்க சுமையை சத்யா வாங்கிப்பா. அவ உங்களை எல்லாம் அனுசரிச்சு நல்லபடியா கவனிச்சுக்குவா. கவலைப்படாதீங்க'' என்று புவனேஸ்வரி நம்பிக்கை ஊட்டித் தேற்றினார்.

''அம்மா, இங்கே என்ன பளு தூக்கும் போட்டியா நடக்குது? என் சுமை, உன் சுமை என்று பேசறீங்க? அதுக்கு எல்லாம் அண்ணி செட் ஆவாங்களா தெரியலை. வேண்டும் என்றால் அவங்க தங்கையைக் கூப்பிட்டுக்கலாம்'' என்று இடையில் புகுந்து வெங்கடேஷ் சூழலை இலகுவாக்கினான்.

''சுமையை வாங்கிக்க நான் வேளச்சேரியில் இருந்து பூந்தமல்லிக்கு வரணுமா? சத்யா உங்க அம்மாவிடம் இருந்து வாங்கினால், நீ சத்யாவிடம் இருந்து வாங்கிக்கோ. அண்ணி என்றால் அம்மாக்கு சமம் தெரியுமா?'' என்று தர்ஷினி திருப்பிக் கொடுக்க சூழல் மேலும் கலகலப்பானது.

''டேய் அண்ணா! மெட்டி போட இவ்வளவு அவ சரப்படுகிறாயே? அண்ணி காலைப் பிடிக்க அவ்வளவு அவசரமா? இதெல்லாம் தனியா வீட்டில் செய்யக் கூடாதா? பத்து பேர் முன்னாடி செஞ்சு நம்ம இமே ஜையே டேமேஜ் பண்றியே?'' என்று அண்ணனை வம்பிழுத்தான்.

''ரொம்ப துள்ளாதேடா! நாளைக்கு உனக்கு வரப் போறவ உன் காதுல மெட்டி மாட்டி விட்டு விடப் போகிறாள்?'' என்று வித்யா தம்பிக்கு பதில் கொடுத் தாள்.

''நீ சொல்றது கரெக்ட் வித்யா. பண்டைய காலத்தில் மெட்டி திருமணமான ஆண்கள் அணியும் அணிகலன் தான். ஆனால் காதில் இல்லை. காலில். அந்தக் காலத் தில் தலை நிமிராமல் நடக்கும் பெண்கள், மணமான ஆண்களை இனம் கண்டறிய உதவும் ஒரு விஷயமாக இது இருந்தது. தலை நிமிர்ந்து நடக்கும் ஆண்களின் கண்ணில் பட, பெண்ணின் கழுத்தில் மங்கள நாணும், தலைகுனிந்து வரும் பெண்களின் கண்ணில் பட, காலில் மெட்டியும் அணிவது சம்பிரதாயம். அதனால் நீ சொல்ற மாதிரியே வெங்கிக்கு காலில் மெட்டி போட்டு விடும் பெண் வந்தால் தான் உத்தமம். அப்பத்தான் இவன் கொட்டம் கொஞ்சமாவ்து அடங்கும்'' என்று சிரித்தான் கிருஷ்ணகுமார்.

''டேய்! ஊமை மாதிரி இருக்கும் நீ வாயைத் திறந்த உடனேயே நீ என்னமோ வில்லங்கமா சொல்லப் போகிறாய் என்று நினைத்தேன். அதே மாதிரி ஆகி விட்டது. அண்ணி, முதலில் உங்க விரலில் இருக்கும்

மெட்டியை கிருஷ்ணாக்குப் போடுங்க. அப்பத்தான் அவன் வெளியில் போகும்போது அவன் மணமானவன் என்று எல்லோருக்கும் தெரியும்'' என்று அவசரமாக அண்ணனை மாட்டி விட முயன்றான் வெங்கடேஷ்.

''உங்க அண்ணன் மாதிரி கட்டுப்பாட்டோடு இருக் கும் நல்ல மனிதனுக்கு மனதை விட வேறு விளங்கு தேவை இல்லை வெங்கி. எனக்கு அவர் மேல நிறைய நம்பிக்கை இருக்கு'' என்று சொல்ல எல்லோரும் சிரித் தனர்.

''வெங்கி, நீ உங்க அண்ணனோட ப்ளான் தெரி யாமல் இப்படி வாயைக் கொடுத்து பல்ப் வாங்கிக் கொண்டாய். நான் என்ன செய்ய? அவர் நேற்றே சத் யாக்கு ரெண்டு ஸ்டட் வாங்கிக் கொடுத்து கரெக்ட் பண் ணிட்டார்'' என்று முன்தினம் கிருஷ்ணகுமார், தன் அன்பு மனைவிக்கு வாங்கிக் கொடுத்த காதல் பரிசை அரங்கத்தில் ஏற்றினாள் தர்ஷினி.

''ஆஹா! இந்த விஷயம் எனக்கு முன்னாடியே தெரியாமல் போய் விட்டதே? இதே மாதிரி நியூஸ் எல்லாமே ஒரு எஸ்.எம்.எஸ். போட்டு உடனுக்குடனே சொல்றதில்லையா தர்ஷினி?'' என்று வெங்கடேஷ் அங்கலாய்க்க அடுத்த சிரிப்பலை எழுந்தது.

பேச்சும் சிரிப்புமாக பொழுது இறக்கை கட்டிக் கொண்டு பறக்க மதிய உணவு நடைபெற்றுக் கொண்டு இருந்தது. அம்மா சொன்னபடி சத்யாவின் அருகிலேயே இருந்து பணபட்டுவாடாவையும், பரிசு பொருட்களை யும் வாங்கி பத்திரப்படுத்தும் பணியைச் செவ்வனே செய்து கொண்டு இருந்த தர்ஷினியின் கண்களும் மனமும் அலை பாய்ந்து கொண்டு இருந்தது.

பிரேம் எங்கே? கடந்த ஒரு மணி நேரமாக கண்ணிலேயே படவில்லை. போன் பண்ணினாலும் எடுக்கவில்லை. அவனே அவனைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொண்ட அந்த 'கேரக்டருக்கு' போனை எடுக்காமல் இருப்பது பொருந்தவில்லையே? எங்கே போய் விட்டான்? தர்ஷினியின் மனம் அலைபாய்ந்தது.



9

மாங்கல்ய தாரணம் முடிந்ததும் கிளம்பி விடலாம் என்று யசோதா அம்மா சொல்லி இருந்ததை நம்பி காத்து இருந்த பிரேம் நேரம் ஆக ஆக பொறுமை இழந்தான். அவருக்குக் கிளம்பும் உத்தேசம் இல்லை என்பதை ஊகிக்க முடிந்தது. தர்ஷினியிடம் இருந்து தொடர்ந்து போனில் அழைப்புகள் வர அதை எடுக்காமல் தவிர்த்தான். எவ்வளவு நேரம் சமாளிக்க முடியும்? தன்னை மீறி எடுத்து விடுவோமோ என்ற பயம் வர அவன் கிளம்ப துடித்தான்.

மதிய சமையல் முடிந்து விட்டது. இனிமேல் ஒரு பிரச்னையும் வர வாய்ப்பு இல்லை. எனவே அப்பாவிடம் சென்று, ''கொஞ்சம் தலை வலிக்கிற மாதிரி இருக்குப்பா. நான் முன்னாடி கிளம்பட்டுமா?'' என்று கேட்டான் பிரேம்.

அவன் தன்னுடன் தொழிலுக்கு வர ஆரம்பித்த இந்த நான்கு ஆண்டுகளில் அவன் இப்படி கேட்பது இதுதான்

முதல் முறை என்பதால் பதறி விட்டார். ''ஹய்யோ! என்ன ஆச்சு கண்ணா? நைட் தூங்காமல் இருந்ததால் தலை வலியோ? அஜீரணத்தினால் கூட இருக்கலாம். நைட் டின்னர் ஹெவியா? இல்லையே நீ எல்லாம் சாப்பிடவில்லையே? சுக்கு தண்ணி வச்சு கொடுக்கட்டுமா?'' என்று பதட்டத்துடன் கேள்விகளை அடுக்கினார்.

''அதெல்லாம் வேண்டாம்பா. நான் வீட்டுக்குக் கிளம்புகிறேன். கொஞ்ச நேரம் தூங்கி எழுந்தால் சரியாகி விடும். நீங்க கணக்கு முடிச்சுட்டு வாங்க. தனியா பார்த்துப்பீங்களா? ஒண்ணும் பிரச்னை இல்லையே?''

''எனக்கு என்ன கண்ணா பிரச்னை? நான் பார்த்துக் கொள்வேன். ஆனால் வீட்டுல தனியா சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவாய்? அம்மா கூட இங்கே இருக்கிறாள் போல இருக்கே? அவளையும் கூட கூட்டிட்டுப் போகிறாயா?''

''வேண்டாம்பா. அம்மா எப்போதாவதுதான் வெளியே வராங்க. இந்த சமயத்துல நான் தலைவலி என்று சொன்னால் பதறிப் போய்டுவாங்க. அனாவசியமா அவங்களை டென்ஷன் படுத்தணுமா? வேண்டாம்பா, ப்ளீஸ்...''

''அதுவும் சரிதான். ஒண்ணு பண்ணு. ஒரு வாய் ரசம் சாதம் சாப்பிட்டுட்டு ஒரு மாத்திரையைப் போடு. போனை ஆப் பண்ணு. இல்லை சைலன்ட் மோடில் போட்டுட்டு இங்கேயே படு. ரெண்டு மணி நேரம் கழிச்சு எந்திரிக்கலாம்.''

''இங்கே இந்த சத்தத்தில எனக்கு தூக்கம் வராதுப்பா. யார் ரூமிற்குள் வந்தாலும் என்ன வேண்டும் என்று கேட்காமல் என்னால் இருக்க முடியுமா சொல்லுங்க? நீங்க தனியா மேனேஜ் பண்ணிப்பீங்க என்றால் நான் கிளம்பறேன்பா...'' என்றவன் கிளம்பும் மூடில் இருப்பது புரிந்து விட, ''சரிப்பா, ஜாக்கிரதை'' என்று முடித்து வழி அனுப்பி வைத்தார்.

திருமண சடங்குகளை நல்லபடியாக முடிந்த பிறகு கிளம்பலாம் என்று முடிவு பண்ணி மகனைத் தேடிய போதுதான் அவன் கிளம்பி விட்ட விஷயம் தெரிந்தது. கிளம்ப மாட்டான் என்று நினைத்தாரே? வீட்டில் தனியாக இருப்பானே என்ற கவலையில் உடனே கிளம்பலாம் என்று குருமூர்த்தி - புவனேஸ்வரி தம் பதியினரிடம் விடைபெற மணவறைக்குச் சென்றார் யசோதா.

மணவறையில் யசோதாவைக் கண்டதும் தர்ஷினிக்கு சிரிப்பு பொங்கியது. வேகமாக அருகே வந்து கையைப் பற்றி ''ஆன்ட்டி எனக்கு ஒரு சந்தேகம்...'' என்று சிரிப்போடு ஆரம்பித்தாள்.

''நான் உன் அளவுக்கு படிக்கலை எனக்குத் தெரிந்த அளவிற்கு சுலபமா கேள்வி கேட்டால் கட்டாயம் பதில் சொல்றேன்'' என்று சிரித்தார்.

''ஆஹா! இந்த தன்னடக்கம் ஆகாது ஆன்ட்டி. நீங்கதான் படிக்காத மேதை ஆச்சே? ஆமா உங்க ஊரில பையனைத்தான் தூரத்துச் சொந்தம் என்று சொல்வீங்களா?'' என்று தலையைச் சரித்துக் குறும்பாகக் கேட்டாள் தர்ஷினி.

''முதலில் நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லு. என் பையன் எனக்குச் சொந்தம் தானே? அதுல உனக்கு ஏதுவும் சந்தேகம் இல்லையே?'' என்று கேட்டார்.

''அதுல சந்தேகம் இல்லை. ஆனால் நீங்க ஏன்...''

''சொல்றேன் சொல்றேன். ஒரு பேச்சுக்கு நீ என் பொண்ணு என்று வச்சுக்கோ. நீ சொந்தம். இப்ப நீ என் அருகில் நெருங்கி நிற்பதால் நெருங்கிய சொந்தம். நீ என்னை கேட்டப்போ, பிரேம் கொஞ்சம் தூ...ர...த்...தில் நின்று இருந்ததால் தூரத்து சொந்தம். ஓகே?''

''ஆஆஆஆ... ஹையோ ஆன்ட்டி என்னாலேயே தாங்க முடியலையே?'' என்று அலறிய தர்ஷினியை பார்த்து யசோதா சிரிக்க, மணவறையில் இருந்த எல்லோருமே ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தனர்.

''தர்ஷினியையே தாங்க முடியலை என்று அலற வைத்த உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள் ஆன்ட்டி'' என்று சத்யா சிரிக்க, புவனேஸ்வரியும் குருமூர்த்தியும் சின்னப் புன்னகையோடு அவரை நெருங்கினார்கள்.

''நீங்க இந்தக் கல்யாணத்துக்கு வந்தது உண்மையிலேயே எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். பெரியவங்க ரெண்டு பேரும் என் பெண்ணை தம்பதி சமேதரா நின்னு ஆசீர்வாதம் பண்ணுங்கோ. தர்ஷினி உள்ளே போய் நந்தகோபால் அங்கிளைக் கூட்டிட்டு வாம்மா'' என்று புவனேஸ்வரி சொல்ல துள்ளிக் குதித்து உள்ளே ஓடினாள் தர்ஷினி.

உற்சாகமாகத் துவங்கிய ஓட்டம், சமையல் செய்யும் இடத்திலும் சாப்பாடு நடைபெறும் இடத்திலும் பிரேம்

இல்லை என்பதைக் கண்ட உடன் குறைந்தது. நந்த கோபாலிடம் விசாரித்து அவன் கிளம்பிய் தகவல் அறிந்ததும் கவலை வந்தது. என்ன ஆச்சு?

பரிசினைக் கொடுத்து, மணமக்களை ஆசீர்வாதம் செய்த பின்பு, புவனேஸ்வரியின் கை பற்றி, ''சீக்கிரமே இன்னொரு கல்யாணமும் உங்க வீட்டில் நல்லபடியா அமைய அந்த ஆண்டவன் அருள் புரியட்டும். என்ன தர்ஷினி ரெடியா?'' என்று சிரிப்போடு யசோதா கேட்க அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. அவளின் திகைப்பை உணர்ந்த யசோதா அவளின் கன்னத்தை வருடி, ''பை, நான் அப்புறமா வீட்டுக்கு ஒரு நாள் சாவகாசமா வரேன்'' என்று சொல்லிக் கிளம்பினார்.

யசோதாவின் வாழ்த்து, தர்ஷினியின் திகைப்பு இரண்டையும் கவனிக்க குருமூர்த்தி தவறவில்லை. ''பிரேம் எங்கே காணோம்? சீக்கிரமே கிளம்பிட்டார்?'' என்று விசாரித்தார்.

''ஒரு க்ளையண்டை மூணு மணிக்கு வரச் சொல்லி இருக்கான்'' என்று யசோதாவும், ''கொஞ்சம் தலை வலி என்று கிளம்பி விட்டான்'' என்று நந்தகோபாலும் எதார்த்தமாகச் சொல்ல அதைக் கேட்ட குருமூர்த்தியும் தர்ஷினியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மேடையில் இருந்து இறங்கிய உடனே, 'என்ன யசோ, அவன் என்னிடம் தலை வலிக்குது என்று சொன்னானே? நீ ஏன் அப்படிச் சொன்னாய்?'' என்று கவலையோடு கேட்டார்.

''என்னிடம் அப்படித்தான் சொன்னான். உங்களிடம் சொன்னது எனக்கு எப்படித் தெரியும்? அவனுக்கு

உடம்பு சரி இல்லை என்றாலும் உடனே அதை எல்லோரிடமும் அப்படியே சொல்ல வேண்டுமா? அவன் வீட்டுல தனியா இருப்பான். நான் கிளம்புகிறேன். நீங்க வேலை முடிச்சுட்டு வாங்க'' என்று கிளம்பினார்.

அடுத்த அரை மணி நேரத்தில் வீட்டிற்குச் சென்றவர், அதற்கு அடுத்த அரை மணி நேரத்தில், சூடாக மிளகு ரசம் விட்டுக் குழையப் பிசைந்த சாதத்துடனும், சுட்ட அப்பளம், பருப்பு துகையலுடன், மகனின் படுக்கை அறையில் இருந்தார். ''டேய் கண்ணா! மணி ஒண்ணாச்சு. எழுந்திரி சாப்பிட்டுட்டு படுத்துக்கோ'' என்று தோளில் தட்டி எழுப்பினார் யசோதா.

''ப்ச்! தலை வலிக்குதும்மா'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி படுத்துக் கொண்டான்.

''டேய் சொன்னால் கேளு. எழுந்திரிச்சு சாப்பிட்டுட்டுப் படுத்துக்க...''

''அம்மா ப்ளீஸ்... தொந்தரவு பண்ணாதீங்க...''

''நீ இப்ப எழுந்திரிக்கலை அந்த தலைவலியிடம் நானே பேசுகிறேன். எவ்வளவு தைரியம் இருந்தால் என் மகனின் மேல் நீ கை வைப்பாய் என்று நியாயம் கேட்கிறேன்...''

''அம்மா தாயே! இந்த நான் ஸ்டாப் லெக்சரை கேட்பதற்கு அந்த தலை வலியே தேவலாம். நான் சாப்பிட்டுட்டே படுத்துக்கறேன். கொண்டாங்க. தட்டைக் கொடுத்துட்டு இந்த இடத்தை முதலில் காலி பண்ணுங்க'' என்று எரிச்சலோடு எழுந்தவன் கை நீட்டினான்.

தட்டை அவனிடம் நீட்டியபடி, ''இந்த வீட்டுல இப்போதைக்கு உன்னைத் தொந்தரவு பண்ண முழு

உரிமை எனக்கு மட்டும்தான் இருக்கு. இன்னொருத் தருக்கும் இருக்கு. ஆனால் அந்த இன்னொருத்தர் இன்னும் வரலை. வந்த பிறகு அதை நானாகப் பகிர்ந்து கொள்கிறோம்...''

''அம்மா ப்ளீஸ் எதையாவது சொல்லி என் தலை வலியை ஜாஸ்தி பண்ணாதீங்க. நீங்க முதலில் இடத் தைக் காலி பண்ணுங்க.''

''சரிடா நான் இப்ப கிளம்புகிறேன். மூணு மணிக்கு நீ கிளையன்ட் மீட்டிங் முடிந்த உடன், நான் உன்னிடம் கொஞ்சம் பேசணும். அதற்கு அப்புறமா ஆறு மணிக்கு வரச் சொல்லட்டுமா?''

''யாரை ஆறு மணிக்கு மேலே வரச் சொல்லப் போறீங்க?'' குழப்பத்தோடு கேட்டான் பிரேம்.

''உன்னோட தலை வலியைத்தான்...'' என்று அசால்ட்டாகச் சொல்லி விட்டுப் போன திசையையே திகைப்புடன் வெகு நேரம் பார்த்து இருந்தான் பிரேம். இவங்க தலைவலி என்று சொன்னது நிஜ தலைவலி யையா? அல்லது அவளையா? ஷூ! மேலே தொடரும் முன்பு அவசரமாக தடை உத்தரவு போட்டு சிந்தனையை நிறுத்தி மூளையை வேறு வேலைக்குத் திருப்பினான்.

பிற்பகல் மூன்று மணி அளவில் வீட்டிற்கு வந்த நந்தகோபால் மகனின் உடல்நிலை பற்றி விசாரித்தார்.

''அவனுக்கு உடம்புக்கு ஒண்ணும் இல்லை. மனசுல கொஞ்சம் குழப்பம் இருக்கு. அதுக்கு அதிரடி வைத்தியம் ஒண்ணு செய்யணும். இப்ப தூங்கிட்டு இருக்கான். எழுந்து வரட்டும்'' என்று சந்தோஷமாக சொன்னார் யசோதா.

''மூணு மணிக்கு யாரையோ வரச் சொல்லி இருக் கான் என்று சொன்னாயே? அவர் வரலையா?''

''அவன் சொல்லும்போதே பொய்யோ என்ற சந் தேகம் இருந்தது. இப்ப உறுதியாகி விட்டது. அவன் தூங்கட்டும். உங்களுக்குக் காபி தரட்டுமா?''

''ம்ம்ம் கொடு'' என்று சொல்லி விட்டு அறைக்குச் சென்றவர், முகம் கழுவி உடை மாற்றி வந்த போது மனைவி சுடச் சுட காபியுடன் தயாராக இருந்தார்.

''உனக்கு...''

''நீங்க குடிங்க. நான் அவனோடு சாப்பிடுகிறேன்.''

''என்ன ஆச்சு? மதியமே ஆளுக்கு ஒரு பதில் சொல்லி இருக்கான். அவன் உடம்பு சரி இல்லை என்று இந்த நாலு வருஷத்துல ஒரு நாள் கூட சொன்னதே இல்லையே? இப்ப என்ன மனக்குழப்பம்?'' என்று கவலையோடு கேட்டார் நந்தகோபால்.

''எல்லாம் வயசுக் கோளாறு. ஒரு கால் கட்டுப் போட் டால் எல்லாம் சரியாகிவிடும். உங்க பையன் ஒரு பொண்ணை சைட் அடிக்கிறான்...'' என்று அவர் சொன்ன பாவனையில் நந்தகோபாலுக்கு புரைக்கு ஏறியது.

''லவ் பண்றான் என்று சொன்னாலும் பரவாயில்லை. அதென்ன அசிங்கமா சைட் அடிக்கிறான் என்று சொல் கிறாய்?'' என்று கேலியாகக் கேட்ட நந்தகோபாலுக்கு, விடாமல் வந்த சிரிப்பும், அதனால் கூடிய இருமலும், அதை அடக்கச் செய்த முயற்சியும் சேர்ந்து கண்ணில் நீரை வரவைத்து இருக்க, அவரின் முகத்தைப் பார்த்து யசோதா சிரித்தார்.

''நல்லா சிரிங்க. இப்ப நீங்க சிரிப்பதற்கான காரணம் மட்டும் அவனுக்குத் தெரிஞ்சது. அப்ப இருக்கு உங்களுக்கு மண்டகப்படி...'' என்று யசோதா மிரட்டிய பாவனையில் அவருக்கு மேலும் சிரிப்பு வந்தது.

''அது சரி நீயும் உன் பையனும் ஒரு கட்சி. விஷயம் சொன்ன உன்னை விட்டு விடுவான். சிரிச்ச என்னை பிடிச்சுப்பானா? நல்லா இருக்கு உங்க நியாயம்?''

''அதுக்குத்தான் உங்க கட்சிக்கு ஒரு ஆள் சேர்த்துக்கோங்க என்று சொல்றேன்...''

''ஆளை நீ முடிவு பண்ணிட்டுச் சொல்லு. உடனே போய் கூட்டிட்டு வந்துடலாம்'' என்று சந்தோஷமாகச் சொன்னார்.

''இன்னிக்குத்தான் அவங்க ஒரு கல்யாணம் பண்ணி முடிச்சு இருக்காங்க. ஒரு பத்து நாள் கேப் விடுங்க. அந்தக் கல்யாண சம்பிரதாயங்கள் எல்லாம் முடித்து செட்டில் ஆகட்டும். அடுத்த வாரக் கடைசியில் போய் கேட்கலாம். அதற்குள் நம் துர்வாச முனிவர் என்ன நினைக்கிறார் என்றும் தெரிஞ்சுக்கலாம்.''

''இன்னிக்குத்தான் கல்யாணம் என்றால்... நீ அந்த சத்யாவின் தங்கையாவா சொல்கிறாய்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

''அதென்ன சத்யாவோட தங்கை? இனிமேல் அவளை தர்ஷினியோட அக்கா என்று தான் சொல்லணும்'' என்று திருத்தி, திருமண வீட்டின் நிகழ்வுகளை சுவாரஸ்யமாகக் கூறினார்.

''தர்ஷினி இன்னிக்கு மதியம் என்னை மணவறைக்குக் கூப்பிட வந்த பொண்ணுதானே? நல்லா துறு துறுன்னு

இருந்தது. பட பட பட்டாசு பேச்சு. இவனுடைய சுபாவத்திற்கு நேர் எதிர். நல்ல பொருத்தம். இவன் என்ன சொல்லப் போறானோ?'' என்று கவலையோடு முணுமுணுத்தார்.

''அவன் என்ன சொல்றது? மயிலே மயிலே இறகு போடு என்று இத்தனை நாள் காத்திருந்தாச்சு. இனிமேல் அவனிடம் கேட்பது எதுவும் கிடையாது. நான் கைகாட்டும் பொண்ணு கழுத்துல கட்டுடா தாலி என்றால் கட்ட வேண்டியதுதான். மாட்டேன் என்று என்னைப் பார்த்து என் கண்ணைப் பார்த்து மறுத்துச் சொல்லி விடுவானா அவன்?'' என்று அதட்டலாகச் சொல்லி முடித்த வேளையில் பேச்சுக் குரல் கேட்டு வெளியே ஹாலுக்கு வந்த பிரேம் காதுகளில் கடைசி வாக்கியம் விழ அதிர்ந்து போய் நின்றான்.



10

வெளியே அம்மாவும் அப்பாவும் பேசிச் சிரித்த சத்தம் கேட்டு தூக்கம் கலைந்து எழுந்த பிரேமுக்கு ஆச்சரியமாக இருந்தது. பரவாயில்லையே! அப்பா கல்யாண வீட்டில் இருந்து வந்தால் எப்பவும் தூங்கி விடுவாங்க. இன்று உட்கார்ந்து பேசிட்டு இருக்காங்களே என்று சந்தோஷமாக எழுந்து வெளியே வந்தவன் கடைசியாக அம்மாவின் பேச்சைக் கேட்டு எரிச்சலானான்.

''அம்மா, நான் உங்களை என்ன பண்றேன்? நான் நிம்மதியா இருப்பது உங்களுக்குப் பொறுக்கவில்லையா?

சும்மா எப்பப் பாரு கல்யாணம் கல்யாணம் என்று தொந்தரவு பண்ணாதீங்க. சீக்கிரம் நானே ஒரு நல்ல பொண்ணை பார்த்துட்டு உங்களிடம் சொல்றேன். கொஞ்சம் டைம் கொடுங்க'' என்று அவசரமாகச் சொன்னான்.

''சீக்கிரம்னா, எப்ப இன்னும் நாப்பது வருஷம் கழிச்சா?'' என்று அவசரமாகச் சொன்ன யசோதாவின் குரலில் ஆதங்கம் பெருகி வழிந்தது.

''ப்ச்! அதெல்லாம் இல்லை. ஒரு மாசத்துல சொல்றேன்...''

''அதென்னடா ஒரு மாச கணக்கு? போன மாசம் எங்க வெட்டிங் டே போதும் இதையே தான் சொன்ன. இப்ப மறுபடியும் அதே கதையா? இன்னும் ஒரு மாசம் கழிச்சு இதையே திருப்பிச் சொல்லிட்டு, நான் என்ன பேச்சையா மாத்துறேன். அன்றும் இன்றும் என்றும் ஒரே பேச்சு என்று கடி ஜோக் அடிக்கவா? என்னை என்ன கேனை என்று நினைத்தாயா?''

''இந்தக் கடி ஜோக் சொல்றது. கெக்கே பிக்கேன்னு சிரிக்குறது எல்லாம் உங்க வேலை. என் வேலை இல்லை...''

''மனுஷனுக்கும் விலங்குக்கும் இருக்கும் ஒரே வித்தியாசமே சிரிப்பதுதான். அதைச் செய்யாதே. எப்ப பார்த்தாலும் உர்ருன்னு மூஞ்சியை வச்சுக்கிட்டு இரு. நிரந்தரமா தலைவலி உன்னிடம் வாடகை கொடுக்காமலே குடி வந்து விடும்...''

''அப்பா சொல்லுங்கப்பா. இதுதான் லாஸ்ட் சான்ஸ். இனிமேல் டைம் கேட்க மாட்டேன். எனக்கு மட்டும்

பிடிச்ச பொண்ணு போதாது. உங்களை எனக்கு மேலே வச்சு பிரியமா பார்த்துக் கொள்ளும் பெண் வேண்டும். உங்களைக் குறைவா ஒரு வார்த்தை சொன்னால் தாங்க முடியாது... அப்புறம்... காலம் பூரா... எல்லோரும் கஷ்டப்படுவது மாதிரி ஆகி விடும்...''

''டேய்...! என்னடா இது? லூசு மாதிரி தேவை இல்லாமல் கற்பனை பண்ணி உளறாதே. யார் எங்களை என்ன சொல்லப் போறா?'' அவசரமாக இடையிட்டார் நந்தகோபால்.

''அப்படி இல்லைப்பா. நான் கற்பனை எதுவும் பண்ணலை. இது... ஜாக்கிரதை உணர்வு... எனக்கு நீங்களும் முக்கியம்பா...'' என்று சொன்னவன் விழிகளில் ஈரம் சுரக்க, அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''சரி, சரி நான் அம்மாவிடம் பேசுறேன்...'' என்று மெல்லிய குரலில் நந்தகோபால் அவனிடம் சொன்ன போதே யசோதாவின் குரல் கேட்டது.

''நீங்களும் உன் பையனும் போடும் எந்த ஒப்பந்தமும் என்னைக் கட்டுப்படுத்தாது. இப்போதே சொல்லிட்டேன்...'' என்ற யசோதாவை முறைத்தான் பிரேம்.

மேலே ஏதோ மறுத்துப் பேச வாய் எடுத்தவனை நிறுத்தியவர். அவனை தோளோடு சேர்த்து அணைத்து, ''யசோ! இத்தனை நாள் அவன்தான டைம் கேட்டான். இப்ப நான் சொல்றேன். அவனுக்கு ரெண்டு வாரம் டைம் கொடு. இதுதான் கடைசி சான்ஸ். இரண்டு வாரம் முடிஞ்ச பிறகு, நீ உன் இஷ்டப்படி நடந்துக்கலாம். இந்த அவகாசம் எனக்காக, ப்ளீஸ்...'' என்று சொன்ன

நந்தகோபாலை ஒரு கணம் வியப்பாகப் பார்த்துவிட்டு அருகில் வந்து யசோதாவும் அவரின் தோளில் சாய்ந்து கொண்டார்.

* * *

இரண்டு வாரங்கள் விடுமுறைக்குப் பிறகு அன்று அலுவலகத்திற்குக் கிளம்பும் பரபரப்பில், அம்மாவைக் கேள்விக் கணைகளால் துளைத்து அவரின் கோபத்தில் குளித்து, திட்டு மழையில் நனைந்து கொண்டு இருந்தாள் தர்ஷினி.

''இன்னிக்கு ஆபீஸ் போகலையா தர்ஷினி? மணி என்ன பார்த்தியா?''

''ப்ச்! அம்மா ரெண்டாம் கிளாஸ் படிக்கிற குழந்தை மாதிரி ஒவ்வொரு தடவையும் என்னையே மணி கேட்டுட்டு இருக்கீங்களே? மணி பார்க்கப் படிக்கலாம் என்று தோணுதா உங்களுக்கு? மக்கு ஸ்டூடன்ட் என்று நான் அப்பப்போ சொல்றது கரெக்ட்தான்...''

''இப்ப வந்தேன், நான் மக்கா கொக்கான்னு தெரியும்...''

''சரிம்மா, ஒற்றைக் காலில் நின்னு நீங்க தவம் செய்வதால் நான் குளிக்கப் போறேன். என்னோட பிங்க் சல்வார் எங்கேம்மா?''

''ம்ம்ம். உன் சல்வாரை நான் என் முந்தானையில் முடிஞ்சு வைச்சு இருக்கேன். வந்து எடுத்துக்கோ'' என்று கடித்தவரை தேடி அடுப்படிக்கு வந்து, அவரின் புடவை முந்தானையைப் பார்த்து விட்டு, ''ப்ச்! அம்மா வர வர நிறையப் பொய் சொல்றீங்க'' என்று சலித்துக் கொண்டு வெளியேறினாள் தர்ஷினி.

அடுத்த பதினைந்து நிமிடத்தில், ''அம்மா என்னோட ஐடி கார்ட் கப்போர்டில எங்கே தேடியும் காணோம். பார்த்தீங்களா?'' என்ற அடுத்த அகழ்வாராய்ச்சி துவங்கியது.

'கப்போர்டில மூன்றாவது தட்டில பேப்பருக்கு அடியில வச்சு இருக்கேன் பார். உனக்கு எல்லாம் எவன் டிகிரி கொடுத்து கேம்பஸ் இன்டர்வியூவில வேலையும் கொடுத்தது? நீ ஆறாவது ஏழாவது படிக்கத்தான் லாயக்கு. எதற்கெடுத்தாலும் அம்மா முந்தானையைப் பிடிச்சுட்டு சுத்த வேண்டியது'' என்ற புலம்பலை, 'தேங்க்ஸ் மை ஸ்வீட் மம்மி' என்று கன்னத்தில் முத்தமிட்டு நிறுத்தினாள்.

ஆனால் அடுத்த மூன்றே நிமிஷத்தில், 'ஏன்மா காலையில இந்த இட்லியை விட்டால் உங்களுக்கு வேறே டிபனே தெரியாதா? மத்தியானம் லஞ்சாவது ஒழுங்கா வச்சீங்களா? இல்லை வழக்கம் போல வத்தல் குழம்பு, தயிர் சாதம் தானா?' என்று கேட்டு வாங்க வேண்டிய லட்சார்ச்சனையை மறக்காமல் பெற்றுக் கொண்டாள் தர்ஷினி.

''ஒரு நாளாவது இன்னிக்கு நான் சமைக்கிறேன். நீங்க ரெஸ்ட் எடுத்துக்கோங்கம்மா என்று வாய் வார்த்தையாகக் கூடச் சொல்லாதே. சட்டமா என்னை அதிகாரம் பண்ணு...''

''அம்மா ஸ்டாப் ஸ்டாப்...'' என்று அவசரமாக இடையிட்டாள் தர்ஷினி.

''என்ன ஆச்சோ?'' என்று குழப்பத்துடன் நிறுத்திய புவனேஸ்வரியைப் பார்த்து, ''அம்மா உனக்கு எப்ப

பொண்ணு என்ற பொறுப்பு வருமோ அன்னிக்குத்தான் என்னால நிம்மதியா தூங்க முடியும் என்ற முக்கியமான அர்ச்சனையை மறந்துட்டீங்க?'' என்ற தர்ஷினியைப் பார்த்து ஆத்திரமாக அவர் பல்லைக் கடித்த சத்தம் கீழே போர்டிகோவில் காத்து இருந்த குருமூர்த்திக்குக் கூட கேட்டு இருக்கும்.

''இப்படியே நக்கலா என்னை வாயடிச்சுட்டே இரு. இதே வாய் போகும் வீட்டிலும் வரும். உன் மாமியார் பொண்ணு வளர்த்து வச்சு இருக்கா பாரு என்று என்னைத் தாளிச்சுக் கொட்டட்டும்...''

''டோன்ட் வொரிம்மா. மாமியாரை சரிக் கட்டுறது எப்படின்னு நிறைய ஐடியா வச்சு இருக்கேன். இந்த வீட்டுல உங்களுக்கு பொண்ணா பிறந்து, உங்களிடம் பாவம் போல அப்பாவியா இவ்வளவு திட்டு வாங்கிய துக்கு. என்னோட மாமியார் என்னை தங்கத் தட்டில வச்சு தாங்கோ தாங்குன்னு தாங்குவாங்க. நீங்க வேணா பாருங்க. ஒரு வார்த்தை கூட திட்ட மாட்டாங்க அப்படின்னு எனக்கு கம்ப்யூட்டர் ஜோசியம் சொல்லி இருக்கு...'' என்று கண் சிமிட்டியபடி செருப்பை மாட்டினாள்.

''கம்ப்யூட்டர் ஜோசியம் நிச்சயம் பலிக்கும் தர்ஷினி...''

''ஹா! அம்மா நிஜமாவா, என்னை ஒரு முறை கிள்ளுங்க. நான் கனவு காணுகிறேனா? நீங்க இப்படி நல்ல வார்த்தை எல்லாம் சொல்றீங்க?'' என்று கிளம்பியவள் நின்று கேட்டாள்.

''நான் இன்னும் வாக்கியம் முடிக்கவே இல்லையே? உன்னோட ஜோசியம் உண்மையாக இருக்கும். திட்ட

மாட்டாங்க. ஒரு பெரிய குச்சி எடுத்துட்டு சாத்தப் போறாங்களோ என்னவோ?''

''இப்ப சந்தேகம் இல்லை. இதுதான் புவனேஸ்வரி. இப்படியே இருங்க. எங்களுக்கு எங்க அம்மா யார் என்று சந்தேகம் வந்து விடக் கூடாதுல்ல...'' என்று சொல்லி விட்டு படிகளில் இறங்கினாள். இரண்டாவது மாடியில் இருந்த வீட்டில் இருந்து துள்ளிக் குதித்தபடி புன்னகையோடு இறங்கி வந்த தர்ஷினியைப் பார்த்த உடனேயே குருமூர்த்திக்கு அவள் புவனாவிடம் ஏதோ வம்பிழுத்து விட்டு வந்து இருக்கிறாள் என்பது புரிந்தது. இதுநாள் வரை இல்லாத கவலை இப்போது வந்தது. சத்யா பொறுப்பாக புகுந்த வீட்டில் பாந்தமாக இணைந்ததைப் பார்த்தாகி விட்டது. இவளும் அதே மாதிரி இருப்பாளா? இவளுடைய விளையாட்டுத்தனம் எப்போது குறையும்?

அப்பாவின் பின்னால் பைக்கில் ஏறி அமர்ந்தவள், ''என்னப்பா திடீர் என்று என்னை ஆபீஸ்ல ட்ராப் பண்றேன் என்று சொல்றீங்க. நானும் ஜாலியா இந்த சென்னை ட்ராபிக்ல எதுக்கு டூ வீலரை ஓட்டி டென்ஷன் ஏத்திக்கணும் என்று உங்க பின்னால கிளம்பி வந்துட்டேன். சாயங்காலமும் வரீங்களாப்பா? ஸ்கூல் போகலை தானே?''

''சாயங்காலம் வேலை இருக்கும்மா. நீ கிளம்பும் நேரமும் நிச்சயம் இருக்காது. நீயா வந்துடு...''

''ஓகேப்பா, உங்களுக்கும் ஐம்பது வயசாச்சே? இன்னும் ஏன்பா பைக்கில் போறீங்க? முதுகு வலி வரப் போகுது. சின்னதா ஒரு கார் வாங்கிக்கலாமே? இல்லை

ஒருவேளை அம்மாவோட ரொமாண்டிக்கா போறதுக்கு பைக் தான் வசதி என்று காருக்கு மாறாமல் இருக்கீங்களா?''

''தர்ஷினி, சும்மா விளையாட்டுத் தனமாவே பேசக் கூடாது. அதான் அம்மா உன்னைத் திட்டுவது மட்டும் இல்லாமல் செல்லம் கொடுத்து நீங்கதான் அவளைக் கெடுக்குறீங்க என்று என்னையும் சேர்த்துத் திட்டுகிறாள்.''

''அம்மா திட்டுவது புதுசாப்பா? எனக்கு நினைவு தெரிஞ்ச நாளில் இருந்து அப்படித்தான்...''

''தர்ஷினி...'' என்று அழுத்தமான குருமூர்த்தியின் குரல் அவளின் வாயை அடைத்தது.

சில வினாடிகள் அமைதியாக இருந்தவள், ''சுத்யா கல்யாணத்துல எதிர்பாராத பெரிய செலவு வந்துடுச்சாப்பா? நான் ஏதாவது உதவி பண்ண முடியுமா?'' என்று கேட்டாள் தர்ஷினி.

இவளை விளையாட்டுப் பிள்ளை என்பதா? வளர்ந்த பிள்ளை என்பதா? சில நிமிடங்கள் முன்னால் அம்மாவிடம் மல்லுக்கு நின்றாள். இப்ப பெரிய மனுஷியாக வீட்டில் பிரச்னையை தீர்ப்பது பற்றி பேசுகிறாள்.

''அம்மா விருப்ப ஓய்வு கொடுத்தபோது வந்த பணத்திலேயே சத்யா திருமணம் முடித்தது போக பணம் மீதம் இருக்கும். இன்னும் என்னோட பி.எப். உன் கல்யாணத்துக்கு போதும். சொந்த வீடு, என் சம்பாத்தியம் எங்க ரெண்டு பேருக்கு போதும்டா. பணம் நம்ம வீட்டுல பிரச்னை இல்லை...''

''வேறென்ன பிரச்னைப்பா? நீங்க ஒரு வாரமா என்னிடம் சரியாவே பேசலை தெரியுமா? எப்பப் பார்த்தாலும் ஒரு ஆராய்ச்சி பார்வை தான். என் மேலே ஏதாவது கோபமாப்பா?''

''உனக்கு அவசரமா ஆபீஸ் போகணுமா தர்ஷினி?''

''அப்படி ஒண்ணும் இல்லைப்பா. ரெண்டு வாரம் லீவுதானே? எனக்காக எந்த வேலையும் காத்து இருக்காது. போனால் தானே வேலை வரும். என்ன விஷயம் சொல்லுங்கப்பா?''

''ஒரு பத்து நிமிஷம் மைலாப்பூர் சாய்பாபா கோவில் போயிட்டுப் போகலாமா?''

''சரிப்பா...'' என்று சொன்ன தர்ஷினியின் குரல் உள்ளே போய் இருந்தது. அப்பா ஏதோ முக்கியமான விஷயம் பேசப் போகிறார். அதுவும் அம்மாவிற்குத் தெரியாமல். என்னவாக இருக்கும்? சாய்பாபாவை தரிசித்து விட்டு வெளியே இருந்த த்யான மண்டபத்தில் ஓரமாக அமர்ந்தனர். அப்பா பேச்சை ஆரம்பிக்கட்டும் என்று அமைதியாக இருந்தாள் தர்ஷினி.

''தர்ஷினி, சத்யா கல்யாணம் நல்லபடியா முடிஞ்சுடுச்சு. அவள் அவங்க வீட்டுல நல்ல செட் ஆகிட்டா. வெங்கடேஷ் படிப்பை முடிக்கும் வரை வேலைக்குப் போக மாப்பிள்ளையோட பேசி முடிவெடுத்து இருக்கா. ரொம்ப சந்தோஷமா இருக்கு...'' என்று பேச்சை ஆரம்பித்தார்.

''ஆமாப்பா! சத்யா என்னோட கூட சண்டை போடலை. ரொம்பப் பொறுமையா ஆகிட்டா...''

''ம், உனக்குப் பார்க்கலாமா? உனக்கு ஒரு கல்யாணம் முடிச்சுட்டா எங்க கவலை தீர்ந்துடும்.''

''எ..ன்..ன..ப்..பா திடீர்ன்னு..? சத்யா கல்யாணம் முடிச்சு பத்து நாள் தானே ஆகுது...'' என்று முனகும் போதே பூமாலை இணைய தளமும் பிரேம்குமாரின் முகமும் நினைவில் ஆடியது.

''அதனால் என்னம்மா? சத்யாக்கு மாப்பிள்ளை எவ்வளவு நாள் தேடினோம்? ஆறு ஏழு மாசம் ஒண்ணும் சரியா செட் ஆகவே இல்லையே? உனக்கும் ஆரம்பிச்சா சரியா இருக்கும். சீக்கிரம் எங்க கடமைகளை முடிக் கணும் இல்லையா?''

''என்னப்பா இவ்வளவு அவசரம்? நான் இன்னும் கொஞ்ச நாள்...'' என்று இழுக்கும்போதே எதற்கு அவ காசம் கேட்கிறோம் என்று அவளுக்குப் புரியவில்லை.

''தர்ஷினி, சத்யாவிடமும் வெளியில் பையன் பார்க் கும் முன்பு கேட்டேன். நான் தப்பா ஒண்ணும் எடுத்துக் கலை. உன் மனசுல யாராவது இருந்தால் தாராளமா சொல்லு...'' என்று கேள்வியாக குருமூர்த்தி நிறுத்த அவள் பதில் சொல்லத் திணறினாள்.

''நீங்க திடீர் என்று கேட்டதும், எனக்கு என்ன சொல்ற துன்னு தெரியலைப்பா. நான் கொஞ்ச நாள் நம்ம வீட்டுலையே ஜாலியா இருக்கேனேப்பா?''

''இங்கே பாரு தர்ஷினி, அம்மாக்கு உன்னைப் பற்றி ஒரே கவலை. அதனால உன் மனசுல யாரும் இல்லை என்றால், பிரேமிடம் சொல்லி...''

''அப்பா ப்ளீஸ்! அவசரப்படாதீங்க. பிரேமிடம் அப் புறம் சொல்லிக்கலாம். எனக்கு ஒரு வாரம் டைம் கொடுங்கப்பா. அதற்கு அப்புறம் பிரேமிடம் சொல்லி மாப்பிள்ளை தேடலாம்'' என்று அவசரமாகச் சொன்ன வள் மனதில் என்ன இருந்ததோ?

''சரிம்மா, நீ முடிவு சொன்ன பிறகு நான் பிரேமிடம் பேசுறேன். ஆனால் நீ இன்னும் கொஞ்சம் பொறுப்பா நடந்துக்கோ. ஓகே?'' என்று அவள் தலையை வருடிய படி கேட்டார்.

''அப்பா! அம்மாவோ, நீங்களோ, என்னைப் பார்த்து ஏன் இப்படி செஞ்ச என்று கஷ்டப்படுற மாதிரி ஒரு காரியம் நிச்சயமா நான் செய்யவே மாட்டேன்பா. என்னை நம்புங்க. அம்மாவிடம் வம்பிழுப்பதை பார்த் துக் கவலைப்படாதீங்கப்பா. அது ச்ச்சும்ம்ம்மா...'' என்று கை விரல்களை உதறிக் காட்டி கண் சிமிட்டியபோது பழைய தர்ஷினி மீண்டு இருந்தாள்.



11

பிரேம்குமாரின் கண்களிலும் வார்த்தைகளிலும் இருந்த ஈரத்தை நந்தகோபால் உணர்ந்ததால் அவன் கேட்ட ஒரு மாத அவகாசத்தை பாதியாகக் குறைத்து மகனுக்கும் மனைவிக்கும் இடையே சமாதானம் பண்ணி வைத்தார் என்றாலும், வேலை அத்துடன் முடிய வில்லை.

பிரேம்குமார் சொல்லாமல் சொல்லிய விஷயம் இருவருக்கும் புரிந்ததனால் வந்த மன வருத்தம் கூடி யது. யசோதாவின் வழக்கமான கலகலப்பும் சுறுசுறுப்பும் காணாமல் போய் அவரை படுக்கை அறையில் முடக்கி வைத்தது. மகனுடன் காபி குடிக்கிறேன் என்று சொன் னவர் மகனுக்கே காபி கொடுக்க மறந்து போனார்.

காபி கலந்து எடுத்து வந்த அப்பா பார்த்ததும் ப்ரேமிற்கு மனம் மேலும் வாடியது. இப்போ அம்மா எங்கே என்று கேட்டாலும் கஷ்டம். கேட்கா விட்டாலும் கஷ்டம். சின்ன வருத்த புன்னகையுடன் பெற்று கொண்டு, ''அம்மா...'' என்று கேள்வியாக நிறுத்திய வனைப் பார்க்கவே நந்தகோபாலுக்கு சங்கடமாக இருந்தது.

''ரூமில் படுத்து இருக்கா. அவளுக்கும் காபி நான் தான் கலந்து எடுத்துட்டுப் போறேன்...''

''அப்பா நான் ஒண்ணு சொல்லட்டுமா?''

''நீ என்ன சொல்லப் போகிறாய் என்று தெரியும் பிரேம். ஆனால் என் மனசு அதுக்கு ஒத்துக் கொள்ளாது. நாளைக்கே உனக்கு வரப் போகிறவள், இவ்வளவு பெரிய விஷயத்தை என்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டாய் என்று உன்னிடம் சண்டை போட்டால், உன்னுடைய எதிர்கால வாழ்வு கேள்விக் குறியாகி விடாதா? அதுதான் என்னோட கவலை. நாங்க வாழ்ந்து முடிச்ச வங்க ராஜா. நீ இனிமேல் தான் வாழ்க்கையையே ஆரம்பிக்கணும்...''

''இது பெரிய விஷயமே இல்லையேப்பா. இது அவளுடைய வாழ்வை எந்த விதத்தில் பாதிக்கும் சொல்லுங்க பார்ப்போம்...?''

''பெரிய விஷயம் இல்லை தானே? அப்புறம் ஏன் சொல்ல வேண்டாம் என்று சொல்கிறாய்?''

''அம்மா மனசு வீணா கஷ்டப்படும்பா. ஏற்கனவே நாலு வருஷம் கஷ்டப்பட்டு தேத்தி அவங்களை இயல்புக்குக் கொண்டு வந்து இருக்கோம். இப்ப மறுபடியும்

அதே கதை என்றால் தாங்க மாட்டாங்கப்பா. போக அவளுக்கு எதிர்காலத்திலும் நாம் சொல்லா விட்டால் எப்படித் தெரியும்பா...?

''எனக்கு உன்னுடைய கொள்கைகள், உன்னுடைய மனநிலை, இது பற்றிதான் கவலை பிரேம். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற கொள்கை உனக்கு இல்லையே? இப்படித்தான் வாழ வேண்டும், உன்னை ஒருவர் குறை சொல்லாத அளவுக்கு உன் நடவடிக்கை இருக்க வேண்டும் என்று சொன்னால்...''

''அம்மாக்காக கொஞ்சம் காம்ப்ரமைஸ் பண்ணலாமேப்பா...''

''நீ எப்படி உன் அம்மாவின் சந்தோஷத்துக்காக என்று நினைக்கிறாயோ, அதே மாதிரி ஒவ்வொருவருக்கும் ஒரு உந்து சக்தி இருக்கும் பிரேம். அதனால் தான்...''

''அப்பா ப்ளீஸ், காபி ஆறுது. அம்மாவிடம் கொண்டு போய் கொடுங்க. நாம் இப்ப இதைப் பற்றிப் பேச வேண்டாம்...'' என்று அவசரமாகச் சொன்ன பிரேமிற்கு, காபி மேல் இருந்த அக்கறையைக் காட்டிலும் அப்பா அங்கே சுற்றி இங்கே சுற்றி, நீக்கு போக்காக நடந்து கொள்ள வேண்டும் என்று கொண்டு வந்து நிறுத்தி விடுவார் என்ற பய்ம் இருந்தது.

மகனிடம் காபியைக் கொடுத்து விட்டு மனைவியைத் தேடிப் போனார் நந்தகோபால். படுக்கையில் உடலைக் குறுக்கிப் படுத்து இருந்த மனைவியின் அருகே காபியை வைத்துவிட்டு, ''யசோ, இன்னிக்கு ஒரு நாள் இந்தக் காபியை சாப்பிட்டு பார். அப்புறம் தினமும், எனக்கு நீங்களே காபி போட்டு தாங்க என்று அடம்

பிடிப்பாய். இதுக்கு பயந்துதான் நான் நம்ம வீட்டில் அடுப்படிக்குள்ளே நுழைவதே இல்லை'' என்று சகஜ மாகப் பேசியபடி அருகில் அமர்ந்தார்.

அவர் எழுந்து கொள்ளாமலே படுத்து இருக்க, ''யசோ, கல்யாண வீட்டுல இருந்து வந்து நான் இன்னும் படுக்கவே இல்லை. நான் தூங்கணும் என்று பார்த்தால், நீ வந்து படுத்துக் கொண்டாய்! இன்னிக்கும் நான்தான் இரவு சமையலா?'' என்று சலிப்பது போல அவரை கிளப்பப் பார்த்தார். அதற்கும் பதில் இல்லை. ''யசோதா, இப்ப எழுந்திரிக்கப் போகிறாயா இல்லையா?'' என்று கண்டிப்பாகச் சொன்னதும் அவரின் விம்மல் ஒலி கேட்டது.

''ப்ச்! யசோதா என்ன இது? பிரேம் நீ இப்ப அழுத தைப் பார்த்தான். அவனோட டென்ஷன் இன்னும் கூடும். அப்புறம் அவன் கல்யாணம் பற்றிய முடிவு எடுக்க இன்னும் தாமதம் ஆகும். இன்னும் மூணு வருஷம் ஆனாலும் முடிவே சொல்ல மாட்டான். அப் புறம் உன் இஷ்டம்...'' என்று அழுத்தமாகச் சொல்லி விட்டு எழுந்தவரை கை பற்றி இழுத்தார்.

''நீங்க என்ன என்னை மிரட்டுறீங்களா?'' என்று அதட்டலாகக் கேட்டவரின் குரலில் அழுத்தத்தை விட வருத்தமே மிகுந்து இருந்தது.

''நான் ஏன் மிரட்டணும்? நடப்பு உண்மையைச் சொன்னேன். உனக்கு சந்தேகம் இருந்தால் பிரேமை இங்கே கூப்பிடட்டுமா? நீயே அவனிடமே கேட்டுத் தெரிஞ்சுக்கோ. டேய் கண்ணா...'' என்று கூப்பிட ஆரம் பித்தவரின் வாய், யசோதாவின் கையால் அழுத்தமாக மூடப்பட்டு இருந்தது.

அடுத்த சில வினாடிகளில் காபி கப்புடன் பிரேமின் அறையில் போய், ''டேய் அப்பா போட்ட காபி எப்படி இருக்கோ? இதை குடி'' என்று தனக்கு அவர் கொண்டு வந்து கொடுத்த காபி கப்பை நீட்டினார் யசோதா.

''அட! இங்கே பாருடா, இந்த காபி யார் போட்டதாம்?'' என்று நந்தகோபால் கேலியாகக் கேட்க, ''யார் போட் டது என்பது முக்கியம் இல்லைப்பா. யார் கொண்டு வந்து கொடுக்குறாங்க என்பதுதான் முக்கியம்'' என்று சிரித்தபடி, அம்மாவிடம் இருந்து காபியை வாங்கிக் கொண்டவன் கண்களில் பாசம் பொங்கி வழிந்தது.

''அப்படிச் சொல்லுடா என் சிங்கக் குட்டி...''

''இதே டயலாக்கை, அவன் மனைவியின் கையில் இருந்து காபி கப்பை வாங்கிட்டு, உன்னைப் பார்த்து சொல்லும் ஒரு நாள் வராமலா போய் விடும்?''

''வரட்டும் வரட்டும்! அப்படிச் சொல்றதுக்காகவாவது அவன் கல்யாணம் பண்ணிக்கட்டும் என்று தானே நானும் தவம் இருக்கிறேன்'' என்று யசோதா சொல்ல, அங்கே கனத்த சூழல் கலகலப்பானது.

* * *

அப்பா திருமணம் பற்றி பேசுவார் என்று தர்ஷினி எதிர்பார்க்கவில்லை. வீட்டில் இல்லாமல் வெளி இடத் தில் பேச்சை ஆரம்பித்ததும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவர் திருமணப் பேச்சை ஆரம்பித்த உடனே, சத்யா சொன்ன மாதிரி, ''உங்க இஷ்டம்பா...'' என்றோ, ''நீங்க எத்தனை மாப்பிள்ளை வேண்டுமானாலும் பார்க்கலாம். நான்தான் இறுதி முடிவு சொல்வேன்'' என்று தன்

வழக்கம் போல கேலிச் சிரிப்புடன் சொல்ல விடாமல் தடுத்தது எது? அவர் திருமணம் பற்றிய பேச்சை ஆரம் பித்ததும் பூமாலை இணைய தளம் பற்றிய நினைவு தோன்றியது ஏன்?

தானே அம்மாவிடம் அத்தனை விளக்கம் சொல்லி, கிடுக்கி பிடி போட்டு சத்யாவிற்கு மாப்பிள்ளை தேட சம்மதிக்க வைத்த அதே இணைய தளத்தில் தன் பெயரைப் பதிவு பண்ண அப்பா கேட்டதும் அப்படி பதறி, வேண்டாம் என்று சொல்ல வைத்தது எது?

தன் இணைய தளத்தில் பதிவு செய்யப்படும் பெண் களின் புகைப்படத்தை நான் வித்தியாசமாக பார்ப்ப தில்லை என்ற அவனுடைய நிலைப்பாடுதான் அந்த அவசரத்திற்குக் காரணம் என்பது அவளுக்கு நன்றாகவே புரிந்தது. தர்ஷினிக்கு தன் மனதைப் புரியவில்லை என்று சொன்னால் அது பொய். இத்தனை நாட்களாக அடி மனதில் இருந்த கேள்வி, அப்பாவின் பேச்சால் மேற்பரப்பிற்கு வந்தது.

ஆனால் பிரேம்குமார், சத்யா திருமணத்தன்று காலையில் பேசியதுதான். அதன் பிறகு ஆளே காண வில்லை. கணக்குகள் முடித்து பணம் வாங்கியது கூட அங்கிள் தான். போனிலும் பேசவில்லை. அவ்வளவு ஏன், அன்று மண்டபத்தில் இருந்து தன்னிடம் விடை பெற்றுப் போகவில்லை என்பது அவளுக்கு உறுத்தியது. தனக்கு அவன் மேல் இருக்கும் ஈர்ப்பு அவனுக்கு தன் மேல் இல்லை போலவே?

தான் வெறும் வாடிக்கையாளரின் மகள் மட்டும் தானா? அந்த அடிப்படையில் தான் அவன் பேசினானா?

நம்பவும் முடியவில்லை. ஆனால் எந்த அடிப்படையில் அஸ்திவாரம் இன்றி மேலே கோட்டை கட்டுவது? அவளைப் பிடித்து இருக்கிறது. அவனின் கடமை உணர்வு, தொழில் பக்தி, பிற பெண்களை மதிக்கும் குணம், எல்லாம் பிடித்து இருக்கிறது. கூடவே அவனின் கோபமும், சுய கௌரவமும் கூட அவளை ஈர்த்ததுதான். அவன் தள்ளி தள்ளிப் போவதே அவன் மேல் ஈர்ப்பை கூட்டுகிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால்... சிந்தனை முழுமை அடையாமல் நின்றது.

யோசனையுடனேயே அலுவலகத்திற்கு வந்தவளை உற்சாகமான வரவேற்பும், சந்தோஷமான விசாரணை களும், எதிர்கொண்டது. மழையென பொழிந்த கேள்வி களுக்கு சிரிப்புடன் விளக்கம் சொல்லியவாறு, இரண்டு வார இடைவெளியில் சேர்ந்து இருந்த வேலைகளையும் கவனித்தாள். பிற்பகல் உணவு வேளையில் அவளது இருக்கைக்கு வந்த அக்கவுண்ட்ஸ் ஆபீசரைப் பார்த்து ஆச்சரியமாக இருந்தது.

''ஜெயராமன் சார். இந்த டிசைனிங் செக்ஷனுக்கு நீங்க வந்து இங்க மூணு மாசத்துல நான் பார்த்ததே இல் லையே? என்ன விஷயம் சார்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

''ஆபீஸ் வேலை இல்ல மிஸ் தர்ஷினி. சொந்த வேலை அதுதான் உங்களை நேரில் பார்க்கலாம் என்று வந்தேன்...'' என்று ஆரம்பித்த உடனே ஆச்சரியம் மேலும் கூடியது.

''சொல்லுங்க சார்...''

''உங்க அக்காவுக்கு நெட்டில பார்த்து முடிவாகி ஒரே மாசத்துல கல்யாணம் முடிந்து விட்டது என்று என்னோட

செக்ஷனில் சொன்னாங்க. என் பொண்ணுக்கு மூணு வருஷமா பார்க்கிறோம். வயசு இருபத்தி ஐந்து முடிந்து விட்டது. அதான் எங்கே என்ன விபரம் என்று விசாரிக்க வந்தேன்...'' என்று அவர் சொல்லச் சொல்ல தர்ஷினி யின் முகம் மலர்ந்தது.

* * *

அம்மாவும் அப்பாவும் சேர்ந்து பிரேமிற்கு அளித்த இரண்டு வார கெடு முடிய இன்னும் அரை மணி நேரம் மட்டுமே இருக்க, மாலை காபி வேளையில், ''ராஜா, வெளியே போகிறாயா? கொஞ்சம் பேசணுமே?'' என்று பேச்சை ஆரம்பித்தார் யசோதா.

''ஆமாம்மா, பாண்டி பஜார் வரை போய் வர வேண் டும். சில பூக்கடை கணக்குகள் செட்டில் பண்ண வேண் டும். என்ன விஷயம்?'' என்று தெரியாத மாதிரி கேட் டான் பிரேம்குமார்.

''கணக்கு செட்டில் பண்ண நாளைப் போகலாம் தானே? அது தலை போகும் அவசரம் இல்லை. இப் போதைக்கு நமக்கு வரப் போற, அல்லது நீ தரப் போகும் சில நூறுகளை விட முக்கியமான விஷயம் நான் உன் னிடம் பேசணும்'' என்று யசோதா அழுத்தம் திருத்தமாக ஆரம்பிக்கும் போதே பிரேம் அப்பாவைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''நீ என்ன சொன்னாலும் நான் மறுப்பே சொல்லப் போவதில்லை பிரேம். எங்களின் ஆசை உன்னை மணக் கோலத்தில் பார்ப்பதுதான். உன் மனசில் யாரையாவது நினைத்து இருந்தால் சொல்லு'' என்று தர்ஷினியை மனதில் வைத்துக் கேட்டார் நந்தகோபால்.

''இல்லைப்பா. உங்களை மீறி எனக்கு யாரும் முக் கியம் இல்லை. இப்போதைக்கு என் மனசில் என்னைக் கவர்ந்தவர் என்றோ, வருங்கால மனைவி என்ற ஸ்தானத்திலோ யாரும் இல்லை. ஆனால் அதுக்காக ஊர் ஊரா போய் ஒவ்வொரு பொண்ணா எல்லாம் பார்க்க முடியாது. அது எனக்குப் பிடிக்கலை. நீங்க பார்த்துச் சொல்லும் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறேன். என்னிடம் சொல்வதற்கு முன்னால், அந்தப் பெண் ணுக்கு, அந்தப் பெண்ணின் பெற்றோருக்கு சம்மதமா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களுக்குப் பிடித்து இருந்தால் போதும். அம்மாக்கும் அந்தப் பொண் ணுக்கும் முதலில் ஒத்துப் போக வேண்டும். இல்லை என்றால் நம் எல்லோரின் நிம்மதியும் போய்விடும். அதனால் பொறுப்பை அவங்களிடமே விட்டு விடுங்க.''

''டேய்! நிஜமாவா சொல்ற?'' என்று நம்ப முடியாமல் கேட்டார் யசோதா. ஒரு வேளை தனக்கு தர்ஷினியைப் பிடித்து இருக்கிறது என்று யூகித்து விட்டானா?''

''ஏன்மா, நிஜம்தான் சொல்றேன். இன்னும் எத்தனை நாள் உங்களைக் காக்க வைப்பது? இன்னிக்கு இல்லா விட்டாலும் இரண்டு மாதம் கழித்துக் கல்யாணம் பண்ண வேண்டும் தானே?''

''அப்பாவோட ஒண்ணு விட்ட சித்தி பேத்தி திருக் கோவிலூர் பக்கத்தில் இருக்கா. இப்பதான் மூணு மாசத் துக்கு முன்னால் டிகிரி முடிச்சு இருக்கா. இருபத்தி ஒரு வயது ஆகுது. பார்க்கவும் நல்லா இருப்பா. பேர் பிரேமா. சொந்தமும் விட்டுப் போகாது. ஞாயிற்றுக் கிழமை மூன்று பேரும் போய் பார்த்து முடித்து விடலாமா?'' என்று

யசோதா கேட்ட வினாடியில் பிரேம்குமாரின் முகம் இருண்டது.

அம்மா இப்படி கையிலேயே ஒரு பெண்ணை வைத்து இருப்பார்கள். உடனே இரண்டு தினத்தில் பார்க்கப் போகலாம் என்று சொல்வார்கள் என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை. இந்த பத்து நாட்களில் அவன் தீவிரமாய் யோசனை பண்ணி, 'ஒற்றையா இரட்டையா போட்டுப் பார்த்து', தனக்கு தன் தந்தை விதித்த கெடுவை அவன் தர்ஷினிக்கு வைத்து இருந்தான்.

இந்தக் கால கட்டத்தில் அவள் நேரிடையாகவோ, தொலைபேசி மூலமாகவோ, தன்னை சத்யா கிருஷ்ண குமார் திருமணம் தொடர்பாக, ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு தொடர்பு கொண்டால் அம்மாவிடம் அவள் மேல் தனக்கும் ஈர்ப்பை தெரிவிப்பது என்று முடிவு பண்ணி இருந்தான். அந்த கெடு இன்று மாலை ஐந்து மணியோடு முடிகிறது. இனிமேலும் தன் மனதை பூட்டி வைப்பதில் அர்த்தம் இல்லை.

தன்னுடைய விருப்பத்தைவிட பெற்றோரின் விருப்பத்திற்கும், எதிர்கால சமூக வாழ்க்கைக்கும் முன்னுரிமை கொடுத்து தர்ஷினியைத் தூர விலக்கி வைக்கும் முடிவிற்கு வந்து விட்டான். இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்கிறது. இனிமேல் பேச வாய்ப்பு இருக்கா? நேரில் வருவாளா? காத்திருக்கலாமா? அம்மா சொல்லும் பெண்ணிற்கு சரி சொல்லலாமா?

மனதிற்குள் தீவிரமாக சிந்தனை ஓட, அம்மாவின் கேள்வி பதில் சொல்ல தயங்கி, காபி கோப்பையுடன்

ஜன்னலுக்கு நகர்ந்து வெளியே தெரிந்த பவளமல்லி செடியைப் பார்த்தான். ஆரஞ்சு வண்ணக் காம்புகளும், ஐந்து குட்டி வெள்ளை இதழ்களும், சேர்ந்த மாதிரி இருந்த அந்தக் குட்டிப் பூக்களை வெறித்துப் பார்த்தவன் காதுகளில் வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் விழ ஆச்சரியத்துடன், பார்வையைத் திருப்பினான்.

அங்கே வாசலில் ப்ரியதர்ஷினி, பிங்க் நிற சல்வாரில், ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்க பெரியவரோடு இறங்கி மலர்ந்த புன்னகையோடு ஆட்டோக்காரரிடம் சலசலத்த படி சில்லரையை எடுத்துக் கொடுத்ததைக் கண்ட பிரேம்குமாரின் விழிகள் அவசரமாகக் கடிகாரத்தைப் பார்த்தது. மணி ஐந்து அடிக்க இன்னும் இரண்டு நிமிடங்கள் இருந்ததைப் பார்த்ததும் அவன் முகமும் மனமும் பூவாக மலர்ந்தது.

திருக்கோவிலூருக்கு பெண் பார்க்கப் போகலாமா என்று கேட்ட வினாடியில் இருண்ட பிரேம்குமாரின் முகம், அதில் தெரிந்த சிந்தனை, வாசலில் வந்து நின்ற ஆட்டோ, அதில் இருந்து இறங்கிய தர்ஷினி, அதைப் பார்த்து மலர்ந்த பிரேம்குமாரின் முகம், எல்லாவற்றையும் கவனித்த யசோதாவும் நந்தகோபாலும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.



12

அம்மா அப்பா தன்னிடம் நேரடியாகப் பேசி, வெளிப்படையாக விதித்த காலக் கெடுவினை தான் தர்ஷினி

யிடம் நேரடியாகவோ, ஜாடையாகவோ தெரிவிக்காமல், அவளாகவே, வருவதற்கான சாத்தியக் கூறுகள் கம்மி என்பதை அறிவு பூர்வமாக ப்ரேம்குமார் உணராமல் இல்லை. ஆனாலும் சில விஷயங்கள் நடக்கும்போது தானே முடிவெடுக்காமல், தன்னை மிஞ்சிய ஒரு சக்தியின் ஆளுமைக்குட்பட்டு, நடக்கலாம் என்ற முடிவினை எடுத்தான்.

மாலை நான்கு ஐம்பத்தெட்டு வரை தர்ஷினி வரவில்லை. போனில் பேசவில்லை, என்பது மனதிற்குக் கஷ்டம் அளித்தபோதும், தானே விதித்த கட்டுப் பாட்டை கைவிட்டு அவளிடம் பேசலாம் என்று தோன்ற வில்லை. தான் பேசி அவள் மறுத்து விட்டால், அந்தக் காயம் ஆறக் கூடுதல் காலம் ஆகும் என்ற பயத்திலேயே அம்மாவிடமே பொறுப்பை ஒப்படைத்தான்.

ஆனால் அவர் அடுத்த வினாடியே, ஒரு பெண் பற்றிய தகவல் சொல்லி, இந்த வார இறுதியிலேயே போவோம் என்று சொல்ல, என்ன செய்வது என்று அறியாமல் திகைத்த வினாடியில், தன் வீட்டு வாசலில் 'தேடி வந்த தேவதை' போல வந்து நின்ற தர்ஷினியைக் கண்டதும் அவன் உணர்வுகள் முழுமையாக அவனின் கட்டுப்பாட்டை மீறியது.

நாலே எட்டில் சுமார் இருபதடி தூரத்தைக் கடந்தவன், 'ஹேய் பிரியா வெல்கம் வெல்கம்' என்று வேகமாக வரவேற்றான். அவன் முகத்தில் இருந்த ஆர்வமும், சந்தோஷமும் ப்ரியதர்ஷினி கனவிலும் நினைத்து இராதது. அதற்கும் மேலே அவனின் ப்ரியா என்ற பிரத் யேகமான அழைப்பு மனதிற்குள் பெரிய பனிக்கட்டியை வைத்து அவளை உறைய வைத்தது.

அவளை இதுவரை யாருமே அப்படி அழைத்தது இல்லை என்று சொல்ல முடியாது. முதலில் அறிமுகம் ஆகும்போது பலர் அந்த பேர் சொல்லித்தான் அழைப் பார்கள். வீட்டில் அவளுக்கு தர்ஷினி என்ற பேரே பழகி இருந்ததாலும், அவள் நெருங்கியவர், தூரத்துச் சொந் தம், அன்னியர் என்று வரைமுறை கோடு வகுக்காமல் எல்லோரிடமும் கலகலப்பாக பழகுவதாலும், யாராக இருந்தாலும், அவர்களை 'தர்ஷினி' என்ற பேருக்குப் பழக்கி விடுவாள்.

ஆனால் அறிமுகமாகி ஒன்றரை மாதங்கள் ஆகியும், தன்னை ஒரே ஒரு முறை, மிஸ் ப்ரியதர்ஷினி என்று முழு பேர் சொல்லி அழைத்தவன், தன்னிடம் சொல் லாமல் கொள்ளாமல் கல்யாண மண்டபத்தில் இருந்து ஓடி ஒளிந்து கொண்டவன், அடுத்த இரண்டு வாரங்கள் எங்கே இருக்கிறான் என்றே தெரியாமல் இருந்தவன், தான் அவனைத் தேடி வீடு வரும்போது ஓடி வந்து செல்ல பேர் சொல்லி இப்படி வரவேற்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

இவன் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறியத் தான் அவள் நேரில் வந்தாள். அப்பாவிடம் கேட்ட அவகாசத்திற்குள் ஒரு பதில் சொல்ல வேண்டுமே? இவன் மனதில் தான் இல்லை என்றால் அப்பா சொல் லும் பேச்சிற்கு தலை ஆட்டலாமே? ஆனால் அவனைப் பார்க்காமல், ஒரு வார்த்தை கேட்காமல் அப்பாவிடம் 'உங்க இஷ்டம்' என்று சொல்ல மனசு வரவில்லை.

தனக்கு அலுவலகத்தில் நேரிடையாக தொடர்பில் லாத ஒரு மேல் அதிகாரி. ஒரு தகவல் உதவியாக கேட் டதைப் பிடித்துக் கொண்டு, அலுவலகத்தில் அனுமதி

போட்டு விட்டு, அவரையும் கூட்டிக் கொண்டு இங்கே வந்தாள். அவருக்குத்தான் தன் மனது புரியாமல் எத்தனை சந்தேகம்?

''மிஸ் ப்ரியதர்ஷினி. பிரேம்குமாருக்கு போன் பண்ணி நாம் வருவதைச் சொன்னால் என்ன?''

''அவ்வளவுதான், பின்னங்கால் பிடரியில் பட ஓடி ஒளிந்து கொள்வான்' என்று மனதிற்குள் தோன்றியதை சொல்லாமல், 'என்னுடைய நம்பர் அவருக்குத் தெரியுமோ என்னவோ? எடுக்கா விட்டால் வேலை நடக்காதே? நேரில் பார்த்தால் நிச்சயம் தெரியும். போனில் பேச்சு சரியாக இல்லாவிட்டால் சென்டிமெண்டாக ஒரு மாதிரி இருக்கும். எங்க அம்மா கூட அப்படித்தான் சொல்வாங்க'' என்று தங்களின் வீட்டுக் கதையைக் கூறி சமாளித்தாள்.

''இப்ப நேரில் போய் அவர் இல்லாவிட்டாலும் அதே பிரச்னை வராதா?'' என்று விடாமல் துருவ, 'அட நீங்க வேறே ஏன் சார் என்னை இப்படி ஆரம்பத்துலேயே அஸ்து போட்டு படுத்துறீங்க? எங்க அம்மாவை மிஞ்சிடுவீங்க போல'' என்று பல்லைக் கடித்துக் கொண்டாள்.

''அவர் இல்லாவிட்டாலும் அவங்க அம்மா வீட்டில் நிச்சயம் இருப்பாங்க. அவங்களுக்கும் விஷயம் தெரியும். நீங்க அவரிடம் பேசுவதை விட அவங்களிடம் பேசினால் மனசு விட்டுச் சிரிப்பீங்க. ரொம்ப சந்தோஷமாக உணர்வீங்க. அவங்க பையனுக்கு பிசினெஸ் ஐடியா கொடுக்கும் ப்ரில்லியன்ட் வுமன். நீங்க கட்டாயம் அவங்களைப் பார்க்கணும்'' என்று தன்னுடைய சொந்த அனுபவத்தையே மீண்டும் பகிர்ந்து கொண்டாள்.

பிரேம் என்ன கடுப்படிப்பானோ? வெளியே போய் இருந்தால் வெகு நேரம் காத்து இருக்க வேண்டுமோ? அப்படிக் காத்து இருந்தால் வீட்டிற்குப் போகத் தாமதம் ஆகி விடுமே? அம்மாவிற்கு என்ன பதில் சொல்வது? என்று பல நூறு கேள்விகளுக்கு மத்தியில் இங்கே வந்த ப்ரியதர்ஷினி ப்ரேம்குமாரின் அன்பான வரவேற்பில் ஆடிப் போய் விட்டாள். க்ளீன் போல்ட்.

முதல் முறை போனில் பேசிய சமயத்தில், அம்மா அப்பா சத்யா என்று மூவரையும் தன்னுடைய தொழில் திறமையால் வீழ்த்திய போது, ஏற்கனவே தான் சொன்ன ஹேட்ரிக் நினைவில் வந்தது. நாலு விக்கெட் எடுத்தால் என்ன சொல்வாங்க என்ற கேள்வி தோன்ற, அதற்குப் பொருத்தமான பதில் உடனடியாக மூளைக்குள் மின்னல் அடிக்காததால், 'தட் இஸ் எ ஃபோர்...' என்று வர்ணனையாளரின் உற்சாகக் குரலில் கண் சிமிட்டிச் சொன்ன முதல் வார்த்தையில் பிரேம் திகைத்துப் போய் அவளை இமைக்காமல் பார்த்தான்.

கால தேவனின் கடிகாரத்தைத் தொலைத்து விட்டு, எவ்வளவு நேரம் அவர்கள் இருவரும் சுற்று புறம் மறந்து ஒருவரில் ஒருவர் மூழ்கி உறைந்து நின்றார்கள் என்பதை அவர்கள் அறியா விட்டாலும் காலம் அவர்களுக்காக நிற்கவில்லை.

பிரேமின் பின்னாலேயே வாசலுக்கு வந்த யசோதா அவன் இடுப்பில் தன் முழங்கையால் லேசாக இடித்த படி, ''வாங்க சார். உள்ளே வாங்க, நீங்க தர்ஷினி கூட வேலை செய்றீங்களா? சொந்தமா? அன்று சத்யாவின் கல்யாண வீட்டில் பார்க்கவில்லையே?'' என்று பிரேம் குமார் செய்ய தவறியதை உடனடியாக ஈடுகட்டி, அவரை வரவேற்றார்.

''வணக்கம், என் பெயர் ஜெயராமன். தர்ஷினி கூட வேலை செய்கிறேன்'' என்று அறிமுகப்படுத்திய வினாடியில், தர்ஷினியிடம் இருந்து அவசரமாகப் பார்வையை மீட்ட பிரேம்குமார் தன் வலது கரத்தை வரவேற்பாக நீட்டி 'பிரேம்குமார்' என்று புன்னகைத்தான்.

குலுக்கிய கையைப் பற்றி அழைத்துச் சென்ற பிரேம் குமார், அவரை தன் அலுவலக அறையில் அமர வைத்த போது இயல்புக்கு மீண்டு இருந்தான். பார்வை அவ்வப் போது அம்மாவிடம் வாயடித்துக் கொண்டு இருந்த தர்ஷினி தடவி, அவள் அதை உணர்ந்து திரும்புவதற்கு முன்பே திருப்பிக் கொண்ட போதும். ஜெயராமன் கேட்ட பெண்ணுக்கு வரன் தேடுவது தொடர்பான சந் தேகங்களுக்கு பதில் சொல்வது மூன்று ஆண்டுகளாகத் தனது தொழிலை சிரத்தையாக நிர்வகித்து வரும் பிரேம் குமாருக்கு ஒரு பிரச்னையாக இருக்கவில்லை.

ஆனால் அவனின் இயல்புக்கு மாறாக அடுப்படிக்கே நேரில் வந்து 'இன்னுமா காபி ஆகவில்லை?' என்று அவசரப்படுத்தியது. ஜெயராமனுக்கு காபி கொடுக்கும் பரபரப்பில் இல்லை. அறிமுகம் முடிந்த பிறகு, ''நீங்க எல்லா விபரமும் தெளிவா பேசிக்கோங்க சார். நான் உள்ளே ஆன்ட்டியிடம் பேசிக் கொண்டு இருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அலுவலக அறையில் அமராமல் உள்ளே வந்து விட்ட தர்ஷினியை பார்த்துவிட்டுச் செல்ல என்பது யசோதாவுக்குப் புரியாதா என்ன?

''ஹய்யோ ஆன்ட்டி. நீங்க கிச்சனில் வேலை பார்க் கும்போதும் இவ்வளவு ஜாலியா பேசிட்டே இருக்

கிறீங்க? எங்கம்மா கிச்சனில் இருந்தால் ஒரே சத்தமா இருக்கும்...''

''இங்கேயும் தான் சத்தம் வரும்...''

''ஹா! இங்கே வருவது சிரிப்பு சத்தம். அங்கே அம்மா டென்ஷனாகிச் சத்தம் போடுவாங்க ஆன்ட்டி...'' என்று வருத்தமாகச் சொன்னவளுக்கு அம்மாவைப் பற்றி இங்கே குறைவாகச் சொன்னது சரி இல்லை என்ற எண் ணத்தில் பின்பாதியில் குரல் உள்ளே போய் விட்டது.

''எனக்கு ஒரே பையன். கிடைக்காதது கிடைத்த சந்தோஷத்தில் இருக்கும் நான் அவனைக் குறைவாக ஒரு வார்த்தை கூடச் சொல்ல மனசு வராது. எங்க வீட்டுல அவர் சமையல் வேலை பார்ப்பதினாலேயே அப் பப்போ வந்து எனக்கு உதவி செய்வார். அப்பா செய்வ தாலேயே பையனுக்கும் பழகி விட்டது. ஆனால் உங்க அப்பாவுக்கு அது பழக்கம் இல்லாமல் இருந்து இருக் கலாம்'' என்று சமாதானமாக சொல்லி, புன்னகை செய்தார்.

''எங்க அப்பா எங்களைப் பார்த்துப்பாங்க ஆன்ட்டி, எங்க வேலைகள், படிப்பு சம்பந்தமா இருந்தாலும், மற்ற வேலைகள், எல்லாமே அவங்கதான் பார்ப்பாங்க. நாங்களும் அம்மாவிடம் கேட்கவே மாட்டோம்...'' என்று வரிந்து கட்டிக் கொண்டு அப்பாவிற்காக பரிந்து வந் தாள்.

''உங்க அப்பா என்றால் ரொம்ப இஷ்டமோ?'' என்று சிரிப்போடு கேட்டார்.

''இதென்ன கேள்வி ஆன்ட்டி? அப்பா ரொம்பப் பிடிக்கும் என்றால் அம்மா பிடிக்காது என்று அர்த்தமா?

எனக்கு எங்க அம்மாவும் பிடிக்கும்'' என்று அவசரமாக அவர் தன் தாயைக் குறையாக நினைத்து விடப் போகி றாரே என்று சேர்த்துச் சொன்னாள்.

''அதுக்கு தான் வரேன் தர்ஷினி. உங்க அம்மா வீட்டுலயும் வேலை செய்து கொண்டு வெளியிலும் வேலைக்குப் போனாங்க. பார்த்தது ஆசிரியர் வேலை. அந்த அதிகார தோரணையை சுலபமாக மாற்ற முடியாது. நீங்க ரெண்டு பேரும் பொண்ணுங்க. இன்னொரு வீட்டுக்கு மணமாகிப் போக வேண்டியவர்கள் என்ப தால் உங்க அம்மா உங்கள் மேலே இருக்கும் கூடுதல் அக்கறையில, உங்களைக் கொஞ்சம் கடுமையா பேச லாம். அவ்வளவுதானே தவிர, அவங்களையும் என்னை யும் நீ ஒத்துப் பார்க்க முடியாது தர்ஷினி...''

தானே தன் தாயைக் குறைவாக மதிப்பிட வழி வகுத்து விட்டோமோ என்ற குற்ற உணர்வில் தர்ஷினி குன்றிப் போய் இருக்க, யசோதா தன் தாய்க்காக பரிந்து பேசிய அந்த வார்த்தைகள் தர்ஷினியின் மனதில் மிக ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது.

''யு ஆர் சோ ஸ்வீட் ஆன்ட்டி...'' என்று சொன்ன வளுக்குப் பெருமூச்சு வந்தது. இப்படி ஒரு மாமியார் கிடைக்க எந்தப் பெண்ணும் கொடுத்து வைத்து இருக்க வேண்டும்.

'வெல்கம் ப்ரியா' என்று பாய்ந்து வந்து பிரேம் தன்னை வாசலில் வரவேற்ற விதத்தில், தன் மனதில் விதையாக விழுந்த கல்யாணக் கனவு, யசோதாவின் பேச்சில் வேர்விட ஆரம்பித்தது. பிரேம் கொஞ்சம் அப்படி இப்படிக் கடுமையாக இருந்தாலும் இவர் தனக்கு

உறுதுணையாக இருப்பார் என்ற எண்ணம் தோன்ற அவளின் கனவுகள் கூடுதல் வேகத்துடன் வளர்ந்து, பூத்து, காயாகி, கனிய ஆரம்பித்தது.

* * *

மறுநாள் அலுவலகத்தில் வேலையில் மூழ்கி இருந்த போது, அப்பாவின் போன் வர ஆச்சரியமாக எடுத்தாள் தர்ஷினி. ''அப்பா, என்னப்பா இந்நேரத்துல ஸ்கூலில் இல்லையா?'' என்று அவசரமாகக் கேட்டாள்.

''இல்லடா, அம்மா போன் பண்ணி இருந்தாள். இப்பதான் வீட்டுக்கு வந்தேன். உன்னால் உடனே கிளம்பி வர முடியுமா தர்ஷினி?''

''என்னப்பா என்ன விஷயம்?'' என்று கேட்கும் போதே காரணம் புரிவதுபோல் இருந்தது.

''எல்லாம் நல்ல விஷயம் தாண்டா. உன் சம்மதம் தெரிஞ்சாதான் இறுதி முடிவு எடுக்க முடியும். உன்னால இப்பக் கிளம்பி வர முடியுமா சொல்லு...''

''அங்கே யசோதா ஆ...ன்..ட்...டி வந்து இருக்காங் களாப்பா?'' என்ற தர்ஷினியின் கேள்விக்கு பதில் சொல் லாமல், 'என் பொண்ணா கொக்கா?' என்று சிரித்தார்.

''என்னப்பா, எதுக்கு இப்படிச் சிரிக்கிறீங்க?'' என்று உள்ளுக்குள் சந்தோஷம் ஊற்றாக பெருக்கெடுத்தாலும் அதை அடக்கி விபரம் அறியும் நோக்கத்தில் மெல்ல விசாரித்தாள்.

''எல்லாம் உன் ஏற்பாடுதானாம்மா? நீதான் வேகம் என்றால் உன் மாமியார் உன்னை விட வேகமா இருக் காங்க. நேற்று காலையில்தானே என்னிடம் இரண்டு வாரம் கால அவகாசம் கேட்டாய். ஆனால் அதுக்குள்

இன்று காலையே யசோதாம்மா அவங்க கணவருடன் இங்கே வந்து விட்டார். அம்மாவுடன் பேசிச் சம்மதிக்க ஆச்சு என்னையும் ஸ்கூலில் இருந்து கிளம்பி வர வச்சுட்டாங்கடா. உனக்கு சந்தோஷம்தானே?'' என்று உற்சாகமாகக் கேட்ட அப்பாவிற்கு பதில் சொல்ல வாய் வராமல் திகைத்துப் போய் நின்றாள் தர்ஷினி. எதிரில் பிரேம்குமார் வந்து கொண்டு இருக்க அவளின் மூச்சு நின்றதுபோல இருந்தது. இவன் எங்கே இங்கே வந்தான்?



13

பிரேம்குமார் தன்னைத் தேடி தன் அலுவலகத்திற்கு வரக்கூடும் என்பதை அதீத கற்பனையிலும் அவள் எதிர்பார்த்து இராததால் தான் காண்பது கனவா இல்லை நனவா என்று விழித்தாள். எதிர்முனையில் தர்ஷினியின் பதிலுக்காக காத்து இருந்த குருமூர்த்தி அவளை அழைத்தார்.

''தர்ஷினி, வேலை எப்படி இருக்கு? உடனே வர முடியுமா?'' என்று மீண்டும் கேட்டார்.

இவன் எதற்கு வந்து இருக்கிறான் என்று தெரியாமல் அப்பாவிற்கு எப்படி வாக்குக் கொடுப்பது? இவன் உண்மையிலேயே தன்னைப் பார்க்க வந்து இருக்கிறானா? அப்படியே தன்னைப் பார்க்க வந்தான் என்று வைத்துக் கொண்டாலும், தனக்கு இந்தத் திருமணத்தில் இஷ்டம் இல்லை என்று சொல்ல வந்து இருந்தால்... சீ! அப சகுனமா நினைக்காதே தர்ஷினி.

''என்ன தர்ஷினி நிறைய வேலை இருக்கா? உடனே கிளம்ப முடியாதா? பரவாயில்லைடா. நான் வெளியே வந்துதான் பேசுறேன். பக்கத்துல யாரும் இல்லை. நாளைக்கு நான் அவங்க வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லி அனுப்பிடவா? நாம் ராத்திரி பேசிக்கலாம்'' என்று அனுசரணையாக சொல்ல அவசரமாக நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்றினாள் தர்ஷினி.

''ம்ம், தேங்க்ஸ்ப்பா. எனக்கு முக்கியமான தவிர்க்க முடியாத வேலை காத்து இருக்கு'' என்று இரு பொருள் படச் சொன்ன தர்ஷினியைப் பார்த்து பெருமிதமாகப் புன்னகை செய்தான் பிரேம். அவனைப் பார்த்த வினாடியில் விண்வெளியில் பறந்த மனம். போனை வைக்கும் போது அவன் இதமாக புன்னகைத்த உடன், தன்னைத் தேடித்தான் வந்து இருக்கிறான் என்ற செய்தி உறுதி படுத்தப்பட்டு விட்டதால், கொஞ்சம் நிமிர்வாகவே அவனைப் பார்த்தாள்.

''ஹலோ மிஸ்டர் பிரேம்குமார், எங்கே இந்த பக்கம்?'' என்று கேலியாகக் கேட்டாள்.

''மிஸ்டர் பிரேம்குமாரா?'' கல்யாண மண்டபத்தில், தான் கோபமாக தனது இணைய தளம் பற்றி விளக்கம் சொல்லி முடித்த சில வினாடிகளில், தன்னை போனில் அழைத்தவள் முதலில் சொன்ன வார்த்தை, 'பிரேம் நான்தான்...' அதில் எத்தனை உரிமை நெருக்கம் இருந்தது? இப்ப என்ன ஆச்சு என்று மனசுக்குள் வாடியவன், உடனே தன்னை மீட்டுக் கொண்டான்.

''மிஸ்டர் ஜெயராமன், அவங்க பொண்ணு போட்டோ, பையோ டேட்டா தரேன் என்று வரச் சொல்லி இருந்தார்.

அவரைப் பார்க்க வந்தேன். எனக்கு பிசினஸ் பிடித்துக் கொடுத்து உங்களுக்கு ஒரு ஸ்வீட். காரம், காபி, உங்க கேண்டீனில் வாங்கித் தந்து நன்றி சொல்லலாமா என்று நினைத்தேன். வரீங்களா மி..ஸ்.. ப்..ரி..ய..த..ர்..ஷி..னி?'' என்று ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லக் கேட்டுக் கொண்டு இருந்தவளின் ரத்த அழுத்தம் எகிறியது.

'மிஸ் ப்ரியதர்ஷினியா? இவனை...' என்று பல்லைக் கடித்தவள், அலுவலக இன்டர்காமில், ஜெயராமனை அழைத்து, ''ஜெயராமன் சார், நான்...'' என்று ஆரம்பித்த வினாடியில் பிரேமின் விரல்கள் அவளின் போன் இணைப்பைத் துண்டித்து இருந்தது.

''நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். கொஞ்சம் தனியா பேசணும். வெளியே போகலாமா?'' என்று அவளை நேராகப் பார்த்துக் கேட்டான்.

''அந்த பயம் இருக்கட்டும். நம்மளை ஏமாத்த முடியாது தெரியுமில்ல?'' என்று இல்லாத ப்ளவுஸ் காலரைத் தூக்கி விட்டபடி, மிரட்டலோடு சொன்ன வளைப் புன்னகையோடு ரசித்தான். இந்த கலகல பேச்சு தானே கண்ணை விட்டு நகர மாட்டேன் என்று சுற்றிச் சுற்றி வருகிறது?

''ஹ...லோ... ஆர் யு தேர்?'' என்று அவன் முகத்தின் முன்னால் கைகளை ஆட்ட, ''ம், யா, அனுமதி கேட்டு விட்டு வருகிறாயா? நான் கீழே காத்து இருக்கிறேன்...'' என்று புன்னகைத்து விட்டுப் போன பிரேம்குமாரை ரசனையோடு பார்த்தாள் தர்ஷினி. சில நிமிடங்களில் துள்ளி இறங்கியவள் போர்டிகோவில் தனது பைக்கோடு இருந்தவனைப் பார்த்துத் தயங்கினாள்.

''என்னுடன் பைக்கில் வரத் தயக்கமா?'' என்று கேட்டவனின் குரலில் வருத்தம் இருந்தது.

''என்னுடைய ஆக்டிவா இங்கே இருக்கு. அதை யார் எடுத்துட்டு வரது என்று யோசித்தேன். சரி வாங்க. இங்கேயே இருக்கட்டும். நாளைக்கு எடுத்துக்கறேன்'' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லி விட்டு ஏற வந்த வளைப் பார்த்து, ''ஐ ஆம் சாரி'' என்று முணுமுணுத்தான்.

''இப்ப எதுக்கு சாரி...?'' என்று இடுப்பில் கை வைத்துக் கேட்டாள்.

''உன்னை வருத்தப்பட வைத்து விட்டேனே. அதுக் குத்தான்...'' என்று அவன் முடிக்கும் முன்பு அவள் சத்தமாகச் சிரிக்க ஆரம்பித்து இருந்தாள்.

''பிரேம்! இதுக்கு எல்லாம் நான் வருத்தப்பட ஆரம்பித்தால், எங்க அம்மா திட்டும் திட்டிற்கு நான் என் வாழ்க்கையில சிரிக்கவே முடியாது. நீங்க சாரி சொல்ல வேண்டியதில்லை என்றாலும் நான் உங்களிடம் ஒரு விஷயம் தெளிவு படுத்த வேண்டி இருக்கு...''

''சொல்லு...''

''நான் பைக்கில் ஏறத் தயங்கும் ஆள் இல்லை. உங்களுடன் மட்டும் இல்லை. எனக்குத் தெரிந்த ஆண் களோடு, உடன் படித்தவர்கள், வேலை செய்பவர்கள், நண்பர்கள் என்று தேவைப்பட்டால் வருவேன். அப்ப அதை வித்தியாசமாகப் பார்க்காமல் இருக்க வேண்டும். இப்ப நான் என்னுடைய வண்டியிலேயே வருகிறேன். அது உங்க மேல் நம்பிக்கை இல்லாததனால் இல்லை. நாம் பேசி முடித்த பிறகு, நான் என் வீட்டிற்குப் போக வேண்டும். அப்புறம் நாளைக்குக் காலையில் ஆபீசுக்கு

வர வேண்டும். அதுக்கு வசதியாக இருக்கும்'' என்று சொன்ன பின்பும் அவன் முகம் தெளியவில்லை.

''இன்னும் திருப்தி வரவில்லையா? அப்ப ஒண்ணு பண்ணுங்க. நாளைக்குக் காலையில் எட்டரை மணிக்கு என்னை வீட்டில் பிக் அப் பண்ணி, இங்கே இறக்கி விட்டு, அதே மாதிரி மாலையில் ஏழு மணி அளவில் இங்கிருந்து அழைத்து போய் வீட்டில் ட்ராப் செய்யும் சர்வீஸ் எனக்கு தினமும் செய்றீங்களா? சந்தோஷமா வருவேன். பெட்ரோல் காசு மிச்சம்...'' என்று கண் சிமிட்ட அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''சரி உன் வண்டியிலேயே வா. வீட்டுக்குப் போக லாமா? வெளியே எங்கேயாவது போகலாமா?''

''உங்க இஷ்டம். எங்கே நீங்க ப்ரீயா சந்தோஷமா பீல் பண்ணுவீங்களோ அங்கேயே போகலாம். எனக்கு எல்லா இடமும் ஒன்றுதான்.''

''அப்ப வீட்டுக்கே போகலாம். இந்த ஊரிலேயே எனக்கு ரொம்பப் பிடிச்ச இடம் எங்க வீட்டு மொட்டை மாடி. வீடு தெரியும் இல்லையா?''

''நீங்க வீடு போய் சேர்வதற்கு முன்னால் நான் அங்கே இருப்பேன். பந்தயம்?''

''வேண்டாம். பத்திரமா போவதுதான் முக்கியம். நான் உன் பின்னாலேயே வருகிறேன். நீயே முதலில் போ'' என்று சொல்லி விட்டு கை காட்டினான். சொன்னபடி அவளுக்குக் காவலாகப் பின்னால் வந்தவனைப் பூட்டி இருந்த வீடு வரவேற்றது.

''சாரி ப்ரியா, அம்மா இல்லை போல. நான் இதை எதிர்பார்க்கவில்லை'' என்று தயக்கத்தோடு சொன்னான் பிரேம்.

''உங்க அம்மா வீட்டில் இருக்க மாட்டாங்க என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று ஆச்சரியமாகக் கேட்க அவன் மறுப்பாக தலை அசைத்தான். 'ஓ!' என்று வியப் பாகச் சொன்னவளுக்கு யசோதாவின் மேல் இருந்த நம்பிக்கை மேலும் வளர்ந்தது.

''உங்களிடம் சாவி இல்லையா?''

''இருக்கே...''

''பின்னே ஏன் யோசிக்கிறீங்க?'' என்று கேட்கும் போதே தனியாக அவளை தன் வீட்டுக்குள் அழைக்க தயங்கும் அவனின் குணம் புரிந்தது. இந்தத் தயக்கமும் தன்மானமும், பிடிவாதமும், அழுத்தமும், சுயகர்வமும் தானே தன்னை அவன்பால் ஈர்க்கிறது?

''ஹேய்! எனக்கு உங்க மேலே நம்பிக்கை இருக்கு. உள்ளே போகலாம் வாங்க'' என்று அவள் சொல்ல அவன் கதவைத் திறந்தபடி, 'உனக்கு என் மேலே நம்பிக்கை இருக்கு. ஆனால் எனக்கு தான் என் மேலே நம்பிக்கை இல்லை' என்று முணுமுணுத்துக் கொண் டான்.

''யாரோ எனக்கு அரை மணி நேரம் முன்னால் ஸ்வீட் காரம் காபி எல்லாம் எங்க கேண்டீனில் வாங்கி தரேன் என்று சொன்னாங்க பிரேம். அது யார் என்று தெரி யுமா?'' என்று கேலியாகச் சொன்னபடி வீட்டினுள் வலது காலை எடுத்து வைத்து நுழைந்தவளுக்கு சிரிப்பு வந்தது.

''எனக்குத் தெரியலையே...'' என்று சொன்னவன் அடுக்களைக்குள் நுழைந்தான்.

''உங்களுக்கு என்ன தெரியும்? என்ன தெரியாது என்று முதலில் ஒரு லிஸ்ட் போட்டுக் கொடுங்க பிரேம். அப்பத்தான் எனக்குப் பேச வசதியா இருக்கும். என்ன பிரேம் செய்யப் போறீங்க?'' என்றபடி அவன் பின்னாலேயே வந்தவள் பிரிட்ஜில் இருந்து குளிர்நீர் எடுத்து அருந்தினாள்.

''உனக்கு என்ன வேண்டும்?''

''சூடா குலாப்ஜாமூன், மொறு மொறுன்னு வெங்காய பக்கோடா. சர்க்கரை கம்மியா போட்டு ஒரு பில்டர் காபி. வீட்டுக்குக் கிளம்பும்போது ஒரு பெரிய கப் வெனில்லா ஐஸ்க்ரீம்...''

''ஹலோ! பால், காபி, ஹார்லிக்ஸ், டீ இந்த மாதிரி குடிக்க என்ன வேண்டும் என்று கேட்டேன். என்னவோ ஹோட்டலில் பேரரிடம் ஆர்டர் பண்ற மாதிரி அடுக்குகிறாய்?...''

''அவ்ளோதானா? நான் நீங்க கேட்டதும் கொடுக்கும் மேஜிசியன் போல என்று நினைத்தேன். உங்க அம்மா என்னவோ நேற்று அவ்வளவு பெருமையா உங்களைப் பற்றி பீத்திக்கிட்டாங்க? வெறும் காபி கேஸ் தானா? இது நான் கூடத்தான் செய்வேன்'' என்று உதடு பிதுக்கிய தர்ஷினியை திரும்பிப் பார்த்தவனுக்குக் கண்களை விலக்கிக் கொள்வது சிரமமாக இருந்தது.

கடந்த இரண்டு வாரங்களாக இவளை நினைத்ததும், மனசுக்குள் ரசித்ததும் கணக்கில் அடங்காது. சத்யா திருமண வீடியோ காப்பியை மணமக்களே கூட அத்தனை முறை பார்த்து இருக்க மாட்டார்கள்! இவன் இவளைப் பார்க்க அத்தனை முறை அந்த வீடியோவை

ரசித்து இருக்கிறான். அவள் இன்று தன் கண் முன்னால் நிற்கிறாள். இவளிடம் பேச வேண்டும். வார்த்தைகள் வர அடம் பிடிக்கிறது. அம்மா வேறு நேற்று இவள் வந்த பிறகு திருமணப் பேச்சை ஆரம்பிக்கவில்லை. எப்போது ஆரம்பிப்பார்களோ தெரியாது. சீக்கிரம் இவளின் மனதை அறிய வேண்டாமா? பேசுடா... பேசு... என்று மனம் உந்தியது.

''அம்மா என்ன சொன்னாங்க?'' ஆர்வத்தை அடக்க முடியாமல் கேட்டான்.

''ஹா! அது எனக்கும் ஆன்ட்டிக்கும் இடையில இருக்கும் ஆயிரம் ரகசியத்தில் ஒண்ணு. நீங்க என்னவோ பேசணும் என்று சொன்னீங்களே? முதலில் அதைச் சொல்லுங்க...''

''ம்ம். சரி, என்னோட சிஸ்டம்ல ஏதாவது மியூசிக் போட்டுட்டு ஹாலில் உட்காரு. நான் சாப்பிட ஏதாவது எடுத்துட்டு வரேன்...'' என்றவன் அடுப்படியை உருட்டி பிஸ்கட், முறுக்கு, கடலை மிட்டாய் ஆகியவற்றோடு வந்தான்.

''இப்போதைக்கு இதை வச்சு அட்ஜஸ்ட் பண்ணிக்கோ. அடுத்த முறை நீ கேட்டது எல்லாம் சாப்பிடலாம். சிஸ்டம்ல எண்பதுகளில் வந்த இளையராஜா பாட்டு இருக்கு. உனக்கு ரொம்பப் பிடிக்குமாமே? போட்டு கேளு. நான் இதோ வரேன்'' என்று தன் அறைக்குள் சென்றான்.

''ஹேய் அது எப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்று ஆச்சரியமாகக் கேட்க அவன் அறை வாசலில் நின்று திரும்பி ''தெரியும்'' என்று சுருக்கமாகச் சொல்லி புன்னகை செய்தான்.

''அது எங்க அம்மா அப்பாவிற்கு ரொம்பப் பிடிக்கும். அவங்க கேட்கும்போது கூட கேட்டு எனக்கும் பழ கிடுச்சு'' என்று சந்தோஷமாகச் சொன்னவள் கணினியை உயிர்ப்பித்தாள்.

''ஹேய் பாஸ்வேர்ட் கேட்குது. பாட்டு கேளு என்று சொன்னால் மட்டும் போதுமா? பாஸ்வேர்ட் யார் சொல் லுவா?'' என்று அவள் கேட்டதும் அவசரமாகத் திரும்பி வந்து அவளை எழச் சொன்னான்.

''எதுக்கு எந்திரிக்கச் சொல்றீங்க? எனக்கு ஏ பி சி டீ 1, 2, 3 எல்லாம் தெரியும்.''

''நான் தெரியாது என்று சொன்னேனா? நானே போடறேன் எழுந்திரி.''

''அதெல்லாம் எழுந்திரிக்க முடியாது. இதுல பெரிய ரகசியம் ஒளிச்சு வச்சு இருந்தால் என்னை ஏன் பார்க்கச் சொல்லணும்?''

''ப்ளீஸ் ப்ரியா...''

''ம்கூம். நான் போன பிறகு பாஸ்வேர்ட் மாற்றிக் கொள்ள வேண்டியதுதானே? யார் வேண்டாம் என்று சொன்னா? சரியான அடாவடி'' என்று முணுமுணுத்த படி எழுந்தவள், அந்த பாஸ்வேர்டை கேட்டு இருந்தால் மயக்கமே போட்டு இருக்கலாம் அவன் அறைக்குப் போய் முகம் கழுவி உடை மாற்றி வந்த சில நிமிடங் களில் அவள் பல பாடல்களைப் பதிவிறக்கம் செய்து வைத்து இருந்தாள்.

''ஹேய் எங்கே போயிட்டீங்க? திடீர்னு ஆளைக் காணோம்? பரவாயில்லை எனக்கு நிறைய வேலை ஆச்சு. பிஸ்கட் பிடிக்காது. வச்சுட்டேன். மிச்சம் எல்லாம்

ஸ்வாகா. எங்க அப்பாவை அசத்த எனக்கு நிறைய விஷயம் கிடைச்சு இருக்கு. என்னவோ பேசணும் என்று சொல்லி அழைச்சுட்டு வந்தீங்க. ஆளையே காணோம். உலகத்திலேயே உங்களுக்கு ரொம்பப் பிடிச்ச இடத்தை காட்டுறீங்களா?'' என்று கேட்க அவளை அழைத்துக் கொண்டு மாடிக்கு வந்தான்.

அங்கே மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியின் கீழே ஜில்லென்று இருந்ததைக் காட்டி சிலாகித்து, கீழே தெரிந்த பவளமல்லிச் செடியை, முருங்கைகள் காய்த் துத் தொங்கிய மரத்தை, தூரத்தில் தெரிந்த சின்னமலை சர்ச்சை, எல்லாம் ரசித்து முடித்த பின்பும் பிரேமின் தொண்டையில் இருந்து வார்த்தைகள் வெளிவரக் காணோம். எங்கே எப்படி ஆரம்பிப்பது என்று தெரி யாமல் திணறி கொண்டு இருந்தான். 'இதற்கு எல்லாமா அம்மாவின் பின்னால் ஒளிந்து கொள்ள முடியும்? நீதான் பேசணும். பேசு' என்று உந்திய மனதை தைரியமூட்டி கொண்டு இருந்தபோது கீழே அழைப்பு மணி ஒலிப்பது கேட்டது.

''உங்க அம்மா வந்துட்டாங்க போல இருக்கு'' என்று சொல்லிக் கீழே செல்லத் தயார் ஆனவளை தடுத்து நிறுத்தி, ''இல்லை நீ இங்கேயே இரு. நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்'' என்று படிகளில் இறங்கிப் போனான்.

போனில் சொல்லி வரவழைத்து இருந்த தின்பண்டங் களைச் சரி பார்த்து வாங்கி அடுப்படியில் வைத்து விட்டு, மேலே வந்தபோது அவளைக் காணோம். எங்கே போய் விட்டாள்? இங்கே கைப்பிடி சுவரில்தானே இருந்தாள்?

குழப்பத்தோடு, சுற்றிலும் பார்வையை வீசி தேடியபடி, ''ப்ரியா...'' என்று குரல் கொடுத்தான் பிரேம்.

''பிரேம் நான் இங்கே இருக்கிறேன்'' என்று சொன்ன வளின் முகத்தில் அசடு வழிந்தது.

கைப்பிடி சுவரில் இருந்தவள் அங்கே எங்கே போனாள்? சன்ஷேடில் நிற்கிறாளா? விழுந்து விட்டாளா? இவள் என்ன சின்ன பிள்ளையா? ''ஹேய் என்ன ஆச்சு?'' என்று பதட்டத்தோடு விசாரித்தவன் விழிகள் அவளுக்கு அடிபட்டு விட்டதோ என்று அவசரமாக ஆராய்ந்தது.

''அடி ஒண்ணும் இல்லை பிரேம்...''

''கடவுளே! ஒரு நிமிஷம் பயந்தே போய் விட்டேன். அங்கே என்ன பண்ணுகிறாய்?'' என்று சிரித்தான் பிரேம்.

''சிரிக்காதீங்க. முதலில் கை கொடுத்து மேலே தூக்கி விடுங்க. அப்புறம் கேள்வி கேட்கலாம்'' என்று சிணுங் கினாள் தர்ஷினி.

''முதலில் பதில் சொல்லு. அப்புறம் நான் கை கொடுப்பதைப் பற்றி யோசிக்கிறேன்.''

''ஹைய்! ரொம்ப ஒண்ணும் பந்தா பண்ணிக்க வேண்டாம். நம்மளை கட்டிக்கப் போறவர் ஆச்சே? போனால் போகுது என்று கை கொடுக்கச் சொன்னால் ரொம்பத்தான்... இஷ்டம் இருந்தால் கொடுங்க. இல்லா விட்டால்...''

''என்ன... என்ன சொன்னா?'' என்று அவன் ஆச் சரியமாக இடையிட்டதன் அர்த்தம் புரியாமல் அவள் வாக்கியத்தின் பின்பாதிக்கு விளக்கம் சொன்னாள்.

''இதென்ன முதல் மாடிதானே? மிஞ்சி மிஞ்சிப் போனால் பனிரெண்டு அடி இருக்கும். கீழே குதித்து விடுவேன். நான் ஒரு அத்லெட் தெரியுமா? அதிகபட்சம் சின்னதா சுளுக்கு வரலாம். அவ்வளவுதான்'' என்று அவள் சர்வ சாதாரணமாகச் சொல்ல அவனுக்கு மூச் சடைத்தது.

''ஹேய்! அப்படி எல்லாம் பண்ணி விடாதே. முத லில் கையைக் கொடு. அப்புறம் மிச்சம் எல்லாம் பேசிக் கலாம்'' என்று சொன்னபடி கையை நீட்டினான்.

நீட்டிய கையை அழுத்தமாகப் பற்றினாலும், வழக் கத்திற்கு மாறாக அவள் அணிந்து இருந்த புடவை, சன்ஷேடில் இருந்து கைப்பிடிச்சுவர் இருந்த சுமார் ஆறடி உயரம். இரண்டும் சேர்ந்து அவளை இலகுவாக ஏற விடாமல் செய்தது. அவன் பிடியை முதலில் உள்ளங் கையில் இருந்து தோளுக்கும், பின்பு இடுப்பிற்கும் மாற்றி அவளைத் தூக்கி இந்தப் பக்கம் இறக்கி விட்ட போது அவனால் கைகளை அவளின் வெற்று இடையில் இருந்து விலக்க முடியவில்லை.

இரண்டு வாரங்களாக அவளைப் பற்றியே சதா சர்வ காலமும் எண்ணி தான் செய்த ஜபம், அவளின் குறும் புப் பேச்சும், மயக்கும் சிரிப்பும் சேர்ந்து கொள்ள, தன் மனதில் இருப்பதைத் திறந்து சொல்வதற்கு முன்னா லேயே அம்மா இவளைப் பெண் பார்த்துப் பேச முடிவு பண்ணி கிளம்பி விட்டார்கள் என்ற செய்தி தந்த உற்சாகம். மாலை மயங்கி இருள் சூழும் நேரத்தில், அவளின் அருகாமை தந்த மயக்கம் எல்லாம் சேர்ந்து அவனை ஒரு மாய உலகத்திற்கு அழைத்துச் சென்றது. இதழ்கள் 'ப்ரியா' என்ற ஒற்றை வார்த்தையை கிசுகிசுக்க,

அவனின் கைகள் அவளை தன்னோடு சேர்த்து அணைத்தது.



14

பிரேம்குமார் தன்னைத் தேடி வருவதற்கு சில நிமிடங்கள் முன்பு அப்பா தனக்கு போன் பண்ணி யசோதா அம்மா வீட்டுக்கு வந்து இருப்பதைச் சொன்ன போது மனம் சந்தோஷமாக இருந்தது என்பதை தர்ஷினியால் மறுக்க முடியாது. ஆனால் அப்பா பேசிக் கொண்டு இருக்கும்போதே நேரில் வந்து குதித்த பிரேம்குமார் சற்று முன்பு வந்த சந்தோஷத்தை ஒன்றும் இல்லாமல் ஆக்கி விட்டான். அவனுடைய தயக்கமும் அளவான பேச்சு, சிரிப்பு, தன் ரசனையைத் தெரிந்து வைத்து இருக்கும் விதம் என்று பலவிதங்களில் அவன் தன்னைக் கவர்ந்தான் என்பதையும் மறுப்பதற்கில்லை.

அவன் கீழே போன போது எதற்கு அவ்வளவு அவசரமாக தன்னை இங்கேயே இருக்கச் சொல்லி விட்டுப் போகிறான் என்ற ஆர்வம் தலை தூக்க, குனிந்து பார்த்தபோது, சற்று முன்பு கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்த பாடல்களைக் கேட்டுக் கொண்டு இருந்தவளின் போன் தவறி சன்ஷேடில் விழுந்து விட அதை எப்படி எடுப்பது என்று தெரியாமல் விழித்தாள்.

அதைக் கீழே தள்ளி விட்டு விட்டால், போய் எடுத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் குச்சி தேடினாள். கிடைக்கவில்லை. யசோதா ஆன்ட்டி சுத்தமாக

வீட்டைப் பராமரிப்பதில் டாக்டரேட் பட்டம் வாங்க உழைப்பவர் போல. சரி கைப்பிடி சுவரில் அமர்ந்த படியே காலால் தள்ளி விடலாம் என்று முயன்றவளுக்கு முடியவில்லை. ஒரு சின்ன சறுக்கலில் அவளும் சன்ஷேடில் இறங்கி விட்டாள். சுடிதாராக இருந்தால் ஒருவேளை ஏறி இருக்கலாமோ? எப்படி இருந்தாலும் இறங்கும் அளவுக்கு சுலபமாக ஏற முடியாதுதான்.

அவனைக் குரல் கொடுத்து அழைக்கலாமா? கீழே குதிக்கலாமா என்று ஒற்றையா இரட்டையா போட்டுப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவன் வந்த உடனே தான் சன்ஷேடில் நிற்பதைப் பார்த்துச் சிரித்தாலும், தன்னைத் தூக்கி விட அவன் தயங்குவான் என்றோ, கேள்வி கேட்பான் என்றோ எதிர்பார்க்கவில்லை. குதித்து விடுவேன் என்று சொன்னதும் அவன் முகத்தில் தோன்றிய பதட்டமும் நீண்ட கரங்களும் அவளுக்குள் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவன் தூக்கி விட்டபின் இடுப்பை வளைத்து அணைத்த கரங்கள் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

முழுமையாக இருள் சூழாத வேளையில் இப்படி வெட்ட வெளியில் அவன் தன்னை அணைப்பான் என்று எதிர்பாராததாலும், இயல்பான பெண்மைக்கே உரிய ஜாக்கிரதை உணர்வினாலும், 'பிரேம்... பிரேம்...' என்று அவனின் தோளில் தட்டினாள்.

''ம்ம்ம்...'' என்று மட்டும் சொன்னவன் விழிகள் மூடி இருக்க அவன் முகம் அவள் தோளில் பதிய, அவன் இன்னும் மீளவில்லை. மெலிதான குரலும் விலகாத கரங்களும் அவனின் நிலையை தெளிவுபடுத்த, அவள்

தன்னுடைய மயக்கத்தில் இருந்து அவசரமாக மீண்டாள்.

''எங்க அப்பா என்னை ஸ்பீட் என்று சொன்னாங்க. நான் உங்க அம்மாவை ஸ்பீட் என்று நினைத்தேன். ஆனால் நீங்க அதை விட ஸ்பீட் பிரேம். உங்க அம்மா கல்யாணம் பேசப் போய் இருக்காங்க என்று சொன்னேன். நமக்கு இன்னும் கல்யாணம் ஆகலை பிரேம்...'' என்று கேலியாகச் சொல்லி விலக முயன்றாள்.

உங்க அம்மா, கல்யாணம் பேச போய் இருக்காங்க, என்ற வார்த்தையில் சுய நினைவிற்கு மீண்டவன், அடுத்த வாக்கியத்தில், அதிர்ந்தான். அவசரமாக விலகியவனுக்கு இப்படி அவசர குடுக்கை தனமாக நடந்து கொண்டதை எண்ணி அவனை அவனுக்கேப் பிடிக்க வில்லை. தர்ஷினி அவன் மனநிலையை உணர்ந்து பேசினாள்.

''உங்க சன்ஷேட்ல மேக்னட் ஏதோ வச்சு இருக்கீங்க போல? அது என் போனை என் கையில் இருந்து இழுத்துடுச்சு. அதுல இருந்து காலால் எடுக்க நினைத்தால், என் கால் ஸ்லிப் ஆகிடுச்சு. ஒருவேளை எந்திரன் ரஜினி மாதிரி நானும் இரும்பு மனுஷி ஆகி விட்டேனோ?''

அவளின் இயல்பான பேச்சு தொடர, 'சன்ஷேடில் மேக்னட் இருக்கா என்ன என்று எனக்குத் தெரியலை பெண்ணே! ஆனால் உன் கண்ணிலும் பேச்சிலும் பெரிய காந்தம் வைத்து என்னை உன்பால் ஈர்க்கிறாய். நல்லவேளை அம்மா இப்போதே போய் விட்டார்கள். சீக்கிரமே கல்யாணத்துக்கு நாள் குறிக்க வேண்டியது தான்.' தலையை உலுக்கி, கவனத்தை அவள் புறம் திருப்பி, ''இன்னிக்கு எனக்கு டைம் சரி இல்லை'' என்று நினைக்கிறேன். இது மூன்றாவது முறை. ஐ ஆம் சாரி'' என்று மன்னிப்பு கேட்டான்.

அவளின் மனதில் தான் இருக்கிறோம் என்பது உறுதியாகி விட்டது. இதற்கு மேல் தனியாக இவளுடன் இருக்க வேண்டாம். ''ப்ரியா, நேரமாச்சு, கிளம்பலாம்...'' என்று அழைத்தான்.

''நீங்க ஏதோ பேசணும் என்று சொன்னீங்களே?'' என்று கேட்டவளுக்கு அவன் அவசரமாகப் பார்வையை விலக்கிக் கொண்டதும் தான் புரிந்தது. ஆறாகி விட்டது. அவனே தனிமையை தவிர்க்க விரும்பும்போது, தானும் பார்த்து நடந்து கொள்ள வேண்டும்.

''ம்ம், நான் உங்க அம்மா அப்பாவிடம் பேசுகிறேன். நானே உன்னை உங்க வீட்டில் வந்து விடுகிறேன்'' என்று சொல்லியபடி படிகளில் இறங்க அவனை மௌனமாகப் பின் தொடர்ந்தாள். அவன் தன்னைத் தவிர்க்க தவிர்க்க அவனின் மேல் இருக்கும் ஈடுபாடு அதிகரித்தது. அவனை விட்டுக் கிளம்ப மனசே இல்லை.

அவன் போனை எடுத்து அப்பாவை அழைத்தான். ''அப்பா, அம்மாவிடம் போனைக் கொடுங்க'' என்று அவசரமாகச் சொல்லி, போன் கைமாறிய உடன், ''அம்மா, நீங்க எங்கே இருக்கீங்க?'' என்று அவர் சொல்லப் போகும் பதிலைத் தெரிந்து வைத்துக் கொண்டே ஒரு வேளை அங்கிருந்து கிளம்பி விட்டாரோ என்ற சந்தேகத்தில் கேட்டான். அவன் போனில் பேச ஆரம்பித்ததும், நீர் அருந்தலாம் என்று அடுக்களைக்குப் போன தர்ஷினி அங்கே புதிதாக வந்து இருந்த உணவு பொருட்களைப் பார்த்ததும் விழி விரித்தாள்.

'சைலண்டா இவ்வளவு வேலை பண்ணி வச்சு இருக்கியா? அறைக்குள்ளே போய் எனக்குத் தெரியாமல் டோர் டெலிவரிக்கு போனில் ஆர்டரா? உன்னை...' என்று மனசுக்குள் கொஞ்சியவளுக்கு கால்கள் தரையில் நிற்க மறுப்பது புரிந்தது. பறப்பது போல இருந்த உணர்வை அடக்க முடியவில்லை.

''நானும் அப்பாவும் எங்கே இருக்கோம் என்று உன்னால் ஊகிக்க முடியுதா பார்ப்போம். சொல்லு'' என்று சிரிப்போடு கேட்க, அவனுக்கும் புன்னகை மலர்ந்தது.

''சரியாகச் சொன்னால் என்ன பரிசு?'' என்று அவனும் கேலியாகக் கேட்டான். அவனது பேச்சு காதில் விழ, அந்தச் சிரிப்பும் கேலிப் பேச்சும் அவளை மேலும் கிறங்க வைத்தது. அவசரமாகப் பார்சலை பிரித்து, சின்ன கிண்ணத்தில் சில ஜாமூன்களை வைத்து ஸ்பூன் போட்டு எடுத்து வந்தவள் காதுகள் வெளியே தொடர்ந்த போன் பேச்சில் பதிந்து இருந்தது.

''என் அளவுக்கு புத்திசாலித்தனம் போறாது. சொல்ல மாட்டாய். ஒருவேளை... சரியா சொல்லி விட்டால், உனக்கு மிகப் பெரிய பரிசு தரேன்...'' என்று பேரம் பேசினார் யசோதா.

''பரிசை சொல்லுங்க முதலில்...''

''சரி, எப்பவும் கல்யாணம் பண்ணிக்கோ என்று நாங்க உன்னையும், இப்போ கல்யாணம் வேண்டாம் என்று நீ எங்களையும் மூட் அவுட் பண்ணிட்டே இருப்போம் இல்லையா? அதுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடலாம்...'' என்று அவனை வானத்தில் பறக்க வைத்த

வினாடியில், அவனது வாயில், தர்ஷினி ஸ்பூனால் ஒரு முழு ஜாமூன் உருண்டையை ஊட்டி விட்டாள்.

ஒரு வினாடி அந்த எதிர்பாராத அன்பு செய்கையில் திணறி, அவளைப் பார்த்து ''தேங்க்ஸ்'' என்று முனகி விட்டு, வாய் நிறைய ஸ்வீட் இருந்ததால், 'நீயும் எடுத்துக்கோ' என்று ஜாடை காட்டினான்.

இங்கே நடந்த பாச பரிமாற்றத்தை உணராத யசோதா, ''அதுக்குள்ளே அவசரப்பட்டு தேங்க்ஸ் சொல்லாதே கண்ணா! முழுசா கேட்டுட்டு அப்புறம் நன்றி சொல்லு. இனிமேல் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கோ என்று இன்னும் ஒரு வருஷத்துக்கு உன்னைத் தொந்தரவு பண்ண மாட்டோம்...'' என்று யசோதா சொல்ல அவரின் எதிரில் இருந்த மூவரும் அதிர்ந்தனர். ஆனால் அந்த ஒற்றை வார்த்தைக்குப் பிரேமின் உணர்ச்சிகளை விளக்கும் சக்தி இல்லை.

சில நிமிடங்கள் முன்பு தான் சீக்கிரமே கல்யாணத்திற்கு நாள் குறிக்க வேண்டும் என்று நினைக்க அம்மா இப்படிச் சொன்னதும் அவசரமாய் புரைக்கேறியது.

''ஹேய் மெல்ல. என்ன ஆச்சு? தண்ணி எடுத்துட்டு வரேன்...'' என்று தன்னிச்சையாக உயர்ந்த அவசரக் குரலில் சொன்ன தர்ஷினியின் குரல் யசோதாவின் காதில் விழுந்தது.

''பிரேம் நீ எங்கே இருக்க?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார்.

''நான் உங்களை மாதிரி சொல்லாமல் கொள்ளாமல் எங்கேயும் போக மாட்டேன். வீட்டில் தான் இருக்கிறேன்'' என்று சொன்னவனின் கோபம் புரிந்தது.

''ஓ!...'' என்று சொன்னவரின் ஆச்சரியம் கூடியது.

தர்ஷினி முக்கியமான வேலை இருக்கிறது என்று அப்பாவிடம் சொல்லி விட்டு அங்கே என்ன பண்ணுகிறாள்? இதுதான் முக்கியமான வேலையா? சிரிப்பு வந்தது. குருமூர்த்தி - புவனேஸ்வரி தம்பதியினர் எங்களுக்குப் பிடித்து இருக்கிறது. ஆனாலும் மகளிடம் நேரிடையாகப் பேசாமல் வாக்குக் கொடுக்க முடியாது என்பதை கோடி காட்டி தங்களைக் கிளப்ப எவ்வளவோ நாசூக்காக முயன்றார்கள்.

தர்ஷினியைப் பார்த்து அவளின் மனதை நேரிடையாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் இந்த இடத்தில் இருந்து நகர்வதாக இல்லை என்று தீர்மானமாக அமர்ந்து விட்டார். இப்போது அதற்கு அவசியம் இல்லையோ? தர்ஷினி அங்கே இருந்தால் அங்கே போய் விடலாமா? யோசித்துக் கொண்டு இருக்கும்போதே பிரேமின் எரிச்சல் குரல் இடையிட்டது.

''போன் பேசும்போது நடுவில் தூங்கும் பழக்கம் எப்போதில் இருந்து படிச்சீங்க? நீங்க பிரியதர்ஷினி வீட்டில் தானே இருக்கீங்க? அங்கேயே இருங்க. அரை மணி நேரத்துல அங்கே வரேன்...''

''வா, வா, அப்படியே கையோட மருமகளையும் அழைச்சுட்டு வா, அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாண மேளம் கொட்டி விடலாம். நாள் பார்த்து வைக்கிறேன்'' என்று யசோதா முடித்த போது, சில வினாடிகளுக்கு முன்பு தான் அம்மாவை கடித்ததன் காரணம் பிரேமிற்கு மறந்தே போய் இருந்தது.

'மை ஸ்..வீ..ட் அம்மா'' என்று போனில் முத்தம் பதித்து, சொன்னான் பிரேம்குமார்.

''பார்த்துக் கொடுப்பா. பக்கத்துல இருப்பவங்க சண்டைக்கு வரப்போறாங்க'' என்று எதிர் முனையில் யசோதா சிரித்தது தர்ஷினிக்கு கேட்கவில்லை என்றாலும் பிரேமின் முகம், கடந்த சில நிமிடங்களில் விதம் விதமாக மாறி வர்ண ஜாலம் காட்டியதை, அதிலும் கடைசியாக முத்தம் பதித்ததை, அது தனக்குரியது இல்லை என்பது தெரிந்தாலுமே வெகுவாக ரசித்தாள்.

போனை வைத்தவன் அவள் புறம் சந்தோஷமாகத் திரும்பி, ''அம்மா...'' என்று ஒற்றை வார்த்தையில் தொலைபேசி உரையாடல் பற்றிச் சொல்லி முடித்தவன், ''இதென்ன?'' என்று அவள் கையில் வைத்து இருந்த ஸ்வீட்டை காட்டிக் கேட்டான் பிரேம்.

''நாலு வருஷமா உங்க அப்பா கூட போய் என்ன கல்யாண விருந்து சமைக்கறீங்க? இது கூட தெரியாதா? இதுக்கு பேர் குலாப்ஜாமூன். ஸ்வீட்டா இருக்கும்'' என்று அப்பாவியாக விளக்கம் சொல்ல அவன் சிரித்தான்.

''அது சரி, இது யாருக்கு வாங்கி வச்சு இருக்கு?'' எடுத்துக்கலாமா கூடாதா என்று எல்லாம் கேட்பது இல்லையா?''

''நீங்கதானே என்னை எடுத்துக்கச் சொன்னீங்க?''

''நானா? எப்போ?''

''நீங்க உங்க அம்மாவிடம் போன் பேசும்போது வாயில் கொடுத்தேனே அப்ப...''

''நீ எடுத்துட்டு வந்த பிறகு சொன்னேன். எடுப்பதற்கு முன் அனுமதி தேவை இல்லையா?''

''அப்ப நீங்க போனில் பிசியா இருந்தீங்களே? உங்க அம்மா உங்களிடம் ஏதோ நல்ல செய்தி சொன்ன மாதிரி இருந்தது. அதைக் கொண்டாடலாமே என்று எடுத்து வந்தேன். வேண்டாம்னா போங்க. இது சாப்பிட்டதுக்கு ஐம்பது ரூபாய் தந்து விடுகிறேன்...''

''ஹேய், நான் சும்மா விளையாட்டுக்குச் சொன் னேன்...'' என்று அவசரமாகப் பிரேம் மறுத்துச் சொல்ல அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்.

''ஹய்யோடா! இப்ப கொடுக்கப் போற மாதிரி வேண் டாம் என்று சொல்றீங்க? நான் இன்னும் முடிக்கலை. எழுதி கணக்கு வச்சுக்கோங்க. நாளைக்கோ, அடுத்த மாசமோ, அடுத்த வருஷமோ, அடுத்த ஜென்மத்திலோ எப்ப எனக்கு பணம் நிறைய வருதோ, அப்படி வந்த உடனே தேடி வந்து உங்க கடனை அடைச்சுடறேன். போதுமா?'' என்று அவள் கண் சிமிட்ட அவனுக்குப் பார் வையை அவளிடம் இருந்து பிரித்து எடுப்பது சிரமமாகிப் போனது.

தலையை அழுந்தக் கோதியபடி வேறு புறம் திரும்பி, ''கிளம்பலாமா?'' என்று கேட்டபடி பைக் சாவியை எடுத்தான்.

''நீங்க என்னோட வரீங்களா? என் வண்டியில் வாங்களேன். வரும்போது உங்க அம்மா அப்பாவோடு வந்து விடலாமே?'' என்று அழைத்தாள்.

அவன் தயங்க, ''என்ன என் பின்னால் உட்கார்ந்து வர கௌரவம் தடுக்குதா? வேணும்னா நீங்களே ஓட்

டுங்க. எனக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. எங்க அப்பாவிடம் கேளுங்க. எனக்கு எப்ப வண்டி ஓட்டாமல் இருக்க சான்ஸ் கிடைத்தாலும் விடவே மாட்டேன். சென்னை ட்ராபிக்ல வண்டி ஓட்டுறது செம கடுப்பு தெரியுமா?'' என்றபடி கைப்பையில் இருந்து வண்டி சாவியை எடுத்து அவனிடம் நீட்டினாள் பிரியதர்ஷினி.

அதை வாங்கியவன் கிளம்பத் தயாராக, அவளின் சாவியைக் கொடுக்க நீண்டு இருந்த கை இப்போது திரும்பி, உள்ளங்கை தெரியும்படி விரிந்து இருந்தது.

''எ..ன்..ன வே..ண்..டு..ம்?'' என்று குழப்பத்தோடு கேட்டான் பிரேம்.

''கடைசியா வீட்டுக்குக் கிளம்பும்போது என்ன வேண்டும் என்று கேட்டேன்? எனக்காக கஷ்டப்பட்டு நீங்க வாங்கி வந்ததை நான் சாப்பிடாமல் போய் விட்டால் அப்புறம் நீங்க நைட் ரொம்ப பீல் பண்ண மாட்டீங்களா?'' என்ற தர்ஷினியின் குரலில் சிரிப்பு வந்தாலும், மனதிற்குள் அவனும் ஐஸ்க்ரீமாக உருகி னான்.

''பிரீசரில் இருக்கு எடுத்துக்கோ. சாப்பிட்டதும் கிளம்பலாம்'' என்று சொல்லியபடி பின்னால் வந்தவன், ஏற்கனவே வாங்கிய மற்ற தின்பண்டங்களையும் கவன மாக பேக் பண்ணினான்.

''ஹேய்! இங்கே மெஹந்தி கோன் இருக்கே? யார் பயன்படுத்துவா?'' என்று ப்ரிட்ஜை திறந்தவள், ஆச் சரியமாகக் கேட்டாள்.

''ஏன் நான் தான்...'' என்றவனை விசித்திரமாகப் பார்த்தாள். அவளால் நம்ப முடியவில்லை. ஆச்சரியம்

குறையாமலே அவனுக்கு ஐஸ்க்ரீம் கொடுத்து அவன் வேண்டாம் என்று மறுத்து, ஐஸ்க்ரீம் பிடிக்காமல் ஒரு ஜீவனா என்று தோள் குலுக்கி அவள் சாப்பிட்டு முடித்த போது மேலும் ஐந்து நிமிடங்கள் கரைந்து இருந்தது.

''இப்ப வீட்டுக்குக் கிளம்பலாமா?'' என்று பிரேக் கேட்க 'ம்ம்', என்று கிளம்பிய தர்ஷினிக்கு அவ்வளவு நேரம் அவனோடு சரிக்கு சரி வாயடித்தது. காணாமல் போய் ஆயாசம் வந்தது. இவனுக்கு உண்மையில் தன்னைப் பிடித்து இருக்கா? இல்லை யசோதா அம்மா வின் கட்டாயத்துக்காக கல்யாணம் பண்ணிக் கொள் கிறானா என்ற சந்தேகம் வந்தது.

வாயைத் திறந்து உன்னைப் பிடித்து இருக்கு என்று ஒரு வார்த்தை சொன்னால் குறைந்தா போவான் என்று ஏங்கியது. ஏன் நீதான் சொல்லேன் என்று குட்டியது. நான் எப்படி என்று தயங்கியது. உலகத்துல தினம் தோறும் எத்தனையோ கல்யாணம் நடக்குது? எல் லாமே காதல் கல்யாணமா என்று பெருமூச்சு விட்டது. மனதைத் தேற்றிக் கொண்டு, அவள் கிளம்பத் தயாராக, அவளின் முக பாவனையை ஆச்சரியமாகப் பார்த்தான் பிரேம்குமார்.

மாலை நாலரை மணி அளவில் பார்த்ததில் இருந்து உற்சாக பந்தாக வலம் வந்தவள், இந்த வீட்டை விட்டுக் கிளம்பும் வினாடியில் இப்படி அந்த உற்சாகம் வடிந்து பெருமூச்சு விட்டதைப் பார்த்தவன், உருகிப் போனான்.

''ஒரு நிமிஷம் உட்கார். இதோ வந்து விடுகிறேன்'' என்று பிரேம் உள்ளே போக அவள் திகைப்போடு

பார்த்தாள். திரும்பி வந்தவன் கைகளில் சற்று முன்பு தான் ஆச்சரியமாக விசாரித்த மெஹந்தி கோன் இருக்க அவளின் விழிகள் வியப்பில் விரிந்து பெரிதாகியது. இப்போது ஆர்வமும் எதிர்பார்ப்பும் கூடி முகமே பூவாக மலர்ந்தது.

'என்ன செய்யப் போகிறான்?' என்ற ஆர்வத்துடன் அவள் அவனையே பார்த்து இருக்க, அவளைக் கைப் பற்றி சோபாவிற்கு அழைத்துச் சென்று அவளை உட்கார வைத்து அருகில் அமர்ந்தான். சட்டைப் பையில் இருந்து மொபைல் போனில் மியூசிக் ப்ளேயரில் ஒரு குறிப் பிட்ட பாட்டை தேர்வு செய்து, ஹெட்செட்டில் போட்டு தன் காதில் மாட்டிக் கொண்டான்.

''என்ன பாட்டு?'' என்று கேட்டவளை, தன் ஒற்றை விரலை அவளின் உதட்டில் வைத்து '''ஷ்' ரெண்டு நிமிஷம் பேசக்கூடாது'' என்று மிரட்டினான்.

''தமிழ் திரை உலகத்தில் உனக்கு ரொம்பப் பிடித்த சிங்கர் யாரு?'' என்று கேட்டபடி அவளின் வலது கரத்தைத் தன் இடது உள்ளங்கையில் ஏந்தினான்.

''நிறைய பேர் இருப்பாங்க. எ...து..க்..கு கே..ட்.. க..றீ..ங்..க?'' என்றவள் குரல் வழக்கத்துக்கு மாறாக திக்கியது.

''சொல்லேன். தெரிஞ்சுக்கலாம்'' என்றவன் வலது கரம் மெஹந்தி கோனை ஏந்தி இருந்தது.

''எங்க வீட்டுல எல்லோருக்கும் பிடித்த சிங்கர் என்றால் எஸ்.பீ.பி. தான். எவர்க்ரீன் வாய்ஸ். இப்ப கார்த்திக். உங்களுக்கு மெஹந்தி வைக்கத் தெரியுமா?''

என்று கேட்டவளின் குரல், உள்ளே போய் கண்களில் ஆர்வமும் எதிர்பார்ப்பும் பல மடங்கு கூடி இருந்தது.

''எஸ்.பீ.பி. வாய்ஸ் எனக்கும் ரொம்பப் பிடிக்கும் ப்ரியா.''

''நேற்றே கேட்க வேண்டும் என்று நினைத்தேன். அதென்ன எல்லோரும் தர்ஷினி என்று சொன்னால் நீங்க மட்டும் ப்ரியா...''

''ஏன் சொல்லக் கூடாதா?''

''நான் அப்படியா சொன்னேன்?''

''அப்ப சொல்லலாமா?'' என்று திருப்தியோடு சொல்ல ஆரம்பித்தவன், அவள் தன் முகத்தையே விழுங்கி விடுவது போலப் பார்ப்பது புரிய, ஒரு பெரு மூச்சுடன் கண்களை இறுக மூடித் திறந்தான்.

''ம்ம்ம்.''

''உன் கண்ணைப் பார்த்தால் எனக்குப் பேச்சே வர மாட்டேங்குது. ஒரு ரெண்டு நிமிஷம் உன் கண்ணை கட்டி விடுகிறேன்'' என்று கைக்குட்டையை எடுத்து கண்களை கட்டினான்.

''பி....ரே...ம்... எ...ன்...ன.... ப....ண்...றீ...ங்...க?''

''பயப்படாதே, உன்னை பத்திரமா முழுசா, இப்பவே கொண்டு போய் உங்க அம்மா அப்பாவிடம் விட்டு விடுவேன். ஆனால் சீக்கிரமே...'' என்று சொன்னவனுக்கு மேலே வார்த்தைகள் வரவில்லை. வார்த்தைகள் செய்ய வேண்டிய வேலையை அவனின் வலது கரத்தில் இருந்த மெஹந்தி கோன் எடுத்து கொண்டது. அவனின் பேச்சு நின்று போனாலும் தன் வலது உள்ளங்கையில்

அவனின் கரம் ஜில்லிப்பான மருதாணி கோலம் வரை வதை அவளால் உணர முடிந்தது.

ஒரு நிமிஷம் இருக்கலாம். கண்களை சுற்றி கட்டி இருந்த கைக்குட்டையை அவிழ்த்து விட்டபடி, அவளின் காதுகளில், தனது ஹெட்செட்டை மாட்டினான். அவன் விலகிய வினாடி தர்ஷினி கண்களை திறந்தாள். உள்ளங்கையில் மெஹந்தியால் வரையப்பட்டு இருந்த இதய வடிவிலான பூமாலை பட்ட அதே வினாடியில், காதுகளில் எஸ்.பீ.பாலசுப்ரமண்யம் தனது தேன் குரலில், பாடி அவளின் மனதை மயக்கினார்.

அழகூரில் பூத்தவளே! என்னை அடியோடு சாய்த்தவளே!
மலையூரில் சாரலிலே என்னை மார்போடு சேர்த்தவளே!
உன்னை அள்ளித்தானே உயிர் நூலில் கோர்ப்பேன்
உயிர் நூலில் கோர்த்து உதிராமல் காப்பேன்''



15

பிரேம்குமார் தன் மனதில் பூட்டி வைத்து இருந்த காதலை வெளிப்படுத்த தேர்ந்தெடுத்த இரண்டு வழிகளுமே ப்ரியதர்ஷினியின் மனதை கொள்ளை கொண்டது. வெறும் வார்த்தைகளால் தன் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாதோ என்ற சந்தேகம் வந்ததும் அவன் செய்த செயல்கள், அவனின் புத்தி கூர்மையையும் செயலாற்றும் திறமையையும் விளக்கியது. அவன் விழிகளில் பொங்கி வழிந்த அன்பும் அக்கறையும் அவளை பைத்தியம் ஆக்கியது.

அவன் தன்னுடைய பலம் பலவீனம் இரண்டையும் தெரிந்து வைத்து இருந்தது. அவன் மேல் மரியாதையை ஏற்படுத்தியது. அவன் ஐ லவ் யு என்று எழுதலாம். வார்த்தைகளாக இல்லாவிட்டாலும், ஆட்டின் வடிவம். இதயம் துளைக்கும் அம்பு இப்படித்தான் எதிர்பார்த்தாள். ஆனால் அவன் காதலிக்கிறேன் என்று சொல்லவில்லை. அதற்கு அடுத்த கட்டத்திற்கு போய் விட்டான். வில்வித்தையில் அர்ஜுனன் காட்டும் தீவிரம். வளவள கொழ கொழ எதுவுமில்லை. உன்னை மணந்து கொள் கிறேன். உனக்கு சம்மதமா? தன்னுடைய பதிலுக்காக அவன் காத்து இருக்கிறான் என்பது புரிந்தது.

உன்னுடைய காதலை ஏற்று கொண்டேன் என்பதை, அவன் தன் காதலை சொன்ன அழகிற்கு ஈடாக, அல்லது அதற்கு மேலாக சொல்ல, வாய் வலிக்காமல் பேசும் தன்னிடமும் உரிய வார்த்தைகள் இல்லை என்பது தர்ஷினிக்கு அந்த கணத்தில் புரிந்தது. மெஹந்தி கோன் ஏந்தி இருந்த அவனின் வலது கரத்தை பற்றி தன் கன்னத்தில் அழுத்தி, 'சோ ஸ்வீட் பிரேம்', என்று சொல்லி அவனின் உள்ளங்கையில் முத்தமிட்டாள்.

அவளின் சம்மதத்தை அவள் வெளிப்படுத்திய வினாடி அவன் அவளை இறுக அணைத்து இருந்தான். சில நிமிடங்கள் முன்னால் மொட்டைமாடியில் பிரேம் தன்னை அணைத்த போது, அவன் காதலை உணர முடிந்தாலும், தர்ஷினிக்கு அவனின் அணைப்பை ஏற்று கொள்வதில் அப்போது ஒரு தயக்கம் இருந்தது. கேலி யாக பேச்சை வளர்த்தபடி அவனிடம் இருந்து விலக முடிந்தது. ஆனால் இப்போது முடியவில்லை.

அவன் மார்பில் வசதியாக சாய்ந்து கொண்ட தலை யும், அவன் கழுத்தை சுற்றி வளைத்த கரங்களும், அவள் அந்த அணைப்பை ரசித்ததையும் அதில் கிறங்கிய தையும் சொன்னது. ஒரு வேகத்தில் அவளை அணைத்து அவளின் உச்சியில் தன் கன்னத்தை சரித்த பிரேம் குமாருக்கு இப்போது அந்த அணைப்பை முழுசாய் ரசிக்கமுடியவில்லை. தன் மேல் ஆசையாய் சாய்ந்து இருப்பவளை விலக்கவும் மனம் வரவில்லை.

அவளின் உச்சியை மென்மையாக வருடியவன், ''ப்ரியா...'' என்று அழைத்த போது சத்தம் வெளி வந்ததா இல்லையா என்பதை இருவருமே அறியவில்லை. பேருக்கு வலிக்குமோ என்ற பயத்தில் மென்மையாக அழைத்த குரல் கேட்க விட்டாலும், உச்சியை வருடிய அந்த ஸ்பரிசத்தில் மேலும் உருகி, அவன் மார்பில் அழுத்தமாக புதைந்து கொண்டாள். அந்த அசைவில் மீண்டவன், அவளை உறுதியாய் விலக்கி நிறுத்தினான்.

''அம்மாவிடம் அரை மணி நேரத்துல வரோம் என்று சொல்லி பதினைந்து நிமிடம் ஆகிவிட்டது ப்ரியா. கிளம்பலாம்'' என்று சொன்னவன். அந்த வார்த்தைகள் அவளை காயப்படுத்தி விடக்கூடாது என்று அவளின் கன்னத்தையும் மெல்ல வருடினான்.

அவனுடைய பேச்சும், வருடலும், அதன் காரணமும் புரிய, மனம் இளகிய தர்ஷினி அவனை மாதிரியே கன்னத்தை வருட தன் வலது கரத்தை உயர்த்திய போது, சற்று முன்பு அவன் தன் உள்ளங்கையில் வரைந்த பூமாலை கலைந்து ஒரு ஒழுங்கில்லாத வட்டமாக மாறி இருந்தது.

''அச்சச்சோ!'' என்று நாக்கை கடித்தபடி அவனை திருப்பினாள். பூமாலை வடிவிலான மருதாணி கோலம் அவனின் சட்டையின் முதுகுப்புறத்தில் அழுத்தமாக பதிந்து இருந்தது.

''பிரேம்! நீங்க மூணு சாரி சொல்லிட்டீங்க என்று ரொம்ப வருத்தப்பட்டீங்களே? இப்ப நான் சாரி சொல்லும் நேரமும் வந்துவிட்டது. ஆனால் அதை சொல்ல, எனக்கு கொஞ்சம் கூட வருத்தமே இல்லை. ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருக்கு. ஐ ஆம் ஸாரி பிரேம்...'' என்று சந்தோஷமாக சொன்னவள் தன் உள்ளங்கையை விரித்து காட்டினாள்.

''சாரி சொல்றதுல குற்ற உணர்வே இல்லாமல் என்ன சிரிப்பு வேண்டி கிடக்கு?'' என்று கேட்டவன் குரலில் கோபம் மருந்துக்குகூட இல்லை. ''நேரமாச்சு, நான் ஷர்ட்டை மாற்றி விட்டு வருகிறேன். கிளம்பலாம்'' என்று சிரித்துவிட்டு தன் அறைக்கு சென்றான் பிரேம்.

''பிரேம், கொஞ்ச நேரம் முன்னாடி, அழியாத காதலை சொல்வதற்கு, இப்படி அழியும் மருதாணி வச்சு சொல்றீங்களே என்று நினைத்தேன். ஆனால் இந்த நினைவுகள் என்றும் அழியாது இல்லையா பிரேம்? அதற்கு ஒரு சான்று வேற. இந்த டி ஷர்ட்டை ஃபிரேம் பண்ணி நம் வீட்டு ஹாலில் மாட்டலாமா பிரேம்? அட! பிரேம், ஃபிரேம் ரைமிங்கா இருக்கு இல்ல?'' என்று குதூகலத்துடன் அவள் பேசியதை கேட்டபடி சட்டையை மாற்றி வந்தவன் உள்ளம் உற்சாகத்தில் நிரம்பி வழிந்தது.

வண்டியில் அவளின் வீட்டுக்கு வரும்போது அவனை நெருங்கி அமர்ந்து, முதுகில் சாய்ந்தபடி, சினிமா, அரசியல், விளையாட்டு, தொழில் வளர்ச்சி என்று சகலத்தையும் அலசி ஆராய்ந்தாள். அவள் மூச்சு விடாமல் ஆர்வமாக பேசியதை கவனிக்க வேண்டும் என்ற ஆர்வமோ, பயண நேரம் நீடிக்க வேண்டும் என்ற ஆவலோ, அவன் வாகனத்தை மெதுவாக செலுத்தினான்.

''பிரேம், அன்றே சத்யா கல்யாண வீட்டிலேயே உங்களிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். நீங்க காணாமல் போயிட்டீங்க. உங்க வெப்சைட்டில் உங்க வயதை கூட்டி போட்டு இருப்பதை எடுத்துடுங்க பிரேம். அது வாடிக்கையாளர் உங்களை நேரில் பார்க்கும் போது உங்கமேலே வச்சு இருக்கும் மரியாதையை குறைக்கலாம். உங்க அப்பா பேரில் வைக்க வேண்டியதுதானே?'' என்று அவனின் தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்ட மனைவியாக ஆலோசனை சொன்னாள்.

''அப்பாக்கு தனி தொழில் இருக்கு ப்ரியா. ஒரே பேரில் இரண்டு தொழில் என்றால் வருமான வரி அடுத்த ஸ்லாப் போகும் ப்ரியா...''

''சும்மா நான் சொல்கிறேன் என்பதால் மறுக்கக் கூடாது. உங்க அம்மா பேரில் தொழிலை நடத்துங்க. உங்களை விட அதிகம் பேரை உங்க அம்மா பேச்சில் ஏமாற்றுவாங்க தெரியுமா? பெண் தொழில் முனைவோருக்கு தனி சலுகை கூட இருக்கும். உங்க பேரை நிர்வாகம் என்று கீழே போடுங்க. உங்க அம்மாவிடம் சம்பளம் வாங்குங்க. அம்மாவிடம் வேலை செய்வதில் கௌரவ குறைச்சலா? இல்லை உங்க தொழில் வளர்ச்

சிக்கு நான் சொல்லக் கூடாதா?'' என்று மடக்கிய போது அவன் சந்தோஷமாக விட்டுக் கொடுத்தான்.

''நீ சொன்ன இரண்டுமே எனக்கு பிரச்னையே இல்லை. அம்மா கீழே வேலை பார்த்து சம்பளம் வாங்குவதும், நீ இந்த மாதிரி ஐடியா கொடுப்பதும் எனக்கு சந்தோஷம் கொடுக்குது'', என்று பெருமையாக சொன்னவனுக்கு கன்னத்தில் ஒரு இதழ் ஒற்றுதல் பரிசாக கிடைத்தது. சம்பந்தப்பட்ட இருவரும் வெளிப்படையாக பேசி, மனம் நிறைந்த சந்தோஷத்துடனும், பூரித்த முகத்துடனும், ஏழு மணி அளவில் தர்ஷினியின் வீட்டுக்குள் நுழைந்தபோது அங்கே இருந்த பெரியவர்களுக்கு திருமண தேதியை உடனடியாக முடிவு செய்வதில் எந்த தயக்கமும் இல்லை.

யசோதா - நந்தகோபால் தம்பதியினர் அன்று மாலை மூன்று மணி அளவில் தன் வீட்டுக்கு பழ தட்டோடு வந்த போது அதன் காரணத்தை ஊகிக்க முடிந்தாலும் புவனேஸ்வரிக்கு சின்ன தயக்கம் இருந்தது. பிரேம் குமாரின் இனம் பற்றிய தயக்கம் மட்டும் இல்லாமல் தர்ஷினியின் ஓயாத வாய்க்கும், பிரேமின் அளவான பேச்சிற்கும் ஒத்து போகுமா என்ற கவலையும் இருந்தது. போனில் தகவல் சொல்லி கணவரை உடனடியாக வரவழைத்த போது அவர் இரண்டையுமே மதிக்க வில்லை.

''சத்யா கல்யாண வீட்டில் அவங்க ரெண்டு பேரும் சேர்ந்து வேலை செஞ்சாங்க புவனா. நீ பார்க்கவில் லையா? இந்த காலத்துல நீ ஜாதி மதம் என்று எல்லாம் புதுசா கிளப்பாதே. தர்ஷினிக்கும் அவனை ரொம்ப பிடிக்கும். பிரேம் நல்ல பையன் என்பதில் உனக்கு ஏதா

வது சந்தேகம் இருந்தால் சொல்லு. இல்லை என்றால் முடித்து விடலாம் புவனா...''

''தர்ஷினிக்கு பிடிக்குமா? இதென்ன கதை? இதை ஏன் நீங்க முன்னாடியே எனக்கு சொல்லவில்லை?'' என்று புவனேஸ்வரி முறைக்க குருமூர்த்தி சமாதானம் செய்தார்.

''பிடிக்கும் என்று நான் சொன்னதற்கு காதல் என்று அர்த்தம் இல்லைம்மா. ஒரு ஒத்துபோகும் மனப்பான்மை இருக்கு என்ற அர்த்தத்தில் சொன்னேன். அவள் ஆபீசில் இருந்து வரட்டும். அவளிடம் பேசிய பின்பே சொல்ல லாம்'' என்று சமாளித்தார். அதன் பிறகு, நந்தகோபால் தன்னிடம் பகிர்ந்து கொண்ட விஷயம் தயக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் ஒரு நல்ல மனிதனாகவும், சிறந்த தொழில் நிர்வாகியாகவும் இருந்த பிரேமை விட மனசில்லை. தர்ஷினிக்கும் அவனை பிடித்து இருக்கிறது என்பது தூண்டு கோலாக செயல்பட, அவர் அந்த தயக்கத்தை உதறி எறிந்தார்.

அடுத்த மூன்று வாரங்களில் யசோதா ஆசைப்பட்ட படியே தீபாவளிக்கு முன்பே திருமண நாள் நிச்சயம் செய்தனர். திருமணத்திற்கு நாள் குறித்த பிறகு கிடைத்த முதல் தனிமையில், ''ப்ரியா நீங்க ரெண்டு பேருமே பொண்ணுங்க. உங்க அம்மா அப்பாவை சத்யாவால், பெரிய குடும்பமா இருப்பதனால் சரியா கவனிக்க முடியாமல் போகலாம். ஆனால் நான் எல்லா சூழ்நிலையிலும் அவங்களுக்கு ஆதரவா நிற்பேன் என்று உறுதி சொல்றேன். அதே மாதிரி எனக்கும் உன்னிடம் ஒரு வேண்டுகோள் இருக்கு...'' என்று தயக்கத்தோடு நிறுத்தினான்.

''பிரேம் நீங்க சொன்ன இந்த வார்த்தை எவ்வளவு உன்னதமானது என்பது உங்களுக்கு தெரியலை பிரேம். எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. அப்புறம் அதென்ன வேண்டுகோள்? ஏன் இவ்வளவு சம்பிரதாயமா பேசறீங்க? நாம் இருவரும் சேர்ந்து வாழ போகிறோம். பிரேம். இதுல யாரும் உசத்தி தாழ்த்தி இல்லை. நான் என்ன செய்யணும் சொல்லுங்க'' என்று அவள் கேட்ட விதத்தில் மகிழ்ந்து பெருமிதமாக புன்னகை செய்தான்.

''உனக்கு தெரிஞ்சு இருக்கலாம். ஆனாலும் என் கடமைக்கு நான் ஒரு முறை சொல்கிறேன். எந்த சூழ்நிலையிலும் எங்க அம்மா அப்பாவை அடுத்தவர்கள் என்று தள்ளி வைக்கக்கூடாது. நீ அவங்களை ரொம்ப அக்கறையா, என்னை பார்ப்பதை காட்டிலும் கூடுதல் அன்போடு, அவங்களை பார்த்துக்கணும். செய்வாயா?''

''இதுக்கா இவ்வளவு தயங்கினீங்க? இதை நீங்க சொல்லணுமா? வாக்கு கொடுத்தால் போதுமா? யார் தலையிலாவது அடித்து சத்தியம் பண்ணனுமா?'' என்று தர்ஷினி வாக்களிக்க, அதன் பிறகு அங்கே கேலியும் கிண்டல்கள் மட்டுமே நிரம்பி வழிந்தது.

திருமணத்தில் கலந்து கொள்ள சத்யா தன் குடும்பத்தினரோடு இரண்டு தினங்களுக்கு முன்பே ஆஜராகி விட, நடுவில் கொஞ்சம் சத்தம் அடங்கி இருந்த அந்த வீட்டில் கலகலப்பு மீண்டும் குடிகொண்டது. கிண்டல் பேச்சும் கேலி சிரிப்பும் விடாமல் ஒலித்து அந்த வீட்டில் மகிழ்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. வீட்டில் இருந்த தர்ஷினியையும் அவளை காண வந்து தனியாக பேச

நவிக்கும் பிரேமையும் சத்யா குடும்பத்தினர் உண்டு இல்லை என்று ஆக்கிவிட்டனர்.

''தர்ஷினி, பிரேமை முன்பே தெரியும் தானே? அண்ணிக்கு மாப்பிள்ளை பார்க்க நெட்ல தேடலாம் என்று சொன்னது சும்மா சாக்குதானே?'' என்று வெங்கடேஷ் கலாட்டா செய்தான்.

அவனுக்கு பதிலுக்கு பதில் சொல்லும் வேகத்தில், அப்பாவியாக கண்களை விரித்து, ''ஆமா! எங்க காலேஜ்ல கேண்டீன் நடத்தினது அவங்க அப்பா தான். அப்போதே தெரியும்'' என்று போகிற போக்கில் அவள் அள்ளி விட, அது கை, கால் முளைத்து பிரேம்குமாரிடம் வந்து சேர்ந்த போது, 'அப்படி எல்லாம் இல்லை' என்று அவன் மறுக்க எல்லோரும் சிரித்தனர்.

''இதெல்லாம் டூ மச் அண்ணா. மூணு வருஷமா லவ் பண்ணிட்டு எப்படிண்ணா இப்படி எல்லாம் அமைதியா இருக்க முடியுது? இந்த பூனையும்பால் குடிக்குமா என்பது மாதிரியான இந்த போஸ் எப்படிண்ணா கொண்டு வர முடியுது உங்களாலா? இந்த டெக்னிக்கை எனக்கும் கொஞ்சம் சொல்லி கொடுங்கண்ணா ப்ளீஸ்'' என்று சிரித்தான் வெங்கடேஷ்.

''இது எனக்கு தெரியாமல் போச்சே? உங்களிடம் போனில் பேசிய முதல் நாளே இவள் ஹேட்ரிக் என்று உற்சாகமாக கூச்சல் போட்டதற்கு காரணம் இதுதானா? அம்மா அவளை உள்ளே போக சொல்லி எவ்வளவோ வற்புறுத்திய பிறகும், நான் பேச மாட்டேன் என்று தன் தலையில் அடித்து சத்தியம் செய்து இருந்த இடத்தை விட்டு அவள் அசையவே இல்லை. அம்மா, அப்பா, என்னுடைய எதிர்பார்ப்பு எல்லாம் முன்னாடியே சொல்லி

விட்டாளா?'' என்று சத்யா உற்சாகமாக பேசியதில் ஒரு வார்த்தை கூட பிரேமிற்கு புரியவே இல்லை.

தர்ஷினி தனக்காக வாதாடி இருக்கிறாள் என்பது மட்டும் புரிந்தது. சந்தோஷம் வந்தது. ''வெப்சைட் மூணு வருஷமா இதே மாதிரித்தான் இருக்கு. சமீபத்துல எதுவும் மாற்றம் உங்களுக்காக செய்யவில்லை'' என்று விளக்கம் சொல்ல முயன்றவனை தோளில் தட்டி நிறுத்தினாள் தர்ஷினி.

''விட்டுடுங்க பிரேம். நம்ம கல்யாணத்தை பார்த்து அவங்க சந்தோஷமா சிரிக்கட்டும். இப்ப என்ன குறைஞ்சு போகுது?'' என்று கண் சிமிட்டி சிரித்த தர்ஷினி சொன்ன விதத்தில் அவள் உண்மை சொல்வது போலவும், பிரேம் பொய் சொல்வது போலவும் இருக்க எல்லோரும் மீண்டும் சிரித்தனர்.

''ஹேய் தர்ஷினியே ஒத்து கொள்கிறாள். நீ என்ன மேன் இன்னும் மறைக்கிறாய்?'' என்று கிருஷ்ணகுமார் சிரித்தான்.

''அட பாவிங்களா! நான் அவளை முதன் முதலில் பார்த்தது உங்க கல்யாண வீட்டில் தான். நான் உண்மை சொன்னால் நம்ப மாட்டீங்க. அவள் போகிற போக்கில் சொல்லும் பொய்யை இப்படி நம்புறீங்க?'' என்று சிரித்தாலும், அவனுக்கும் இந்த கலாட்டாக்கள் பிடித்து இருந்தது. சுவாரஸ்யமாகவும் இருந்தது.

''அண்ணி, மின்சார கண்ணா படம் பார்த்து இருக்கீங்களா? அது மாதிரி இவங்க ரெண்டு பேரும், ப்ளான் பண்ணி அத்தை, மாமாவை கவிழ்த்து இருக்காங்க. நீங்க காதல் திருமணத்தை எப்படி பெற்றவர்கள் நிச்சயித்த கல்யாணமா மாற்றுவது என்று ஒரு புக் போடுங்க. இந்த

கால இளைஞர்களுக்கு பிரயோஜனமா இருக்கும்'' என்று வெங்கடேஷ் சிரித்தான்.

''நீ இந்த கால இளைஞனா வெங்கி?'' என்று சத்யா அவசரமாக இடையிட, ''இப்படி எல்லாம் உனக்கு சந்தேகம் வரலாமா சத்யா. இதுல உனக்கு என்ன சந்தேகம்? இல்லை என்றால் இவங்க மூணு வருஷமா மூடி வச்ச காதல் அவனுக்கு எப்படி தெரியும்?'' என்று சிரித்து கொண்டே வாரினான் கிருஷ்ணகுமார்.

''கரெக்ட் கிருஷ். எங்க அப்பாவை தர்ஷினி சுலபமா சமாளிச்சு இருப்பாள். இவ அவரோட பெட். ஆனால் அம்மாவை சமாளிக்கணுமே? அம்மா பிரேமை பற்றி பாராட்டி ஏதாவது சொன்னால், உடனே வரிஞ்சு கட்டிக் கிட்டு அவரை பற்றி மட்டம் தட்டி பேசுவாள். பிரேமை பார்த்தே இராத மாதிரி, அவரை பிடிக்காத மாதிரி என்னமா ஆக்டிங் தெரியுமா?'' என்று சத்யா சிலாகித்து பேச, வெங்கடேஷ் இடையிட்டான்.

''அப்படி எல்லாம் நடிக்க விட்டால் எப்படி மூணே வாரத்துல கல்யாணம் வரை கொண்டு வந்து நிறுத்த முடியும்?'' என்று வெங்கடேஷ் சொல்ல எல்லோரும் சேர்ந்து சிரித்தனர். அவர்கள் எல்லாம் மாறி மாறி பேச, பிரேமிற்கும் தர்ஷினிக்கும் சிரிப்பு பொங்கியது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து ரசித்து கொண்டனர்.

திருமணம் நடத்தி வைப்பதையே தொழிலாக கொண்ட மணமகனுக்கு தங்கள் மகளை திருமணம் செய்து கொடுக்க, மணவிழாவிற்கு வரும் விருந்தினர்களுக்கு அறுசுவை உணவு படைப்பதை தொழிலாக

கொண்ட மணமகனின் தந்தையின் அமோக ஒத்துழைப்பு இருக்கும்போது திருமணம் கோலாகலமாக நடைபெறுவதில் என்ன சந்தேகம்? மூன்றே வாரத்தில் திருமண தேதி நிச்சயித்தும், இரு வீட்டாரின் ஒத்துழைப்புடன், பெற்றவர்களின் ஆசியுடனும், நண்பர்களின் வாழ்த்துக்களுடன், கோலாகலமாக அந்த காதல் திருமணம் நடந்து மணமக்கள் தேனிலவிற்கென பனி சூழ்ந்த மலைகள் இருந்த குலு-மணலிக்கு வந்தனர்.



16

சென்னையில் திருமணத்தை முடித்து விட்டு மறுநாள் பிற்பகல் சென்னையில் இருந்து கிளம்பி விமானத்தில் டெல்லி வந்து சேர்ந்த புதுமண தம்பதிகள் உடனேயே இரவு எட்டு மணி அளவில் டில்லியில் இருந்து மணலிக்கு பேருந்தில் செல்ல ஏற்பாடாகி இருந்தது. அதை பார்த்த தர்ஷினிக்கு ஆச்சரியமாக இருந்தது.

''யார் பிரேம் டூர் அரேஞ்ச் பண்ணியது? இங்கிருந்து உடனே கிளம்ப வேண்டுமா? நைட் இங்கே தங்கி விட்டு காலையில் கிளம்பலாமா? ஐநூறு கிலோமீட்டர் தூரம் இருக்காது?'' என்று குறை சொல்வது போன்ற தொனி வந்து விடாமல் கவனமாக விசாரித்தாள் தர்ஷினி. ஏன் எதுக்கு? இப்படி செஞ்சால் என்ன? என்று கேள்விகளை கேட்டு மனுஷனை கொல்லாதே. பிரேம் ஒரு காரியம் செஞ்சால் நாளையும் யோசித்து தான்

செய்வார், என்று கடந்த பதினைந்து நாட்களாக அம்மா சொல்லி வைத்து இருந்த உபதேசம் அந்த கவனத்தை ஏற்படுத்தி இருந்தது.

''டயர்டா இருக்கா ப்ரியா? பஸ் பிரயாணம் ஒத்து கொள்ளாது. குளிர் அலர்ஜி. சைனஸ் என்று எந்த பிரச்னையும் இல்லை என்று சொன்னாயே? ஏன் அப்படி கேட்கிறாய்?'' என்று கவலையோடு விசாரித்தான்.

''ஹய்யோ பிரேம்! எதுக்கு இவ்வளவு படபடப்பு? எனக்கு எந்த அலர்ஜியும் இல்லை. சும்மா சாதாரணமா தான் விசாரித்தேன். உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்லட்டுமா? கிட்டே வாங்க'' என்று அழைத்தாள் தர்ஷினி.

ஜன்னல் ஓரம் இருந்த பிரியதர்ஷினியை ஏற்கனவே அவனுக்கு மறுபுறம் இன்னொரு ஆள் உட்கார வேண்டிய தேவையான அளவு இடம் விட்டு அவளை ஒட்டி உரசியபடி பிரேம்குமார் அமர்ந்து இருக்க, அவனை இன்னும் அருகே அழைத்த அவளின் செயல் அவன் முகத்தில் முறுவலை வரவழைத்தது. ''சொல்லு...'' என்று அவள் புறம் சரிந்தவனின் முகம் அவளின் கன்னத்தில் உரசியது.

''எனக்கு ஹனிமூனுக்கு ஹிமாச்சல பிரதேஷ் தான் வரவேண்டும் என்று ரொம்ப ஆசை தெரியுமா?'' என்று விழிகள் விரிய ரகசியம் பேசினாள் தர்ஷினி.

''ம்ம்ம், தெரியுமே? அதனால் தான் ஏற்பாடு பண்ணினேன்'' என்று அவளின் கண்களை ஊடுருவியபடி காதலோடு முணுமுணுத்தான்.

''வெளிநாடு போக முடியுதோ இல்லையோ? பொருளாதார வசதி எப்படி இருக்கோ? இங்கே வந்து

அட்லீஸ்ட் இந்த பனி படர்ந்த மலைகளை பார்த்து ரசிக்க வேண்டும் என்று ரொம்ப ஆசை...'' என்று ரசனையோடு சொல்ல ஆரம்பித்தவள் கொஞ்சம் தாமதமாக சுதாரித்து, ''ஹேய் இங்கே வரணும் என்ற என்னுடைய ஆசை உங்களுக்கு எப்படி தெரியும்? நான் உங்களிடம் சொல்லவே இல்லையே?'' என்று ஆச்சரியமாக விசாரித்தாள்.

''என்ன ப்ரியா மறந்து விட்டாயா? நாமதான் மூணு வருஷமா லவ் பண்றோமே? இது கூடவா பேசாமல் இருந்து இருப்போம்?'' என்றவன் விழிகள் குறும்பில் சிரித்தது.

''ஹைய! இந்த கதை எல்லாம் நாங்கதான் மத்தவங்களுக்கு ஓட்டுவோம். நாங்க நம்ப மாட்டோம். உண்மையை சொல்லுங்க. உங்களுக்கு எப்படி தெரியும்?''

அவளின் பாவனையை ரசித்து சிரித்தவன், ''இது சத்யா பரிசா...'' என்று ஆரம்பித்தவனை தர்ஷினியின் பதட்டமான குரல் இடையிட்டு நிறுத்தியது.

''சத்யா எனக்கு ஒரு வைர பென்டன்ட் வாங்கி தந்தாளே? இது வேறே தனியா எதுக்கு? என்கிட்டே முன்பே சொல்லி இருந்தால் நான் வேண்டாம் என்று சொல்லி இருப்பேனே? ப்ச்! இது இப்ப தேவை இல்லாத செலவு. ஏற்கனவே அவங்களுக்கு வெங்கடேஷ் படிப்பு செலவு வேறே இருக்கு. கல்யாணம் ஆகி ரெண்டு மாசம் கூட ஆகலை. அதுக்குள்ளே இவ்வளவு செலவு இழுத்து விட்டால், அவங்க வீட்டுல என்ன நினைப்பாங்க? சரியான லூசு...'' என்று படபடவென்று பொரிய அவன் அமைதியாக பார்த்து கொண்டு இருந்தான்.

''என்ன அப்படி பார்க்கறீங்க? நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா? நினைத்ததை அப்படியே பேசித்தான் எனக்கு பழக்கம். நீங்களும் அதே மாதிரி பிடிக்கும் பிடிக்காததை வெளிப்படையா சொல்லிடுங்க'' என்று அவனின் அமைதியை உணர்ந்து குழப்பத்துடன் கேட்டாள் தர்ஷினி.

''நான் மூணே வார்த்தை சொன்னதுக்கு இத்தனை அர்த்தம் கற்பனை பண்ணி மூணு பக்கத்துக்கு வசனம் பேசுவதை பார்த்து நான் அப்படியே ஆஃப் ஆகிட்டேன்'' என்று கண்சிமிட்டி புன்னகை செய்தான் பிரேம்.

''சத்யாவோட பரிசு என்று சொன்னதை நான் காதால கேட்டேனே?''

''நீ உன் காதாலதான் கேட்க முடியும் ப்ரியா...''

''ஈ...ஈ...ஈ... இவ்வளவு சிரிச்சால் போதுமா? கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல் வம்பா பண்ணுறீங்க? என்று அழகு காட்டிய இதழ்களை ஒரு வினாடி சிறை செய்து விடுவித்தான் பிரேம். அவளின் பேச்சு உடனடியாக ப்ரேக் போட்டது போல நின்று இருந்தது.

''ஹப்பா! இது ஒரு அஞ்சு நிமிஷம் தாங்கும். அதுக்குள்ளே நான் சொல்ல வந்ததை முடித்து விடுகிறேன். இது ஒரிஜினலா சத்யாவோட பரிசு. ஆனால் ஹனிமூன் செலவு நான் தான் செய்வேன். நீங்க வேறே ஏதாவது பரிசு வாங்கி கொடுங்க என்று சொன்னேன். கல்யாண தேதி குறித்த உடனேயே இந்த டிக்கெட் புக் பண்ணி விட்டேன். இதை இப்ப கேன்சல் செய்ய வேண்டாமே, இது அவளுக்கு ரொம்ப பிடித்த இடம் என்று சத்யா தயங்கினாள். சரி அது அப்படியே இருக்கட்டும். அதற்கு

நான் பணம் தந்து விடுகிறேன். நீங்க வேறே ஏதாவது வாங்கி கொடுங்க என்று சொல்லி தந்துவிட்டேன். விளக்கம் போதுமா?''

''ஹய்யோ! இடம் மட்டும் சொன்னாளா? நான் சொன்ன எல்லாத்தையும் சொன்னாளா?'' என்று கேட்ட வளின் முகம் அந்த குளிரிலும் சூடேறி சிவந்ததை பிரேமால் உணர முடிந்தது.

''இன்னும் நிறைய சொன்னாள். அதெல்லாம் வாயால் சொல்ல முடியாது. ரூமிற்கு போய் செயல் விளக்கம் காட்டுகிறேன். அதுவரை இதை கேளு...'' என்று அவள் காதில் ஹெட்செட்டை மாட்டிவிட அதில், ''புது வெள்ளை மழை இங்கு பொழிகின்றது. இந்த கொள்ளை நிலா உடல் நனைகின்றது'' என்ற உன்னி மேனனின் குரல் ஒலிக்க, அவளின் முகம் மேலும் சிவந்து அவன் மார்பிலேயே தஞ்சம் கொண்டது.

மார்பில் முகம் புதைத்தவளின் தலையில் தன் தலை யால் முட்டி, ''பேச்சு எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ போய் விட்டது. இது நான்கு இரவு, மூன்று பகல் கொண்ட டூர் பேக்கேஜ். இரண்டு இரவுகள் பிரயாணம், சைட் சீயிங், உணவு எல்லாமே அவங்களே பார்த்து கிறாங்க. விமானம் பயணம் போகலாம். ஆனால் சீக்கிரம் முடிந்துவிடும். இந்த பஸ் பிரயாணத்தில் நாளை காலையில் பனி மூடிய குன்றுகளை பார்த்து கொண்டே போவது நல்லா இருக்கும். புது பொண்டாட்டியை உரசிகிட்டு, ரகசியமா காதில் கதை சொல்லி சிரிச்சு கிட்டு போற சந்தோஷம் விமான பயணத்தில் இருக் காது என்பது என் கருத்து. சரிதானே?'' என்று கொஞ்ச

லாக காதில் ரகசியம் பேச, ''நீங்க என்ன சொன் னாலும் சரிதான் பாஸ்'' என்று பதிலுக்கு கொஞ்சினாள் தர்ஷினி.

''அட! பேசுவது ப்ரியாதானா? இல்லை வேறே யாரா வது டூப்பா?'' என்று தன் தோளில் சரிந்து இருந்தவளின் முகத்தை நிமிர்த்தி கேலியாக கேட்டான்.

''பாருங்க, நான் ஒரு முறை ஆமா என்று சொன் னாலே, உங்களுக்கு பேசுவது நான்தானா என்ற சந்தேகம் வருது. இதுல எங்க அம்மா வேற உங்களை நான் கேள்வி கேட்டு தொல்லை பண்ணக்கூடாது என்று ஏகப்பட்ட அட்வைஸ்...''

''அதெல்லாம் வேண்டாம் ப்ரியா. நீ நீயா இரு. அதுதான் எனக்கு பிடித்து இருக்கு. சரி, நீ முதல் நாள் போனில் பேசியதை பற்றி அன்று சத்யா ஏதோ சொன்னாளே? அதுல பாதி எனக்கு புரியலை. நீ வேறே ஏதோ ஹேட்ரிக் என்று என்னவோ சொன்ன? என்ன அது?''

''முதலில் எங்க அம்மாவுக்கு நெட்ல வரன் பார்ப் பதில் அவ்வளவா இஷ்டம் இல்லை. நான் வற்புறுத்தி பார்க்க வைத்தேன். அம்மா, அப்பா, சத்யா மூணு பேரும் ஆளாளுக்கு ஒரு கண்டிஷன். அம்மாக்கு மங்கலமா இருக்கணும் சத்யாவுக்கு பாட்டு கேட்கணும். இந்த ரெண்டு ஆசையையும் உங்க காலர் டியூன் சரி பண் ணிடுச்சு. அதுல அவங்க ரெண்டு பேரும் பிளாட். அப் பாக்கு தமிழ் ஆர்வம் ஜாஸ்தி. நீங்க வணக்கம் சொல்லி பேச்சை ஆரம்பித்தீங்களா? அதுல அவரும் பிளாட். அதான் தொடர்ந்து மூணு விக்கெட் வீழ்த்தி என் பேரை காப் பாத்தின சந்தோஷத்துல, ஹேட்ரிக் என்று சொன்னேன்...''

''மூணு விக்கெட் அப்போ விழுந்தது ஓகே. நாலாவது முக்கியமான விக்கெட் எப்போ விழுந்தது?''

''ஆமா! உங்களுக்கு ஒண்ணுமே தெரியாது பாவம். என்னிடம் கேட்கறீங்க?''

''தெரியாதவங்க சந்தேகம் கேட்டால் சொல்லி தரணும். அம்மா, அப்பா ரெண்டு பேரும் டீச்சர் நீ இப்படி இருக்கியே? இன்னும் நாலாவது முக்கியமான விக்கெட் விழவே இல்லையோ?''

''விழுந்தது. 'வெல்கம் ப்ரியா' என்று ஓடி வந்து முகம் மலர சொன்ன நிமிஷத்துல அது காலி. என்னையே கேள்வி கேளுங்க. நீங்க ஒண்ணுமே சொல்லாதீங்க,'' என்று அவள் குறை படிக்க அவளை அணைத்து கொண்டான்.

''உனக்கு என்ன தெரியணும்? நான் காதலை உணர்ந்த தருணம் பற்றி சொல்லணுமா? சொல்றேன். முதல் பார்வையிலேயே என்னை நீ ஈர்த்து விட்டாய். இல்லை என்றால் நானாக உன்னை தேடி வந்து பேசி இருக்கமாட்டேன்...''

''அத்தை சொன்னாங்க. முதலில் என்னை நீங்க வீடியோ கேமராவில் பார்த்தீங்களோ?''

''நான் பார்க்கும்போது நீ விக்கிக்கு ரோஸ் வைத்து விட்டாய். அப்புறம் ஒரு பெண்ணை அணைத்து வரவேற்றாய். எங்க அம்மா காலில் விழுந்து நமஸ்காரம் செய்து கொண்டாய்...''

''ஹேய் இதென்ன புது கதை? நான் பன்னீர் செம்பின் மூடியை...''

''தெரியும். எனக்கு அப்படித்தான் தோன்றியது. அது தெய்வம் காட்டிய சிக்னல் என்று தோன்றியது. அப்போதும் காதலை உணரவில்லை. நீ சண்டை போட்டு, ஜூஸ் கொடுத்து சமாதானம் பண்ணி, மெஹந்தி கேட்டு வம்பு பண்ணி...''

''நானா வம்பு பண்ணினேன்?'' என்று கேட்டு அவன் நெஞ்சில் செல்லமாக குத்தினாள்.

''பின்னே! அம்மாவிடம் சொல்வேன் என்று மிரட்டியது யாரு?''

''ம்ஹூம்! யாரிடம் கதை விடுறீங்க? நீங்க மெஹந்தி கோன் ஜெம்ஸ் எல்லாம் வாங்கி தரலை என்று நான் அம்மாவிடம் சொல்ல முடியுமா? அப்படியே சொன்னாலும் அதை எங்க அம்மா எப்படி எடுத்து கொள்வாங்க என்று உங்களுக்குத் தெரியாது. இதை நான் நம்பணுமாக்கும்?''

''நீ அம்மாவிடம் சொல்ல மாட்டாய் என்று தெரியும். சொன்னால் என்ன நடக்கும் என்பதும் எனக்கு தெரியும். ஆனாலும் நீ கேட்ட ஒரு கோனுக்கு பதிலாக ரெண்டு வாங்கி வர சொல்லி மற்றொன்றை பத்திரமாக வைத்து இருந்தேன். முதல் நாள் அவ்வளவா தெரியலை ப்ரியா. மறுநாள் காலையில் அம்மாவை அறிமுகப்படுத்திய போது, நீ கூச்சத்துடன் முகத்தை மூடி சிரித்த வினாடியில் நான் என் காதலை முழுமையாக உணர்ந்தேன்'' என்று சொன்னவன் அவளை தன்னோடு சேர்த்து அணைத்து கொண்டான்.

''ஏன் சத்யா கல்யாண வீட்டில் இருந்து சொல்லாமலே போயிட்டீங்க? அப்பவே சொல்லி இருக்கலாமில்லையா?''

''இல்லை ப்ரியா, எனக்கு ஏகப்பட்ட பிரச்னைகள் இருக்கு. அப்படி எல்லாம் தடாலடியா கல்யாண பேச்சை என்னால் எடுக்க முடியாது...''

''ம். வாயை திறக்க காசு கேட்கும் கல்லுளிமங்கன்...''

''அப்படி இல்லை ப்ரியா, எனக்கு வரப்போகும் பெண்ணுக்கு என்னை பிடித்ததை விட அம்மாவை அதிகம் பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தேன்...''

''அம்மா என்று சொன்னதும் நினைவு வருது. உங்க அம்மா நீங்க தயங்கினதுக்கும் சேர்த்து செம ஸ்பீட். உங்களிடம் கூட சொல்லாமல் பொண்ணு கேட்க கிளம்பிட்டாங்களே? உங்களுக்கு என்னை பிடிச்சு இருந்தது என்று உங்க நெற்றியில் எழுதி ஒட்டி வச்சு இருந்ததா? இல்ல அவங்களுக்கு தன் பேச்சை பையன் தட்ட மாட்டான் என்று அவ்வளவு நம்பிக்கையா?''

''நான் அவங்களிடம் இரண்டு வாரம் அவகாசம் கேட்டு இருந்தேன். அது அன்று மாலையுடன் முடிவதாக இருந்தது. அந்த கால கெடுவிற்குள் நீ என்னை நேரிடையாகவோ, தொலைபேசியிலோ தொடர்பு கொண்டால், உன்னை பற்றி அம்மாவிடம் சொல்லலாம் என்று முடிவெடுத்து காத்து இருந்தேன். அதான் அஞ்சு மணிக்கு உன்னை அங்கே பார்த்ததும் எனக்கு சந்தோஷம் பிச்சுகிச்சு'' என்று குதூகலத்துடன் சொன்னான் பிரேம்.

''சும்மா சொல்லக்கூடாது மேன். உங்க வாய்ஸ்ல எதிரில் இருப்பவரை வசியப்படுத்தும் ஒரு பவர் இருக்கு'' என்று பாராட்டாக சொன்னவளின் கண்கள் அவனை விழுங்கியது.

''குரலுக்கு மட்டும் தான் அந்த பவர் இருக்கா ப்ரியா?''

''உங்க கண்ணுக்கும் இருக்கு. அன்று மெஹந்தி வைக்கும் போது என் கண்ணை பார்க்க முடியலை என்று சொன்னீங்களே? அன்னிக்கே சொல்லணும் என்று நினைத்தேன். எனக்கு உங்க கண்ணை பார்த்து விட்டால் வேறே எங்கும் பார்வையை திருப்பவே முடியலை. காந்தம் உங்க வீட்டு சன்ஷேடில் இல்லை. உங்க கண்ணில்தான் இருக்கு'' என்று கொஞ்சலாக சொல்லி அவனின் நெஞ்சில் ஒரு விரலால் குத்தினாள்.

''ஹேய் என்ன நீ புதுசா கதை சொல்ற? அன்னிக்கே மொட்டை மாடியிலேயே உன் கண்ணில் காந்தம் இருக்கு என்று நான் சொல்ல நினைத்தேன். என் கண்ணை விட உன் கண்ணுக்குதான் பவர் ஜாஸ்தி...''

''இல்லை உங்க கண்ணுக்குத்தான்...''

''உன் கண்ணுதான்...''

''ப்ச்! நான் சொன்னால் கேட்கணும். உங்க கண்ணுக்குத்தான் பவர் ஜாஸ்தி'' என்று அதட்டலாக சொன்னவளை பார்த்து கேலியாக புன்னகைத்தான்.

''எ...ன்...ன.... சி...ரி...க்...கி...றீ..ங்...க?''

''உன் கண்ணுக்கு பவர் ஜாஸ்தி. ஆனால் என் வாய்க்கு அதை விட பவர் ஜாஸ்தி'' என்று ஒவ்வொரு வார்த்தையாக நிதானமாக சொன்னவன் அவளின் முகத்தை நோக்கி குனிந்தான். அவன் வாதத்தை நிரூபிக்க அவளின் இதழ்களில் முத்திரை பதிக்க, அவளின் பேச்சு நின்றது. சூழ்ந்து இருந்த இருளும், பல தேனிலவு ஜோடிகளே பேருந்தில் நிறைந்து இருப்பதும் ஊக்கம் தர,

அவர்களின் சீண்டலும் சிணுங்கலும் சிரிப்பும் இரவு முழுவதும் விடிய விடிய தொடர்ந்தது.



17

பீஸ் நதிக்கரையை ஒட்டியே குலுவில் இருந்து மணலிக்கு சென்ற அந்த மலைப் பாதை, அவர்கள் தேனிலவு தம்பதியினர் என்றதையும் மீறி, அவர்களின் கண்களை ஈர்த்தது. அன்று காலை பொழுது விடிந்ததில் இருந்து சுமார் ஐந்து மணி நேரம் அந்த மலைப் பாதையில் பிரயாணம் செய்து பதினோரு மணி அளவில் தங்குமிடம் வந்து சேர்ந்த போது அந்த பயணம் முடிந்து விட்டதே என்ற எண்ணம் தான் தோன்றியதே தவிர களைப்பாக இல்லை.

குலு-வில் இருந்து சுமார் பத்து கிலோமீட்டர் தூரத்தில் இருந்த பிஜ்லி மகாதேவ் கோவிலுக்கு சென்றனர். காரில் முக்கால் வாசி தூரம் சென்றபின்பு கால்நடையாக மலைப்பாதையில் சென்ற அந்த பயணமும், கண்டகாட்சிகளும் காதில் விழுந்த செய்திகளும் வியக்க வைத்தது.

அந்த கோவிலில் இதமான சூரிய ஒளியில் வெள்ளி கம்பியாக ஜொலித்த சுமார் அறுபது அடி உயர இடிதாங்கியை சுட்டி காட்டி, இறைவன் அருள் அந்த கோவிலின் லிங்கத்திற்கு நேரடியாக இடி மூலம் பாய்ச்சப்படுவதாகவும், ஒவ்வொரு முறை இடியால் அந்த லிங்கம் தாக்கப்படும்போது அது பல துண்டுகளாக உடைந்து

விடும் என்றும், வெண்ணை மற்றும் சந்தனத்தால் அது மீண்டும் சேர்த்து அந்த கோவில் பூஜை செய்பவர்களால் உருவாக்கப்படும் என்ற தகவல் அவர்கள் இதுவரை கேட்டு அறியாததாக இருந்தது.

''இங்கேதான் இவ்வளவு பக்கத்தில் ஆப்பிள் தோட்டங்கள் இருக்கே? அந்த ஜூசியான ஃபிரெஷ் ஆப்பிள் பழங்களை விட்டு விட்டு ஏன் பிரேம் இங்கே கூட சாமிக்கு இந்த காய்ஞ்சு சும்பிப் போன வாழைப் பழத்தை ஏன் அர்ச்சனை தட்டில் வைக்கிறாங்க? நமக்குதான் அங்கே சீப்பா கிடைக்கும் என்று வைக்கிறோம். இவங்க ஆப்பிள் வச்சால் என்னவாம்?'' என்று சலித்து கொண்டாள் தர்ஷினி.

''இல்லை ப்ரியா, வாழைப்பழம் வைப்பதற்கு அது விலை கம்மி என்பதோ, எல்லா இடங்களிலும் எல்லா சீசனிலும் கிடைக்கும் என்பதோ காரணம் இல்லை. வேறே ஒரு முக்கியமான காரணம் இருக்கு'' என்று அவன் சொன்ன விதத்தில் அவள் ஆச்சரியமாக பார்த்தாள்.

''அப்படி என்னப்பா மு...க்...கி...ய...மா...ன... காரணம்?''

''இங்கேயே இப்போதே சொல்லவேண்டுமா? அதெல்லாம் ஆன்மீக சிந்தனைகள். ஒரு கூட்டத்தின் நடுவில் இருக்கும்போது பேசலாம். தேனிலவு தனிமையில் பேசும் விஷயம் இல்லை ப்ரியா'', என்றவன் கண்கள் சிரிக்க, கைகள் அவளை சேர்த்து அணைத்தது.

''ஹய்யோ பிரேம், உடனே அது என்ன விஷயம் என்று சொல்லாவிட்டால் எனக்கு பைத்தியமே பிடித்து

விடுமே. ப்ளீஸ் சொல்லிடுங்க. என் செல்லம் இல்லை...'' என்று அவன் தாடையை பிடித்து கொஞ்சியவள் சற்று முன்பு அள்ளி வைத்து இருந்த பனி துகள்களை முகம் எங்கும் பூசி இருந்தாள்.

ஜில்லென்ற ஸ்பரிசத்தில் துள்ளியவன், ''ஹேய், வாலு கொடுத்த கிளவ்ஸ் எங்கே? இதை எங்கே எப்போ எடுத்த? இரு! நைட் இதுக்கு வச்சுக்கறேன்'' என்று மிரட்டினான்.

''நைட் இந்த விளையாட்டுக்கு பதில் வச்சுக்கோங்க. இப்ப கேள்விக்கு பதில் சொல்லுங்க.''

''மற்ற எல்லா பழங்களுமே, நேரிடையாக பழங்களையோ அல்லது அதற்குள் இருக்கும் விதையையோ மண்ணில் புதைத்து வைத்தால், அதில் இருந்து புதிய செடிகளோ, மரங்களோ உருவாகும். இது எல்லா பழத்திற்கும் பொருந்தும். முளைக்கும் சதவிகிதம் கூட குறைய இருக்கலாம். ஆனால் வாழை மட்டும் தான், பழத்தில் இருந்து தன் உயிரை உற்பத்தி செய்வதில்லை. அது மீண்டும் பிறப்பில்லை என்பதை காட்டும் உயர்ந்த நிலை. அதனால் தான் வாழைப்பழத்தை இறைவனுக்கு செய்யும் நைவேத்தியத்தில் முக்கிய பொருளாக வைத்து இருக்கிறோம்...''என்று அவன் நிதானமாக விளக்கம் சொல்ல அவள் பிரமித்தாள்.

''வாவ்! ரொம்ப சுவாரஸ்யமான தகவல் பிரேம். இதெல்லாம் எப்படி தெரியும்?''

''அம்மாக்கு இதில் அதிக ஈடுபாடு. ஆன்மிகம், புராணங்கள், அதில் வரும் கதைகள், அதன் அர்த்தங்கள் என்று நானும் அம்மாவும் பேசிட்டே இருப்போம். சில

நேரங்களில் கல்யாண சீசனில் வேலை நிறைய இருக்கும்போது அம்மாவை பார்ப்பது சிரமமாக இருக்கும். மூன்று நான்கு நாட்கள் கழித்து பார்ப்போம். ஆனால் அப்போதும் இரவு ஒன்பது மணிக்கு மேல், போனிலாவது தினமும் அம்மா பேசிடுவாங்க. அப்படி பேசாவிட்டால் அவங்களுக்கு தூக்கமே வராது. அதனால் தான் உனக்கு அவங்களை அதிகமா பிடிச்சு இருக்கணும் என்று எதிர்பார்த்தேன். உனக்கு பிடிச்சு இருக்கு தானே?''

''உங்க அம்மாவை யாருக்காவது பிடிக்காமல் இருக்குமா? ஐ லவ் ஹர்...'' என்று விழிகள் விரிய புன்னகைத்தவளை தோளோடு சேர்த்து சந்தோஷமாக அணைத்துக் கொண்டான்.

ஒரு மணிநேர இடைவெளிக்கு பிறகு மீண்டும் பிற்பகலில் கிளம்பி சுற்றி பார்க்க கிளம்பியவர்களுக்கு, 'கோத்தி' என்ற இடத்தின் அழகு, மனதை கவர்ந்தது. பார்க்கும் திசை எல்லாம் பனி படர்ந்த சிகரங்களும், ஓங்கி உயர்ந்து வளர்ந்த பைன் மரங்களும், ஆழமான பள்ளத்தாக்குகளும், அதன் நடுவில் ஓடிய பீஸ் நதியும் பார்க்க பார்க்கத் தெவிட்டவில்லை.

இதுதான் பெஸ்ட் என்று எண்ணி முடித்த அடுத்த அரை மணி நேரத்தில், ''ரஹ்லா நீர்வீழ்ச்சி''யின் அழகு முந்தையதை தூக்கி சாப்பிட்டது. இதுவரை தமிழ்நாட்டில் காண கிடைக்காத இயற்கை காட்சிகள் என்பதால், கையோடு கொண்டு வந்து இருந்த வீடியோ கேமராவில் புகைப்படங்களும் வீடியோ காட்சிகளுமாக நிரப்பி கொண்டு இருந்தனர்.

அடர்ந்த காட்டுக்கு நடுவில், பஞ்சபாண்டவர்களில் ஒருவரான பீமனின் மனைவியான ஹிடும்பியின் பாதம்

பதிந்த இடத்தை மரத்தால் செய்யப்பட்ட நான்கு அடுக்கு கோவிலாக இருந்ததை, மணலி வனவிலங்கு பூங்காவை, ஆப்பிள் தோட்டங்களை, பார்த்து ரசித்தவர்கள் தங்களுக்குள் பரிமாறி கொண்ட விஷயங்களை கணக்கில் அடங்காது.

பிரளயம் வந்து பூலோகம் அழிந்த வேளையில் உயிருடன் இருந்தது மனு மட்டுமே. அவரின் இருப்பிடம் தான் மணலி என்று அழைக்கப்பட்டது. உலகமே அழிந்த பின்பு, அதை மீண்டும் அவர் உருவாக்கியது இந்த இடத்தில் இருந்து என்பதால் இந்துக்களுக்கு இது புனிதமான இடமாகவும் கருதப்படுகிறது என்ற தகவல் அவர்களை வியப்பிலாழ்த்தியது.

அந்த நாள் முழுவதும் பல இடங்களை சுற்றி பார்த்துவிட்டு, இரவு உணவை முடித்து, ஒன்பது மணிக்கு அறைக்கு வந்த பிறகு, ''நீ பத்திரமா இரு ப்ரியா, அஞ்சு நிமிஷத்துல வந்துடறேன்'' என்று கிளம்பியவனை ஆச்சரியமாக பார்த்தாள். ஐந்தே நிமிடங்களில் திரும்பி வந்தவனின் கைகளில் ஒன்றும் இல்லை. ''என்ன பிரேம், எங்கே அவசரமா போனீங்க?'' என்று கேட்டாள்.

அவளின் ஆர்வமான முகத்தை பார்த்தவன் ரகசிய சிரிப்புடன், ''எனக்கு பிடிச்ச ஒரு பொருள் வாங்க போனேன்...'' என்று விழிகள் பளபளக்க சொன்னான்.

''அப்படி என்ன வாங்கினீங்க? கையில் ஒண்ணும் காணோம்'' என்று கேட்டபடி அவனை ஒரு முறை சுற்றி வந்தாள்.

''கண்டுபிடி பார்ப்போம்...''

''ஏதாவது க்ளு கொடுங்க. சும்மா கண்டுபிடி என்றால்...''

''மூணு க்ளு தரேன். முதலாவது க்ளு அது சாப்பிடும் பொருள்...''

''சாப்பிடும் பொருளா? உங்களுக்கு என்ன பிடிக்கும் பிடிக்காது என்று தெரியாதே? இது பற்றி நாம் பேசி இருக்கோமா? இதுக்கான பதிலை உங்க க்ளு கணக்கில் சேர்க்கக்கூடாது'' என்ற நிபந்தனையுடன் கேட்டாள்.

''ரொம்ப முன்ஜாக்கிரதை தான். பேசி இருக்கோம்'' என்று சொன்னவன் விழிகளில் மேலும் பளபளப்பு ஏறியது.

''ரெண்டாவது க்ளு சொல்லுங்க.''

''இதை முதல் குறிப்போடு தொடர்பு படுத்தி யோசி. ஐடியா மொபைல் விளம்பரம் மாதிரி 'மாத்தி யோசி...''' என்று கண் சிமிட்டினான். அவர்கள் பேசியதே கம்மி. அதிலும் அவன் பேசியது ரொம்ப கம்மி. குறிப்பாக உணவு பொருட்கள் பற்றி பேசியது ரொம்ப ரொம்ப கம்மி, 'மாத்தி யோசி' என்ற வார்த்தையில் என்னவாக இருக்கக்கூடும் என்ற யூகம் தோன்றியது. முகம் பிரகாசமாக, ''அடுத்த க்ளு...'' என்று கேட்டாள்.

''இப்போதே கண்டுபிடிச்சுட்ட மாதிரி இருக்கு. அப்புறம் எதுக்கு இன்னொரு க்ளு?'' என்று கேட்டபடி அவளை நெருங்கினான்.

''கண்டுபிடிச்சாச்சு. கன்பார்ம் பண்ணிக்கணும் இல்லையா? இந்த ப்ரியதர்ஷினி ஒண்ணு நினைச்சு அதை நீங்க தப்பு என்று சொல்ல சான்ஸ் கொடுக்கலாமா? நீங்களே மூணு க்ளு தரேன் என்று சொன்ன பிறகு

கிடைத்த வாய்ப்பை மிஸ் பண்ணக்கூடாது. அதனால் மூன்றாவது குறிப்பையும் சொல்லிடுங்க. அப்புறமே நான் சொல்றேன்...''

''நீ அவசர குடுக்கை என்று நினைத்தேனே?''

''நான் அவசர குடுக்கை இல்லை. சூப்பர் ஸ்டார் பாடுற மாதிரி, பொதுவாக என் மனசு தங்கம். ஒரு போட்டியின்னு வந்துவிட்டா சிங்கம். தெரியுமில்ல...'' என்று கைகளை உயர்த்தி காட்ட அவன் அவள் புஜத்தில் முத்தமிட்டு சிரித்தான்.

''குறுக்கு வழியில் ட்ராக் மாறுவது எல்லாம் வேண்டாம். க்ளு...க்ளு... அதை சொல்லுங்க.''

''ஆரிய கூத்தாடினாலும் காரியத்துல கெட்டியா ப்ரியா மேடம்? மூன்றாவது க்ளு, இந்த பொருளை, இந்த இடத்தில், இந்த நேரத்தில் என்னை தவிர வேறு யாரும் கனவுல கூட வாங்கவே மாட்டாங்க. இதைவிட ஒரு ஈசியான க்ளு கொடுக்கவே முடியாது போ'' என்று சொன்னவனுக்கு விளையாட்டாக, தன்னிடம் கூட மனைவி தோற்றுவிடக்கூடாது என்ற கரிசனம் மிஞ்சி நின்றது.

''ம்ம்ம் கண்டு பிடிச்சுட்டேன். ஆனால் எங்கே வச்சு இருக்கீங்க என்று தான் யோசிக்கிறேன்'' என்று கவனமாக சொன்னவள், தன்னை நெருங்கி வந்தவனிடம் இருந்து பாதுகாப்பான தூரத்திற்கு நகர்ந்த படியே விசாரித்தாள். கண்கள் அவனை ஆராய்ந்தது. பத்தடிக்கு பத்தடி இருக்கும் அந்த ஹோட்டல் அறையில், நடுவில் பெரிய இரட்டை கட்டிலையும் வைத்து கொண்டு எவ்வளவு தூரம் நகர்ந்துவிட முடியும்? பின்னால் சுவர் தடுக்கி

நிற்க, அவள் அசையாமல் நின்றாள், எதிரே வந்தவன், இரண்டு கைகளையும் அவளின் இருபுறமும் வைத்து அவளை நகரவிடாமல் அணை கட்டினான்.

''பிரேம்... வேண்டாம்... நான் காலையில்... வெளியே... வெயில் நேரத்துல... அதுவும் கொஞ்சூண்டு... கன்னத்துல... தடவினேன்... நீங்க இங்கே... நைட் நேரத்துல... நோ...பிரேம்... ப்ளீஸ்...'' என்று கெஞ்சினாளா? கொஞ்சினாளா? என்று அவளுக்கே புரியாத குரலில் கிசுகிசுப்பாக சொன்னவளின் முகத்தை நெருங்கினான்.

''அதெல்லாம் சரி, இன்னும் நான் என்ன வாங்கினேன் என்று சொல்லவே இல்லையே?'' என்றவன் மூக்கு அவளின் மூக்கை உரசியது.

''ம்ம்ம், பிடிக்காது என்று கதை சொன்னீங்களே? அதானே?''

''நான் எப்போ பிடிக்காது என்று சொன்னேன்?''

''அன்னிக்கு நான் கேட்ட போது வேண்டாம் என்று சொன்னதுக்கு என்ன அர்த்தமாம்?''

''ம்ம்ம், தனியா வேற கப்பில் சாப்பிட இஷ்டம் இல்லை என்று அர்த்தம். முக்கியமா பிளாஸ்டிக் ஸ்பூனில் சாப்பிட இஷ்டம் இல்லை என்று அர்த்தம்'' என்று கன்னத்தில் உரசியபடி காதில் ரகசியம் பேசியதில், கிறங்கினாள்.

''ஓ! மர ஸ்பூன் வேண்டுமா?'' என்று கேலியாக கேட்டவள் குரல் குழைந்தது.

''ஸ்பூனே வேண்டாம்னு சொல்றேன் ப்ரியா...''

''முதலில் ஐஸ் க்ரீம் எடுடா, எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம்.''

''இப்படி கேட்டால் கொடுக்காமல் இருக்க முடியுமா?'' என்றவன் தன் நீண்ட உல்லன் கோட்டில் இருந்து ஒரு ஐஸ்க்ரீம் கப்பை எடுத்தவன். அவளின் கன்னத்தின் அருகே கப்பை பிடித்து ஒரு வாய் ஊட்டி விட்டான். அவள் அந்த சில்லிப்பை உணர்ந்து கண்களை மூடி கூசியபோது வேண்டும் என்றே கப்பை அவளின் கன்னத்தில் கவிழ்த்தான்.

''ஹேய் ராஸ்கல் வேண்டும் என்றே...'' என்று அவள் அவனை பிடித்து உலுக்க, அவன் சுவாரஸ்யமாக குனிந்து அவள் கன்னத்தில் மேலிருந்து கீழாக கோடாக வழிந்த ஐஸ்க்ரீம் வீணாகாமல் உண்ணும் வேலையில் ஈடுபட்டான். நடுவில் அவளின் கோபம் குறைந்து, அவளின் கரங்கள் அடிப்பதை நிறுத்தி அவனின் கழுத்தை வளைத்தபோது அவளுக்கும் அந்த ஐஸ்க்ரீமை சுவைக்கும் வாய்ப்பு கிடைத்தது.

* * *

நான்கு நாட்கள் சத்யாவின் பரிசாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த தேனிலவு பிரயாணம் மட்டும் இன்றி, அதோடு சேர்த்து டெல்லியில் மூன்று நாட்கள் தங்கி, ஒரு நாள் ஆக்ராவிற்கும், டெல்லியிலே இரண்டு நாட்கள் சுற்றி பார்த்தும், பொழுதை கழித்து விட்டு, இனிமையான நினைவுகளை சுமந்து கொண்டு சந்தோஷத்தோடு ஏழாம் நாள் காலையில் சென்னைக்கு வந்து இறங்கிய வர்களை குதூகலமாக வரவேற்க யசோதா - நந்தகோபால் தம்பதியினர் மட்டும் இன்றி, புவனேஸ்வரி - குருமூர்த்தி தம்பதியினரும் ஆவலாக காத்து இருந்தனர்.

காலை உணவிற்கு பின்னர் அம்மாவும் அப்பாவும் கிளம்பிச் சென்ற பிறகு, யசோதா தர்ஷினியிடம்

எத்தனை நாள் தர்ஷினி லீவு போட்டு இருக்க? எப்ப ஆபீஸ் போகணும்?'' என்று விசாரித்தார்.

''இன்னும் மூணு நாள் லீவு இருக்கு அத்தை. வரும் திங்கள் முதல் ஆபீஸ் போறேன். இந்த ஒரு வாரம் பிரேமோட செம போர் அத்தை. நீங்க ஒரு வாரம் என்ன பண்ணினீங்க?'' என்று அவரின் அருகில் அமர்ந்து கொஞ்சினாள்.

''பிரேமிற்கு பேச தெரியலையா? அவனுக்கு எப்பவும் வேலை கம்ப்யூட்டர், படிப்பு, இதுதான் தெரியும். நீதான் கொஞ்சம் குடும்பம் குழந்தை என்று மாத்தணும். அப்புறம் முதல் நாளே உன்னிடம் சொல்லணும் என்று நினைத்தேன். சரி போயிட்டு வந்த பிறகு சொல்லலாம் என்று விட்டு விட்டேன்...'' என்று யோசனையோடு நிறுத்தினார் யசோதா.

''நிஜமாவா? உங்களுக்கு கூட அப்படியெல்லாம் தயங்க தெரியுமா என்ன?'' என்று சிரித்தாள்.

''நீ தப்பா நினைக்கக்கூடாது ப்ரியா...'' என்று இன்னும் தயங்கினார்.

''இது அடுத்த சர்ப்ரைஸ். சும்மா சொல்லுங்க அத்தை. எனக்கு கோபிச்சுக்கவே தெரியாது...''

''உனக்கு சின்ன வயசு தான். ஆனாலும், குழந்தை இப்போ வேண்டாம் என்று எதுவும் கட்டுப்பாடு வச்சுக்காதீங்க. எனக்கு கூடிய சீக்கிரம் பேர குழந்தை ஆணோ, பெண்ணோ... எதுவானாலும் எனக்கு சந்தோஷம் தான். உடனே கிடைக்க ஏற்பாடு பண்ணிடு. ஓகே?'' என்று கேட்ட யசோதம்மாவை பார்த்து சிரித்தாள் தர்ஷினி.

''நீங்க கேட்ட உடனே, ஒரு குச்சியை சுழற்றி, பிடிங்க ஒரு பையன் ஒரு பொண்ணு என்று கொடுத்து விட இது என் கையில் இல்லையே அத்தை? சீக்கிரம் ரெடி பண்ணிடலாம்'' என்று கண் சிமிட்டி சொன்ன தர்ஷினியை கன்னத்தில் வழித்து திருஷ்டி கழித்தார் யசோதா. முன்னால் பேசிய விஷயத்தை கேட்காமல், அவர் கன்னத்தை வழித்த நேரத்தில் உள்ளே வந்த நந்த கோபால் பிரேம் இருவருமே முகம் மலர்ந்தனர்.

''அடடா! மாமியாரும் மருமகளும் கொஞ்சுவதை நாளைக்கு கொஞ்சம் மிச்சம் வச்சுக்கோங்க...'' என்று பிரேம் கிண்டல் அடிக்க, ''உனக்கு கிடைச்சது இப்ப பகிர்ந்து ரெண்டு பேருக்கும் போகுதே என்று பொறாமைடா உனக்கு'' என்று நந்தகோபால் சிரிக்க, அந்த வீட்டில் குதூகலம் பொங்கி வழிந்தது.



18

திருமணத்திற்கு என்று விடுப்பு எடுத்து இருந்த காலம் அன்றோடு முடிவதாக இருக்க, ஞாயிறு அன்று அதிகாலை நேரம் பிரேம்குமாரின் மொபைல் அழைத்தது. முதல் ரிங்கிலேயே எழுந்த பிரேம்குமார் 'இந்நேரத்தில் யார்?' என்று பார்த்தவனின் ஆச்சரியம் கூடியது. அப்பா அவசரமாக பட்டனை அழுத்தும் முன்பே கட் டாகிவிட்டது. அறையை விட்டு வெளியே வந்தவனின் கண்களில் கிளம்ப தயாராக இருந்த நந்தகோபாலும் யசோதாவும் பட்டனர்.

''சாரி கண்ணா, தூக்கத்திலே எழுப்பிட்டேனா?'' என்று அவசரமாக மன்னிப்பு கேட்டார்.

''ச்சே ச்சே! என்னப்பா ஒரு வீட்டுல இருந்துட்டு இதென்ன பார்மாலிட்டி? ஆமா எங்கே ரெண்டு பேரும் ஜாலியா ஜிலு ஜிலுன்னு கிளம்பி நிக்கறீங்க?''

''அம்மா ஒன்பது வாரத்துக்கு ஒவ்வொரு ஞாயிறும் மாங்காடு வரேன் என்று வேண்டிகிட்டா. போன வாரமே ஆரம்பிச்சாச்சு. ரெண்டு பேரும் போயிட்டு வரலாம் என்று கிளம்பினோம்...''

''அதென்ன ஞாயிற்றுக்கிழமை? செவ்வாய் வெள்ளி தானே அங்கே விசேஷம்?''

''அன்று தர்ஷினி ஆபீஸ் போக மாட்டாளா? அவளுக்கு எல்லாம் பார்த்து எடுத்து வைக்க வேண்டாமா? நான் பாட்டுக்கு கோவிலுக்கு கிளம்பி விட்டால், பாவம் சின்ன பொண்ணு அவள் உங்களுக்கும் பார்த்து மதியம் சாப்பாடு கட்டி எப்படி கிளம்புவாள்? அதுபோக விசேஷம் இல்லாத நாளாக இருந்தால் கூட பத்து நிமிஷம் சாமி முன்னால் நின்று பார்க்கலாம்'' என்று சொன்ன யசோதாவை அன்பாக பார்த்தான்.

''சரிம்மா, அதுக்கு இவ்வளவு சீக்கிரமாகவா? கொஞ்சம் நிதானமா போகலாம் இல்லையா? நேற்று கூட சொல்லவே இல்லையே?'' என்று வாஞ்சையாக கேட்டான்.

''காலையில் போனால் பஸ்ஸிலும் சரி கோவிலிலும் சரி கூட்டம் இருக்காது...''

''சும்மா வளவளன்னு பேசாதீங்க. போன் பண்ணி தொந்தரவு பண்ணிட்டார் உங்க அப்பா. எஸ்.எம்.எஸ்.

அனுப்ப சொன்னா அது தெரியாதாம். முதலில் சாயங்காலம் அதை உங்க அப்பாவிற்கு கத்து கொடு. நீ போய் தூங்கு ராஜா, காலைக்கு தோசை மட்டும் ஊத்தி சாப்பிடுங்க. சமையல் பண்ண வேண்டாம். நான் பத்து மணிக்கு வந்து பார்த்துக்கறேன்...''

''நான் பேசும் ஒரு வரி வளவளன்னு இருக்கு, இவங்க இவ்வளவு பேசுறது எந்த கணக்கோ தெரியலையே?'' என்று சிரித்தார் நந்தகோபால்.

இருவரும் சந்தோஷமாக இருந்தாலும், உற்சாகமாக பேசினாலும் இன்னும் என்ன வேண்டுதல் என்று கவலையாக இருந்தது. அருகில் வந்து ''இன்னும் என்னம்மா? இத்தனை நாள் எனக்கு கல்யாணம் ஆகலை என்று கோவில் கோவிலா சுத்தி விரதம் இருந்தாச்சு, இப்ப என்ன?'' என்று கேட்டான்.

''கல்யாணம் ஆனால் போதுமா? அடுத்து நடக்க வேண்டியது காலா காலத்துல நடக்க வேண்டாமா? நான் ஒன்பது வாரம் மாங்காடு போய் விரதம் முடிப்பதற்குள் தர்ஷினி அடுத்த நல்ல சேதி சொல்ல வேண்டாமா? போ, இன்னும் கொஞ்ச நேரம் தூங்கு. நாங்க வர பத்து பத்தரை ஆகும்...'' என்று தன் கன்னத்தில் தட்டி விட்டு போகும் அம்மாவை வெகுநேரம் பார்த்தபடி நின்று இருந்தான் பிரேம்குமார்.

பிரார்த்தனை செய்ய அம்மா கிளம்பியாச்சு என்று எண்ணியபடி சிரிப்போடு அறைக்குள் வந்து ப்ரியதர்ஷினியின் அருகில் படுத்தான். அவள் இன்னும் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்க, ஒற்றை விரலால் அவளின் முகத்தை வருடி விழிப்பு ஏற்படுத்த முயன்றான்.

''ஷ்! பிரேம், ஞாயிற்றுக்கிழமை கூட எங்க அம்மா மாதிரி தூங்க விடாமல் தொந்தரவு பண்ணாதீங்க. இன்னிக்கு ஆபீஸ் இல்லை. நாளைக்குதான் போகணும். தூக்கம் வருது'' என்று சிணுங்கியபடி படுத்தவளை தன் புறம் திருப்பி சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''ஞாயிற்றுக் கிழமை ஆபீஸ் தான் இல்லை. மத்த விஷயங்களுக்கும் லீவா? இன்றோடு உனக்கு லீவு முடியுது. நாளையில் இருந்து ஆபீசுக்கு போய்ட்டா எனக்கு போர் அடிக்கும். இன்னிக்கு ஒரு நாள் தானே நாம் ப்ரீயா இருக்கமுடியும். படுக்கையில் இருந்து எழுந்துக்க வேண்டாம். முழிச்சுக்கோ. அது போதும்.''

''இப்ப நல்லா தூக்கம் வருது பிரேம். அப்படியே தடவுங்க...'' என்று மூடிய கண்களை திறக்காமலே சொல்ல, அவள் தலையில் செல்லமாக குட்டினான்.

''இப்ப எழுந்துக்கலை, அடி பின்னிடுவேன்...'' என்று சொன்ன கடுமையான வார்த்தைகளுக்கு மாறாக, விரல்கள் அவளின் செவி மடலை வருடிக் கொண்டு இருந்தது. அணைப்பும் இறுக, விரல்களும் இதழ்களும் ஊர்வலம் நடத்த, தூக்கம் விலகி விட்டது.

''ஆபீஸ் போனால் அப்படியே போய்டுவேனா? வீட்டுக்கு வரமாட்டேனா? ஒரேயடியா புலம்புறீங்களே?'' என்று சொன்னவள், பொழுது விடிந்து இருப்பதை பார்த்ததும் அவசரமாக படுக்கையில் இருந்து இறங்க முயன்றாள்.

''எங்கே ஓடுற? என்ன அவசரம்?'' என்று அவள் கைகளை பற்றி இழுத்தான்.

''பொழுது விடிஞ்சுடுச்சு. அம்மா கிச்சனுக்கு போய் இருப்பாங்க. ஹெல்ப் பண்ண வேண்டாமா?''

''அம்மாவே வீட்டில் இல்லை. நீ யாருக்கு போய் ஹெல்ப் பண்ண போகிறாய்?''

''அம்மா எங்கே?''

''அம்மா அப்பாவையும் கூட்டிட்டு மாங்காடு கோவில் வரை போய் இருக்காங்க. வீட்டுல நாம ரெண்டு பேர் மட்டும் தான்...''

''அப்ப உங்களுக்கு இன்னிக்கு என் கையால் தான் சாப்பாடா? வெரி குட். இன்று என் சமையல் திறனை சோதித்து பார்க்க 'கினியா பிக்', கிடைச்சுது'' என்று எழுந்தாள்.

''இறங்கும்போது இடது புறம் எழுந்திரிக்காதே என்று உனக்கு எத்தனை முறை சொல்வது? வலது புறம் தான் எழுந்திரிக்கணும் என்று சொன்னேனே மறந்து விட்டாயா?''

''ஹேய் வலது பக்கம் நீங்க படுத்துக்கிட்டு, என்னை அந்த பக்கம் எழுந்திரிக்கவில்லை என்று சொன்னால் எப்படி?கட்டிலில் நான் இந்த பக்கம் தானே இறங்க வேண்டும்?''

''நீயும் இந்த பக்கமே இறங்கலாமே? நான் உனக்கு ஹெல்ப் பண்ணுவேனே?'' என்று கண் சிமிட்ட, அவள் ஒரு விரல் காட்டி மிரட்டினாள்.

''நீங்க என்ன ஹெல்ப் எப்படி பண்ணுவீங்க என்று எனக்கு தெரியாது?''

''ஷ்! பிரியா, நான் சீரியஸா சொல்றேன். வலது புறம் எழுந்திரிக்கணும். அதுக்கு காரணம் இருக்கு. உடலை இரு காந்த வளையங்கள் சுற்றி வருகின்றன. முதலாவது

காலிலிருந்து தலைக்கும் தலையிலிருந்து காலுக்கும் வலம் வருகின்றது. இரண்டாவது காந்த வளையம் இடப்பக்கத்திலிருந்து முன்பாகம் வழியாக வலப்பக்கத்துக்கும் வலப்பக்கத்திலிருந்து பின்பாகம் வழியாக இடப்பக்கத்திற்கும் வலம் வருகின்றது. காந்த வளையத்தின் திசைக்கு எதிராக அசையும் போது சுருள் தொய்ந்து உடல் இயந்திரத்தின் செயல் திறனை தளர்வடையச் செய்யும். உடல் வலது பக்கம் திரும்பி எழும்போது காந்த வளையத்தின் சுருள்களை இறுகச் செய்யும். சோர்வின்றி சுறுசுறுப்பாக இருக்கலாம். அறிவியல் ஆராய்ச்சி இதை ஒப்புகொள்கிறது. அதனால் நீயும் இந்த பக்கம் வா'' என்று கை நீட்டி அழைத்தாலும் அந்த இடத்தில் இருந்து நகரவில்லை.

''எப்படி நான் இறங்குவது?'' என்று சிணுங்கியபடி, அவனை தாண்ட முயன்றவளின் முயற்சி தோற்று, அவன் மேல் விழ, அடுத்த பல நிமிடங்கள் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காந்தம் போல் ஈர்த்ததில் இருவருமே படுக்கையை விட்டு இறங்கவில்லை. சீண்டல்களுடனும், சிரிப்புடனும் இருந்தவர்களை வீட்டு தொலைபேசி எழுப்பியது.

''ஹேய் போன் அடிக்குது, விடுங்க...'' என்று எழுந்து வந்தவள் அது அம்மாவின் அழைப்பு என்றதும் மேலும் உற்சாகமானாள்.

''ஹாய்ம்மா, எப்படி இருக்கீங்க? அப்பா எப்படி இருக்காங்க? என்னை நினைப்பீங்களா? இல்லை விட்டது தொல்லை என்று இருக்கீங்களா?''

''உன்னை நினைக்காமல் இருக்க முடியுமா? படுக்கையில் இருந்து எழுந்திரிச்சாச்சா? திருப்பள்ளி எழுச்சி பாட வரட்டுமா?''

''எழுந்து அரை மணி நேரம் ஆச்சு. சொல்லுங்கம்மா, காபி சாப்பிட்டாச்சா? டிபன் என்ன?''

''வெண்பொங்கல் பண்ணினேன். சாம்பார் விட்டு கரைச்சு குடிப்பியே, எடுத்துட்டு வரலாமே என்று நினைத்தேன்...''

''வாவ்! என் செல்ல அம்மா. சீக்கிரம் வாங்க. குளிச் சுட்டு ரெடியா காத்திருக்கிறேன். அத்தையும் கோவி லுக்கு போய் இருக்காங்க. எதுக்கு அவர் ரிஸ்க் எடுத்து என் சமையல் பரிசோதனையை சாப்பிடணும்? அப் படியே உங்க மாப்பிள்ளைக்கும் சேர்த்து எடுத்துட்டு வாங்க...''

''நீ மாறவே இல்லை தர்ஷினி. என்னை பேசவே விடாதே. வரணும் என்று நினைத்தேன் என்று சொன் னால், அதுல மாற்றம் வந்துடுச்சு என்று அர்த்தம். அது என்ன என்று விசாரிக்காமல் வாயைப் பாரு'' என்று அதட்டினார்.

''ம்ம் எனக்கு பொங்கல் இல்லை. அது தெரிஞ்சாச்சு. என்ன மாற்றம் என்று எனக்கு தெரிஞ்சால் என்ன? தெரியாவிட்டால் என்ன?''

''உன் வாய் அடங்காது. ஒரு நல்ல சேதி சொல் லணும். மாப்பிள்ளை இருந்தா போனை கொடு.''

''ம்கூம், பொல்லாத மாப்பிள்ளை. அவரிடமே சொல் லிக்கோங்க...'' என்று பழிப்பு காட்டியவள் போனை ஸ்பீக்கர் மோடுக்கு மாற்றினாள்.

''சொல்லுங்க அத்தை, நல்லா இருக்கீங்களா? என்ன நல்ல செய்தி? பாட்டியாக போறீங்களா? சத்யாவிடம்

இருந்து போன் வந்ததா?'' என்று கேட்டு வாய் மூடும் முன்பு புவனேஸ்வரியின் ஆச்சரிய குரல் ஒலித்தது.

''அது மாப்பிள்ளை, கேட்டியா தர்ஷினி?''

''அம்மா! உங்க மாப்பிள்ளையை கொஞ்சியது போதும். சீக்கிரம் போனை வைங்க. நான் சத்யாவிடம் பேச போறேன்...''

''ப்ரியா, அவசரப்படாதே! ரொம்ப சந்தோஷம் அத்தை. நான் அவங்க வீட்டுக்கு பேசறேன். நீங்க போய் பார்க்க போறீங்களா? ஏற்கனவே இன்று மதியம் இங்க எல்லோரையும் சாப்பிட வர சொல்லி இருந்தேனே, சத்யாவால வர முடியுமா?'' என்று சந்தேகமாக கேட் டான்.

''சத்யா இப்பதான் பேசினாள். நாங்களும் அங்கே வரலாம் என்றுதான் பொங்கலும் பண்ணி எடுத்துட்டு கிளம்பினேன். இந்த தகவல் வந்ததும் நாங்க ரெண்டு பேரும் அங்கே பூந்தமல்லி போய் பார்த்துவிட்டு வர லாம் என்று பார்க்கிறேன் மாப்பிள்ளை. அவங்க வீட்டுல விடுவாங்களா தெரியலை. சத்யாவுக்கு ட்ராவல் பண் ணலாமா பார்த்துட்டு போன் பண்றேன்.''

''அத்தை அவங்க வரலை என்றாலும் பரவாயில்லை நீங்க வந்துடுங்க. அம்மா உங்களுக்காக ஸ்பெஷல் மெனு போட்டு வச்சு இருக்காங்க'' என்று பொறுப்பாய் அழைப்பு விட்டான்.

''அம்மா இல்லை என்று சொன்னாலே? பரவா யில்லை, நம்ம வீட்டுல சாப்பிட என்ன இருக்கு? இன் னொரு நாள் பார்த்துக்கலாம்...''

''நீங்க இந்த மாதிரி பேசுவதை தான் அம்மா தொந்தரவா நினைப்பாங்க. அதனால் நீங்க கட்டாயம் வாங்க. மாமாவிடம் நான் சொல்றேன். போன் கொடுங்க...''

''அவர் பழம் ஸ்வீட் வாங்க போய் இருக்கார். நாங்க வரோம். ஆனால் அதுக்கு முன்னாடி நீங்க தப்பா நினைச்சுக்காமல், ஒரு நடை வந்து இந்த பொங்கலை வாங்கிட்டு போக முடியுமா? அது அவளுக்கு ரொம்ப பிடிக்கும். ப்ளீஸ்...''

''அத்தை இதுக்கு எதுக்கு ப்ளீஸ். நான் அரை மணி நேரத்தில் வரேன்'' என்று சொன்னவன் போவதற்கு முன்பே, பழங்களும், பலகாரங்களும் வாங்கி கொடுத்தது மட்டும் அல்லாமல், போனில் வாழ்த்துக்களும் சொல்லி இருந்தான்.

பதினோரு மணி அளவில் கோவிலில் இருந்து வீட்டிற்கு திரும்பிய யசோதாவிடம் இந்த செய்தியை சொல்ல, சந்தோஷம் அடைந்தவர், ''என் ராஜாத்தி! சீக்கிரம் நீயும் இதே மாதிரி நல்ல செய்தி சொல்லணும்'' என்று சொன்னது மட்டுமில்லாமல் ஏற்கனவே திட்டமிட்டு இருந்த விருந்தை மேலும் தடபுடலாக்கி, கணவரையும் உதவிக்கு அழைத்தார்.

மதிய விருந்து தயாரிப்பில் உதவியபடி யசோதாவிடம் பேசிக் கொண்டு இருந்தாள் தர்ஷினி. ''அத்தை இன்றோடு கல்யாணத்திற்கு போட்ட ஒரு மாச லீவு ஹோகயா, நாளையில் இருந்து ஆபீஸ் போகணும். உங்களுக்கு நான் வேலைக்கு போவதில் சிரமம் இல்லையே?''

''ரொம்ப கஷ்டமா இருந்தால் நீ வேலைக்கு போக வேண்டாம் தர்ஷினி. கட்டாயம் எதுவும் இல்லை.

உனக்கு பிடிச்சு இருந்தால் போ... இல்லை என்றால்...''

''ஹய்யோ அத்தை எனக்கு வேலைக்கு போவது ரொம்பப் பிடிக்கும். விதம் விதமா மனிதர்களை பார்ப்பது அவர்களின் என்ன ஓட்டத்திற்கேற்ப, குறும்படங்கள் உருவாக்குவது என்று என் வேலை ரொம்ப பிடிக்கும். வேண்டாம் என்று சொல்லாதீங்க.''

''தாராளமா போயிட்டு வா தர்ஷினி. எனக்கு ஒண்ணும் பிரச்னை இல்லை. இவன் அப்பாவோடு சொந்த தொழில் என்று இறங்கிட்டான். மருமகள் பெரிய கார்பொரேட் ஆபீசுக்கு வேலைக்கு போகிறாள் என்று பெருமைதான். ஆனால் கஷ்டப்பட்டு நீ எந்த வேலையும் செய்ய வேண்டாம் என்பதை தான் சொன்னேன்'' என்று அனுசரணையாக முடித்தார் யசோதா.

பிரேம் உட்கார்ந்து அம்மாவும் அப்பாவும் சமைப்பதை வேடிக்கைப் பார்க்க, தர்ஷினியால் கையை கட்டிக் கொண்டு அவனை மாதிரி உட்காரவும் முடியவில்லை. அவர்கள் சமைக்கும் பதார்த்தங்களை செய்வதும் தெரியாத நிலையில், சின்ன சின்ன வேலைகள் செய்து, கேலி பேச்சுக்களுடன் சூழலை கலகலப்பாக மாற்றி கொண்டு இருந்தாள்.

மதிய உணவு நேரத்தில் வந்து சேர்ந்த அம்மாவையும் அப்பாவையும் வரவேற்றவள், அவர்களோடு அத்தையையும் மாமாவையும் உட்கார வைத்து உணவு பரிமாறினாள். அவளை உட்கார வைக்க யசோதா செய்த முயற்சிகள் வீணாக போனது.

''அத்தை ப்ளீஸ், எனக்கு உங்க அளவு சமைக்க தெரியாமல் இருக்கலாம். ஆனால் சமைத்த சாப்பாட்டை

பரிமாற தெரியாதா என்ன? அது புவனேஸ்வரி அம்மாக்கு கௌரவ குறைச்சல். எங்க அம்மா என்னைப் பார்த்து பெருமை படவாவது நீங்க உட்காரணும்'' என்று சொல்லி வாயை அடைத்து விட்டாள். யசோதாவின் வாயை அடைத்து அவரை உணவிற்கு உட்கார வைத்த உடனேயே ஏற்கனவே அமர்ந்து இருந்த பிரேம் எழுந்து விட்டான்.

''நீங்க சாப்பிடுங்க நான் ப்ரியாவிற்கு கம்பெனி கொடுக்கிறேன். நாங்க ரெண்டு பேரும் அப்புறம் சாப்பிடுறோம்'' என்று சொல்ல நான்கு பேருக்கும் மனம் நிறைந்தது.

''மாப்பிள்ளை உட்காருங்க. எல்லோருமே மாத்தி மாத்தி சர்வ் பண்ணிக்கலாம்'' என்று குருமூர்த்தி அவனை உட்கார வைக்க எண்ணியது நடக்கவில்லை.

''மாமா இந்த மாப்பிள்ளையை விட்டுடுங்க. என்னவோ நாலு ஊர் தள்ளி இருக்க மாதிரி ஒரு பீலிங் வருது. சும்மா பிரேம் என்று சொல்லுங்க'' என்று அவரின் கோரிக்கையை மறுத்தது மட்டும் இன்றி, புதிதாக ஒரு கோரிக்கை வைக்க மேலும் சிரிப்பு பொங்கியது.

உணவு முடியும் தருவாயில், ''பிரேம், ஐஸ்க்ரீம் வாங்கி வச்சு இருக்கேன். புது டின்னர் செட், மேல் தட்டில் இருக்கு. தர்ஷினிக்கு எட்டாது. நீ எடுத்து கொடேன்'' என்று யசோதா சொல்ல, ஐஸ்க்ரீம் என்ற ஒற்றை வார்த்தை பிரேம் - ப்ரியா இருவரின் பார்வையை இணைய வைத்து ரகசிய புன்னகை பூக்க வைக்க போது மானதாக இருந்தது. சின்ன கேலி பார்வையுடனும்,

குறும்பு சிரிப்புடனும், பிரேம் உள்ளே அடுக்களைக்குள் செல்ல அவனை பின் தொடர்ந்தாள் பிரியதர்ஷினி.

''ஹய்யோடா! எங்களுக்கு எட்டாதா? எங்களால் அந்த ஐஸ் க்ரீம் கப்பை எடுக்க முடியாதா? இதுக்கு நீங்க வேணுமாக்கும்?''

''என்னிடம் ஏன் கேட்கிறாய்? அம்மா தானே சொன்னாங்க. அங்கே போய் கேளு. நீதான் எடேன். நான் வேண்டாம் என்றா சொல்றேன்? நான் ஹெல்ப் பண்றேன்'' என்று கேலியாக சொன்னவன், அவளை நெருங்கி, இடையை பற்றினான்.

''அதெல்லாம் எப்போ எப்போ என்று காத்து இருப்பீங்களே?'' என்று கேட்டவளின் கரங்கள், அவனுடைய கைகளின் நடமாட்டத்துக்கு தடை போட முயன்று தோற்றது.

''பின்னே! சான்ஸ் கிடைத்தால் விடுவோமா?''

''சரி, நீங்க ரொம்ப ஆசை படுறீங்களே என்று நானே எடுக்கிறேன்'' என்று சொன்னவளின் குரலில் குறும்பு கொப்பளித்தது.

''அப்படியே இருக்கட்டும். வாழ்க உன் சிந்தனை'' என்று அவளை தூக்கி விட, ''எடுத்தாச்சு, இறக்கி விடுங்க'' என்றவளின் குரல் அவன் காதில் ஏறவே இல்லை.

''அன்று குலு-ல சாப்பிட்ட மாதிரி ஐஸ்க்ரீம் சாப்பிட ஒத்து கொண்டால் தான் இறக்கி விடுவேன்'' என்று பேரம் பேசினான்.

''நான் ஒத்துகொள்ளவே **வேண்டாம்**. தூக்கிட்டு நிற்பது நீங்க. கை வலிக்கப் போவது உங்களுக்கு.

எனக்கென்ன நஷ்டம்?'' என்று சொன்னவள் வார்த்தையை முடிக்கவில்லை. இடது கரம் உறுதியாக அவளின் இடையை பற்றி இருக்க, அவனின் வலது கரம் அசைந்த வேகத்தை அவளால் சில வினாடிகள் கூட சமாளிக்க முடியவில்லை.

''ஹேய் ஓகே ஓகே, ஆளை விடுங்க. நீங்க பெரிய பிஸ்தாதான்'' என்று அவசரமாக சிரிப்பையும் கூச்சத்தையும் அடக்கியபடி அவள் சொன்ன பிறகும், மிகுந்த நிதானத்துடன் துளி துளியாக அவளை அவன் ரசித்து இறக்கி விட நடுவில் உள்ளே கை கழுவ வந்த யசோதா அவசரமாக வெளியே போனதையோ மற்றவர்களை, ஹாலிலேயே கை கழுவ திசை மாற்றியதையோ அவர்கள் கவனிக்கவே இல்லை.

''தர்ஷினி நீ விளையாட்டு பிள்ளையா இருக்கியே? எப்படி சமாளிக்க போறியோ என்று பயந்துட்டே இருந்தேன். எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. இதே மாதிரி அத்தை மாமாவை நல்ல படியா பார்த்துக்கோ. பிரேம் கூடவும் அனுசரிச்சு நடந்துக்கோ. இன்னியோட லீவு முடியுதே? நாளைக்கு ஆபீஸ் போகணும். நீ வேலைக்கு போனால் வர சாயங்காலம் ஏழு மணிக்கு மேல் ஆகும். எப்படியும் ராத்திரி சாப்பாட்டுக்கு அவங்க உன்னை எதிர்பார்க்க போவதில்லை. அதனால் காலையில் சீக்கிரம் எழுந்து டிபன் வேலையாவது நீ பண்ணினால் நல்லா இருக்கும். தனியா பண்ண தெரியாவிட்டாலும், அத்தையோடு கூடமாட ஒத்தாசையா இருக்கணும். முக்கியமா வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்து பேசக் கூடாது. புரிஞ்சுதா?'' என்று கிளம்புவதற்கு முன்பு,

மகளிடம் வந்து அக்கறையாக அறிவுரை சொன்னார் புவனேஸ்வரி.

''அம்மா! அத்தை ஒண்ணும் தனியா வேலை செய்ய மாட்டாங்க. ப்ரேமே வேலை பார்ப்பார். மாமா செய் வாங்க. இங்கே எல்லோரும் எல்லா வேலையும் செய் றாங்கம்மா. நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க.''

''அதானே என் கவலையே தர்ஷினி! நீயும் சேர்ந்து செய்யணும். பார்த்துக்கோ'' என்று தலையை தடவி விட்டு விடை பெற்று கிளம்பினார். அம்மா அறிவுரை சொன்னதால், இரவு உணவு முடிந்த பின்பு அவள் யசோதாவுடனே அடுப்படியில் நின்று இருந்தாள்.

''இதெல்லாம் நான் பார்த்துக்கறேன் தர்ஷினி, நாளைக்கு ஆபீஸ் போக எல்லாம் எடுத்து வச்சுட்டியா? காலையில் அப்புறம் அதை காணோம் இதை காணோம் என்று தேடக் கூடாது. போ இப்பவே பார்த்து எடுத்து வச்சுக்கோ...'' என்று அவளை அனுப்ப முயன்றார் யசோதா.

''இல்லை அத்தை காலையில் சீக்கிரம் எழுந்திரிப்பது எனக்கு கஷ்டம். நைட்டும் நான் ஆபீசில் இருந்து வர ஏழரை ஆகிவிடும். அதனால் இப்ப கொஞ்சமாவது உங்களுக்கு ஹெல்ப் பண்றேன். பரவாயில்லை...''

''எனக்கு இந்த வேலையில் ஹெல்ப் பண்றதை விட முக்கியமான வேலை சொன்னேனே? மறந்துவிட்டாயா? போ பிரேம் வெயிட் பண்றான் பாரு...'' என்று கேலி சிரிப்போடு யசோதா அந்த நான்கு நாட்களில் இன்றைய கணக்கிற்கு குழந்தையை ஜாடை காட்டி சுட்டி பேச, தர்ஷினிக்கு ஒரு மாதிரி இருந்தது. இதென்ன

நாளுக்கு ஒரு முறையாவது ஏதாவது பேச்சில் இதை கொண்டு வந்து விடுறாங்களே?

''என்ன அத்தை எனக்கு கல்யாணம் ஆகி ரெண்டே வாரம் தான் ஆகுது. ரெண்டு வருஷம் ஆன மாதிரி தவிக்கிறீங்க? என்ன அவசரம் அத்தை? வர நேரத்துல வரட்டுமே.''

''நோ நோ தர்ஷினி. நடக்குறது காலாகாலத்துல நடக்கணும். ஏதாவது காரணத்திற்காக இதை தள்ளி போட்டா... அப்புறம்...'' என்ற யசோதாவின் பதட்டமான குரல் மறுத்து பேசிய நேரத்தில் அதை விட சத்தமாக ஒலித்த, ''ப்ரியா, இங்கே வா...'' என்ற பிரேமின் அதட்டலான குரல் கேட்டு ஆச்சரியமாக திரும்பினாள்.



19

அன்று பொழுது விடிந்ததில் இருந்தே உற்சாகமாக இருந்தது. கூடவே மாமாவும் அத்தையும் விருந்துக்கு வந்ததும், சத்யா பற்றிய நல்ல செய்தி சொன்னதுமாக கலகலப்பு மேலும் கூடி பொழுது இனிமையாக கழிந்தது. இரவு உணவு முடித்த பிறகு தர்ஷினி ஐஸ்க்ரீமோடு வர வழி மேல் விழி வைத்து காத்து இருந்தான் பிரேம்.

மதியம் ஐஸ்க்ரீம் கப் எடுக்கும் போது வைத்த பந்தயத்தில் தோற்றவள் ஒத்துகொண்ட விளையாட்டு இன்னும் முடியவில்லையே? அவள் அறைக்கு வரும் நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்து காத்து இருந்தவன்,

ப்ரியாவை சீண்டி, சீக்கிரம் வா என்று ஜாடை காட்ட அடிக்கடி அடுக்களைக்கு போய் வந்து கொண்டு இருந்த பிரேம் கடைசியில் ஒலித்த அம்மாவின் குரல் கேட்டு பதறினான்.

அம்மாவின் குரல் ஒலித்த வேகம் அவனுக்கு பதட்டத்தை ஏற்படுத்தியது என்றால், அதில் வந்த வார்த்தைகள் பதட்டத்தை மேலும் கூட்டியது. இந்த நேரத்தில் அம்மாவின் பேச்சை நிறுத்த முடியாது. இவளும் பதிலுக்கு பதில் பேசி வளர்ப்பாள் போல இருக்கே? தர்ஷினியை உடனே அந்த இடத்தில் இருந்து அகற்றுவதுதான் புத்திசாலித்தனம் என்று தோன்ற, ''ப்ரியா, இங்கே வா...'' என்று குரலில் அதட்டலை சேர்த்து சொன்னான்.

அந்த சத்தத்தில் அப்பாவும் அறையில் இருந்து வந்து விடுவார். அவரை அம்மாவை அழைத்து போக சொல்லி விட்டு, தான் ப்ரியாவை சமாதானப்படுத்தலாம் என்று எண்ணி இருக்க, அப்பா வந்த பிறகும் தர்ஷினி வெளியே வரவில்லை. அவளின் குரல் மட்டுமே வந்தது.

''வேலையா இருக்கேன் பிரேம். என்ன வேண்டும்?'' என்று இருந்த இடத்தில் இருந்து அசையாமல் கேட்டாள்.

''கூப்பிட்டால், கிட்டே வந்து என்ன என்று கேட்க பழகு ப்ரியா'' என்று அதட்டலாக சொன்னதை அவள் அந்த நேரத்தில் எதிர்பார்க்கவில்லை. இப்ப ரெண்டு நிமிஷம் முன்னாடி கிட்டே வந்து அத்தைக்கு தெரியாமல் இடுப்பை வருடி சீண்டி விட்டு போனவன் தானே? அதற்குள் என்ன ஆகிவிட்டது என்று எண்ணிய படி, வெளியே வந்தாள்.

''எதுக்கு பிரேம் அப்படி சத்தமா கூப்பிட்டீங்க?'' என்று எரிச்சலை மறைக்காத குரலில் கேட்டாள். தர்ஷினி வெளியே வருவதற்குள் பிரேம் அவரிடம் சொல்லி இருந்ததால், நந்தகோபால் அடுக்களைக்கு சென்று, யசோதாவிடம் பேச்சு கொடுத்தார்.

''மதியம் ஐஸ்க்ரீம் வேண்டாம் என்று சொல்ல சொல்ல அம்மாவும் பையனும் கேட்காமல் சாப்பிட வைத்து இப்ப தொண்டை ஒரு மாதிரி இருக்கு. கொஞ்சம் மிளகு,மஞ்சள்தூள், பனங்கல்கண்டு போட்டு பால் காய்ச்சி தருகிறாயா?'' என்று யசோதாவின் கவனத்தை திசை திருப்பி, அதில் அவர் வெற்றியும் கண்டுவிட, பிரேம் கவனத்தை தர்ஷினியிடம் திருப்பினான்.

''நாளைக்கு காலையில் ஆபீஸ் போகணுமே? திங்க்ஸ் எல்லாம் இப்பவே எடுத்து வச்சுக்கோ. அப்பதான் காலையில் டென்ஷன் இல்லாமல் கிளம்பலாம். நீ உன் வண்டியில் போகிறாயா? நான் கொண்டு வந்து விடட்டுமா?'' என்று கேட்டான்.

''நானே என் வண்டியில் போய்க்கறேன். இதுக்குதான் அவசரமா கூப்பிட்டீங்களா?''

''எல்லா விஷயத்தையும் வெளிப்படையாய் பேச முடியாது ப்ரியா. வா ரூமில் போய் பேசலாம்'' என்று கை பற்றி இழுத்தான். அவன் இழுத்த இழுப்பிற்கு அறைக்குள் வந்து விட்டாலும் அவளுக்கு சுறுசுறுவென்று இருந்தது. இதே பிறந்த வீடாக இருந்து, சொன்னது சத்யாவாக இருந்தால், நான் வேலையா இருக்கேன். நீ வா என்று சவால் விட்டு இருக்கலாம். இங்கே அப்படி

சொல்ல விடாமல் ஏதோ தடுத்தது. பேசாமலே அலமாரிக்குள் இருந்து மறுநாளுக்கு வேண்டியதை எடுத்து வைத்தாள்.

'ப்ரீ குட்டிக்கு கோபமா?' என்று கொஞ்சியபடி பின்னால் இருந்து அணைத்த பிரேமை பார்க்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு நிமிஷம் முன்னாடி அப்படி கத்தியவன், இப்போது இப்படி கொஞ்சுகிறானே? இவன் சீரியஸ் டைப் இல்லையா?

''எனக்கென்ன கோபம்? உங்களுக்குதான் காரணமே இல்லாமல் கோபம் வருகிறது. நான் ஏதாவது தப்பு பண்ணினால், அதற்காக என்னை திட்டினால் பதிலே பேசாமல் போய்விடுவேன். தப்பு என்று உணர்ந்த நிமிடம் சாரி கேட்கவும் தயங்க மாட்டேன். ஆனால் காரணம் இல்லாமல் என்னை அதட்டுவது எனக்கு பிடிக்காது. அதே மாதிரி எதையாவது செய்யாதே என்று சொன்னால் அதை செய்து பார்க்க வேண்டும் என்று தோன்றும். இப்ப எதுக்கு கொஞ்சம் முன்னாடி அப்படி சத்தமா கூப்பிட்டீங்க? முதலில் அப்படி கூப்பிட்டதுக்கு சாரி சொல்லுங்க'' என்று ஒரு வேகத்துடன் பேசியவள் அவனிடம் இருந்து சத்தமே இல்லை என்பதை உணர்ந்து திரும்பினாள். அவன் கைகளை மார்புக்கு குறுக்கே கட்டியபடி அவளையே பார்த்து கொண்டு இருந்தான்.

''என்ன அப்படி பார்க்கிறீங்க? நான் சொன்னது காதில் விழுந்ததா இல்லையா?''

''ஓகே, ஐ ஆம் சாரி ப்ரியா. ஆனால் நீ அம்மாவிடம் விவாதம் பண்ணினால் எனக்கு சங்கடமா இருக்கு.

இனிமேல் அப்படி செய்யாதே. அவங்களுக்கு உயர் ரத்த அழுத்தம் இருக்கு...''

''அத்தைக்கு ரத்த அழுத்தமா? அவங்களை மாதிரி ஜாலியா இருப்பவங்களுக்கு எப்படி வரும்? என்னால் நம்பவே முடியலையே?''

''யாருக்கு எந்த நேரத்தில் என்ன வியாதி வரும் என்று யாருக்கு தெரியும்? அனேகமா இன்று மாத்திரை சாப்பிட மறந்து இருப்பாங்க என்று நினைக்கிறேன். சில சமயம் அம்மா டென்ஷன் ஆகி ஏதாவது சொன்னால் அதை பொருட்படுத்த வேண்டாம். கூடிய வரைக்கும் அவங்க மாத்திரை சாப்பிட்டு விட்டார்களா என்பதையும் செக் பண்ணிக்கோ.''

''அம்மாக்கு என்ன பிரச்னை பிரேம்...''

''ப்ச் ப்ரியா எதை பற்றி நான் பேசக் கூடாது என்று நினைக்கிறேனோ, பேசக்கூடாது என்று எண்ணி ஒதுக்கி வைக்கிறேனோ, அதையே நோண்டி நோண்டி கேள்வி கேளு. எனக்கு சுத்தமா பிடிக்கலை'' என்று சொல்லி விட்டு படுத்து விட்டான் பிரேம்.

''பிரேம், உங்களுக்கு எதுக்கு இவ்வளவு கோபம்? நான் அப்படி என்ன சொன்னேன்? குழந்தை வரும் போது வரட்டும் என்று சொன்னேன். அதுல என்ன தப்பு இருக்கு?''

''ப்ரியா நீ புரிஞ்சு பேசுறாயா? இல்லை புரியாமல் பேசுகிறாயா? எந்த அம்மாக்கும், மணமான பையன் மூலமா ஒரு பேர குழந்தையை பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். அதுல எந்த தப்பும் இல்லை.''

''தப்பு சொல்லலை பிரேம். ஆனால் நமக்கு கல்யாணம் ஆகி ஒரு மாசம் கூட ஆகவில்லை. இந்த நிலையில் தினமும் குழந்தை பற்றி பேச்செடுப்பது, அதுவும் இன்றைய கணக்கிற்கு இது இரண்டாவது முறை பிரேம். இது கொஞ்சம் டூ மச்...''

''ப்ரியா, எல்லோரும் ஒரே மாதிரி இருக்க முடியாது. அம்மா குழந்தைக்கு அதிகமா ஆசை படுவாங்க. அதை பற்றி அடிக்கடி பேச்செடுப்பாங்க. அதை மட்டும் நீ பொறுத்துக்கோ. வேறே எந்த விஷயத்துலயும் அவங்களால் உனக்கு தொந்தரவே இருக்காது. புரிஞ்சுக் கோம்மா ப்ளீஸ். அம்மா சொல்லும்போது அவர்களிடம் ஒண்ணும் சொல்லாதே, அந்த கோபத்தை என்னிடம் காட்டு. சண்டை போடு. அந்த உரிமையை நான் தருகிறேன்.''

''ஒருத்தர் பேசுவதற்கு அடுத்தவரிடம் சண்டைபோட என்னை லூசு என்று நினைத்தீர்களா பிரேம்? நான் எப்பவும் நேருக்கு நேர் மோதி பார்த்து விடும் வீராங்கனை ஆக்கும்...''

''ஏய்! ஏய்! என்ன பேசுற நீ?'' என்று பதட்டத்தோடு படுக்கையில் இருந்து ஓடி வந்து அவளை பற்றி உலுக்கினான் பிரேம்.

''அட நீங்க ஏன் இப்படி பயப்படுறீங்க? எங்க அம்மா என்னை திட்டாததா? அவங்க சொல்றதை ஒரு காதில் வாங்கி மறு காதில் விடுவது மாதிரி... தப்பு... தப்பு.... காதிலேயே வாங்காத மாதிரி இந்த விஷயத்தில் அத்தை சொல்றதை விட்டு விடுகிறேன். சந்தோஷமா? ஸ்டே கூல் மை பாய்...'' என்று அவன் கன்னத்தில் செல்லமாக தட்டினாள் தர்ஷினி.

''ஒரு நிமிஷத்துல என்னை அக்னி உலையில் தூக்கி போட்டு விட்டு, இப்ப ஸ்டே கூலா? உன்னை...'' என்று எரிச்சலோடு சொல்லி விட்டு மீண்டும் போய் படுக்கையில் படுத்து கண்களை மூடி கொண்டான்.

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவன் என்ன நிமிஷத்திற்கு ஒரு முறை மூட் மாறுகிறான்? முதலில் அடுக்களைக்கு வந்து தன்னை தொட்டு சீண்டி, ஐஸ்க்ரீம் எங்கே என்று கிண்டல் அடித்து கொண்டு இருந்தான். அடுத்த நிமிஷம் குரல் உயர்த்தி அதட்டினான். அப்புறம் ப்ரீ குட்டி என்று கொஞ்சினான். இப்ப மறுபடியும் கோபம். இவன் சிரிக்கிறானே என்று கேலி பேசினால் உடனே சுருண்டு கொள்கிறானே? யோசனையோடு அருகில் வந்தாள்.

''என்ன பிரேம் படுத்துட்டீங்க?''

''ப்ச்! லைட் ஆஃப் பண்ணிட்டு படு, காலையில் பேசிக்கலாம்.''

''காலையில் என்னை டிராப் பண்றீங்களா பிரேம்?''

''ம்ம்ம், சரி. ஆனால் சாயங்காலம் என்னால் வர முடியாதே? அப்ப பஸ், ஆட்டோ என்று காத்து இருப்பதை விட வண்டியை எடுத்து போனால் சௌகரியமாக இருக்காது?'' என்று கண்களை திறக்காமலே சொன்னவன் கன்னத்தில் சந்தோஷமாக முத்தமிட்டாள்.

''அது போதும் பிரேம். நான்தான் அப்பவே என் வண்டியில் போகிறேன் என்று சொல்லி விட்டேனே? இது சும்மா உங்க டெம்பரேச்சர் பார்க்க கேட்டது. கொண்டு வந்து விடுகிறேன் என்று சொன்னதே போதும். இங்கே நோக்கம் தான் முக்கியம். செயல் முக்கிய

மில்லை'' என்று சொன்னவள் உற்சாகமாக அடுத்த கன்னத்திலும் முத்தமிட்டாள்.

அந்த கேலி பேச்சும், சீண்டலும், முத்தங்களும் வாடி இருந்த அவன் மனதையும் மாற்றியது. ''நீயே ஐடியா கொடுத்து விட்டாய். எப்ப கேட்டாலும் இதேமாதிரி பதில் சொல்லி சமாளித்து விட மாட்டேன்?'' என்று சீண்டியவன் குரலிலும் உற்சாகம் இருந்தது.

''ஹை! எப்ப பார்த்தாலும் ஒரே மாதிரியான டெஸ்ட் வைப்போம். நாங்க எல்லாம் விதம் விதமா முயற்சி பண்ணுவோமில்ல. நாங்க யாரு?''

''நாங்களும் உங்க குரல் காட்டும் உணர்வுகளை படித்து விதம் விதமா பதில் சொல்வோமில்ல?'' என்று அவளை மாதிரியே சொல்ல, உற்சாகம் பெருகியது.

''சூடு நல்லா குறைந்து விட்டது போல? ஜில்லுன்னு ஆக்க, ஐஸ்க்ரீம் எடுத்துட்டு வரட்டுமா?'' என்றவளின் இதழ்கள் அவன் முகத்தில் அலை பாய்ந்தது.

''ஐஸ்க்ரீம் இனிதான் எடுத்து வரணுமா ப்ரியா? இங்கே பக்கத்தில் இருப்பதே ஜில்லுன்னு தான் இருக்கு'' என்று சொன்னவன் அவளை அருகில் சரித்து குனிந்தான்.

''இப்படி பேசினால் தான் எனக்கு பிடிச்சு இருக்கு பிரேம். உர்ருன்னு இருக்காதீங்க. அம்மா டென்ஷனா இருக்கும்போதுகூட நான் வாயடிச்சுட்டே இருப்பேன். பீ ஹேப்பி. ஓகே?''

''நான் ஹேப்பியா இருக்கணும் என்றால் இந்த வாய் மூடியே தான் இருக்கணும்'' என்று இரு பொருள் பட

சொன்னவன், அதை செயல்படுத்தும் முயற்சியில் இறங்கினான்.

அம்மாவும் தானும் ஒருவர் மேல் ஒருவர் வைத்து இருக்கும் அளவில்லாத அன்பு மட்டும் இன்றி, அதன் அடிப்படை காரணமும் அவளுக்கு தெரியும் என்ற எண்ணத்தில் பிரேம்குமார் இருக்க, நேற்று புதிதாக திருமணம் ஆகி வந்தவள், வந்த கொஞ்ச நாளில் சின்ன விஷயத்தை ஊதி பெரிதாக்கி, அம்மாவையும் மகனையும் பிரித்து விட்டாள் என்ற சொல்லிற்கு தான் ஆளாக வேண்டாம் என்ற எண்ணத்தில் தர்ஷினி இருக்க, இதுதான் பிரச்னை என்று உடைத்து பேசாமலே, தீர்வு என்று அவர்கள் எண்ணியதை இருவரும் செயல்படுத்த தொடங்கினார்கள்.



20

சுமார் மூன்று வாரங்களுக்கு பிறகு அலுவலகம் சென்ற தர்ஷினிக்கு அலுவலகத்தில் நுழையும் போதே பிரமாதமான வரவேற்பு கிடைத்தது. வாங்க மேடம், லீவு எல்லாம் எப்படி போனது? கல்யாண வாழ்க்கை எப்படி இருக்கு? மாமியார் தொந்தரவு இருக்கா? அதெப்படி தர்ஷினி அக்காவிற்கு கல்யாண மாப்பிள்ளை பார்த்து கொடுத்தவரையே நீ மாப்பிள்ளையாக ஆக்கி கொண்டாய்? ஹனிமூன் எப்படி இருந்தது? காலேஜ் முடித்த உடனே வேலை. வேலையில் சேர்ந்த உடனே

கல்யாணம்? என்று அவரவர் மனநிலைக்கு ஏற்ப, அன்பாக, அக்கறையாக, கேலியாக பொறாமையாக என்று பல விதமான உணர்வுகளுடன் தர்ஷினியிடம் விசாரணை நடந்தது. புன்னகை மாறாமலேயே அவரவர் மனநிலைக்கு ஏற்றபடி, பதில் சொன்னாள்.

'எங்களுக்கு தனியா பார்ட்டி வைக்கணும். நியாயமா கல்யாணத்துக்கு முன்னர் கொடுத்து இருக்கணும். பரவாயில்லை கல்யாணம் முடிஞ்சுடுச்சு. அடுத்த வார இறுதியில் எங்க எல்லோருக்கும் ஒரு லஞ்சோ, டின்னரோ, கொடுத்து விடு' என்று எல்லோரும் நச்சரிக்க, அதற்கு ஒப்பு கொண்டாள்.

மதிய உணவு இடைவேளையில், வீட்டில் இருந்து போன் வர, பிரேம் தான் அழைக்கிறானோ என்று ''ஹேய் பிரேம்'' என்று கொஞ்சலாக சொல்ல, எதிர்முனையில் யசோதா சிரித்தார்.

''என்ன மேடம் ஆபீசுக்கு போனாலும் அய்யா நினைப்புதான் சுத்தி சுத்தி வருதா? குலு-மணாலில் ஒரு வாரம் தனியா ரொம்ப போர் அடிச்சது என்று சொன்னது பொய்தானே?'' என்று கேலியாக விசாரித்தார்.

''அத்தை, நீங்க கூப்பிடுவீங்க என்று நான் எதிர் பார்க்கவே இல்லை. வீட்டு நம்பர் என்றதும், அவர் தானோ என்று சொல்லிட்டேன். போதும் கேலி, சாப்பிட்டாச்சா?''

''இந்த பேச்சு மாற்றும் வேலை என்னிடம் வேண்டாம். அன்று பிரேமோட ஒரு வாரம் தனியா இருந்தது போர் என்று சொன்னது பொய் தானே? அதுக்கு முதலில் பதிலை சொல்லு...''

''என்ன அத்தை, நீங்க பதினாறு வயதினிலே கமல் மாதிரி ஒரே டயலாக்கை சொல்லிக்கிட்டு இருக்கீங்க. நாங்க அடுத்த ஜெனரேஷன் இல்லையா? தோற்கிற மாதிரி இருந்தால் சைலண்டா அடுத்த டாபிக் போய் டுவோம், நீங்க சாப்பிட்டாச்சா?''

''நாங்க உங்களுக்கு முந்தைய ஜெனரேஷன் இல்லையா? உங்க வயசை நாங்களும் தாண்டிதானே வந்து இருக்கிறோம். நீங்க சொல்றதுல எது நிஜம், எது பொய் என்று கண்டுபிடிக்க தெரியாமலா இருக்கிறோம். சரி வேலை நேரத்துல தொந்தரவு பண்ணிட்டேனா?''

''அதெல்லாம் இல்லை அத்தை. என்னோட வேலை கடிகாரம் பார்த்து செய்யும் வேலை இல்லை. யோசிக்கணும் வரையணும். அதனால் பரவாயில்லை. உங்களிடம் பேசுவதை விட முக்கியமா நான் எந்த வேலையும் செய்துட்டு இருக்கலை. போக இப்ப லஞ்ச் டைம் தான். நிறைய பேர் சீட்டில் இருக்கமாட்டாங்க. சொல்லுங்க அத்தை...''

''வீட்டு நம்பர் என்றால் பேசுவது நான்தான் என்று முடிவு பண்ணிக்கோ. அவங்க ரெண்டு பேருமே மொபைல் எண்ணில் பேசுவாங்க. நான் சாப்பிட உட்கார்ந்தேன். நீ வேலை வேலை என்று சாப்பிடாமல் விட்டுவிட போகிறாய் என்று உன்னை விசாரிக்க போன் பண்ணினேன். நான் சாப்பாடு கட்டி கொடுத்து பனிரெண்டு பதிமூணு வருஷம் ஆச்சே? எப்படி இருக்கோ, என்று ஒரே கவலை. அதான் போன் பண்ணினேன்'' என்று வாஞ்சையாக கேட்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''அதெல்லாம் நேரா நேரத்துக்கு கரெக்ட்டா சாப்பிட்டு விடுவேன் அத்தை. கொஞ்சம் லேட் ஆனால் நல்ல சாப்பாடு எல்லாம் காணாமல் போய் விடும். சேனைக் கிழங்கு வறுவல் சூப்பரா இருந்தது. என்னோட டிபன் பாக்ஸ் அளவை பார்த்து எல்லோரும் கேலி பண்ணினாங்க. ஆனால் எல்லோரும் ஆளுக்கு ஒரு வாய் எடுத்து கொண்டதில் எனக்கு அதிகம் கிடைக்கலை. எல்லாமே நல்லா இருந்தது. சாப்பாட்டை விட, நீங்க இப்படி நான் சாப்பிட்டேனா இல்லையா என்று விசாரித்தது ரொம்ப நல்லா இருக்கு அத்தை...'' என்று சொல்ல அவர் சிரித்தார்.

''எனக்கு நீ வேற பிரேம் வேறயா தர்ஷினி? அவன் சாப்பிட்டானா என்று கேட்க மாட்டேனா? அது சரி, என்னோட அக்கறை நல்லா இருக்கு. சாப்பாடு நல்லா இல்லை என்று சொல்லிவிட்டாய். அங்கேதான் கொஞ்சம் இடிக்குது. நான் ரொம்ப சோகமா இருக்கேன். போ...''

''இன்னிக்கு என்னோட வம்பு பண்ணனும் என்று செம மூடில் இருக்கீங்களா? நைட் வீட்டுக்கு வந்த பிறகு வச்சுக்கலாம். இப்ப முதலில் போய் சாப்பிடுங்க. மணி ரெண்டாக போகுது.''

''சரி நீ வேலையை பாரு. ராத்திரி டிபன் என்ன பண்ணட்டும்?'' என்று விசாரிக்க அவள் மேலும் உருகினாள். ''சாப்பாட்டுல எனக்கு தள்ளுபடியே கிடையாது அத்தை. சூடா எது இருந்தாலும் ஒரு கட்டு கட்டிடுவேன். அதனால் நீங்க எது வேணா என்னை நம்பி தைரியமா செய்யலாம்'' என்று சிரித்து விட்டு போனை வைத்தாள்.

போனை வைத்த உடனேயே தர்ஷினிக்கு யசோதாவின் அன்பையும் கரிசனத்தையும் உடனே அம்மா அப்பாவிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் போல இருக்க, அப்பாவை அழைத்தாள்.

''என்னடா! இந்நேரத்துல போன்?'' என்று விசாரித்தார் குருமூர்த்தி.

''கிளாஸ்ல இருந்தீங்களாப்பா? தொந்தரவு பண்ணிட்டேனா?''

''இல்லை தர்ஷினி, ஆபீஸ் வேலை எப்படி இருக்கு? ஏதாவது நியுசா தர்ஷினி?''

''ஆமாப்பா, இப்ப அத்தை பேசினாங்க. நான் சாப்பிட்டேனா? சாப்பாடு எப்படி இருந்தது என்று எல்லாம் விசாரிச்சாங்க...''

''ரொம்ப சந்தோஷம் தர்ஷினி. ஆரம்பத்துல இருந்தே உன் மேலே ரொம்ப அக்கறையா இருந்தாங்க. பிரேம் மட்டும் இல்லை, அத்தையையும் நல்லா பார்த்துக்கணும் தர்ஷினி...''

''உண்மைதான்பா. கல்யாணத்துக்கு முன்னாடிகூட, பிரேமுக்கு பிடிச்சு இருக்கு என்று அவர் வாயை திறந்து சொல்வதற்கு முன்னாடியே அவங்க பொண்ணு கேட்க வந்துட்டாங்கப்பா, நீங்க சொல்லாமலே அவங்களை எனக்கு பிடிக்கும்.''

''அதான் வேண்டும். நீ புகுந்த வீட்டில் நல்ல படியா செட்டில் ஆகிவிட்டாய் என்று தெரிந்தால் எங்களுக்கு அதை விட வேறே என்ன சந்தோஷம் வேண்டும் சொல்லு? அம்மாவிடமும் ஒரு வார்த்தை சொல்

லிடு. அவள் அப்பப்போ என்னிடம் புலம்பிட்டே இருப்பாள்.''

''நான் சந்தோஷமா இருக்கிறேன். அதை உங்களிடம் சொல்ல தான் போன் பண்ணினேன். நீங்க சொல்லாவிட்டாலும் நானே அம்மாவிற்கு பேசி இருப்பேன்பா. பை...'' என்று அம்மாவிடமும் அந்த சந்தோஷ தகவலை பகிர்ந்து கொண்டு போனை வைத்தாள் தர்ஷினி.

* * *

முதல் நாள் இரவில் நந்தகோபால் திருமணமாகி இருபதுநாள் கூட முடியாத நிலையில் 'குழந்தையை பற்றி தர்ஷினியை தொந்தரவு பண்ணுவது சரி இல்லை' என்று அறிவுறுத்தி இருந்ததனாலேயே யசோதா அன்று தர்ஷினியிடம் கவனமாக குழந்தை பற்றிய பேச்சு எழாமல் தவிர்த்தார்.

இரவு உணவின் போது, தன்னுடைய அலுவலகத்தில் தன்னுடைய பிரிவில் இருக்கும் ஆறு பேர் திருமணத்திற்கு பார்ட்டி கேட்டதை சொல்லி, வரும் வார இறுதியில் இரவு விருந்துக்கு அழைக்கலாமா என்று அனுமதி கேட்டாள் தர்ஷினி.

''இதென்ன கேள்வி தர்ஷினி? தாராளமா வர சொல்லு. அப்படியே சத்யாவும் கிருஷையும் கூட கூப்பிடலாம். நேற்று லஞ்சுக்கு அவங்க வரலையே? சனியன்று இரவு வர சொல்லலாம். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை மெதுவா எழுந்திரிக்கலாம். அம்மா, நீங்க மறுநாள் காலையில் கோவிலுக்கு போகணுமா?'' என்று சம்மதம் சொல்லிவிட்டு அம்மாவை பார்த்தான் பிரேம்.

''நான் கோவிலுக்கு போவதற்கும் வீட்டுல விருந்து வைப்பதற்கும் என்ன சம்பந்தம்? நீ வர சொல்லு

தர்ஷினி. மொத்தமா பதினஞ்சு பேர் வருவாங்களா? சமாளிச்சுடலாம். அதுல உனக்கென்னடா கஷ்டம்?''

''சமைக்கப் போற நீங்களே ஓகே சொல்லிட்டால் எனக்கென்னம்மா கஷ்டம்?''

''அதை அப்பாவிடம் சொல்லு. சமைக்க போவது அவர்தான்.''

''என்ன மாமா இதுக்கு எல்லாம் அசரும் ஆளா நாம்? பெரிய பெரிய கல்யாணத்துக்கு வரும் ஐநூறு பேருக்கே பிரமாதமா விருந்து சமைச்சு அசத்திடுவோம். இருபது பேருக்கு சமைக்க மாட்டோமா என்ன?'' என்று தர்ஷினி நந்தகோபாலுடன் கூட்டு சேர, ''காசு வாங்கிட்டு யார் யாருக்கோ செய்றேன். எங்க வீட்டு பொண்ணு உனக்காக இதை கூட செய்ய மாட்டேனா?'' என்று அவரும் சந்தோஷமாக பதில் சொல்ல, மற்ற இருவரும் சிரித்தனர்.

''அட! உங்களுக்கு சப்போர்ட் பண்ண ஆள் வந்தாச்சு போல'' என்று யசோதாவும், ''அதென்ன ப்ரியா அசத்திடுவோம்? சமையலுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?'' என்று பிரேமும் கேலியாக சிரித்தனர்.

சனிக்கிழமை அன்று இரவு உணவிற்கு சத்யாவையும் கிருஷையும் அழைத்து இருந்ததால், கிருஷ்ணகுமாருக்கு வெளிவேலை வந்துவிட, வெங்கடேஷை அழைத்து போக சொல்லி இருந்தான். ''ஏற்கனவே போன வாரம் அவங்க கூப்பிட்டும் போகலை. இன்னிக்கு ரெண்டு பேரும் போயிட்டு வந்துடுங்க. ஜாக்கிரதை வெங்கி'' என்று சொல்லி அனுப்பி வைத்து இருக்க வந்தவர்களை உற்சாகமாக வரவேற்றாள் தர்ஷினி.

''வா வா சத்யா. எப்படி இருக்க? குட்டி செல்லம் எப்படி இருக்கு?'' என்று சந்தோஷமாக அவளின் வயிற்றை தடவி வரவேற்றவள். ''வாங்க டாக்டர், பார்த்து ரொம்ப நாளாச்சு. தினமும் சைதாப்பேட்டை தாண்டித்தானே காலேஜுக்கு போற. ஒரு நாள் இங்கே வரலாம் என்று தோணமாட்டேங்குது இல்ல'' என்று வெங்கடேஷை விசாரித்தாள்.

''என்னோட நல்ல மனசு உனக்கு புரியலை தர்ஷினி. ஒரு டாக்டர் ஒரு வீட்டை தேடிவந்தால், அந்த வீட்டில் இருக்கும் யாருக்கோ ஆரோக்கிய குறைச்சல் என்று அர்த்தம். அதனால்தான் எனக்கு இந்த வீட்டுக்கு வர இஷ்டம் இல்லை'' என்று சமாளித்தான்.

''ஆமா தர்ஷினி. இவனிடம் வீட்டுக்கு வர சொல்லி கேட்கிறாயா? அவன் அங்கேயே ரெண்டு நாளைக்கு ஒரு தடவை வந்து கொண்டு இருக்கிறான். கேட்டால் காலையில் கிளாஸ் சீக்கிரமா போகணும் என்று கதை சொல்றான். நான் இருக்கிறேனே வா என்று சொல்வதை காதில் வாங்க மாட்டேங்கறான். நீ வேற?'' என்று சலித்து கொண்டாள் சத்யா.

''ஓ! நீ அந்த காது கேட்காத டாக்டர் கோஷ்டியா?'' என்று சிரித்தாள் தர்ஷினி.

''அதென்ன காது கேட்காத டாக்டர் கோஷ்டி?'' என்று பிரேம் விசாரிக்க, யசோதா 'நான் சொல்றேன்' என்று இடையிட்டார்.

''உங்களுக்கு தெரியுமா? நானும் தர்ஷினியும் என் கல்யாணத்துக்கு முன்பு வீட்டில் இருக்கும்போது வெங்கிக்காக நெட்டில் டாக்டர்ஸ் ஜோக் தேடி படிச்சதுல

ரொம்ப சிரிச்சது இது. எப்படி உங்களுக்கு தெரியும்? தர்ஷினி சொன்னாளா?'' என்று சத்யா வியந்தாள்.

''உங்களுக்கு மட்டும்தான் நெட்டா? நானும் நெட்டில் படித்தேன். பிரேம் சொல்லி இருக்கான், தினமும் அரை மணி நேரம் ஜோக்ஸ் கட்டாயம் படிப்பேன். அது என்னுடைய மனநிலையை உற்சாகமாக வைத்து கொள்வதற்கு எனக்கு உதவும்'' என்று பெருமையாக சொல்ல, விஷயம் அபாயகரமான திசை நோக்கி செல்வதை உணர்ந்த பிரேம் இடையிட்டான்.

''கடைசியில் வெங்கடேஷ் என்ன மாதிரி டாக்டர் என்று நீங்க முடிவு பண்ணிட்டீங்களா? இல்லையா? அந்த ஜோக்கில் வந்த டாக்டர் என்ன பண்ணினார்?'' என்று பேச்சை திசை மாற்ற, ''என்ன அண்ணா? அவங்களே மறந்தாலும் நீங்க விட மாட்டீங்கறீங்க?'' என்று வெங்கடேஷ் அவன் மேல் பாய்ந்தான்.

''ரிலாக்ஸ்டா, 'எனக்கு மூணு நாளா சரியான இருமல் டாக்டர்' என்று சொன்னவரை, 'மூணு நாளா சும்மாவா இருந்தீங்க', என்று டாக்டர் கேட்டாராம். அதுக்கு அவன் 'இல்ல டாக்டர் நல்லா இருமிட்டுதான் இருந்தேன்', என்று சொன்னால் அதுக்காக நாம் டாக்டர் தொழிலையே விட்டுடலாமா என்ன? இந்த மாதிரி வரவங்களோட உடல் நலத்தை பாதுகாப்பதுதானே நமக்கு சேலஞ். இதுக்கு பயந்தால் எப்படி ஹீரோ ஆறது சொல்லு? அம்மா நீங்க சொல்லுங்க'' என்று ஊக்குவித்தான் பிரேம்.

''ஓ! சந்தடி சாக்குல நீ ஒரு ஜோக் சொல்லிட்ட போல, இது உனக்கு நான் சொல்றது இல்ல. இது ஜோக்''

என்ற எச்சரிக்கையுடன், ''ஒரு பேஷண்ட் டாக்டரிடம் போய், 'எனக்கு சரியாய் காது கேக்க மாட்டேங்குது' என்று சொன்னானாம். அதுக்கு அந்த டாக்டர், 'அதுசரி உங்களுக்கு இப்ப என்ன பிரச்னை? அதை சொல்லுங்க' என்று கேட்டாராம். நீயும் அதே மாதிரி காது கேட்காத கூறுப்பா?' என்று தர்ஷினி கேட்கிறா?'' என்று யசோதா சொல்ல எல்லோரும் சிரித்தனர்.

''அட ச்சே! புதுசா கல்யாணம் ஆனவர்கள் மத்தியில் நாம் நந்தி மாதிரி இருக்க வேண்டாமே என்று அப்பப்போ ஹாஸ்டலில் தங்கி சமாளித்தால் நமக்கு என்ன எல்லாம் பட்டம் கிடைக்குதுப்பா. நல்லதுக்கே காலம் இல்லை. அண்ணி தர்ஷினி தான் அப்படி என்றால், நீங்களும் சேர்ந்து டாக்டர்சை கிண்டல் அடிச்சீங்களா? இதுக்கு நெட்ல வேறே தேடினீங்களா?'' என்று சொல்ல கோபம் கொண்டான் வெங்கடேஷ்.

''அவள் கேலி பண்ணும் ஜோக்ஸ் தேடினாள். நான் அவர்களை பெருமைப்படுத்தும் விதமாக தேடினான். அதை வைத்தே இவளை மடக்கியும் இருக்கேன் தெரியுமா? அதை சொல்லலாம். ஆனால் பிரேம் பாவம்...'' என்று சத்யா தயங்க, வெங்கடேஷ் ''அது என்ன ஜோக். எனக்கு உடனே சொல்லணும்'' என்று குதித்தான்.

''நல்லா சொல்லிக்கோ, எனக்கு ஒண்ணும் இல்லை'' என்று தர்ஷினியே ஒத்து கொள்ள சத்யா ஆரம்பித்தாள். ''ஒரு பேஷண்ட் டாக்டரிடம் போய், 'என் புருஷன் கொஞ்ச நாளாவே தூக்கத்தில பேசறாரு. இதுக்கு என்ன பண்ணலாம்?' என்று கேட்டாராம். அதுக்கு அவர், 'நீங்க அவர பகல்ல கொஞ்சம் பேச விட்டா எல்லாம் சரியாய் போயிடும்' என்று சொன்னாராம். அது தர்ஷினி மாதிரி

பொண்ணுபோல....'' என்று சத்யா சொல்லி முடிக்கும் முன்பே அங்கே சிரிப்பு வெடித்து கிளம்பியது.

''கரெக்ட். தர்ஷி இருக்கும் இடத்தில் வேறே யாராவது வாய் திறந்து பேச முடியுமா என்ன? மற்றவர்கள் தூக்கத்தில் புலம்பிக்க வேண்டியதுதான். பாவம் ப்ரேம் அண்ணா...'' என்று வெங்கடேஷ் சொல்ல யசோதா இடையிட்டார்.

''அவசரப்படாதே கண்ணா! அதுக்குள்ளே பிரேம பாவம் என்று சொல்லாதே, தர்ஷினி பேசினாலும் எந்த நேரம் பேசாமல் இருக்கணும் என்றும் தெரிந்து வைத்து இருக்கிறாள் தர்ஷினியை தூக்கி சாப்பிடுவது மாதிரி ஒரு வாயாடி பொண்ணு உனக்கு வந்து சேர்ந்துட போறா'' என்று யசோதா சொல்ல சுற்றி இருந்த நெருங்கிய சொந்தம் மட்டும் இன்றி, விருந்திற்கு என்று வந்து இருந்த உடன் பணி புரிபவர்களுமே யசோதா தன் மருமகளின் மேல் வைத்து இருக்கும் பாசம். அவளை விட்டு கொடுக்காமல் தாங்குவது இவற்றை பார்த்து, மூக்கின் மேல் விரல் வைக்காத குறையாக வியந்தனர்.

மருமகளின் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு என்று வீட்டிலேயே விருந்து வைக்கவும், அதற்கு சமையல் செய்ய மாமனார் ஒத்து கொண்டது, விருந்தினர்களை இனிய முகத்தோடு வரவேற்று, உபசரித்து, கலகலப்பாக பழகிய மாமியார், ஐந்துநிமிடம் கூட அவளை விட்டு பிரிந்து தனியாக இருக்காமல், அவளுடைய நிழலாக, அவளின் முகம் பார்த்து அவள் சிரித்தால் மலர்ந்து, சிணுங்கினால் முகம் வாடி, நிழலாக இருந்த பிரேமையும் பார்த்து மலர்ந்தவர்கள் பலர் உண்டு

என்றாலும் பொறாமையில் வெந்து தவித்த சில இதயங்களும் இருக்கத்தான் செய்தது.

விருந்துக்கு வந்தவர்களில் எத்தனை கண்கள் கொள்ளி கண்களோ என்று யோசித்த புவனேஸ்வரி, விருந்து முடிய பத்து மணி ஆகிவிட்ட போதும், குரு மூர்த்தியை அனுப்பி, பெரிய பூசணிக்காய் வாங்கி வர செய்து, அவர்கள் நான்கு பேரையும் நிற்க வைத்து திருஷ்டி கழித்து விட்டே வீட்டிற்கு கிளம்பினார்.



21

முன்தினம் இரவு விருந்து முடிய வெகு நேரம் ஆகி இருந்ததாலும் அடுத்து வந்த இரண்டு வாரங்களில் நந்தகோபால் குறும் செய்தி மொபைலில் அனுப்ப கற்று கொண்டு இருந்ததால், அந்த ஞாயிறு அன்று செய்தி அனுப்பி விட்டு அவர்களின் தூக்கத்தை கலைக்காமல் இருவரும் கோவிலுக்கு கிளம்பி இருந்தனர்.

கோவிலில் அர்ச்சனை முடித்து விட்டு வெளி பிரகாரத்தில் அமர்ந்து இருந்த போது யசோதா அங்கே வருவது வழக்கமாக இருந்ததால், ''என்ன மாமி பையன் கல்யாணம் முடிச்சு ஷேமமா இருக்கானா? மாட்டு பொண்ணு ஏதாவது நல்ல சேதி சொன்னாளே?'' என்று அக்கறையாக விசாரித்த குருக்களுக்கு என்ன பதில் சொல்வது என்று யசோதா விழிக்க, நந்தகோபாலுக்கு

ஹைய்யோ என்று இருந்தது. அவர் அக்கறையில் தான் கேட்கிறார். ஆனாலும்...

கடந்த இரண்டு வாரங்களில் உண்மை நிலையை யசோதாவிற்கு விளக்கி, குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு யாரிடமும் குழந்தை என்ற பேச்சை எடுக்கக் கூடாது என்று சொல்லி வைத்து இருந்ததில், சத்யாவிடம் கூட அவர் அதை பற்றி விசாரிக்கவே இல்லை.

''மாமா, பையனுக்கு கல்யாணம் முடிஞ்சு ஒரு மாசம் தான் ஆறது. மெல்ல வரட்டும். இப்ப என்ன அவசரம்?'' என்று எரிச்சலை அடக்கி பதில் சொன்னார் நந்த கோபால்.

''ஒரு மாசம் தான் ஆறதா? நான் மாமியை ரொம்ப நாளா இங்கே பார்த்துண்டே இருக்கேனா? அதான் சரி யாய் பிடிபடலை. எல்லாம் அம்பாள் கையிலே கொடுத் துடுங்கோ. அவளே எல்லாம் நல்ல படியா முடிச்சு வைப்பா'' என்று வாழ்த்திவிட்டு அவர் அந்த பக்கம் நகர, யசோதாவின் முகம் மலர்ந்து இருந்தது.

''அவர் ஏதோ போற போக்கில் கேட்டுட்டார். நீ ஒண்ணும் கவலைப்படாதே...'' என்று தேறுதலாக சொன்னபடி திரும்பிய நந்தகோபால் அவரின் மலர்ந்து விரிந்து விகசித்த முகத்தை பார்த்து, ''யசோ? என்ன அப்படி ஒரு சந்தோஷம்?'' என்று ஆச்சரியமாக விசாரித் தார்.

''பிரேமுக்கு கல்யாணம் ஆகி ஒரு மாசம் முடிஞ் சுடுச்சு. கோவிலுக்கு வருவது இது நமக்கு நாலாவது வாரம் தானே?'' என்று அவசரமாக கேட்டார்.

''ஆமா, பிரேம் ஊரில் இருந்து வருவதற்கு முன்னாடி நாம் ரெண்டு வாட்டி வந்தோம். அதுக்கு பிறகு ரெண்டு வாரம். ஆனால் ஒரு மாசத்துக்கு கம்மி தான். ஏன் கேட்கிறாய்?''

''தர்ஷினி நம்ம வீட்டுக்கு வந்து குளிக்கவே இல்லை தெரியுமா?'' என்று பூரிப்பாக சொன்ன யசோதாவை பார்க்கையில் அவருக்கு கவலையாக இருந்தது.

இந்த காலத்து பொண்ணு. இவளை மாதிரி வெளியே சொல்லாமல் கூட இருந்து இருக்கலாம். பூஜை புனஸ் காரம் என்று தட புடலாக செய்யும் பழக்கமும் இல்லை. திருமணம் முடிந்த முதல் மாதத்தில் அப்படி இருந் தாலும் அதுவும் சிக்கல் தானே? குளித்து விட்டு பூஜை அறையில் நின்று நாலு வரி ஸ்லோகம் சொல்வ தோடு சரி. மாலை வேளையில் விளக்கேற்றுகிறாள் என்றும் சொல்வதற்கு இல்லை. அவள் வரவே ஏழரை ஆகிவிடும். பின் எப்படி இவள் உறுதியாக சொல் கிறாள்?

''உனக்கு எப்படி தெரியும்? அவள் வெளிப்படையா சொல்லாமல் இருக்கலாம் இல்லையா? நம் வீட்டில் தனியா வைக்கும் பழக்கம் இல்லை தானே?'' என்று தயக்கமாக கேட்டார்.

''உங்களுக்கு அதெல்லாம் தெரியாது. எனக்கு தெரியும். நீங்க அவளிடம் குழந்தை பற்றி பேசக் கூடாது என்று தானே சொன்னீங்க. அவளுடைய நடவடிக்கை களை கவனிக்கக் கூடாது என்று சொல்லவே இல் லையே? எனக்கு தெரியும் அவள் இங்கே வந்து குளிக் கலை...'' என்று உறுதியாக சொன்னார்.

''நீ சொல்வது மாதிரி இருந்தால் ரொம்ப சந்தோஷம். ஆனாலும் அவளிடம் பேச இன்னும் பத்து நாள் போகட்டும். உடனே இது பற்றி விசாரித்தால் அவள் ஒரு மாதிரி நினைக்கலாம். அவளே நம்மிடமோ பிரேமிடமோ, இல்லை அவங்க அம்மாவிடம் பேச்சு எடுப்பாள் இல்லையா? அப்ப தெரிஞ்சுக்கலாம். நீ இதை பற்றி தர்ஷினியிடம் பேச்சு எடுக்க மாட்டேன் என்று எனக்கு ப்ராமிஸ் பண்ணு'' என்று கை நீட்டினார்.

அவரிடம் முகத்தை சுளித்தபடி அவரின் கையில் அடித்தாலும், அதை காப்பாற்ற நினைத்த அதே நேரத்தில் தர்ஷினியின் மாதவிலக்கு ஒழுங்காக குறிப்பிட்ட தினங்களில் வந்து விடுமா என்பதை புவனேஸ்வரியிடம், விசாரித்து உறுதி படுத்தி கொள்ள மறக்க வில்லை.

* * *

முதல் நாள் இரவு விருந்து முடித்து படுக்க வெகு நேரமாகி விட்டதால், பிரேம் அன்று காலையில் விழிக்க தாமதமாகி இருந்தது. மூடிய கண்களை திறக்காமலே, மனைவி நிச்சயம் எழுந்து இருக்க மாட்டாள் என்ற நம்பிக்கையில் கைகளால் துழாவ, அவள் தட்டுப்பட வில்லை. ரொம்ப ஓரமாக போய் விட்டாளா? சும்மா சும்மா தன்னுடன் வந்து ஒண்டி கொள்வாளே? நவம்பர் மாதத்து குளிரும் அதற்கு உதவி செய்தது. சோம்பலாக கண் விழித்து பார்த்தவன் படுக்கையில் அவளை காணவில்லை என்றதும் ஆச்சரியமாக எழுந்தான்.

''ப்ரியா...'' என்று அழைத்தபடி படுக்கையில் இருந்து இறங்கியவன், ''இங்கே இருக்கேன்,'' என்று முனகல் குரல் ஹாலில் இருந்து கேட்க அவசரமாக வெளியே வந்தான்.

''என்ன ஆச்சு ப்ரியா? ஏன் இங்கே வந்து உட்கார்ந்து இருக்க?'' என்று பதட்டமாக கேட்டான். இவள் இந்த வீட்டிற்கு வந்த இத்தனை நாளில் இதுதான் முதல் முறை அவள் தனக்கு முன்னால் விழித்து இருக்கிறாள் என்று சொல்ல முடியாது. எங்க அம்மா திட்டுவாங்க என்று சொல்லி சொல்லி சீக்கிரம் விழித்து விடுவாள். ஆனால் தன்னை விட்டு உடனே எழுந்து போய் விட மாட்டாள். அவனும் விடமாட்டான். சில நிமிடங்கள் சீண்டல்கள் இல்லாமல் படுக்கையில் இருந்து வெளி வருவது இதுதான் முதல் முறை.

''என்னவோ தெரியலை. நேற்று சாப்பிட்டது ஒத்துக் கலையோ என்னவோ? வாமிட் வர மாதிரி இருக்கு. ஆனால் வரலை. பாத்ரூமில் ரொம்ப நேரம் நிற்க முடியலை. அதான் இங்கே வந்து தரையில் உட்கார்ந்து விட்டேன். வாந்தி எடுத்தால் கிளீன் பண்ண வசதியா இருக்குமே?'' என்று சொன்னவளை பார்த்து பதறினான்.

''லூசு, இதெல்லாம் ஒரு கவலையா? சோபாவில் உட்கார்'' என்று அதட்டியவன், அவளுக்கு கை கொடுத்து எழுப்பியபடி, ''அம்மா...'' என்று குரல் கொடுத்தான்.

''அம்மா இல்லை. கோவிலுக்கு போய் இருக்காங்க போல...''என்று சொன்னதும் தான் அவனுக்கு நினைவு வந்தது. கூடவே, அவருடைய வேண்டுதலும், இவளுடைய உடல்நிலையும். கல்யாணம் முடிந்து ஒரு மாதம் கூட ஆகவில்லையே? ஆனால் இங்கே வந்து வீட்டுக்கு விலக்காகவும் இல்லை. ஒருவேளை குழந்தை தானா?

'நீயும் அம்மா மாதிரி அவசரப்படாதே பிரேம்,' என்று மானசீகமாக குட்டி கொண்டான். அலைச்சல்

பிரயாணம். எல்லாம் சேர்ந்து கொஞ்சம் தள்ளி இருக்கலாம். எப்படியும் மருத்துவ ரீதியாக உறுதி செய்ய ஆறு வாரங்கள் முடிந்து இருக்க வேண்டும். இதெல்லாம் அம்மாக்கு விளக்கம் சொல்ல அவன் நெட்டில் தேடி கண்டு பிடித்த விஷயங்கள். அவளை சோபாவிற்கு அழைத்து சென்று அமர வைத்தவனுக்கு அவளிடம் விசாரிக்க தயக்கமாக இருந்தது.

''காபி தரட்டுமா ப்ரியா?'' என்று நெற்றியை வருடியபடி விசாரித்தான்.

''காபியா? வேண்டாம்பா...'' என்று சொன்னவள் சுருண்டு அவன் மடியில் படுத்து கொள்ள, அவனுக்கு இதை அம்மா பார்த்து அதீதமாக கற்பனை செய்து பின்னால் ஏமாந்து விடக் கூடாதே என்று கவலையாகவும் இருந்தது.

''காபி வேண்டாம் என்றால் இஞ்சி டீ போட்டு தரேன், ப்ரியாவை இப்படி பார்த்தால் எனக்கு ஒரு மாதிரி இருக்கே?'' என்று சீண்டியவன், சூடாக பால் குறைவாக சேர்த்து நீர்க்க போட்டு வந்த டீயை குடித்த பிறகு அவளுக்கே பரவாயில்லை என்று தோன்றி விட சில நிமிடங்களில் இயல்புக்கு வந்து விட்டாள்.

''இப்ப நல்லா இருக்கு. கைவசம் நல்ல பிசினெஸ் வச்சு இருக்கீங்க. கல்யாண ப்ரோக்கர் வேலை டல் லடிக்கும் மாசங்களில் இங்கே நாட்டு வைத்தியம் பார்க்கப்படும் என்று வாசலில் போர்ட் மாட்டலாமா?'' என்று கேலியாக சிரிக்க, பிரேம்குமாருக்கு எப்படி உணர்கிறோம் என்று புரியவில்லை. இயல்புக்கு வந்து விட்டாள் என்று சந்தோஷப்படுவதா? அம்மாவின் கனவு

பலிக்க நாளாகும் என்று வருத்தப்படுவதா என்று புரியாமல் திணறி, ''உதைக்கணும் உன்னை. நான் என்ன ப்ரோக்கரா?'' என்று அதட்டலாக கேட்டு சமாளித்தான்.

''ஓகே ஓகே. என்ன தான் பேர் பூமலை இணையதளம் என்று ஸ்டைலா வச்சுகிட்டாலும், ஒரு அழுக்கு லெதர் தோல் பைக்கு பதிலா ஸ்டைலா லாப் டாப் வைத்து கொண்டாலும் செய்ற வேலை என்னவாம்? அதை சொன்னா கோபம் வருதோ?''

''இதோ வரேன். அஞ்சு நிமிஷம் முன்னாடி, யார் தரையில் உட்கார்ந்து மூக்கால் அழுதபடி, வரும் ஆனால் வரலை...'' என்று ராகம் பாடியது? ஒரு இஞ்சி டீ போனதும் வாயை பாரு...''

''அடேயப்பா! ஒரு இஞ்சி டீக்கு இந்த பாடா? இன்னும் உங்க அப்பா மாதிரி விதம் விதமா சமைச்சால் என்ன பந்தா பண்ணுவீங்களோ?''

''அந்த இஞ்சி டீ போட்டு குடிக்க தெரியாமல் முழிச்சுட்டு இருந்த ஆளுக்கு எல்லாம் பேச ரைட்ஸ் கிடையாது...''

''யாரை பார்த்து என்ன வார்த்தை சொன்னீங்க? இஞ்சி டீ போட தெரியலை என்றால் அதுதான் வாழ்க்கையின் முடிவா? இப்ப சொல்லுங்க. அம்மாவும் இல்லை. காலையில் உங்களுக்கு சாப்பிட என்ன வேண்டும்? செஞ்சு தரேன்'' என்று நம்பிக்கையோடு சொன்னாள்.

போன வாரம் புவனேஸ்வரி, 'இவளுக்கு பிடிக்கும்' என்று தன்னை வேலை மெனக்கெட்டு அழைத்து

கொடுத்து விட்ட வெண்பொங்கல் நினைவில் ஆட அதையே சொன்னான். அதையும் அவளுக்காக சொல்வது போல இல்லாமல், சவால் விடுவது போல சொன்னான்.

''போன சண்டே உங்க அம்மா கொடுத்த பொங்கலும் சாம்பாரும் இன்னும் நாக்குல மணக்குது. அது மாதிரி உன்னால் செய்ய முடியுமா?'' என்று கேலியாக கேட்டான்.

''ஒரு வாரமா ஒரு டிஷ் நாக்கில இருந்தால் அஜீரணம் என்று அர்த்தம். உங்களுக்கு நான் இஞ்சி டீ போட்டு தரட்டுமா?'' என்று சிரித்தாள்.

''செய்ய தெரியாது என்பதை இவ்வளவு ஸ்டைலா வேறே யாராலும் சொல்ல முடியாது ப்ரியா.''

''உங்களுக்கு என்ன பத்தி தெரியாது. நான் செய்ய மாட்டேன். சூப்பரா சமைக்க தெரியும். செய்ய எனக்கு சான்ஸ் கிடைக்கலை. அவ்வளவுதான்...''

''ஹேய் சோம்பேறி! இந்த வாக்குறுதி எல்லாம் எங்களுக்கு வேண்டாம். செயலில் காட்டு...'' என்று அவன் முடித்து விட, அவள் செயலில் இறங்கினாள்.

அடுத்த ஒரு மணி என்றதில், வெண்பொங்கல் மட்டும் இல்லாமல், சட்னி சாம்பாரும் செய்து இருந்தாள். அதோடு முதன் முறையாக தனியாக சமைப்பதால், கொஞ்சம் ரவா கேசரியும் சேர்த்து செய்ய ஆயத்தம் செய்ய அவன் சிரித்தான்.

''ஹேய் என்ன, பொண்ணு பார்க்க வந்த அன்னிக்கு கொடுக்கலை என்று இன்று பஜ்ஜி சொஜ்ஜி எல்லாம் ரெடி பண்றியா?''

''நீங்க எங்கே பொண்ணு பார்க்க வந்தீங்க? நான் தானே பையன் பார்க்க வந்தேன். ஆனால் நீங்களும் நான் கேட்ட வெங்காய பகோடா கொடுக்கவே இல்லை. குலாப் ஜாமூன் மட்டும் கொடுத்து ஏமாத்திட்டீங்க. அதனால் உங்களுக்கு நோ பஜ்ஜி. சொஜ்ஜி மட்டும் தான்...''

''இதுல இருந்து என்ன தெரியுது? நம் வாழ்க்கையிலே எல்லாமே ஸ்வீட் மட்டும் தான். நோ காரம்'' என்று கேலியாகவே பதில் சொன்னாலும், அவளுடன் ஒட்டி நின்றபடி, அவளுக்கு சமையலில் உதவுகிறேன் என்ற பேரில் உபத்திரவம் செய்து கொண்டு இருந்த பிரேம் குமாரும், அவளின் சமையல் செய்யும் பாங்கில், கூடிய சீக்கிரமே. கேலி பேச்சை நிறுத்தி விட்டான்.

அவர்கள் சாப்பிட்டு முடித்த கொஞ்ச நேரத்தில் வந்த நந்தகோபாலும் யசோதாவும், அவள் செய்து வைத்து இருந்ததை ரசித்து பாராட்டி உண்டார்கள். அது மட்டும் இல்லாமல், யசோதாவிற்கு முதல் முறையாக மருமகள் ஸ்வீட்டோடு சமைத்து இருந்ததும், நல்ல சகுனமாக பட்டது. ஏற்கனவே கோவிலில் தான் உணர்ந்ததை உறுதி படுத்தி கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவருக்கு கட்டுகடங்காமல் பெருகியது.

கணவனிடம் கொடுத்த வாக்குறுதிக்காக தர்ஷினி யிடம் அது பற்றி பேசாமல் இருந்தார். மதிய உணவு வரை பொறுத்தவர். பிற்பகல் எல்லோரும் குட்டி தூக்கம் போடும் வேளையில் புவனேஸ்வரியை போனில் அழைத்தார். மருமகளின் இன்றைய காலை சமையல் சூப்பராக இருந்தது என்பதில் ஆரம்பித்து, முன்தின

விருந்து, சத்யாவின் உடல்நிலை, பற்றி விசாரித்து, சுற்றி வளைத்து தர்ஷினி விஷயத்திற்கு வந்தார்.

யசோதாவின் கேள்விக்கு உரிய பதில் சொன்னவர் எதார்த்தமாக இரண்டு பெண்களின் தாய் என்ற வகையில், ''சத்யா இப்போ உண்டாகி இருப்பதால், தர்ஷினி ஒரு ஆறு மாசம் தள்ளி போடலாமே'' என்று சொல்ல யசோதாவின் ரத்த அழுத்தம் எகிறி குதித்தது.

''அதென்ன அண்ணி அப்படி சொல்லிட்டீங்க? எதுக்கு ஆறு மாசம் தள்ளி போடணும்? நீங்க சத்யாவுக்கு பார்த்துக்கோங்க. தர்ஷினிக்கு தள்ளி போட வேண்டும் என்ற அவசியம் இல்லை. நானே அவளையும் குழந்தையையும் சேர்த்து பார்த்துப்பேன். உங்களுக்கு அந்த சிரமமே வேண்டாம். அவளுக்கு சீக்கிரம் குழந்தை வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விசாரணையே. இப்படி ஒரு வார்த்தை சொல்லிட்டீங்களே? எனக்கு மனசே ஆறலை'' என்று அரை குறையாக பேச்சை முடித்து வைத்து விட்டார் யசோதா.

அவர் பேசி முடித்து போனை வைத்ததுமே, குழப்பத்தோடு இருந்த புவனேஸ்வரியின் முகத்தை பார்த்த குருமூர்த்திக்கு கவலையாக இருந்தது.

''யார் புவனா போனில்?'' என்று விசாரித்தார்.

''பிரேமோட அம்மா...''

''ஓ! என்ன சொன்னாங்க? என்ன அப்படி தீவிரமான யோசனை?'' என்று கவலையோடு விசாரித்தார். அவர் விபரம் சொன்னதும் அவருக்கு கவலை கூடியது.

''ஹேய் இதுல என்ன இருக்கு? இவ்வளவு யோசிக்கிற?'' என்று கேட்டவருக்கு, திருமணத்திற்கு முன்பு

நந்தகோபால் சொன்ன 'பிரேம், நந்தகோபாலின் சகோதரி மகன். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தவன்' என்ற உண்மையை இவளிடமும் தர்ஷினியிடமும் சொல்லவில்லை என்பது உறுத்தியது. அப்போது சொல்லி இருந்தாலும், தர்ஷினியின் முடிவு மாறி இருக்காது. ஆனால் புவனாவை பற்றி சொல்ல முடியாது. மறுத்து இருக்கலாம்.

மகளின் ஆசையை உணர்ந்ததாலும், பிரேமை அவருக்கே ரொம்ப பிடித்து இருந்ததாலும், அவருக்கு இந்த திருமணம் நல்ல படியாக நடப்பதே அப்போதைக்கு அவசியமாக தோன்றியது. இப்போது தர்ஷினியிடம் மட்டுமாவது சொல்லி விடலாமா என்று யோசித்து கொண்டு இருக்க புவனேஸ்வரியின் குரல் அவரை நனவுக்கு கொண்டு வந்தது.

''இதை அங்கே இருக்கும் தர்ஷினியிடம் கேட்க வேண்டியதுதானே? அதுதான் எனக்கு ஒரு மாதிரி இருக்கு. அவங்க என்ன தான் சர்க்கரையா பேசினாலும் நடுவில் வந்த இந்த கேள்விக்கு பதில் தெரிந்து கொள்ளத்தான் இந்த போன் பேச்சே. அப்படி என்ன அவசரம்? அதை என்னிடம் ஏன் விசாரிக்க வேண்டும்? நேற்று இரவு பத்து மணி வரைக்கும் அங்கேயே நான் இருந்து இருக்கிறேன்...'' என்று தன் போக்கில் பேசிக் கொண்டே போனார் புவனேஸ்வரி.

''சும்மா சின்ன விஷயத்தை ஊதி பெரிசாக்காதே புவனா. அவங்க சாதாரணமா சொல்லி இருப்பாங்க. பிரேம் ரெண்டு மூணு வருஷமா கல்யாணத்தை தள்ளி போட்டு இருக்கார். அதனால் பேர குழந்தை சீக்கிரம்

பார்க்கணும் என்ற ஆசையில் ஏதாவது சொல்லி இருக்கலாம். அதுக்கு போய் இப்படி குதிக்காதே'' என்று பேச்சை முடித்தாலும், 'சீக்கிரமே தர்ஷினியிடம் உண்மையை சொல்லி விட வேண்டும்' என்று மனதிற்குள் நினைத்து கொண்டார்.

திருமணத்திற்கு முன்பு 'பிரேம், நந்தகோபாலின் சகோதரி மகன். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தவன்' என்ற உண்மையை புவனாவிடம் சொல்லாமல் மறைத்ததற்கு காரணமே அவர் சுலபமாக சம்மதம் சொல்லாமல், சண்டையிட்டு எல்லோரையும் மனம் கசங்க செய்யலாம் என்ற பயமும், அதை தவிர்க்கலாமே என்ற நல்ல எண்ணமும் தான்.

தர்ஷினி சம்மதம் சொல்லாமல் தயங்குவாள் என்ற பயம் அவருக்கு இல்லை. ஆனால் அதே சமயத்தில் அவள் அந்த குடும்பத்தில் நன்றாக ஒன்ற வேண்டும். எங்கள் வாழ்க்கையில் தலையிட நீங்க யார் என்று துடுக்குத்தனமாய் கேள்வி கேட்டு, பிரேம் மட்டும் எனக்கு போதும் என்ற அலட்சியம் அவளுக்கு வந்து விடக் கூடாதே என்ற பயம் அவருக்கு இருந்தது. தன் மகளாகவே இருந்தாலும் அவளுடைய பேச்சு முறை அவருக்கு கவலையை தந்தது.

பின்னால் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டாலும் வார்த்தைகளை அள்ளி கொட்டி விட்டு வருந்துவதில் என்ன பயன்? கூடவே வெளி ஆட்கள் யாருக்கும் இது தெரிய வேண்டாம் என்று பிரேம் திரும்பி திரும்பி அழுத்தி சொன்னதும் அவர் வாயை கட்டி வைத்து இருந்தது.

போகிற போக்கில் தர்ஷினி ஏதாவது துடுக்காக சொல்லி விட, பிரேமிற்கும் தர்ஷினிக்கும் இடையிலேயே பிரச்சனை வந்து விடக் கூடாதே என்ற கவலை இருந்தது. ஆனால் என்று அவளாகவே போன் பண்ணி அவளுடைய மாமியார் பற்றி பெருமையாக பேசினாளோ, அன்றே அவருக்கு சொல்லி விடலாமா என்ற யோசனை வந்தது.

தர்ஷினிக்காக அவளின் புகுந்த வீட்டினர் செய்த நேற்றைய விருந்து ஏற்பாடுகளை பார்த்த பின்பு, தர்ஷினியிடம் சொல்லி விடலாம் என்ற நம்பிக்கை வந்தது. இப்போது புவனேஸ்வரி பேசிய விதம் அதை விரைவு படுத்தியது. ஆனாலும் அதற்கான தேவை மறுநாளே வரும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.



22

திங்கள் அன்று அலுவலகத்திற்கு கிளம்பும்போது, பரபரப்பாக ஏதோ தேடி கொண்டு இருக்க, அவளை சிரிப்போடு வேடிக்கை பார்த்து கொண்டு இருந்தான் பிரேம்.

''என்ன ப்ரியா தேடுற? சொன்னால் நானும் ஹெல்ப் பண்ணுவேன் இல்லையா?''

''கொஞ்ச நேரம் சும்மா இருக்கீங்களா?'' என்று அதட்டி விட்டு தன் தேடுதலில் ஈடுபட்டாள்.

''நான் சும்மாதானே இருக்கேன். ஒருவேளை உன்னை ஏதாவது செய்யணுமோ?'' என்று சிரிப்போடு அருகில்

வந்தவன், அவளின் நெற்றியில் கலைந்து ஆடிய ஒற்றை முடியை ஒதுக்கிவிட்டான். அந்த ஸ்பரிசம் அவளை கொஞ்சம் அமைதிபடுத்தியது.

''எங்க ஆபீஸ் ஏ.ஓ. சனிக் கிழமை பார்ட்டிக்கு வந்த போது, அவங்க இங்கே இருந்து வெளியூர் போவ தாகவும், ஒரு முக்கியமான ஆபீஸ் பைல் கொடுத்து இன்னிக்கு எடுத்துட்டு வர சொன்னாங்க. அதை எங்கே வச்சேன் என்று தெரியலை. ஹாலில் டி.வி. ஸ்டாண்ட்ல இருக்கா கொஞ்சம் பாருங்களேன். இல்லை அப்படியே டீபாய் அடில பார்த்துடுறீங்களா?'' என்று அவனை கேட்டபடி, அலமாரியை உருட்டி கொண்டு இருந்தாள் தர்ஷினி.

''சிங்கப்பூருக்கு உங்க ஆபீஸ்ல இருந்து ஒரு டீம் அனுப்ப ஏதோ பைல் இருந்ததே அதுவா?'' என்று இருந்த இடத்தில் இருந்து அமையாமலே அவளை நெருங்கி, தோளில் முகத்தை பதித்து கேட்டான்.

''அதெப்படி உங்களுக்கு தெரியும்? நேரமாச்சு, பைலை ஹாலில் தேடுங்க என்று சொன்னேனே? அசையாமல் இங்கேயே நிற்கறீங்களே? வேலை ஒண்ணும் செய்யாதீங்க. ஆனால் வாய் மட்டும் குறை யாது...'' என்று அவனின் முகத்தை தள்ளிவிட்டாள்.

''வாய் குறையாது என்று என்னை நீ சொல்கிறாய் பாரு. அதுதான் இந்த ஆண்டின் பெஸ்ட் ஜோக்'' என்று கண் சிமிட்டியவன், கன்னத்தில் ஒரு முத்தம் பதித்து, ''நான் அந்த பைல் எங்கே இருந்தாலும் தேடி ஒரே நிமிஷத்துல உன்னிடம் கொடுக்கிறேன். பதிலுக்கு நீ எனக்கு என்ன கொடுப்பாய்?'' என்று பேரம் பேசி னான்.

''ஹேய் எங்கேயாவது ஒளிச்சு வச்சு இருக்கீங்களா? கொடுங்க பிரேம். விளையாடாதீங்க?''

''நான் விளையாடலை. உனக்கு ஹெல்ப் பண்ண நினைத்தேன்...''

''கொடுங்க டைம் ஆச்சு...''

''டீல் பேசி முடி. தரேன்..'' என்று அவன் சொல்லி கொண்டு இருக்கும் போதே அவளுக்கு நினைவு வந்து விட்டது. சனியன்று இரவு, அந்த பைலில் என்ன இருக்கு, இந்த அம்மா இப்படி பொத்தி பொத்தி வைக்க, என்று படிக்க முயன்ற போது தன்னை பார்க்க விடாமல் லூட்டி அடித்து அந்த பைலை பிடுங்கிய அவனது குறும்பு நினைவில் வந்ததுமே மின்னல் அடித்தது. படுக்கையில் தான் எங்கேயோ இருக்க வேண்டும். அவன் நகரவே இல்லை.

அவசரமாக படுக்கைக்கு சென்றவள், தலை யணைக்கு அடியில் மெத்தைக்கு அடியில் என்று தேடி கண்டுபிடித்தாள். கட்டிலில் மெத்தையின் அடியில் செருகி வைத்து இருந்த பைலை எடுத்து அதால் அவன் முதுகில் ஒரு அடி வைத்தாள்.

''உங்களுக்கு பரிசு வேறே தரணுமா? என்னை இவ்வளவு நேரம் பைல் எங்கே இருக்கு என்று அலைய வச்சதுக்கு. இன்னிக்கு நைட் உங்களுக்கு பனிஷ்மென்ட் தான். நான் இந்த ரூமுக்கே வர மாட்டேன் போங்க...'' என்று சொல்லி விட்டு கிளம்பினாள் தர்ஷினி.

''இங்கே வராமல் எங்கே போய் விடுவாய்? எங்கே போனாலும் எத்தனை நாள் அங்கேயே இருந்து விடு வாய்? எப்படியும் அய்யாவை தேடி இதே ரூமிற்கு

வந்துதானே ஆக வேண்டும்'' என்று அவன் சவால் விட்டது அவள் காதில் விழுந்தாலும் விழாத மாதிரி கிளம்பி விட்டாள்.

அலுவலகத்திற்கு சென்ற உடனேயே நிர்வாக அலுவலர் கேட்ட அந்த கோப்பை ஒப்படைத்தவள், தன்னுடைய வழக்கமான வேலையில் மூழ்கி இருந்த போது, மாலை நாலு மணி அளவில், ஹெச் ஆர் மேனேஜர் அழைப்பதாக தகவல் வர ஆச்சரியமாக எழுந்தாள்.

பொதுவாக மேலாளர்கள் சேர்ந்து நான்கு மாதம் ஆகி இருக்கும். அதிலும் பாதி நாளை விடுப்பிலேயே ஓட்டி இருக்கும் தன்னை மாதிரி கற்றுக்குட்டிகளை நேரில் அழைத்து பேசுவதில்லை. என்னவாக இருக்கும் என்று யோசனையோடு சென்றவளுக்கு அங்கே ஒரு இனிய அதிர்ச்சி காத்து இருந்தது.

''உட்காருங்க மிஸ் ப்ரியதர்ஷினி. வேலையில் சேர்ந்து இந்த குறுகிய காலத்துல செக்ஷன் லீட் கிட்டேயும் நிர்வாகத்துலயும் உங்களுக்கு ரொம்ப நல்ல பேர் இருக்கு. குட்...'' என்று பாராட்டு தெரிவிக்க அவளுக்கு சந்தோஷமாக இருந்தது.

''இந்த மாதிரி பெரிய கம்பெனியில், உங்களை மாதிரி திறமையானவங்க நிர்வாகத்தின் கீழ் என்னை மாதிரி புதுசா வரவங்க கற்று கொள்ளவும் சாதிக்கவும் நிறைய வாய்ப்பு இருக்கு சார். உண்மையை சொன்னால் நான் இங்கே வேலை செய்வதில் ரொம்ப பெருமையா உணர்கிறேன்'' என்று மலர்ந்த முகத்தை மறைக்க முயன்று தோற்றபடி சொன்னாள் தர்ஷினி.

செக்ஷன் லீடா! பத்மாவதி மேடம் கூட தன்னை பற்றி பெருமையா சொல்றாங்களா? பரவாயில்லையே! நக்கல் அடிக்கற மாதிரி சுருக் சுருக் என்று சொல்வாங்களே? அவங்களுக்கு எல்லோரிடமும் பேசி சிரிப்பதை பார்த்து பொறாமை என்று நினைத்தது சரி இல்லையோ? நிர்வாகத்துல, யார் சொல்லி இருப்பாங்க? ஜெயராமன் சார் கைங்கர்யமா இருக்கும். அவங்க பொண்ணுக்கு அலையன்ஸ் செட் ஆகிடுச்சு. அதனால் சந்தோஷமா சொல்லி இருக்கலாம்.

அவள் தன் மனதிற்குள் அவர் பாராட்டி சொன்ன ஒரு வாக்கியத்தின் காரண காரியங்களை அலசி ஆராய்ந்து கொண்டு இருக்க, அவர் சொன்ன அடுத்த வாக்கியம் அவளை இருக்கையில் இருந்து துள்ளி எழ வைத்தது.

''மிஸ் ப்ரியதர்ஷினி, சிங்கப்பூரில் செயல்படும் ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்கான ப்ராஜெக்ட் செய்ய நம்ம நிர்வாகத்தின் சார்பில் மூன்று பேர் கொண்ட ஒரு டீம், அனுப்பலாம் என்று முடிவு பண்ணி இருக்கிறோம். அதுல உங்களையும் சேர்க்கலாம் என்று உங்க டீம் லீட் பரிந்துரை செய்து இருக்கிறாங்க. அதை உங்களுக்கு சொல்லத்தான் அழைத்தேன்...''

''வாவ்! நிஜமாவா சார் சொல்றீங்க? எவ்வளவோ சீனியர்ஸ் இருக்கும்போது எனக்கு இந்த சான்ஸ். கடவுளே! என்னால் நம்பவே முடியலை சார்...'' என்று குதூகலித்தாள்.

''நீங்களே முடிவு பண்ணிட்டீங்களா? புதிதாக திருமணம் ஆனவங்க இல்லையா? உங்க வீட்டில் கேட்டு விட்டு நாளைக்கு முடிவு சொல்லுங்க. அலுவலக

நடைமுறைகள் செய்ய வசதியாக இருக்கும் குட்லக்,'' என்று முடித்தார்.

''எனக்கு எங்க வீட்டுல முழு சுதந்திரம் கொடுத்து இருக்காங்க சார். நான் கேட்டு ஒன்றை அவங்க மறுக்க போவதில்லை. அதுவும் இது அலுவலக வேலையாக போகும்போது, இது நான் வளர்வதற்கு ஒரு வாய்ப்பு என்பதை நிச்சயம் உணர்ந்து எனக்கு சப்போர்டிவா இருப்பாங்க சார். யு டோன்ட் வொரி. தேங்க்யூ சார்..'' என்று சீட்டிற்கு திரும்பி வந்தவளுக்கு உற்சாகம் பிய்த்து கொண்டது.

தேனிலவில் தனிமையில் தன் அலுவலக பணிகளை பற்றிய பேசிய நிமிடங்களில் பிரேம்குமார். தன் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவது மாதிரிதான் பேசினான். யசோதாம்மாவும் தன் அலுவலக பணிகளை சிரமம் எடுத்து பார்க்க தேவை இல்லை என்று ஒரு முளை சொன்னார்களே தவிர, இந்த இரண்டு வாரம் அலுவலகத்திற்கு வந்த போது, தனக்கு நிறைய உதவி செய்தார்கள். அதையும் அம்மா மாதிரி திட்டி கொண்டே செய்யாமல் சிரித்து கொண்டே அக்கறையுடன் செய்தார்கள்.

மாமாக்கு பிரேமை விட தான் செல்லம். இப்படி இருக்கும்போது தான் வெளிநாடு செல்ல, தனக்கு தடை யார் சொல்வார்கள் என்ற ரீதியில் யோசித்தவளுக்கு, அந்த ப்ராஜெக்ட் காலம் ஆறு மாதம் என்பது மிக அதிகம். அதற்கு தன்னுடைய புகுந்த வீட்டில் யாருமே ஒத்துக் கொள்ளப் போவதில்லை என்பதை அப்போது அவள் உணரவில்லை.

தர்ஷினியின் வீட்டுக்கு விருந்துக்கு சென்று இருந்த போது, அவளை புகுந்த வீட்டில் இருந்த மூன்று பேரும் தாங்கியதை பார்த்து பொறாமையில் எரிந்த பத்மாவதி, தன்னால் முடிந்த அளவு குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்த, கல்யாணம் ஆன ஒரே மாதத்தில் ஆறு மாதம் வெளிநாடு அனுப்ப அவர்கள் ஒத்து கொள்ள மாட்டார்கள் என்பதை கணக்கிட்டு, அவர்கள் மறுத்தாலும் இவள் போக ஆசைப் படுவாள் என்று திட்டமிட்டு காய்களை நகர்த்தி இருந்தார்.

இதில் தன்னை யாரும் குறை சொல்ல ஒன்றும் இல்லை என்பது ஒரு புறம் இருக்க, அவள் போனாலும் தனக்கு சந்தோஷம், ஆறு மாதம் இங்கே இருக்க மாட்டாள். போகாவிட்டாலும், அவர்களின் குடும்பத்தில் சின்ன சலசலப்பாவது வரும். தனக்கு கிடைக்காத சந்தோஷமான இல்லற வாழ்வு இவளுக்கு கிடைப்பதா என்ற பொறாமையோ அல்லது பிறர் சந்தோஷமாக இருப்பதை காண சகிக்காத நல்ல குணமோ, எது வேலை செய்தது என்பது அந்த ஆண்டவனுக்கு மட்டுமே தெரியும்.

தனது இருக்கைக்கு வந்து அமர்ந்த உடனே, அப்பாவிடம் ஒரு வரியில் தகவல் மட்டும் சொல்லி விட்டுப் பிறகு அழைக்கிறேன் என்று போன் இணைப்பை துண்டித்தாள். உடனே அவசரமாக பிரேமை அழைத்து, ''ஹேய் பிரேம். ஒரு சூப்பர் குட் நியூஸ்'' என்று அவன் காதே பிய்ந்து போகும் அளவுக்கு கத்தினாள் தர்ஷினி.

''ப்ரியா, நீ ஒரு குட் நியூஸ் சொல்கிறேன் என்று என்னை ஒரு பேட் நியூஸ் சொல்ல வச்சுடாதே செல்

லம். எனக்கு காதே செவிடாகி விடும் போல இருக்கு'' என்று சிரித்தான் பிரேம்.

''நான் அவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா?''

''நல்லா தெரியுது கண்ணு. விஷயத்தை சொன்னால் நானும் சேர்ந்து சந்தோஷப்படுவேனே?''

''எங்க ஆபீசில் சிங்கப்பூருக்கு அலுவலக வேலையா அனுப்ப என்னை தேர்ந்தெடுத்து இருக்காங்க.''

''வாவ்! சூப்பர். ஆபீஸ் செலவுல ஊர் சுற்றி பார்க்கலாம். எத்தனை நாள்? அப்பாக்கு கல்யாண காண்ட்ராக்ட் எதுவும் அந்த நாட்களில் இல்லை என்றால், நானும் உன்னோடு வருகிறேன். பாரீன்ல, ஹனிமூன் போகணும் என்ற உன் ஆசையையும் நிறைவேத்துன மாதிரி இருக்கும். போகலாமா?'' என்று சந்தோஷமாக கேட்டான்.

''எத்தனை நாளா? ப்ராஜெக்ட் பிரேம். குறைந்தது ஆறு மாசம் ஆகும்...''

''ஆ...று மா...ச...மா...? என்ன விளையாடுறியா?'' என்றவன் குரலில் அதிர்ச்சியா கோபமா எது அதிகம் இருந்தது என்று தீர்மானிக்க இயலவில்லை.

''யார் விளையாடுறது? நானா நீங்களா? ஒரு பெரிய எம்.என்.சிக்கு ஆன்சைட் டிசைன் உருவாக்க நான் கணக்கல போதுமா? நான் சொல்றது குறைந்த பட்சம்...''

''ப்ரியா, நீ வீட்டுக்கு வா. நேரில் பேசலாம். இதெல்லாம் போனில் பேசும் விஷயமில்லை. ஆபீசில் எதுவும் முடிவு சொல்லிவிடாதே. நைட் பேசிக்கலாம்...''

''நைட் பேசணுமா! ஏன் பிரேம்? நான் ஆபீசில் ஏற்கனவே சரி சொல்லி விட்டேனே?'' என்று சொன்னவளின் குரல் இறங்கி இருந்தது. இவன் ஏன் இப்படி சிடுசிடுவென்று பேசுகிறான்?

''வாட்? ஏற்கனவே சரி சொல்லி விட்டாயா? அப்புறம் என்னிடம் தகவல் சொல்கிறாயா? நான்சென்ஸ்...'' என்று பல்லை கடித்தவன் போனை வைத்து விட்டான். முதலில் அவன் பேசியதே வித்தியாசமாக உணர்ந்து அவள் யோசித்து கொண்டு இருக்க, அவன் வெடுக்கென்று திட்டி போனை வைத்ததை அவளால் தாங்கி கொள்ளவே முடியவில்லை.

இதென்ன பழக்கம்? பாதி பேச்சில் போனை வைப்பது? மீண்டும் அவனை அழைத்தால் எடுக்கவில்லை. ஒரே ரிங்கில் கட் பண்ணியவன் அடுத்த சில வினாடிகளில் அணைத்தும் விட அவளின் கோபம் உச்சத்தை எட்டியது. உடனே அலுவலகத்தில் அனுமதி கோரி பெற்று இருபதாவது நிமிடம், அவள் வீட்டிற்குள் நுழைந்தாள்.

போனை அணைத்து அவன் தூக்கி போட்ட வினாடியில் அவனுக்கு காபி எடுத்து கொண்டு வந்த யசோதா, அவனின் கோபத்தை பார்த்து யோசனையில் புருவம் சுருக்கினார். ''யார் பிரேம் போனில்? என்ன அவ்வளவு கோபம்?'' என்று கேட்டபடி உள்ளே வந்த யசோதாவை பார்த்ததுமே, அவனுக்கு தர்ஷினியின் மேல் இருந்த கோபத்தின் அளவு இன்னும் கூடியது.

''ஒ..ண்..ணு...ம் இ..ல்...லை..ம்..மா...''

அவன் அழுத்தமான குரலிலேயே ஏதோ பெரிய விஷயம் என்பதை உணர்ந்தவள், 'தர்ஷினியா பிரேம்!

எதுக்கு கோபம்? சின்ன பொண்ணு. கொஞ்சம் விளை யாட்டு தனம் இருக்கு. நீ பெரியவனா கொஞ்சம் பொறுமையா பேசக்கூடாதா?'' என்று கேட்டார் யசோதா.

இப்ப அவளுக்கு சப்போர்ட் பண்ணி பேசும் இவரே, விஷயத்தை கேட்டால் பொறுமையாக இருப்பாரா? இவளை எந்த கணக்கில் சேர்ப்பது? சின்ன பிள்ளை ஸ்கூல் டூரில் போக ஆசை படுவது மாதிரி துள்ளி குதிக் கிறாளே? அலுவலகத்தில் ஒரு பாராட்டு, அங்கீகாரம் என்றால் சந்தோஷம் வரும்தான். அதற்காக குடும்ப வாழ்க்கையில் இருக்கும் நெளிவு சுளிவுகளை அனுசரிக்க வேண்டாமா? தன்னிடம் கேட்ட பிறகு முடிவு சொல்ல வேண்டும் என்று கூட எண்ணாமல், அலுவலகத்தில் ஒத்துக் கொண்டேன் என்று சொல்பவளை என்ன செய்வது?

''சரி வா பக்கோடா போட்டு இருக்கேன். சாப்பிடலாம் எழுந்திரிச்சு வா'' என்று அவனின் அமைதியை உணர்ந்த யசோதா, கை பற்றி எழுப்பினார்.

''எனக்கு பக்கோடா வேணும் என்று நான் உங்களை கேட்டேனா? எனக்கு வேண்டாம். இடத்தை காலி பண்ணுங்க...''

''டேய் நான் உன் அம்மா! நீ கேட்டுதான் உனக்கு ஒவ்வொரு வேலையும் செய்யணும் என்று இருந்தால் உன் வயிற்று பசி கூட தீர்ந்து இருக்காது. தர்ஷினியை பிடிச்சு இருக்கு என்று கூடத்தான் நீ சொல்லவில்லை. நானா முடிவு பண்ணி கல்யாணம் பண்ணி வைக்கலை? உனக்கு என்ன வேணும் என்று உனக்கே தெரியாது. நீ

எல்லாம் பேச வந்துட்ட. முதலில் எழுந்திரிடா...'' என்று அதட்டினார்.

''எனக்கு என்ன வேணும் என்று தான் எனக்கு தெரியும் முன்னால் உங்களுக்கு தெரிஞ்சுடுதே? அப்புறம் எனக்கு என்ன கவலை? அந்த பக்கோடா உங்க மருமகளுக்குதான் ரொம்ப பிடிக்கும். அவளுக்கே கொடுங்க'' என்று சொன்னவன் குரலில் தர்ஷினி என்ற பேரை கேட்டதால் வந்த கூடுதல் கோபம் கொப் பளித்தது.

''ஏன் அவள் சாப்பிட்டால் நீ சாப்பிடக் கூடாது என்ற சட்டம் இருக்கா? எல்லோருக்கும் இருக்கு வா''என்று அவனை கையோடு இழுத்து கொண்டு வெளியே சென்றார்.

எரிச்சலோடு சோபாவில் அமர்ந்து இருந்த பிரேம் தட்டில் யசோதா கொண்டு வந்து வைத்த பக்கோடாவை தொட்டு கூட பார்க்கவில்லை. அறையில் இருந்த நந்த கோபாலுக்கு கொடுத்து விட்டு, ''கொஞ்ச நேரம் பிரேமை வெளியே கூட்டிட்டு போயிட்டு வாங்க. அவன் ரொம்ப கோபமா ஒரு நிலை இல்லாமல் இருக் கான். அந்த சின்ன பொண்ணை கோபத்துல ஏதாவது கடிச்சு வச்சுட போறான்'' என்று குறிப்பு காட்டி கிளப்பி விட்டு வெளியே வந்தவர், ஐந்தரை மணிக்கு வீட்டிற் குள் நுழைந்த தர்ஷினியை எதிர்பார்க்கவில்லை.

''என்ன தர்ஷினி. சீக்கிரம் வந்து விட்டாய்? **உடம்பு** சரி இல்லையா?'' என்று கேட்டபடி அவளின் நெற் றியை தொட்டு பார்த்தார்.

''எனக்கு உடம்புக்கு ஒண்ணும் இல்லை **அத்தை**. நான் நல்லாத்தான் இருக்கிறேன். பிரேமிற்குதான் என்ன

ஆச்சுன்னு தெரியலை'' என்று பதில் சொன்னவள் கண்கள் அவனை பொசுக்கி விடுவது போல முறைக்க, அடக்கப்பட்ட கோபம் அவள் குரலில் தெரிந்தது.

''பிரேமிற்கு அப்பப்போ தலைவலி அனுமதி வாங்காமலே வந்துடும் தர்ஷினி. கொஞ்ச நேரத்துல சரியாகிடும். அதுவரைக்கும் அவனை தனியா விட்டாலே போதும். உனக்கு காபி எடுத்துட்டு வரவா? டிபன் சாப்பிடுறியா? சூடா பக்கோடா போட்டு இருக்கேன்...''

''எனக்கு தலைவலி அனுமதி கேட்டுட்டு தான் வரும். வந்தால் போகாது. கொஞ்ச நேரம் கழிச்சு நானே வந்து எடுத்துக்கறேன்'' என்று சொல்லி அறைக்குள் சென்றாள் தர்ஷினி.

அதுவரை ஒரு வார்த்தை கூட பேசாமல் அவளையே வெறித்து பார்த்துக் கொண்டு இருந்தவன் எழுந்ததும், அவசரமாக அவன் கை பற்றி நிறுத்தி, ''கோபத்தில் வார்த்தைகளை அள்ளி விட்டுடக் கூடாது. புருஷன் பொண்டாட்டி சண்டையில் தலையிட நீ யாரு என்று கேட்கலாம்...'' என்று அவர் ஆரம்பித்த வினாடியில் அவர் வாயில் கை வைத்து மூடினாள்.

''போதும். நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம். நீங்க டென்ஷன் ஆகாமல் இருந்தால் அதுவே போதும். இதை நான் பார்த்துக்கறேன்...'' என்று உள்ளே போனவளின் நடையை பார்த்தால் விஷயம் ரொம்ப பெரிது என்று தோன்றியது.

உள்ளே தர்ஷினி முகம் கழுவாமல், உடை கூட மாற்றாமல், ஜன்னல் ஓரம் நின்று வெளியே வேடிக்கை பார்ப்பதாக பாவனை செய்து கொண்டு இருந்தாள். அவனின்

காலடி ஓசை கேட்டதும் திரும்பியவள், ''என்ன மேனர்ஸ் படிச்சு வச்சு இருக்கீங்க? இப்படித்தான் போனில் பேச்சை பாதியில் கட் பண்ணுவதா? ஆண்பிள்ளை என்ற திமிர்தானே?'' என்று ஆத்திரமாக கேட்டாள்.

''திமிர் எனக்கா? உனக்கா?''

''சந்தேகமே இல்லாமல் உங்களுக்குத்தான். நீங்க என்ன வேண்டுமானாலும் செய்யலாம். உங்களை நான் கேள்வி கேட்க முடியாது. அப்படித்தானே?''

''நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று ஒரு நாளும் நினைத்ததே இல்லை. நான் எந்த ஒரு செயலை செய்வதற்கு முன்னாலும், இது யார் யாரை எந்த விதத்தில் பாதிக்கும் என்று நூறு வாட்டி யோசிச்சு தான் செய்வேன்...''

''நானும் யோசிச்சுதான் எந்த காரியமும் செய்வேன்...''

''ஹூம்... நீ யோசித்தாயா? நல்ல ஜோக். யோசித்தால் இப்படி பைத்தியம் மாதிரி சுற்றி இருக்கும் கணவன் மாமியார் மாமனார் என்ற அன்பான குடும்பம். அவர்களின் எதிர்பார்ப்பு இதெல்லாம் குப்பையில் தூக்கி போட்டு விட்டு, ஆறு மாசம் வெளிநாட்டுக்கு வேலைக்கு போகிறேன் என்று சொல்ல முடியுமா?''

''நான் பைத்தியமா? இந்த மாதிரி சான்ஸ், அதுவும் வேலையில் சேர்ந்து ஆறு மாசம் கூட ஆகாத நிலையில் எனக்கு கிடைத்தது. என் திறமைக்கு கிடைத்த அங்கீகாரம். நான் மேலும் என் துறையில் வளர்வதற்கான ஒரு அரிய வாய்ப்பு, அதிர்ஷ்டம் என் வீட்டு வாசல் கதவை தட்டும் போது அதை தூக்கி போட சொல்றீங்களா? அப்படி தூக்கி போடுவதுதான் உங்கள் பார்வையில் பத்திசாலித்தனமோ?''

''லுக், எது அதிர்ஷ்டம், எது நல்லது என்று யார் முடிவு பண்ணுவது? வெளிநாட்டு ப்ராஜெக்ட் பண்ணுவது மட்டுமே ஒரு வாழ்வில் எல்லா நிறைவையும் தந்துவிடாது தர்ஷினி. குடும்ப சந்தோஷம் என்றும் ஒன்று இருக்கு இல்லையா? அதை நீ நினைச்சு பார்த்தாயா?''

''வெளிநாட்டு ப்ராஜெக்ட் பண்ணுவது வேலை பார்க்கும் பெண்ணிற்கு மனநிறைவை தராது. ஆனால் இங்கேயே இருந்து, உங்களுக்கு சமைச்சு போட்டு சேவகம் செய்வது மட்டும் நிறைவை தந்து விடும் இல்லையா? வாவ்! சூப்பர் லாஜிக்...''

''இங்கே பாரு. நான் பேசுவதை வேண்டும் என்றே குதர்க்கமாக பொருள் கொள்ளாதே. எனக்கு சமைச்சு போடுவதையும் சேவகம் செய்வதையும் மட்டும் நான் சொல்லவில்லை. அம்மா ஒரு பேர குழந்தைக்கு எவ்வளவு ஆசை படுவாங்க என்று நான் உனக்கு ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்...''

''ஷட் அப் பிரேம்! உங்க அம்மா ஆசைக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கிறீங்க. உங்க மனைவி ஆசைக்கு கொஞ்சம் மரியாதை கொடுக்கக் கூடாதா? அம்மா மட்டும் தான் பொண்ணு. அவங்களை மட்டும் தான் மதிக்கணும். மனைவி என்றால் இளக்காரமா?''

''ப்ரியா. நீ தேவை இல்லாமல் ஒப்பிடாதே. எனக்கு நீங்க ரெண்டு பேருமே முக்கியம் தான். ரெண்டு பேர் ஆசையும் நிறைவேறினால், அதை விட அதிக சந்தோஷம் எனக்கு இல்லை...''

''உங்க அம்மா ஆசை இன்னும் நிறைவேறவில்லை. அது ஒரு கானல் நீர் மாதிரி. இருக்கா இல்லையா என்றே தெரியலை. ஆனால் அதை காரணம் காட்டி, என்னோட ஆசையை தட்டி விட நீங்க முயற்சி பண்றீங்க. ரெண்டு பேருக்கும் சமமான முக்கியத்துவம் கொடுக்கிற மாதிரி சும்மா நடிக்காதீங்க பிரேம்.''

''தர்ஷினி, நீ ரொம்ப பேசுகிறாய். நான் ஏன் நடிக்கணும்? நீ தனியாக ஆறுமாசம் சிங்கப்பூர் போவதில் எனக்கு இஷ்டம் இல்லை. அவ்வளவுதான்.''

''ஏன்? ஏன் இஷ்டம் இல்லை என்று கேட்கிறேன்? பெண்டாட்டி கண் முன்னால் இருந்தால் மட்டும் தான் நம்புவீங்களா? தனியே வெளியூரில் இருந்தால்...''

''ஷட் அப். கண்டபடி உளறாதே. உன் மேலே நம்பிக்கை இல்லாமல் இல்லை. நான் சொல்வதற்கு காரணமே வேறே. அதை முதலில் புரிஞ்சுக்கோ. வாழ்க்கையில் ரொம்ப அடிபட்டு கஷ்டப்பட்ட அம்மா கையில் அவங்க ரொம்ப ஆசைப்படும் ஒரு பேரக்குழந்தையை முதலில் பெற்று கொடுத்து விடுவோம். அதன் பிறகு, அடுத்த வருடமே உனக்கு சான்ஸ் கிடைத்தால் கூட, குழந்தையை காரணம் காட்டி உன்னை தடுத்து நிறுத்த மாட்டோம். உன்னை அனுப்பி வைப்போம். நிச்சயமா. நான் சத்தியமே செய்கிறேன்...''

''கடவுளே! குழந்தை... குழந்தை... குழந்தை... அம்மாவுக்கும் பையனுக்கும் வேறே பேச்சே இல்லையா? வரவே இல்லாத குழந்தைக்காக இப்பவே ஏன் இப்படி உருகுறீங்க...?''

''குழந்தை ஏன் வரவில்லை என்று நினைக்கிறாய்? அது இந்நேரம் வந்து இருக்கலாமே? அப்படி வந்து

இருக்கும் பட்சத்தில், ஆரம்ப காலகட்டத்தில் நீ மசக்கை யுடன் தனியாக இருப்பதிலும் எனக்கு உடன்பாடு இல்லை. உனக்கு என்ன ஆகுமோ என்று ஒவ்வொரு நிமிஷமும் அம்மா தவிச்சு போய்டுவாங்க. அவங்க உன்னை அனுப்ப மாட்டாங்க ப்ரியா...''

''நீங்க என்னை வெளிநாட்டுக்கு அனுப்ப மாட்டேன் என்று சொல்வதற்கு காரணம் இந்த குழந்தை தான் என்றால், அந்த குழந்தையே எனக்கு வேண்டாம் பிரேம்...'' என்று சொல்லி வாய் மூடுவதற்குள் அவளின் கன்னத்தில் இடி இறங்கி அவள் காதுக்குள் 'ஞொய்' என்ற சத்தம் கேட்க கண்கள் இருட்டி கொண்டு வந்தது.

'அடித்தது பிரேம்-ஆ? இவனுக்கு எவ்வளவு திமிர். பாதி பேச்சில் போனை கட் பண்ணியதே தப்பு என்று அவள் ஆத்திரத்தில் இருக்க இப்போது கை வேறு நீட்டுகிறானா?' என்ற ஆத்திரத்தில் கன்னத்தை தட வியபடி நிமிர்ந்தவள் கண் முன்னால் நின்று இருந்தது காளி தேவியாக அவதாரம் எடுத்து இருந்த யசோதா.



23

பிரேம் போனை அணைத்து தூக்கி போட்ட வேகத் திலேயே அவனின் கோபத்தின் அளவை உணர்ந்த யசோதா, அடுத்து வந்த ஒவ்வொரு நிமிடமும் அவனின் அசைவையும் முக பாவனைகளையும் கண்காணிக்க

தவறவில்லை. ஏதோ சரியில்லை என்ற பய உணர்வு எழுந்ததாலேயே கணவனிடம் அவனை அழைத்து கொண்டு கொஞ்ச நேரம் வெளியே சென்று வர அறிவுறுத்தி இருந்தார். ஆனால் அவர் கிளம்பி வருவ தற்குள் தர்ஷினி வருவாள் என்பதை யசோதா எதிர் பார்க்கவில்லை.

அவரால் முடிந்த அளவுக்கு மகனையும் மருமகளை யும் சாதாரணமாக வைத்து இருக்க முயன்றார். அவர் களின் அறைக்குள் நடக்கும் தனிப்பட்ட பேச்சு வார்த் தைக்கு போகக் கூடாது என்று வெகுவாக கட்டுப்படுத்தி அமர்ந்து இருந்தவருக்கு அவர்களின் உயர்ந்த குரலும், அதில் அடிபட்ட குழந்தை என்ற வார்த்தையும் கட்டு பாட்டு தளையை அறுத்து எறிந்தது.

'அம்மாவுக்கும் பையனுக்கும் குழந்தையை விட் டால் வேறு பேச்சே இல்லையா?' என்ற தர்ஷினியின் வார்த்தைகளில் கோபம் தோன்றியது. மணமான மகனின் மூலமாக ஒரு பேர குழந்தையை எதிர்பார்த் தால் அதில் என்ன தப்பு? என்று ஆரம்பித்த கோபம், தன் எண்ணத்தை பிரதிபலித்த மகனின் வார்த்தைகளில் கொஞ்சம் குறைந்தது.

தன்னை போலவே, அவனும் 'இந்த குழந்தை ஏற் கனவே வந்து இருக்கலாம்' என்று எண்ணுவதில் உற்சாக வானத்தில் பறந்த யசோதா, அடுத்து ஒலித்த தர்ஷினி யின் வார்த்தைகளால், எவரெஸ்ட் சிகரத்தில் இருந்து தலை குப்புற விழுந்தது போல உணர்ந்தார். எதையும் யோசிக்க அவகாசமே இன்றி, தான் என்ன செய்கிறோம் என்பதை உணராமலேயே அறைக்குள் புயலாக

நுழைந்து அவளின் கன்னத்தை பதம் பார்த்து இருந்தார் யசோதா.

அறைக்குள் நுழைந்த அம்மாவை உணர்ந்த பிரேம், அவரின் மன நிலையை யூகித்து தடுக்கும் முன்பே அவன் எதிர்பாராதது நடந்து விட்டது. ஹய்யோ! என்ன காரியம் செய்து விட்டார்கள்? இந்த காலத்தில் பெற்ற பிள்ளையை அடிப்பதை தட்டி கேட்கவே, சட்டம் வந்து விட்டது. அப்படி இருக்கும்போது இவர்கள் ப்ரியதர்ஷினியை கை நீட்டி அடித்ததை எப்படி நியாயப்படுத்துவது?

'ப்ரியா அம்மாக்காக நான் சாரி சொல்றேன்...' என்று பதட்டமாக சொன்னவன், ''அம்மா, என்ன பண்றீங்க?'' என்று ஓடி வந்து அவரின் கை பற்றி இழுத்து நகர்த்தி இருவருக்கும் இடையில் நின்றான் பிரேம். தர்ஷினிக்கு முதுகு காட்டி இருந்த பிரேமை பார்க்கையில் தர்ஷினியின் ஆத்திரம் கூடியதே தவிர குறையவே இல்லை.

பிரேம் தன்னை அடித்து இருக்கலாம் என்று முன்பு எண்ணியதையே அவளால் ஜீரணிக்க முடியவில்லை. அடித்தது இவரா? என்னை பெற்று வளர்த்து ஆளாக்கியவர்களே இது வரை எனக்கு விபரம் தெரிந்து என்னை அடித்ததில்லை. தோளுக்கு மேல் வளர்ந்து விட்டால் நட்பாக நினைக்க வேண்டும் என்ற இந்த காலத்தில், தலைக்கு மேலே வளர்ந்து திருமணமும் முடித்த மகனின் மனைவியை கை நீட்டி அடிக்க இவருக்கு யார் உரிமை கொடுத்தது? எதற்கு என் மனைவியை அடித்தாய் என்று கேட்க வழியை காணோம். தன்னிடம் அவங்களுக்காக சாரி சொல்றானா? அவரிடம்

கெஞ்சி கொண்டு இருக்கும் இவனை எந்த கணக்கில் சேர்ப்பது?

''விடுறா என்னை. என்ன பேச்சு பேசுறா? அவளை கேள்வி கேட்காமல் என்னை தடுக்க வந்து விட்டாயா? எவ்வளவு தைரியம் இருந்தால் இந்த குழந்தையே எனக்கு வேண்டாம் என்று சொல்வாள்? என் வீட்டு வாரிசை வேண்டாம் என்று சொல்ல இவ யாரு?''

''எனக்கு எப்போ குழந்தை வேண்டும் என்பதை நான் முடிவு பண்ணனும். என்னை எங்க அம்மா அப்பாவே அடிச்சதில்லை. கை நீட்டி அடிச்சதும் இல்லாமல் நானும் என் புருஷனும் பேசிட்டு இருக்கும் தனியறைக்குள் வந்து என்னை கேள்வி கேட்க நீங்க யாரு?''

''ப்ரியா, நான் சொல்றதை கேளு. நீயும் பதிலுக்கு பதில் பேசாதே. அம்மா தெரியாமல் செஞ்சுட்டாங்க...'' என்று சமாதானம் செய்ய முயன்ற பிரேமை யசோதா, தர்ஷினி இருவருமே ஒரு பொருட்டாக நினைக்கவில்லை.

''இல்லை நான் தெரிஞ்சேதான் செஞ்சேன். அவள் பேசினது எனக்கு பிடிக்கலை. தப்பு செஞ்சால் தட்டி கேட்காமல் என்னால் இருக்க முடியாது. இதே வார்த்தையை இவள் இல்லை, எந்த பொண்ணு சொல்லி இருந்தாலும், பொண்ணு மட்டும் என்ன, நீயே சொல்லி இருந்தாலும், நான் அடிச்சு இருப்பேன்'' என்று தீர்மானமாக சொல்ல தர்ஷினி மேலும் ஏறிய கோபத்துடன் பிரேமை பார்த்தாள்.

''பேச்சு பேச்சா இருக்கும்போது இடையில் வந்து தேவை இல்லாமல் புகுந்ததும் இல்லாமல் கை வேறு

நீட்டி விட்டு, சட்டம் பேசுறீங்களா? என் குழந்தையை எப்போ பெற்று கொள்ளணும், எப்படி வளர்க்கணும் என்று எனக்கு தெரியும். இந்தமாதிரி அடாவடித்தனம் பண்ணும் வீட்டில் இனிமேல் என்னால் இருக்க முடியாது...''

''பார்த்தியா பார்த்தியா? மறுபடி மறுபடி என்ன மாதிரி பேசுறா என்று பாரு. குழந்தையோட அருமை பற்றி இவளுக்கு தெரியுமா? எதுவும் கஷ்டப்படாமல் கிடைத்தால் இப்படித்தான் தூக்கி எறிய சொல்லும். அது இல்லாமல் கஷ்டப்படுபவங்களுக்கு தான் அதோட அருமை புரியும். இந்த வருஷம் இல்லாவிட்டால் அடுத்த வருஷம் போக முடியாதா? இல்லை இதே சிங்கப்பூரை என்னால சொந்த செலவுல இவளை கூட்டி போய் காண்பிக்க முடியாதா? அதுக்காக குழந்தையை வேண்டாம் என்று தூக்கி எறிவாளா? இந்த வேலை இல்லாவிட்டால் உலகத்துல ஆயிரம் வேலை இருக்கு...'' என்று யசோதா விடாமல் பொரிந்து கொண்டு இருக்க, அவனுக்கு அம்மாவின் உடல்நிலை குறித்து பயமாக இருந்தது.

''அம்மா ப்ளீஸ். கொஞ்சம் அமைதியா இருங்க. நான் சொல்றேன். அவள் புரிஞ்சுப்பா'' என்று அவன் அம்மாவை சமாதானப்படுத்தும் வேலையில் மூழ்கி இருந்தான்.

அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவளை கூர் வாளால் வெட்டியது போல இருக்க, பிரேமின் அம்மாவை சமாதானப்படுத்த முயலும் இயலாமையில் வந்த அமைதியான வார்த்தைகள் அந்த கோப தீயில் மேலும்

நெய் வார்க்க, அவளின் பொறுமை எல்லையை தொட்டது. அவள் விடுவிடென்று வெளியே நடந்தாள்.

''ப்ரியா நில்லு...'' என்ற பிரேமின் குரல் அவளை எட்டும் முன்பு அவள் வெளியேற, ''அஞ்சு நிமிஷம் முகம் கழுவி ட்ரெஸ் மாற்றி வருவதற்குள் என்ன ஆச்சு? தர்ஷினி ஏன் கோபமா நான் கூப்பிட கூப்பிட என்ன என்று கூட கேட்காமல் எங்கே போறா?''என்று கேட்டபடி உள்ளே வந்தார் நந்தகோபால்.

''அம்மாக்கு மாத்திரை கொடுத்து சமாதானப்படுத்துங்க. நான் போய் அவளை கூட்டிட்டு வரேன். அம்மா அவளை அடிச்சுட்டாங்க..'' என்று அவசரமாக சொல்லி விட்டு பைக் சாவியோடு வெளியே வந்தான். அவன் கடைசியாக சொன்ன வாக்கியத்தை நம்ப முடியாமல் யசோதாவை பார்த்தவர் பயந்தே போனார். வேகமாக வந்த மூச்சுக்களையும், கோபத்தில் ஜொலித்த முகத்தையும், பார்த்தவர், கை பற்றி வெளியே அழைத்து சென்று சோபாவில் அமர வைத்து விட்டு, ஒரு டம்ளரில் தண்ணீரும், மாத்திரையும் எடுத்து வந்து நீட்டினார்.

* * *

ப்ரியா எங்கே போய் இருக்கக் கூடும்? அவள் அவசரப்பட்டு ஒரு முடிவை எடுத்து விட்டாள், என்று தான் அவளின் மேல் கோபமாக இருக்கும்போது, அம்மா அவளின் மேல் கோபப்பட்டு, அதை விட அவசரமாக ஒரு தப்பான காரியத்தை செய்து விட்டார்களே? இப்போது வீட்டினருடன் கலந்து பேச முயற்சி கூட செய்யாமல், அவள் தன்னிசையாக வெளிநாடு போக முடிவு செய்தது, கோபத்தில் தேவை இல்லாமல் பேசியது எல்லாமே காணாமல் போய் அம்மா அவளை

அடித்தது மட்டுமே மற்றவர்களின் பார்வையில் மிஞ்சி நிற்கும்.

கடவுளே என்று தன்னை தானே நொந்தபடி பைக்கில் கிளம்பினான். வீட்டை விட்டு வெளியே வந்தவன் பார்வையில் கையில் பர்ஸ் கூட இல்லாமல் தூரத்தில் தர்ஷினி விடுவிடு என்று நடந்து போய் கொண்டு இருப்பது தெரிந்தது.

''ப்ரியா, ஐ ஆம் சாரி ப்ரியா, அம்மா செஞ்சது தப்புதான். வீட்டுக்கு வா. அம்மாவே உன்னிடம் இன்னும் கொஞ்ச நேரம் கழித்து சாரி சொல்வாங்க. எதுவா இருந்தாலும் பேசி தீர்த்துக்கலாம். எல்லோருக்கும் சந்தோஷமாக இருக்கும் நல்ல முடிவை எடுக்கலாம். வா ப்ரியா..''என்று அவள் அருகில் பைக்கை நிறுத்தி கெஞ்சல் குரலில் சொல்லி கொண்டு இருக்கும்போதே, அவள் வழியில் சென்ற ஆட்டோவை கைகாட்டி நிறுத்தி அதில் ஏறி விட்டாள்.

ஆட்டோவை பின் தொடர்ந்து வந்தவன், ''ப்ரியா, நீ இவ்வளவு தூரம் இந்த பிரச்சனையோடு வருவதே எனக்கு பிடிக்கவில்லை. வந்துவிட்டதால், அம்மா அப்பாவிடம் ஹலோ சொல்லிவிட்டு கிளம்பலாம். வீட்டுக்கு போய் பேசிக்கலாம்'' என்று அவளின் கை பற்றினான்.

''நீங்க இனிமேல் என்னிடம் பேச தேவை இல்லை. அதான் உங்க அம்மா பேச வேண்டியது எல்லாம் கையால் பேசிட்டாங்களே. நீங்க உங்க அம்மா பேச்சை கேட்டுகிட்டு. உங்க வீட்டில் உங்க இஷ்டத்துக்கு இருங்க. நான் என் இஷ்டத்துக்கு இருக்கேன்...''

''உங்க வீடு எங்க வீடு என்று கண்டபடி உளறாதே ப்ரியா. வழியில் நின்று இந்த விவாதம் தேவையா? உன் இஷ்டம் என் இஷ்டம் என்று எதுவும் தனிதனியா இருக்கக் கூடாது. இனிமேல் நம் இஷ்டம் என்று தான் இருக்கணும். உன் ஆசைபடி சிங்கப்பூர் போக நானே ஏற்பாடு பண்றேன். வா...''

''நீங்க என்ன ஏற்பாடு பண்றது? முதலில் நான் என்னவோ கொலை குற்றம் பண்ணின மாதிரி அந்த குதி குதிச்சீங்க? இப்ப நீங்களே என்னை அனுப்பி வைக்க ஏற்பாடு பண்றீங்களா? எனக்கு நீங்க ஒண்ணும் பிச்சை போட தேவை இல்லை...''

''ப்ரியா அம்மாக்கு கொஞ்சம் மெடிக்கல் ப்ராப்ளம்ஸ் இருக்கு. ப்ளீஸ் புரிஞ்சுக்கோ...''

''இந்தியாவுல நாற்பது சதவிகிதம் பேருக்கு டையாபடீஸ் இருக்கு. மிச்சம் இருக்க பாதி பேருக்கு ப்ரெஷர் இருக்கும். இதெல்லாம் ஒரு வியாதியா? உடம்பு சரி இல்லை என்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? அதுக்கு கட்டுப்பாடு கிடையாதா?''

''நான் அப்படி சொல்லவில்லை. ப்ரெஷர் தவிர அம்மாவிற்கு, மனரீதியான பிரச்சனைகள் இருக்கு ப்ரியா. அதெல்லாம் உனக்கு முழுசா தெரியாது...''

''எனக்கு தெரிய வேண்டாம் என்றுதானே இத்தனை நாள் நினைத்தீங்க. இனிமேலும் அது எனக்கு தெரியவே வேண்டாம்...'' என்று முகத்திலடித்த மாதிரி தர்ஷினி சொன்ன போது வீட்டு வாசல் வந்து இருந்தது.

''ப்ரியா, கடைசியா நீ என்ன தான் சொல்ற?'' என்று பொறுமையை இழுத்து வைத்து கேட்டான்.

''நான் உங்களை இங்கே கூப்பிடலை. உங்களிடம் எதுவும் சொல்லவும் இல்லை. நீங்களா வந்தீங்க. நீங்களா கிளம்புங்க...''

''நீ என் மனைவி என்பது உனக்கு ஞாபகம் இருக்கா?''

''இல்லை. எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லை...''

''ப்ரியா. இப்ப நீ என்னுடன் கிளம்பி வருவது நல்லது. இல்லை என்றால் நான் இப்படியே கிளம்புகிறேன். அப்புறம் உன் இஷ்டம்'' என்று பல்லை கடித்தபடி சொன்ன போது, கதவை திறந்த குருமூர்த்தி ஒரே பார்வையில் பொங்கிய கோபத்தை அடக்கியபடி நின்று இருந்த பிரேமின் பாவனையையும், தர்ஷினியும் கோபமான முகத்தையும் அளந்து முடித்து இருந்தார்.

''வாங்க மாப்பிள்ளை. வாம்மா...'' என்று யோசனை யோடு இழுத்தார்.

அமைதியாக பிரேம் உள்ளே நுழைய, தர்ஷினி நேராக அவளுடைய அறைக்கு சென்றுவிட்டாள். கேள்வியாக பார்த்த குருமூர்த்தியிடம், ''ஒரு சின்ன பிரச்சனை, கோபமாக வந்து விட்டாள். நான் நாளைக்கு வரேன்...'' என்று சொல்லி கொண்டு இருக்கும்போது அவனின் மொபைல் அழைத்தது. எடுத்து பேசியவன் முகம் இருண்டது.

''என்னப்பா சொல்றீங்க?''

''.....''

''தர்ஷினியை இங்கே அவங்க வீட்டுல விட்டுட் டேன். அங்கேதான் இருக்கேன். பத்து நிமிஷத்துல வந்துடுவேன்பா. பயப்படாதீங்க. ஒண்ணும் ஆகாது...''

என்று போனை வைத்துவிட்டு குருமூர்த்தியிடம் ஒரு அவசரமான தலை அசைப்புடன் விடை பெற்று சென்றவனை ஒன்றும் புரியாமல் கவலையோடு பார்த்தார்.

பிரேம் வீட்டிற்கு வந்த வேகத்தில் கிளம்பி விட, ''யாருங்க மணி அடிச்சது? என்ன விஷயம்,'' என்று கேட்டபடி வந்த புவனேஸ்வரி, அவளின் அறையில் இருந்த கட்டிலில் சரிந்த தர்ஷினியை பார்த்து வியப் படைந்தார். ''தர்ஷினி! எப்ப வந்த? முகம் எல்லாம் ஒரு மாதிரி இருக்கு. அழுதாயா என்ன?'' என்று விசாரித் தார்.

தர்ஷினி ஒன்றும் பேசாமல் படுத்து இருக்க பிரச் சனையை குருமூர்த்தியால் ஊகிக்க முடிந்தது. பிற்பகல் தர்ஷினி ஆபீசில் இருந்து உற்சாகமாக பேசியது நினைவு வந்தது. சிங்கப்பூர் போகும் பிரச்சனையாகத்தான் இருக்க வேண்டும். இதை வளர விடக் கூடாது. உடனேயே இவளை சமாதானப்படுத்தி கொண்டு போய் அங்கே விட வேண்டும்.

''அங்கே வீட்டுல ஒரு சின்ன பிரச்சனை. கோபம் வந்துடுச்சு. கிளம்பி வந்துட்டா...'' என்று கேலியாக சொல் வது போல சமாளித்தார்.

''பிரச்சனையா? என்ன நீங்க இப்படி சர்வ சாதாரணமா சொல்றீங்க? தர்ஷினி என்ன பிரச்சனை ஒழுங்கா சொல்லு...''

''.....''

''அவ சொன்னாதான் கேட்பாயா? நான் சொல்றேன். இவளை ஆறு மாசம் சிங்கப்பூர் அனுப்ப அவங்க

ஆபீஸ்ல தேர்ந்தெடுத்து இருக்காங்க. ஆபீசில் சொன்ன உடனேயே எனக்கு மதியம் ஆபீஸ்ல இருந்து போன் பண்ணி இருந்தாள். அப்பவே எனக்கு இவள் ரொம்ப ஆசையா பேசறாளே, அவங்க வீட்டுல என்ன சொல் வாங்களோ என்று கவலையா இருந்தது. நான் எதிர் பார்த்த மாதிரியே அனுப்ப பிரேம் யோசிச்சு இருக்கார், கோபம் வந்துடுச்சு. ரெண்டு நாளில் சரியாய் போய்டும் விடு...''

''தர்ஷினி ஆறு மாசம் எல்லாம் ரொம்ப ஜாஸ்தி, கல்யாணம் ஆகி ஒரு மாசம் ஆறது. அதுக்குள்ளே ஆறு மாசம் வெளிநாடு போறது எல்லாம் ரொம்ப ஜாஸ்தி, பிரேம் என்ன வேண்டாம் என்று சொல்றது? நானே சொல்றேன். நீ போக தேவை இல்லை...'' என்று புவ னேஸ்வரி சொல்லி முடிக்கும் முன்பே ஆத்திரமாக தர்ஷினி இடையிட்டாள்.

''நான் உங்க அபிப்ராயம் கேட்கவில்லை. கேட்கும் போது சொல்லுங்க...''

''அந்த வாயிலேயே ஒண்ணு போட்டால் தான் சரியா இருக்கும். இதே மாதிரி வாய் அங்கேயும் பேசி பாரு. நல்லா நாலு சாத்து சாத்துவாங்க. வாங்கிட்டு வந்து சேரு. உன் மாமியாரே உன்னை கண்ணே பொண்ணே என்று கொஞ்சினால் இப்படித்தான் ஏறி கொள்வாய், பொண்ணா லட்சணமா குடும்பத்தை அனுசரிச்சு இருக்க வழி இல்லாமல் எப்ப பாரு பதிலுக்கு பதில் எதிர்த்து பேசிட்டே இருந்தால் அவர் என்ன பண்ணுவார் பாவம்...'' என்று எரிச்சலோடு சொல்லிவிட்டு வெளி யேறிய புவனேஸ்வரியை நம்ப முடியாமல் பார்த்தாள் தர்ஷினி.

அம்மாவிற்கு அவன் தன்னை அடித்தால் கூட ஆச்சரியம் ஒன்றும் இல்லையா? அப்பாதான் தன்னை சமாதானப்படுத்துவார். அம்மா தனக்கு ஆதரவாக கோபப்படக் கூடும் என்று எதிர்பார்த்து இருந்தாள். ஆனால் அம்மாவின் இந்த பேச்சு அவள் எதிர்பார்க்க வில்லை. அதுவரை இருந்த வீம்பும் கோபமும் போய், அந்த இடத்தை சுய இரக்கம் பிடித்து கொள்ள, படுக் கையில் கவிழ்ந்து விம்மி அழ ஆரம்பித்தாள்.



24

படுக்கையில் சரிந்து விம்மி அழும் மகளை பார்க் கும்போது குருமூர்த்திக்கு கவலையாக இருந்தது. மகளின் மேல் பாசம் இருந்தாலும் அவளின் புகுந்த வீட்டினரின் மேல் அக்கறையும் சேர்ந்தே இருந்ததால், கவலை கூடியது. மகளின் ஆசை தப்பு என்று சொல்ல முடியாது. ஆனாலும் அவள் அதன் அவசியத்தை எடுத்து சொல்லி, அவர்களை சம்மதிக்க வைக்க வேண்டுமே தவிர இப்படி கோபித்து கொண்டு வந்தது எந்த விதத்திலும் சரி என்று அவரால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. புகுந்த வீட்டில் ஏதாவது பிரச்சனை என்றால், உடனே கோபித்து கொண்டு பிறந்த வீட்டுக்கு வந்து விடலாம் என்ற எண்ணம் அவளுக்கு வந்து விடக் கூடாது என்ற அக்கறையும் இருந்தது.

''தர்ஷினி, என்ன ஆச்சும்மா? எதுக்கு அழற? பிரேம் தான் பின்னாடியே வந்தாருல்ல. அவரிடம் அங்கேயே

பேசி பிரச்சனையை தீர்க்காமல் இப்படி கிளம்பி வந்தது சரி இல்லை தர்ஷினி'' என்று அவள் முதுகை வருடி மென்மையாக சொன்னார் குருமூர்த்தி. அவரின் அந்த வார்த்தைகளும், மென்மையான வருடலும், அவளை மேலும் உடைத்து கண்ணில் நீர் பெருக வைத்தது.

''ஷ்! தர்ஷினி நீ அழுது நான் பார்த்ததே இல்லை, அழறது கோழைத்தனம் என்று சொல்லும் என் பெண்ணா இப்படி அழறது? டீ பேட். எழுந்திரி. சூடா பால் எடுத்துட்டு வரட்டுமா? ஜில்லுன்னு லைம் ஜூஸ் எடுத்துட்டு வரட்டுமா?''

''ஒண்ணும் வேண்டாம்'' என்று அவரின் மடியில் படுத்து கொண்டவளின் தலையை வருடி, பூஸ்ட் வற் புறுத்தி பருக வைத்ததை பார்த்த புவனேஸ்வரிக்கு கோபம் கூடியது.

''இப்படி செல்லம் கொடுத்தால் எப்ப அவ தப்பை உணர்வது? இப்படி தனியா கிளம்பி வந்தது தப்பு என்று சொல்ல மாட்டீங்களா? உட்கார்ந்து சமாதானம் செய் துட்டு இருக்கீங்க?''

''அவள் தனியா வரலை. பிரேம் தான் கொண்டு வந்து விட்டுட்டு போனார்...''

''எப்போ நான் பார்க்கவில்லையே? ஏன் என்னை கூப் பிடவில்லை? வந்தவருக்கு ஒரு வாய் காபி கூட கொடுக்காமல்...''

''ஆமா! கோவிச்சுட்டு போற அவனுக்கு காபி கொடுக் கலை என்று யோசிங்க. இங்கே அழுதுட்டு இருக்கும்

எனக்கு அப்பா பால் கொடுத்தால் அது கொலை குத்தம் இல்ல?''

''தர்ஷினி, நான் அம்மாவிடம் பேசிட்டு இருக்கும் போது நீ ஏன் குறுக்கே பேசற? இது கெட்ட பழக்கம்...'' என்று அதட்டிய குருமூர்த்திக்காக வாயை மூடி இருந் தாள்.

''நான் அவளை சமாதானம் பண்ணி இன்னிக்கே கொண்டு போய் விட்டுடுவேன். நீ குறுக்கே குறுக்கே பேசாதே. இன்னிக்கு சங்கடஹர சதுர்த்தி இல்லையா? கீழே விநாயகருக்கு அபிஷேகம் இருக்கு. கோவிலுக்கு போயிட்டு வா. நான் அவளை பார்த்துக்கறேன்'' என்று அனுப்பி வைத்தவர் மகளிடம் திரும்பினார்.

''நீங்களே நல்ல வார்த்தை சொல்லி அனுப்பி வச் சுடுங்க. இல்லை என்றால் நான் பேசுவதே வேற மாதிரி இருக்கும்'' என்று மிரட்டி விட்டு கிளம்பிய புவனேஸ் வரியை பார்த்து பல்லை கடித்தாள் தர்ஷினி.

''தர்ஷினி பொறுமையா இரு. நிதானம் வேண்டும். அம்மாவும் கோவிலுக்கு போய் விட்டாள். சொல்லு, என்ன பிரச்சனை? நான் சொன்னது தானா? வேறே ஏதா வதா?''

யசோதா தன்னை அடித்தார் என்பதை சொல்வதா வேண்டாமா? அம்மாவே தனக்கு சப்போர்ட் பண்ண வில்லை என்றால், தன்னை இன்றே அந்த வீட்டில் கொண்டு போய் விட்டு விடுவேன் என்று தீர்மானமாக சொல்லும் அப்பா நிச்சயம் ஆறுதல் சொல்லப் போவ தில்லை. தனக்குள் பட்டிமன்றம் நடத்தியபடி அமைதி யாக இருந்தாள் தர்ஷினி.

''அம்மா வெடுக் வெடுக் என்று பேசினாலும் அவள் சொல்வதில் தப்பு இல்லை தர்ஷினி. பிரேம் ஆறு மாசம் உன்னை சிங்கப்பூருக்கு அனுப்ப தயங்குவதில் அர்த்தம் இருக்குடா. புதுசா கல்யாணம் ஆன எந்த பையனும் இதுக்கு சம்மதிக்க மாட்டான். புத்தம் புது மனைவியை ஆறு மாசம் பிரிந்து இருப்பது என்பது ரொம்ப கஷ்டம் தர்ஷினி. உன்னை பார்க்கணும் என்று நினைத்தால் உடனே அங்கே வர முடியுமா? எவ்வளவு செலவு? பாஸ் போர்ட் விசா என்று எவ்வளவு பார்மாலிடீஸ்? அதெல் லாம் யோசிச்சு பார்த்தாயா?''

''சும்மா இருங்கப்பா. அப்படி எல்லாம் ஒரு வேளை சொல்லி இருந்தால் நானே சரி என்று கேட்டு இருப் பேன். நீங்க சொல்ற மாதிரி என்னால் உன்னை விட்டு பிரிஞ்சு இருக்க முடியாது என்று சொல்லி இருந்தால் கூட என் மேலே பாசம் என்று சந்தோஷப்பட்டு இருப் பேனே? அதுவும் இல்லை. அவர் சொன்ன காரணம் என் கோபத்தை இன்னும் அதிகப்படுத்தியது...''

''அப்படி என்னம்மா சொல்லி இருக்க போறார்? அவங்க அம்மாக்கு சீக்கிரம் ஒரு குழந்தை பெற்று கொடுக்கணும் என்று சொல்லி இருப்பார். அதில என்ன தப்பு?''

''அ..ப்...பா! அதுல என்ன தப்பு என்று நீங்களும் கேட்கறீங்களா? அங்கே அம்மாவும் பையனும் மாறி மாறி குழந்தை குழந்தை என்று டார்ச்சர் பண்ணினால் நீங்களுமா? தாங்க முடியலைப்பா. இதுதான் எனக்கு பெரிய பிரச்சனை. அந்த வார்த்தையை கேட்டாலே வர வர எனக்கு அலர்ஜியா ஆகிடுச்சு...''

''அப்படி எல்லாம் பேசாதே தர்ஷினி. அவங்க அப்படி அவசரப்படறதுக்கு காரணம் இருக்கு...''

''என்னப்பா பெரிய காரணம்? கல்யாணம் முடிஞ்சு ஹனிமூனில் இருந்து திரும்பி வந்த அன்றே சொன் னாங்க. நானும் சரி அத்தை நான் என்ன மேஜிக் ஸ்டிக் வச்சு இருக்கேனா? சீக்கிரம் ஏற்பாடு பண்றேன் என்று சிரிச்சுட்டே சொல்லியாச்சு. அப்ப எனக்கு அது பெரிய பிரச்சனையா தெரியலை. அதன் பிறகு ஒரு நாளைக்கு ரெண்டு வாட்டி சொல்லி சொல்லி எனக்கு கடுப்பாகி விட்டது. இப்ப பிரேமும் ஆரம்பிச்சாச்சு. நான் என்ன குழந்தை பெற்று போடும் மெஷினாப்பா? எனக்கு மனசு இல்லையா? அதுல எனக்கும் சில ஆசைகள் இருக்கும் இல்லையா? அதை பத்தி கவலைப்படாமல் அவங்க பேசிட்டே போனால் என்ன பண்ண சொல்றீங்க? எல் லாத்துக்கும் தலையை ஆட்டிட்டு பீலிங்க்ஸ் இல்லாத ஜடமா என்னை அங்கே இருக்க சொல்றீங்களா? அது தான் நல்ல பொண்ணுக்கு அடையாளம் என்று நீங்க எதிர்பார்க்கிறீங்க என்றால், சாரிப்பா என்னால் முடி யாது...''

''உன்னோட கோபம் எனக்கு புரியுது தர்ஷினி. ஆனால் அவங்க மேலே தப்பில்லை. சரி நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லு. நீ ஏன் இந்த சிங்கப்பூர் பயணத்தை இவ்வளவு முக்கியமா தவிர்க்க முடியாததாக நினைக்கிறாய்?''

''என்னப்பா இது கேள்வி? அது ஒரு அரிய சந்தர்ப்பம். சாதாரணமா புதிதா சர்வீஸ்ல சேரும் ஒரு ஆளுக்கு கிடைக்காத அபூர்வமான சந்தர்ப்பம். மத்திய தர வர்க்

கத்துல பிறந்து, படிச்சு வேலைக்கு போகும் ஒரு பெண்ணா, வெளிநாட்டு பயணம் போக சந்தர்ப்பம் கிடைக்குமா என்று எத்தனை கனவு கண்டு இருப்பேன்? அந்த கனவு நிறைவேறும் நாள் அன்று, அதை வேண்டாம் என்று சொன்னால் கோபம் வராதா?''

''தர்ஷினி, நீ நெடுநாள் ஆசைப்பட்ட ஒரு விஷயம் உனக்கு கிடைக்கும்போது அதை தட்டி விட அவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்று தானே உனக்கு அவங்க மேலே கோபம். இதே கோபம் அவங்களுக்கு உன் மேலும் இருக்கலாமே?''

''என்னப்பா உளறீங்க? அவங்களுக்கு என்ன நீண்ட நாள் ஆசை? அதை நான் எங்கே எப்ப தட்டி பறித்தேன்?'' என்று கோபத்தோடு கேட்டாள் தர்ஷினி.

''வெளிநாட்டு பயணம் உன்னுடைய நீண்ட நாள் ஆசையா இருப்பதனால் தான் உனக்கு அதை விட மனசில்லை. அதே மாதிரி தான் ஒரு குழந்தையை தூக்கி கொஞ்சணும் என்பது அவங்களோட நீண்ட நாள் ஆசை...''

''குழந்தை அவங்களுக்கு நீண்ட நாள் ஆசையா? என்ன உளறல் இது? எனக்கு கல்யாணம் ஆகி ஒரு மாசம் தான் முடிஞ்சு இருக்குப்பா. என்னவோ ஒன்பது வருஷம் ஆகிப் போன மாதிரி பேசுறீங்க?'' என்று சொல்லும்போதே யசோதா கோபத்தோடு கத்தியது நினைவிற்கு வந்தது.

''கஷ்டப்படாமல் கிடைத்தால் இப்படித்தான் தூக்கிப் போடச் சொல்லும்...'' அதுக்கு என்ன அர்த்தம்? பிரேம் தவம் இருந்து பெற்ற பிள்ளையோ? சரி இருக்கட்டும்

அதனால் தன்னை கை நீட்டி அடிக்கலாமா
எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டுமே
இன்னும் அடங்காமல் திமிறியது.

''ஏன்பா! பிரேம் அவங்களுக்கு தவ
கிடைத்த பிள்ளையாக இருந்து இருக்கல
பிறகு அவர்கள் குழந்தைக்கு ஏங்கி கி
இருந்து இருக்கலாம். ஒரே பிள்ளை மே
களுக்கு இருக்கும் அளவு கடந்த பாசம் அ
ஒரு பேரக் குழந்தையைப் பார்க்க தவிச்சு
அதெல்லாம் நான் தப்பு சொல்லவே இல்
அதுக்காக அவங்க என்னைக் கை நீட்டி
மாப்பா?'' என்று ஆத்திரமாக அடுக்கியவளின
களில் குருமூர்த்தியும் வாய் அடைத்துப் போ

''கேட்ட உங்களுக்கே இப்படி இருக்கே? அ
எனக்கு எப்படி இருக்கும்? அப்ப கூட பி
களை ஏன் அடித்தாய் என்று கேட்கலை
என்று சொன்னவளின் குரலில் கோபம்
இருந்தது.

''தர்ஷினி நீ நிஜமாவா சொல்ற? யசோதாம்
அடிச்சாங்களா?''

''என்னப்பா இப்படிக் கேட்கறீங்க? அ
பற்றி நான் ஏன் பொய் சொல்லணும்?''

''நீ பொய் சொல்கிறாய் என்று நான்
லைடா. ஆ..னா..ல் நீ.. நீ.. அவங்களை என
தர்ஷினி?'' என்று யசோதா அம்மாவின்
ஆதங்கத்திற்கும், மகளின் மேல் இருக்கும்
கும் இடையே தடுமாறித் திக்கினார் குருமூர்

''என்ன சொல்லி இருந்தால் என்னப்பா? நானும் பிரேமும் தனியா பேசிட்டு இருக்கும்போது கொஞ்சம் கூட இங்கிதமே இல்லாமல் எங்க ப்ரைவசியில் தலையிட்டதும் இல்லாமல்...''

''ஷட் அப் தர்ஷினி! என்ன பேச்சு இது? கணவன் மனைவி மட்டும் தான் குடும்பம் என்பதை என்னால் ஒத்துக் கொள்ள முடியாது. நாங்க உன்னையும் அப்படி வளர்க்கலை என்று நம்புகிறேன். கணவன் மட்டும் வேண்டும். அவனின் பெற்றோர் வேண்டாம் என்று சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இதே மாதிரி பிரேம் சொன்னால் நீ ஒத்துக் கொள்வாயா? கல்யாணம் முடிந்த உடனே அவர் எங்களையும் பார்த்துக் கொள்வேன் என்று சொன்னபோது நமக்கு எவ்வளவு சந்தோஷமாக இருந்தது? அதை மறந்து விட்டாயா? அதே மாதிரி அவரும் உன்னிடம் எதிர்பார்க்க மாட்டாரா தர்ஷினி?'' என்று இப்போது மகள் மேல் கோபம் வந்துவிட வேகமாகவே கேள்விகளை அடுக்கினார்.

''நான் எதையும் மறக்கவில்லை அப்பா, நானும் அவர்களை மரியாதையா அன்பா நடத்தணும் என்று தானே நினைத்து இருந்தேன். இன்று மாலை வரை அப்படித்தானே நடத்தினேன். ஆனால் அன்பு என்பது ஒரு வழி பாதையா அப்பா? அடிப்படை மரியாதை நான் எதிர்பார்க்கக் கூடாதா?'' என்று இன்னும் கோபம் அடங்காத குரலில் கேட்டாள்.

''அதென்ன தர்ஷினி இன்று மாலை வரை...? இன்று மாலை அவர் உன்னை அடித்ததுதான் உன் மனம் மாறியதற்குக் காரணம் என்றால், அவரை அடிக்கத் தூண்டிய அளவுக்கு நீ என்ன செய்தாய் என்ற கேள்வி

எனக்கு வருதே? அதற்கு ஏன் நீ பதில் சொல்ல மறுக்கிறாய்? குடும்பத்தில் எல்லா நேரமும் எல்லோரும் சிரித்துப் பேசி கொஞ்சிக் கொண்டே இருக்க முடியாது. மேடு பள்ளங்கள் இருக்கத்தான் செய்யும். அதை நாம் எப்படி ஹேண்டில் பண்றோம் என்பதைப் பொறுத்துதான் வாழ்க்கையில் வெற்றி தோல்வி கிடைக்கும்...''

''ஏன்பா, அங்கே என்ன நடந்தது என்று தெரியாமலே பேசுறீங்களே? என்னோட கேரியர் முக்கியம் என்று நான் நினைப்பது தப்பா அப்பா? எனக்கு முக்கியம், பிடித்தது என்று இருக்கும் ஒரு பொருளை எனக்கு வேண்டும் என்று அதை நான் வலியுறுத்திப் பேசக்கூடாதா?''

''கேரியர் முக்கியம். ஆனால் வாழ்க்கை அதை விட முக்கியம் தர்ஷினி. அதெப்படி நீ என்ன சொன்னாலும் பரவாயில்லை என்று இருக்க முடியும்? உன்னோட செயலுக்கு, ஏற்றாற் போல தானே எதிராளியின் செயல் இருக்கும்? இன்னும் என்ன பேசினாய் என்பதை நீ நேரடியாக சொல்லவில்லை. அவங்க உன்னைப் போக வேண்டாம் என்று சொன்ன கோபத்தில் குழந்தை வேண்டாம் என்று சொன்னாயா?''

''ஏன்பா! அது அவ்வளவு பெரிய தப்பா?'' கணையாக பாய்ந்து வந்தது தர்ஷினியின் கேள்வி.

''தப்புதான் தர்ஷினி. நீ அப்படி பேசி இருக்கக் கூடாது'' தீர்மானமாக வந்தது குருமூர்த்தியின் குரல். ''அப்பா...!'' என்று அதிர்ந்து போய் வாய் அடைத்து நின்றாள் தர்ஷினி.

''நீ பண்ணியது சின்ன தப்பு. விஷயம் தெரியாமல் செய்து விட்டாய். நான் பெரிய தப்பு செய்து விட்டேன்.

பிரேமின் அப்பா உங்க கல்யாணத்துக்கு முன்பு சொன்ன ஒரு முக்கியமான விஷயம் நான் உன்னிடம் சொல்லலை. எல்லாம் போற வழியில் சொல்றேன். முதலில் நீ எழுந்திரி. நான் கூட வந்து உன்னை அங்கே விட்டுட்டு வரேன்.''

''நீங்க என்னப்பா தப்பு பண்ணினீங்க? இப்பதான் நான் அங்கே இருந்து கோபத்துல கிளம்பி வந்து இருக்கேன். அரை மணி நேரத்துல நீங்க திரும்பி அங்கே கொண்டு போய் விடுவேன் என்றால் என்ன அர்த்தம்? அவங்க அடிச்சது கூட தப்பு இல்லை என்று சொல்றீங்களா?'' என்று கேட்டவளின் முகம் குழப்பத்தைக் காட்டியது.

அப்பா நிதானம் தான். ஆனால் இன்று அவங்க அடிச்சாங்க என்று சொன்ன பிறகும், அந்தச் செய்தி தந்த கோபம் கூட இல்லாமல் அவருக்குச் சாதகமாகப் பேசுவது என்றால் தான் செய்தது சரி இல்லையோ என்ற சந்தேகம் முதல் முறையாக அவளுக்குத் தோன்றியது.

''தப்பா தப்பு இல்லையா என்று ஆராய்ச்சி பண்ணுவது இப்ப அவசியம் இல்லை தர்ஷினி. நடந்து விட்ட விஷயங்களை போஸ்ட் மார்ட்டம் பண்ண வேண்டாம். உனக்குப் பசி என்றாலோ வறுமை என்றாலோ என்ன என்றே தெரியாது. ஆனால் பிரேம் குடும்பம் அப்படி இல்லை. அவங்க வாழ்க்கையில் ரொம்பக் கஷ்டப்பட்டு இருக்காங்க...''

''அப்பா பணம் இல்லாதது ஒரு பெரிய பிரச்னையா? நம் நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழே நாற்பது சதவிகிதம் பேர் இருக்காங்க...''

''புரியாமல் பேசாதே தர்ஷினி. நான் பேசுவதைக் கொஞ்சம் பொறுமையா கேட்டு முடி. குறுக்கே குறுக்கே பேசாதே. பணம் இல்லாததனால் மட்டும் இல்லை. சின்ன வயசுல திருமணம். திருமணத்திற்கு வாங்கிய வரதட்சணை. கணவன் மனைவியைச் சேர விடாமல் வைத்து இருந்தது. ஆறு வருஷம் கழித்து அவர்கள் மனசு வந்து சேர்த்து வைக்க முயன்ற போது குழந்தை இல்லாமல் போனது, என்று வேறு பல சோக சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு இருந்து இருக்காங்க. ஆனால் இத்தனையும் மீறி, அவங்க உற்சாகமாக இந்த உலகத்தில் நடமாட பிரேம் அவங்க மேல் வச்சு இருக்கும் அன்பு தான் காரணம்...''

''யாரு... அத்தையா?'' என்று கோபம் குறைய யோசனையோடு கேட்டாள்.

''ஆமா தர்ஷினி, அவங்கதான். கிட்டத்தட்ட பத்து பதினோரு வருஷம் விழுப்புரத்திற்கு அருகில் ஒரு கிராமத்தில் இருந்து ரொம்பக் கஷ்டப்பட்டு இருக்காங்க. வெளியே சொல்ல முடியாத பல கஷ்டங்கள். அவங்களுக்கு குழந்தை பிறக்காததைக் காரணம் காட்டி அவங்களை ரொம்பப் படுத்தி இருக்கு இந்த சமூகம். ஆனால் அதன் உண்மை காரணம் வெளியே யாருக்கும் தெரியாது. இதெல்லாம் நீ பிரேமிடம் நிதானமா பேசி தெரிஞ்சுக்கோ. குழந்தையைக் காரணமா காட்டி ரொம்ப சித்திரவதை அனுபவிச்சவங்க அவங்க ஏதாவது குழந்தை விஷயத்தில் சொன்னால் அதைப் பொருட்படுத்தக் கூடாது தர்ஷினி. இது என்னுடைய வேண்டுகோள் என்று வச்சுக்கோ. அவங்களை நல்லபடியா பார்த்துக்கணும் என்று பிரேம் பாடு படுகிறார். அதை

நிறைவேற்றுவது உன்னுடைய பொறுப்பு இல்லையா தர்ஷினி?''

யசோம்மாவிற்கு இப்படி ஒரு சோகமா? அவரை முதன் முதலில் பார்த்ததில் இருந்து இன்று மாலை அந்த சண்டை நடப்பதற்கு முன்பு வரை அவரைக் கோபமாகப் பார்த்ததே இல்லையே? வரதட்சணை கொடுமையால் பாதிக்கப்பட்டவரா? அவர்களைச் சேரவே விடவே இல்லையா? அவரோடு இப்போது சந்தோஷமாகத் தானே இருக்கிறார்கள்?

''அப்பா! நீங்க சொல்றது நிஜமா? இதெல்லாம் பிரேம் எனக்குச் சொன்னதே இல்லையே?''

''எப்படிச் சொல்வார் தர்ஷினி? தன்னுடைய கஷ்டம் தன்னுடன் இருக்கட்டும் என்று நினைக்கும் மனுஷன் அவர். அதனால் தான் எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சு இருக்கு. அது மட்டும் இல்லை இன்னொரு விஷயம் சொல்றேன். அவர் யசோம்மாவிற்குப் பிறந்தவர் இல்லை...''

''அ...ப்...பா...! உங்களுக்கு எப்படிப்பா தெரியும்? அப்படின்னா, அவங்களுக்குக் குழந்தை பிறக்கவே இல்லையா? ஹய்யோ, இது தெரியாமல் நான் அவங்களை... ப்ச்! ஏன்பா இதை என்னிடம் முன்னாடியே சொல்லவில்லை?''

''இதை உங்க மாமா என்னிடம் முன்னாடியே சொல்லிட்டார் தர்ஷினி. இந்த விஷயம் பிரேம் வெளியில் தெரிவதை விரும்பவில்லை என்று சேர்த்துச் சொன்னார். அதனால் நான்தான் இதை உங்க அம்மாவிடமும் உன்னிடமும் சொல்லவில்லை. ஆனால் இப்பவும்

சொல்லாமல் இருக்க முடியவில்லை. பிரேமின் இனம் குறித்த ஆட்சேபணை ஏற்கனவே அம்மாவிற்கு இருந்தது. அப்படி இருக்கும்போது அவர் இவர்களுக்குச் சொந்தப் பிள்ளை இல்லை என்பதை அம்மா ஏற்கத் தயங்குவாள். அதற்கு ஒரு வழியாக சம்மதிக்க வைத்தாலும், யசோதாம்மாவின் நிலை தெரிந்தால் அம்மா நிச்சயம் இந்தத் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ள மாட்டாள் என்று எனக்கு இருநூறு சதவிகிதம் நிச்சயமாகத் தெரியும்...'' என்று நிறுத்திய அப்பாவின் ஆதங்கத்தை வியப்போடு பார்த்தாள் தர்ஷினி.

''ஏன்பா, உங்களுக்கு ஆட்சேபணை இல்லையா? அம்மாவை மட்டும் சொல்றீங்க?''

''எனக்கு ஆட்சேபணை இல்லை. மன ரீதியான பாதிப்பு தலை தலைமுறையா வருவதில்லையே தர்ஷினி. எனக்கு பிரேமின் சின்சியாரிட்டி பிடித்து இருந்தது. அவருடைய அளவில்லாத அன்பு ரொம்பப் பிடித்து இருந்தது. வளர்ப்புத் தாயை இவ்வளவு தூரம் நேசிக்கும் ஒரு ஆண் மகன் மனைவியையும் நல்ல விதமாகப் பார்த்துக் கொள்வான் என்ற நிச்சயம் எனக்கு இருந்தது. உனக்கும் அவரைப் பிடித்து இருந்தது என்பதை நான் சத்யா கல்யாணத்திலேயே பார்த்தேன் தர்ஷினி. எனக்கு உன் விருப்பமும் பெரிய தூண்டு கோலாக இருந்தது...''

''ஆனால் என்னிடம் சொல்லாமல் இருந்ததற்கு இந்த விளக்கம் ஒத்துப் போகவில்லையே? எனக்கு பிடித்து இருக்கு என்று நீங்கள் நம்பிய பட்சத்தில், இந்தத் தகவல் என் முடிவை மாற்றி விடுமோ என்ற சந்தேகம் உங்

களுக்கு எப்படிப்பா வந்தது?'' என்று கேட்ட தர்ஷினி யின் குரலில் கோபம் இல்லை. விபரம் அறியும் ஆவல் மட்டுமே இருந்தது.

''ஒரு சின்ன பயம் இருந்தது. யசோதாவின் வளர்ப்புப் பிள்ளை என்பதால் நீ பிரேமை மறுக்கா விட்டாலும், அவர் மேல் குறைவான பாசத்தை வைத்து விட்டால், அவரை கௌரவக் குறைவாக நடத்தி விட்டால்'' என்று ஆரம்பித்தவர் அவள் முறைப்பில் பேச்சை நிறுத்தி னார்.

''சாரி தர்ஷினி. நான் செய்தது தப்புதான். உன்னிடம் சொல்லி இருக்கலாம். ஆனால் நான் செய்த தப்புக்கு, பிரேமையும் யசோதா அம்மாவையும் தண்டித்து விடாதே. எழுந்திரி, உடனே நாம் கிளம்பலாம்'' என்று சொல்ல தர்ஷினியின் முகம் இன்னும் குழப்பத்தைக் காட்டியது. அவளின் மௌனம் அவள் இன்னும் கோப மாக இருக்கிறாள் என்று காட்ட, குருமூர்த்தி அவளை சமாதானப்படுத்தும் நோக்கத்தில் இதமாகப் பேசினார்.

''தனக்கு என்ன எல்லாம் கிடைக்கவில்லையோ, அதை எல்லாம் தன் மருமகளுக்கு கொடுக்கணும் என்று ஆசைப்பட்டாங்க அவங்க. உனக்குப் புடவை, நகை தேர்ந்தெடுப்பதில் ஆரம்பித்து, கல்யாண வீட்டில் ஒவ்வொண்ணையும் பார்த்துப் பார்த்து செஞ்சவங்க தர்ஷினி. அவங்க மாதிரி ஒரு ஜீவனைப் பார்ப்பது அபூர்வம். பொதுவா, தன்னை தன் மாமியார் கொடுமை படுத்தினால், தனக்கு வரும் மருமகளைக் கொடுமைப டுத்தும் பெண்களை தான் இந்த உலகம் நிறைய பார்த்து இருக்கும். ஆனால் கொஞ்சம் வித்தியாசமானவங்க.

நீயே ஏற்கனவே சொல்லி இருக்க மாதிரி உன்னை பூ மாதிரி தாங்கினாங்க. இனிமேலும் தாங்குவாங்க. இன்னிக்கு சண்டையில் நடந்த இந்தச் சின்ன விஷ யத்தை இக்னோர் பண்ணிடு.''

''இது சின்ன விஷயமாப்பா?''

''எல்லாம் நாம் பார்க்கும் பார்வையில் தான் இருக்கு தர்ஷினி. நானோ உன் அம்மாவோ உன்னை அடிச்சு இருந்தால் அதை உன்னுடைய நலனில் நாங்க வைத்து இருக்கும் அக்கறையினால் என்று ஒத்துக் கொள்ள மாட்டாயா? அவங்களும் உன் மேலே இருக்க ஒரு அக்கறையில் செஞ்சுட்டாங்க என்று நினைச்சு மறந்துடு. ஒரு குழந்தைக்காக பல வருடங்கள் ஏங்கியவங்க. அதனால் உன்னுடைய வார்த்தைகளைத் தாங்கிக்க முடியாமல் கை நீட்டிட்டாங்க. அது சரி என்று சொல் லலை. தப்புதான். ஆனால் அந்த ஒரு தப்புக்காக அவங் களை ஒதுக்கி வச்சுட முடியாது என்று சொல்றேன். அவங்க செஞ்ச பல நல்ல காரியங்களை நினைச்சுப் பாரு. பிரச்னையை மேலும் வளர்க்காமல், இன்றே சரி பண்ணி விடலாம்.''

''அ..ப்...பா!'' மேலே என்ன பேசுவது என்று தெரி யாமல் திணறியவளுக்கு யசோதாவின் நிலையை உணர முடிந்ததால், அவருடைய நடவடிக்கையை ஒத்துக் கொள்ள முடிந்தது. பிரேமின் பேச்சை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. உன்னை உனக்காக விரும்பு கிறேன். அதனால் நீ போகாதே என்ற வார்த்தை அவன் சொல்லவில்லை.

''என்னடா யோசிக்கிறாய்? இதுக்காக நீ அந்த வீட்டுக்குப் போகாமலே இருந்து விட முடியுமா? உன்

ஆசைப் படியே சிங்கப்பூர் போயிட்டு திரும்பி வந்ததும் என்ன செய்வாய்? உன்னைப் படிக்க வைத்து தன்னம்பிக்கை ஊட்டி வளர்த்தது உன்னை தனி மரமா பார்க்கவா தர்ஷினி?

படிப்பும் நம்பிக்கையும் கொடுப்பது வாழ்க்கையை மேம்படுத்த. வாழ்க்கையைப் பாழ்படுத்த இல்லை. வா, எதுவா இருந்தாலும் அங்கே பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அங்கே எல்லோரும் உன் மேல் பாசமா தான் இருக்காங்க தர்ஷினி.

இப்ப கூட பிரேம் உன் பின்னாலேயே வரவில்லையா? நீ வேண்டாம். அம்மாதான் முக்கியம் என்று நினைத்து இருந்தால் அவர் அங்கேயே இருந்து இருக்கலாமே? அவரை அம்மாவா நீயா என்று தர்ம சங்கடத்தில் நிறுத்தலாமா நீ? ப்ளீஸ் புரிஞ்சுக்கோ, அம்மா வந்ததும் சொல்லிட்டுக் கிளம்பலாம்'' என்று முடித்தார்.

கோவிலில் இருந்து வந்த உடன், ''தர்ஷினி, இன்னும் நீ சின்னப் பொண்ணு இல்லை. அடுத்த வருஷம் உன் கையில் ஒரு சின்னக் குழந்தை இருக்கும். அதுக்கு நீ நல்ல பழக்க வழக்கம் சொல்லிக் கொடுக்கணும். பொறுமையா புகுந்த வீட்டில் இருப்பவர்களை அனுசரித்து நடந்து கொள்ளணும். சின்னச் சின்ன சண்டைகளை பெரிது பண்ணக் கூடாது. உன் விருப்பம் என்று தனியா ஏதாவது இருந்தாலும், அதை அவர்களிடம் சொல்லி கன்வின்ஸ் பண்ணி நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமே தவிர, பெட்டி தூக்கிட்டுப் பெற்றவர்கள் வீட்டிற்குக் கிளம்பலாம் என்று நினைக்கக்கூடாது. அதுதான்

நல்ல பெண்ணிற்கு அழகு. நீ எங்களுக்கு வாங்கிக் கொடுக்கும் நல்ல பேர், புரிஞ்சுதா?'' என்று சொல்லி நெற்றியில் குங்குமம் வைத்து வழி அனுப்பி வைத்தார் புவனேஸ்வரி.



25

'தர்ஷினியை அம்மா அடிச்சுட்டாங்க' என்ற பிரேமின் ஒற்றை வாக்கியத்தில் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொண்டார் நந்தகோபால். முப்பது ஆண்டுகளாக தாம்பத்தியம் நடத்துபவர் ஆயிற்றே? புரியவில்லை என்றால்தான் ஆச்சரியம். அவருக்கு மூன்று பேரின் நிலைமையும் புரிந்தது. யாருக்காக கவலைப் படுவது? மூன்று பேருமே ஒவ்வொரு விதத்தில் பாவம். கண் முன்னால் இருக்கும் மனைவியை சமாதானப்படுத்துவதுதான் இப்போதைக்கு உடனடியாக ஆகக் கூடியது என்று அவரிடம் கவனத்தைத் திருப்பினார்.

''யசோ, என்ன ஆச்சு? ஏன் இவ்வளவு கோபம்? யார் என்ன சொன்னா? நிதானமா இரு. லெமன் ஜூஸ் எடுத்துட்டு வரட்டுமா?'' என்று சமாதானப்படுத்தும் முயற்சியில் இறங்கினார்.

''ஜூசும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம். அவ பேசுன பேச்சைக் கேட்டீங்களா? அவளுக்குக் குழந்தை வேண்டாமாம். அந்த வாயிலயே ரெண்டு போட்டால் என்ன?''

''யாரைச் சொல்ற? தர்ஷினியா? என்ன சொன்னா? நான் கவனிக்கலையே?'' என்று சாதாரண பேச்சிலேயே வழிக்குக் கொண்டு வர முயன்றார்.

''அவளை ஆபீசுல சிங்கப்பூர் அனுப்பப் போறாங்களாம். ஆறு மாசம் பிரேமை விட்டுட்டுக் கிளம்பணும் என்று சொல்றா. புருஷனைப் பத்தி கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தாளா? இவன் எப்படிங்க அவள் இல்லாமல் அவ்வளவு நாள் தனியா இருப்பான்?''

''அதுதான் பிரச்னையா? அப்ப பிரேமையும் அவ கூட அனுப்பி வச்சுட வேண்டியதுதானே?''

''நீங்களும் உங்க யோசனையும். அவளுக்கு குழந்தை உண்டானால் அங்கே தனியா என்ன பண்ணுவாள்? அதை யோசிக்க மாட்டீங்களா?''

''அது வரும்போது பார்த்துக்கலாம். உன்னிடம் என்ன சொன்னேன்? மூணு மாசத்துக்கு குழந்தை பற்றி யாரிடமும் பேசக்கூடாது என்று சொன்னேனே? மறந்து விட்டதா?''

''நீங்க என்னையே குறை சொல்லிட்டு இருங்க. அவளை ஒண்ணும் கேட்காதிங்க. அவளுக்கு என்ன பதினெட்டு வயசு முடியறதுக்குள்ளே வாழ்க்கை என்றால் என்ன என்று நெளிவு சுளிவு பிடிபடும் முன்னே கல்யாணமா? இல்லை பணம் கொண்டா நகை கொண்டா என்று நான் பிடுங்கி எடுத்தேனா?''

''யசோ! இதென்ன தேவை இல்லாத பேச்சு?'' என்று அவரின் மனதை திசை மாற்ற முயன்ற நந்தகோபாலின் முயற்சி வெற்றி பெறவில்லை.

''.... நாத்தனாருக்கு கல்யாணம், சீமந்தம் செஞ்சு சலிச்சாளா? புகுந்த வீட்டில் பத்து பேருக்கு சமைச்சுப் போட்டு நிமிர வழி இல்லாமல், கட்டின கணவனோடு அஞ்சு நிமிஷம் பேச வழி இல்லாமல் கொடுமை படுத்தினேனா? கூட்டுக் குடும்பத்திற்காக இவளின் தனிப்பட்ட சுகங்களைத் தியாகம் செய்தாளா?''

''அவள் சின்ன பொண்ணு. நீதான் அவளுக்கு நல்லது கெட்டது சொல்லித் தரணும். நீயே வெடுக்குன்னு பேசி கை நீட்டினால் எப்படி? நீ செய்தது தப்பு இல்லையா?'' என்று அவரின் தவறை சுட்டிக் காட்டி திருத்த முயல, யசோதாவின் ஆத்திரம் மேலும் கூடியது.

''ஊருக்கு இளைச்சது நான்தானே? என்னை குறை சொல்ல மட்டும்தான் உங்களுக்குத் தெரியும். நீங்க மட்டுமா? உங்க அம்மா, உங்க தங்கை, இந்த ஊர் உலகம், உங்க பிள்ளை, எல்லோருக்கும் நான் தான் வேண்டாத பொருள். என்னைத் தவிர மற்ற எல்லோருமே உசத்தி...'' என்று அதுவரை தர்ஷினியின் மேல் இருந்த கோபத்தின் வெளிப்பாடாக அமைந்து இருந்த பேச்சு, அவர் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு மனச் சிதைவு நோயின் ஆளுகைக்குள் இருந்த போது நிலவிய தன்னம்பிக்கைக் குறைவான நிலைக்கு எப்போது எப்படி மாறியது என்பதை அவர் உணரவே இல்லை.

''யசோ, அப்படி எல்லாம் இல்லை. எனக்கும் பிரேமிற்கும் நீ தான் முக்கியம்...''

''பொய் சொல்லாதீங்க. அவன் அவங்க அம்மா மாதிரி கணக்கு போடறதுல புத்திசாலி இல்லை என்று

சொல்லிக் காட்டியது நீங்கதானே? என்னையும் அவனையும் சேர விடாமல் பிரிச்சுட்டீங்களே?'' என்றவரின் குரல் அழுகைக்கு மாற நந்தகோபாலின் பதட்டம் கூடியது.

''நான் எங்கேம்மா பிரிச்சேன். அவன் நம்மோடு தான் இருக்கான். மறந்து விட்டாயா?''

''நான் எதையுமே மறக்கவே இல்லை. எங்க அப்பாவும் இல்லாமல் எங்க அம்மா தனியே கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கி கல்யாணம் செய்து கொடுத்தால், அவங்க போட்ட பத்து பவுன் நகை போதவில்லை என்று என்னை நாலு வருஷம் ஒரே வீட்டில் வாழா வெட்டியா வச்சு இருந்தாங்க தானே? நீங்க தான் உங்க அம்மா செஞ்ச கொடுமை எல்லாம் மறந்துட்டீங்க.''

''இல்லை யசோ, நீ சின்னப் பொண்ணும்மா. அதனாலதான் நானே கொஞ்ச நாள் போகட்டும் என்று காத்திருந்தேன்...''

''ஏய்! பொய் சொன்ன கொன்னுடுவேன். நீ காத்திருந்தாயா? உங்க அம்மா நம்மை சேர விடாமல் படுத்தல? நான் சின்ன பொண்ணா? என்னைவிட சின்ன பொண்ணுக்கு, நான் போட்டுட்டு வந்த நகையைப் போட்டுக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்? அவளை விட ரெண்டு வயசு பெரியவ நான் புருஷனோடு சேரக் கூடாதா? இது என்ன ஒரு கண்ணுல வெண்ணை ஒரு கண்ணுல சுண்ணாம்பு நியாயமா?'' பதட்டத்தில் என்ன பேசுகிறோம் என்ற நினைவு இன்றியே யசோதாவின் பேச்சில் மரியாதை குறைந்து ஒருமைக்கு மாற, நந்த

கோபாலின் பயமும் பதட்டமும் கூடியது. பிரேம் குமாருக்கு போன் போட்டார்.

அவர் யசோதாவைச் சமாதானப்படுத்தும் தொனியில் சொன்ன ஒவ்வொரு வார்த்தையுமே முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அவர் மனதில் ஆழமாகக் காயம் ஏற்படுத்தி இருந்த, அதை வெளிப்படுத்த வழி இன்றி மனதிற்குள் போட்டு புதைத்து வைத்து இருந்த ஒவ்வொரு விஷயமாக வெளியே வர வைத்தது. ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக முதல் முறை அந்த விஷயங்களை அறிந்தபோது, அந்த சமயத்தில் அனுபவித்த மொத்த வேதனையையும், நந்தகோபால் மீண்டும் ஒரு முறை அனுபவித்தார்.

''யசோ எதுக்கு இவ்வளவு கோபம்? இப்ப யார் உன்னை என்ன சொன்னா? கொஞ்சம் அமைதியா இருக்கணும்...''

''நான் அமைதியா இருந்து என்ன பிரயோஜனம்? வீட்டுல இருக்க ரெண்டு பேரும் வீட்டை விட்டு வெளியே போய் விட்ட பிறகு என்ன அமைதி வேண்டி கிடக்கு...''

''அவங்க எங்கே போய்ட்டாங்க. இன்னும் அரை மணி நேரத்துல பிரேம். தர்ஷினியைக் கூட்டிக்கிட்டு வந்து விடுவான். யாருக்கும் எந்தக் கோபமும் இல்லை. நீ கவலைப்படாதே'' என்று விதம் விதமாகச் சொல்லி ஓரளவிற்கு தேற்றி வைத்து இருந்தார்.

பிரேம் வீட்டுக்குள்ளே நுழைந்தபோது, நந்த கோபால் ஓரளவிற்கு யசோதாவைச் சமாதானப்படுத்தி, அவர் செய்த தவறையும் சுட்டிக் காட்டி வைத்து இருந்த

தால், அவர் குற்ற உணர்வோடும், கண்களில் பரிதவிப் போடும் பிரேமுடன் வரப் போகும் தர்ஷினிக்காக வழி மேல் விழி வைத்து காத்து இருந்தார்.

''என்னப்பா நீ மட்டும் வரே? எங்கே தர்ஷினி?'' என்று அவசரமாகக் கேட்டவரின் கண்களில் 'தன் மகனின் வாழ்க்கையை தானே கெடுத்து விட்டோமோ' என்ற பயமும் குற்ற உணர்வும் போட்டி போட்டது.

''அவள் வேளச்சேரியில் இருக்காம்மா. ரெண்டு நாள் போகட்டும். கோபம் குறைந்த பின்பு கூட்டிட்டு வரேன்...''

''ஹய்யோ! அங்கே ஏன் விட்டுட்டு வந்த? அவங்க நம்மைப் பற்றி என்ன நினைப்பாங்க? வீட்டுக்கு வாழ வந்த பொண்ணை நல்ல படியா வச்சுக்கத் தெரியலை என்று கேவலமா நினைக்க மாட்டாங்க? என்னங்க, எழுந்திரிங்க. நாம ரெண்டு பேரும் போய் தர்ஷினியிடம் அவ காலில் விழுந்தாவது மன்னிப்பு கேட்டு கூட்டி வந்து விடலாம்'' என்று அவசரமாக எழுந்தவரின் கை பற்றி அமர வைத்தான்.

ஏற்கனவே தர்ஷினி தன்னிடம் பேசிய விதமே சரி இல்லை. இந்தக் கோபத்தில் இருக்கும்போது அம்மா அங்கே போய், நிலைமை மேலும் ரசாபாசமாகி விட்டால் என்ன செய்வது?

''அம்மா, தர்ஷினி வரும்போது வரட்டும். நீங்க பதட்டப் படாதீங்க. பொறுமையா இருங்கம்மா. இப்பப் போய் நீங்க பேசி, பதிலுக்கு அவள் பேசி, அங்கே பெரிய சண்டை வந்து விட்டால் நல்லா இருக்காது. ரெண்டு நாள் கழிச்சு நானே போறேன்.''

''என்னடா சொல்ற? வரும்போது வரட்டுமா? உ
கென்ன பைத்தியமா? இந்த வீட்டுல இருக்கும் சா
கேடுகள் எல்லாம் எங்க தலைமுறையோடு தொலைந்
போகணும். உங்க தலைமுறையாவது சந்தோஷ
இருக்கணும் என்று நான் படாத பாடு பட்டு இல்ல
சாமி எல்லாம் வேண்டிகிட்டு இருக்கேன். அவ
எப்படி நீ அங்கே விட்டுட்டு வரலாம்? உங்க ரெண்
பேரையும் சந்தோஷமா இருக்க விடாமல் பிரிச்சு வ
பாவம் எனக்கு வேண்டுமா?''

''அம்மா, யாரும் யாரையும் பிரிச்சு வைக்கல
அவள் என்னை விட்டுப் பிரிஞ்சும் போகலை. அப்படி
போகவும், நான் நிச்சயம் விடமாட்டேன் அமைதி
இருங்க...''

''எப்படிடா அமைதியா இருக்கச் சொல்ற? நா
அனுபவிச்ச கொடுமை எல்லாம் என் மருமகள் அ
பவிக்கக் கூடாது என்று நான் எவ்வளவு தீர்மானம
கல்யாணம் என்று நிச்சயம் செய்த நாளில் இருந்
ஒவ்வொண்ணா பார்த்துப் பார்த்து செஞ்சேன். கடைசி
நானே ஒரு நிமிஷ அவசரத்துல, இப்படி எல்லாத்தையு
கை நீட்டி கவிழ்த்து விட்டேனே?'' என்று வருத்தத்தோ
சொன்னவர், தன் முகத்தை மூடிப் படுக்கையில் சரிந்
அழ ஆரம்பிக்க பிரேம் பதறினான்.

பிரேம் வரும் நேரம் வரைக்கும் யசோதாவிடம் பேச
கொடுத்து அவரைச் சமாதானப்படுத்த வேண்டியதை
செய்து கொண்டு இருந்த நந்தகோபால். மகன் வந்த
உடனே பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து விட்டு
ஆயாசமாக இருக்கையில் சரிந்தார். யசோதாவின் வாழ்
கையில் கடந்த முப்பது ஆண்டுகளில் நடந்த சோக

நிகழ்வுகளும், அதை ஏழு ஆண்டுகளுக்கு முன்புதான் அறிய நேர்ந்த அந்தக் கொடுமையான சந்தர்ப்பமும், நினைவில் ஆடி அவர் கவலையைக் கூட்டியது.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் பிரேம் பட்டப்படிப்பு முடித்தபோது பட்டமளிப்பு விழாவில், தன்னை வரச் சொல்லி நேரிடையாக அழைக்கவில்லை என்று, யசோதா மணிக்கட்டில் அறுத்து கொண்டு உயிரை மாய்த்துக் கொள்ள துணிந்தது நினைவில் வந்தது. மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த அந்த முப்பது நாட்கள் அவருடைய ஆழ் மனத்தில் அடியில் புதைந்து இருந்த அத்தனை ரகசியங்களும் வெளியே வர நந்தகோபால் சுக்கு நூறாக உடைந்து தூள் தூளாகிப் போனார்.

தன் வீட்டில் செல்வம் மட்டுமே குறைவு என்று இத்தனை நாள் எண்ணி இருக்க, தன்னுடன் குடும்பம் நடத்த வந்த மனைவி தன் தாயாலும் சகோதரியாலும் அனுபவித்த கொடுமைகளை அறிய நேர்ந்ததில் மனம் குன்றி அவமானத்தில் துடித்துப் போனார். அதை இத்தனை நாட்கள் மறைத்து விட்ட யசோதாவின் பெருந்தன்மையான குணமும் நெகிழ வைத்தது.

பிரேம் பிறந்த சமயத்தில், தன் தங்கை இறந்த வீட்டில் அரசல் புரசலாக தன் வீட்டில் நடைபெற்ற கொடுமைகளை அறிய நேர்ந்த போதே அவர் அவ மானத்தில் மனம் குன்றிப் போனார். அந்த துக்க வீட்டில் செய்ய வேண்டிய கடமைகளை முடித்துவிட்டு உட னேயே சொந்த ஊரை தலை முழுகி விட்டு சென்னைக் குக் குடி பெயர்ந்தார்.

சகோதரிக்கு வேண்டும் என்று யசோதா தன் நகை களைக் கொடுத்த போது, அவர் மனம் சுணங்கவில்லை. சகோதரியின் முதல் குழந்தை இறந்தே பிறந்ததற்கு, இவர் சபித்துக் கொடுத்த நகை தான் காரணம் என்று தன்னுடைய தாயே வார்த்தைகளால் குத்திக் கிழித்து இருக்கிறார் என்பதை ரொம்பத் தாமதமாக அறிந்த போது, அதைச் செய்தவரே உயிரோடு இல்லை என்ப தால் அவரால் அப்போதைக்கு ஒன்றும் செய்ய இயல வில்லை.

அதே சகோதரி இரண்டாவது பிரசவத்தில் பிரேமை பிரசவித்த சமயத்தில் இறந்த போது, பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வராமல் தட்டிக் கழித்த தந்தையைப் பார்த்து மனம் வெம்பியது தான் மிச்சம். தாங்கள் பெற்றோர் ஸ்தானத்தில் உயிருடன் இருக்கும் போது பிரேம்குமார் தொடர்ந்து கரும காரியங்கள் செய்யச் சொல்வது அவன் தங்களின் பிள்ளை என்று சொல்வதைத் தடுக்கும். ஆனால் அதே சமயத்தில் ஒரு மகன் தனது பெற்றோருக்குச் செய்ய வேண்டிய பித்ரு கடன்களைச் செய்யாமல் இருப்பதும் சரி இல்லை என்பதால், அவரின் ஆத்மா சாந்தி அடைய, பிரேம் குமாரை காசிக்கு அழைத்துச் சென்றார். காசியில் தன் சகோதரிக்குச் செய்ய வேண்டிய கருமத்தைச் செய்து பிரேம்குமாரின் கடனைக் கழித்தார்.

கேவலம் ஐந்து பவுன் நகை குறைபாட்டிற்காக தன்னுடைய தாயும், தங்கையும் சேர்ந்து தன் மனை வியை தன்னுடன் சேர்ந்து வாழ விடாதது மட்டும் இன்றி, அதற்கான காரணத்தை தன்னிடம் அவள் சின்ன பெண் என்ற அக்கறை போலத் திரித்து சொன்னதும்

அது தனக்கு சகோதரியின் மறைவு வரை, பல ஆண்டுகளாகத் தெரியவில்லை என்ற வருத்தமும் அவரைப் போட்டுப் படுத்தியது. அதனாலேயே இந்த தங்க நகை என்பதால் அதை இனி அணிவதில்லை என்று கங்கைக் கரையில் உறுதி பூண்டது யசோதாவிற்கே பின்னால் தான் தெரியும்.

கடந்த ஆண்டுகளில் இழந்து விட்ட இனிமையான வாழ்க்கையை யசோதாவிற்கு தன்னால் திருப்பிக் கொடுக்க முடியாது. ஆனால் இனியும் அவர்களோடு ஒரே ஊரில் அவர்களின் முகத்தைப் பார்த்துக் கொண்டு வசிக்க முடியாது என்று தீர்மானமாக முடிவு செய்து யசோதாவையும், பிரேமையும் அழைத்துக் கொண்டு, கையில் இருந்த தொழிலை மட்டும் நம்பி, சென்னைக்குக் குடி பெயர்ந்தார்.

பிறந்த நாளிலேயே தாயை விழுங்கி விட்டவன் என்ற பெயரை சுமந்து இருக்கும் குழந்தை. அந்த மைனரின் வாழ்க்கை புதுசாக அமைய தடையாக இருக்க, தந்தைக்கும் அவன் வேண்டாத பொருளாகிப் போனான். தாய் இல்லாமல், தந்தை இருந்தும் சீந்தாமல், யாருக்கும் வேண்டாத பொருள் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட பெற்றோர் இல்லாத அந்தக் குழந்தையும், உன்னால் யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்று சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட குழந்தை இல்லாத தாயும், உணர்வுப் பூர்வமாக ஒன்றி விட்டனர்.

பிரேம் அவர்களின் வாழ்க்கையின் கலங்கரை விளக்கமாக வந்ததில் இருந்து அவர்களின் வாழ்க்கையில் ஏறுமுகம் தான். தன்னைப் பாடாய் படுத்தியவரின் மகனை

தான் வளர்க்க நேர்ந்தது குறித்து எந்த வருத்தமும் யசோதாவிற்கு இல்லை.

விழுப்புரத்தில் இருந்து சென்னைக்கு இடம் பெயர்ந்தவர்கள், தங்களின் கடின உழைப்பாலும், விடா முயற்சியாலும், இன்றைய நல்ல நிலையை எட்டி இருக்கின்றனர். பிரேம், யசோதா - நந்தகோபால் தம்பதியினருக்கு பிறந்தவன் இல்லை என்ற உண்மை அவனுக்குத் தெரியும் வரை அவர்களின் வாழ்வில் எந்தப் பிரச்னையும் இல்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பு தெரிந்த போது பிரச்னை ஆரம்பித்தது. ஆனால் அந்தப் பிரச்னையின் ஆழம் காணும் முன்பு மூன்று ஆண்டுகள் ஓடி விட்டது.



26

வேளச்சேரியில் தர்ஷினியை விட சென்று இருந்த வேளையில் தொலைபேசியில் அழைத்து 'அம்மாவின் உடல் நிலை மோசமாகும் அறிகுறிகள் தெரிகிறது. நீ உடனே கிளம்பி வா' என்று அப்பா அறிவுறுத்தியதால், அங்கே மேலும் கால தாமதம் செய்யாமல் உடனே கிளம்பி வந்தவன் அம்மாவைத் தேற்ற பல விதங்களில் முயன்றான் பிரேம்.

''நான் அனுபவிச்ச கொடுமை என் மருமகள் அனுபவிக்கக் கூடாது என்று நான் எவ்வளவு தீர்மானமா கல்யாணம் நிச்சயம் செய்த நாளில் இருந்து

ஒண்ணொண்ணா பார்த்துப் பார்த்து செஞ்சேன். கடைசில நானே ஒரு நிமிஷ அவசரத்துல, இப்படி எல்லாத்தையும் கை நீட்டி கவிழ்த்து விட்டேனே?'' என்று வருத்தத்தோடு கண்ணீர் பெருக்கிய யசோதாவைத் தேற்றும் வகை தெரியாமல் திகைத்த பிரேம், அவரை த்ன் மேல் சாய்த்து, தலையை வருடினான்.

''அம்மா! நீங்க இவ்வளவு வருத்தப்படும் அளவுக்கு எந்தத் தப்பும் செய்யவில்லை. தப்பு செய்யாதவங்க என்று இந்த உலகத்தில் ஒரு ஆள் கூட இருக்க முடியாது. தப்பு செய்து விட்டேன் என்று தெரிந்து, அதை உணராதவர்கள், அதற்காக வருந்தி மன்னிப்பு கேட்காதவர்கள் தான் இருக்க முடியும். அவர்கள்தான் விரும்பத் தகாதவர்கள். நீங்க உங்க தப்பிற்காக அவளிடம் சாரி சொல்லி விட்டால் எல்லாம் சரியாகி விடும். தர்ஷினியை நான் சமாதானப்படுத்தி அழைத்து வருவேன். நீங்க கவலைப் படாதீங்க.''

''எப்படிடா கவலைப்படாமல் இருக்க முடியும்? செய்றது எல்லாம் செய்து விட்டு, சாரி என்று ஒரு வார்த்தை சொன்னால் போதுமா? எல்லா பிரச்னைக்கும் என்னுடைய அவசரம். அதீத எதிர்பார்ப்புதான் காரணம். என் தப்புதான். எல்லாம் என் தலை விதி. என்னால் இந்தக் குடும்பத்துக்கு எந்தக் காலத்திலுமே எந்தப் பிரயோஜனமும் இல்லை. என்னால் வந்ததெல்லாம் கஷ்டம் மட்டும்தான். நான் இந்த உலகத்துல இருக்கவே கூடாது. நான் இல்லாவிட்டால்...''

''அ..ம்..மா..! கண்டபடி உளறக்கூடாது. இந்த உலகத்தில் யார் எவ்வளவு நாள் வாழணும் என்பதை நாம் நம் இஷ்டத்திற்கு நிர்ணயம் செய்ய முடியாது...''

''ஏழு எட்டு வருஷத்துக்கு முன்னாடி நீ டிகிரி முடிச்ச உடனேயே போய் சேர்ந்துக்க வேண்டிய ஆள். என்னைக் காப்பாத்தி, மேலும் மேலும் நீதான் சித்திரவதைப் படுத்துகிறாய். சந்தோஷமா, ஒருத்தருக்கு ஒருத்தர் அன்னியோன்யமா அன்பா நீங்க இருந்துட்டு வந்த நேரத்துல, நானும் என்னுடைய அதீத அவசர ஆசைகளும் இல்லாவிட்டால்...'' என்று உடைந்து கண்ணில் நீர் வழிய புலம்பியவரை சேர்த்து அணைத்து தன் தோளில் சாய்த்துக் கொண்டான் பிரேம்.

அவரின் முதுகை வருடியபடி, மிக மிருதுவான குரலில், ''அம்மா அது ஒன்றும் அதீதமான ஆசை இல்லை. உங்க பையனிடம் நீங்க ஒரு குழந்தை எதிர் பார்ப்பதில் தப்பு இல்லையே?'' என்று அவரை தேற்ற முயன்றான் பிரேம். அவனின் குரல் மேலும் மேலும் மிருதுவாக, யசோதாவின் குற்ற உணர்வு அதை விட அதிகமாகப் பெருக ஆரம்பித்தது.

''பிரேம், எனக்காக நீ செஞ்சதுக்கு எல்லாம் நான் எப்படி உனக்கு திருப்பி நன்றிக் கடன் செய்யப் போறேனோ தெரியலையே? நன்றிக்கடன் செய்யா விட்டாலும் பரவாயில்லை. உன் வாழ்க்கையில் ஒரு பிரச்னை வர நான் காரணமாகி விட்டேனே...''

''என்னம்மா! அம்மா அப்பா யார் என்று கண்ணால் கூட பார்த்து அறியாத எனக்கு நீங்க செஞ்ச உதவிக்கு நான் எப்படி எப்படி நன்றிக்கடன் தீர்ப்பது என்று யோசிச் சுட்டு இருக்கேன். அதுக்கே நான் இன்னொரு ஜென்மம் எடுத்து...'' என்று பிரேம் உருகியதை யசோதா கவனிக் கவே இல்லை.

''எனக்கு உன்னிடமே முழு அதிகாரம் இல்லை என்ற போது, உன் மனைவியான அவளிடம்...'' என்று தன் போக்கில் அவர் சொல்ல பிரேம் அதிர்ந்தான்.

''அம்மா...!'' என்ற அவனின் சத்தமான அதட்டலில் அவரின் பேச்சு நின்றது. அவ்வளவு நேரம் படுக்கையில் இருந்த யசோதாவின் அருகில் அமர்ந்து, தன்னோடு சேர்த்து அணைத்து, முதுகை வருடி, மடியில் சரித்து தலையை வருடி, விதம் விதமாக அம்மாவை சரிகட்ட முயன்றவன் கடைசி வாக்கியத்தில் வேகமாக எழுந்தான்.

''நான்கு ஆண்டுகளுக்கு முன்பே என்னுடைய உதிரத்தையே உங்களுக்கு தந்து, ஒன்றோடு ஒன்றாக கலந்தபின்பும், இனிமேல் நம்மிடம் இடைவெளி எதுவும் இல்லை என்று நான் உங்களுக்கு இறைவன் முன்னிலையில் வாக்களித்த பின்பும், ஒவ்வொரு நாளும் உங்கள் மன நிம்மதியையும் சந்தோஷத்தையும் எண்ணி ஒவ்வொரு காரியத்தையும் செய்யும் என்னை பார்த்த பின்பும், என்மேல் உங்களுக்கு ஒட்டுதல் வர வில்லை என்றால், இன்னும் நான் என்ன செய்ய வேண்டும்? நான் உங்களை என் தாயாக ஏற்றுக் கொண்டேனா இல்லையா என்ற சந்தேகம் இன்னும் அழியவே இல்லை என்றால் இனிமேல் நாம் ஒரே வீட்டில் ஒன்றாக வசிப்பதிலும், அம்மா பிள்ளை என்று கதை சொல்வதிலும் அர்த்தம் இல்லை. இந்த மாதிரி பேசக்கூடாது என்று உங்களுக்கு ஆயிரம் தடவை சொல்லியாச்சு. இப்பவும் திரும்ப இந்த மாதிரி ஒரு வார்த்தை உங்கள் வாயில் இருந்து வருகிறது என்றால் இன்னும் உங்க அடி

மனசுல என்னை உங்க பையனாக ஏற்றுக்கொள்ள வில்லை என்றுதானே அர்த்தம்? இனிமேல் நான் உங்களிடம் பேச போவதில்லை'', என்று தீர்மானமாக சொல்லி விட்டு வெளியே வந்து தன் அறைக்குள் போய் ஒரு பெட்டியை எடுத்து கட்டிலின் மேல் வைத்து திறந்தான் பிரேம்குமார்.

இனிமேல் நாம் இருவரும் ஒரு வீட்டில் வசிப்பதிலும், அம்மா பையன் என்று உறவு கொண்டாடுவதிலும் எந்த அர்த்தமும் இல்லை என்று தீர்மானமான குரலில் அழுத்தமாக சொன்ன பிரேம் அந்த அறையை விட்டு வெளியேறி, ஒரு பெட்டியில் தன் துணிகளை எடுத்து அடுக்க அவன் பின்னாலேயே ஓடி வந்த யசோதா பதறி போனார்.

அதுவரை அம்மாவுக்கும் மகனுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகளை ஒருவித பதட்டத்துடன் கவனித்து வந்த நந்தகோபாலும் பதறி எழுந்து பின்னால் வந்தார். ''என்ன பிரேம் பண்ணுகிறாய்?'' என்று அதட்டலாக கேட்க, அவன் அவருக்கு கண்ணாலேயே சேதி சொல்லி விட்டு, ''என்னை கேள்வி கேட்க நீங்க யார்? போய் உங்க வீட்டம்மாவுக்கு ரொம்ப கோபம் வருது பாருங்க. கொஞ்சம் உப்பு, காரம் எல்லாம் குறையா போட்டு ரசம் வச்சு, குழைவா பிசைஞ்சு எடுத்துட்டு வாங்க. அப்பவாவது கோபம் குறையுதா என்று பார்க்கிறேன்'', என்று அவரை அனுப்பினான் பிரேம்.

''டேய் நில்லுடா! எனக்கு கோபம் குறையணுமா? என்னை விட்டு, இந்த வீட்டை விட்டு வெளியே போகும் அளவுக்கு உனக்கு தைரியம் வந்துடுச்சா?''

''ஆமா! தைரியம் வந்து விட்டது. ரொம்ப லேட்டா வந்து இருக்கு. என்னிக்கு நீங்க என்னோட அம்மா இல்லை என்று தெரிஞ்சதோ அன்னிக்கே வந்து இருக்கணும். எட்டு வருஷம் வேஸ்ட் பண்ணியது என்னோட தப்பு தானே? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் இருக்கு? உங்களை விட்டு பிரிய நான் ஏன் யோசிக்கணும்?''

''என்ன பேச்சுடா பேசுற? திமிரா!''

''ஆமா. திமிர்தான்.''

''இந்த உலகத்துல கண் விழிக்கும்போதே உனக்கு தொட்டு தூக்க அம்மாவோ அப்பாவோ இல்லாமல் இருந்தப்போ, நான் செஞ்சது எல்லாம் உனக்கு ஒரு பொருட்டே இல்லையா?''

''இல்லை. நீங்க செய்யாவிட்டால் வேற யாராவது ரோட்டில் போறவங்க செஞ்சு இருக்க போறாங்க. அது ஒரு முக்கியமான பெரிய விஷயமா எனக்கு தோன்றவில்லை.''

''இத்தனை நாள் உன்னை அம்மா அப்பா இல்லாத குறை தெரியாமல் நாங்க வளர்த்ததுக்கு நான் எதுவுமே உன்னிடம் எதிர்பார்க்கக் கூடாதா?''

''ஆமா. கடமையை செய் பலனை எதிர்பாராதே என்றுதான் கிருஷ்ண பரமாத்மா கீதையில் சொல்லி இருக்கிறார். அதை நீங்க கூட எனக்கு நிறைய தடவை சொல்லி இருக்கீங்க. நீங்க நான் சொன்னதை கேட்கவில்லை என்றாலும், நான் நீங்க சொல்வதை நன்றாக கேட்கிறேன். மனதில் வைத்துக் கொள்கிறேன் என்று இப்பவாவது புரியுதா? நீங்க எனக்கு செய்த உதவிக்கு

பிரதி பலன் எதிர்பார்ப்பது தர்ம சாஸ்திரப்படி தப்பு..'', என்ற அசால்ட்டான குரலில் யசோதாவின் ஆத்திரமும் பெருகியது.

''டேய்! உனக்கு அரிச்சுவடி சொல்லி கொடுத்த எனக்கு நீ தர்ம சாஸ்திரம் சொல்லி தருகிறாயா? எல்லாம் நேரம் தான். உனக்கு தனியா பொண்டாட்டி, பிள்ளை, தொழில் என்று வளர்ந்ததும், இப்ப இந்த அம்மா அப்பா தயவு உனக்கு தேவை இல்லாமல் போயிடுச்சா?''

''இப்ப நான் மணமான சுதந்திரமான தனி மனிதன். இத்தனை நாள் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் இருந்தேன். இப்பதான் கல்யாணம் ஆகிடுச்சு. அந்த கவலையும் தீர்ந்துடுச்சு. அதனால உங்க கையை எதிர்பார்த்து நிற்க வேண்டிய கட்டாயம் இல்லையே? உங்க தயவு இனி தேவை இல்லை. கேள்விகள் அவ்வளவுதானா? இன்னும் இருக்கா?'' என்று அலட்சியமான குரலில் சொன்னவன், பெட்டியை மூட, வேகமாக அவன் அருகில் வந்து சட்டையை பற்றி உலுக்கினார் யசோதா.

''நீ எல்லாம் ஒரு பிள்ளையா? நான் இத்தனை வருஷம் உன்னை என் சொந்த பிள்ளையா நினைச்சு செஞ்சது பெரிசு இல்லை. கோபத்தில் சொன்ன ஒரு வார்த்தை உனக்கு பெரிசா போச்சு இல்லை?''

''யார் யாருக்கு பிள்ளை? நீங்க எனக்கு அம்மாவும் இல்லை. நான் உங்களுக்கு பிள்ளையும் இல்லை. நீங்க யாரோ, நான் யாரோ...'' சொல்லி முடிக்கும் முன்பு, அருகில் இருந்த பூஜாடியை எடுத்து வேகமாய் அவன்

மேல் எறிந்தார் யசோதா. அவரின் பிரதிபலிப்பு என்ன வாக இருக்கக் கூடும் என்று திட்டமிட்டே அவன் காய் களை நகர்த்தியதால் அவன் வேகமாக விலக, பூஜாடி சுவரில் மோதி அந்த ஜாடி சுக்கு நூறாக உடைந்து நொறுங்கும் சப்தம் அவரின் கோபத்திற்கு கொஞ்சம் வடிகாலாக அமைந்து இருந்தாலும், அவரின் ஆவேச மான பேச்சு தொடர்ந்தது.

''அவள்தான் வெளியில் இருந்து வந்தவள், என்னை பற்றி என்னுடைய எண்ணங்களின் போக்கு பற்றி அறியாதவள், கோபித்துகொண்டு வீட்டை விட்டு போய் விட்டாள் என்றால், நீயும் என்னை விட்டு போக தயார் ஆகி விட்டாயா? போடா, அப்படியே போய்டு...''

''.....''

''நான் தினமும் யோகா செய்கிறேனா என்று நீ கேட்க வேண்டாம்...''

''.....''

''ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை நான் என்ன வேலை செய்தேன் என்று அட்டவணை போட்டு உன்னிடம் காண்பிக்க தேவை இல்லை....''

''.....''

''மாத்திரை சாப்பிட்டாலும் சாப்பிடா விட்டாலும் அதை பற்றி உனக்கு கவலை இல்லை....''

''.....''

''ஆண்டுக்கு ஒரு முறை ஐந்து இலவச திருமணம் நடத்தணும் என்ற என் ஆசையை நீ நிறைவேற்ற தேவை இல்லை...''

''.....''

''எனக்கு பேரக் குழந்தையை பெற்று கொடுத்து நான் அதை கொஞ்ச வேண்டாம்.''

''.....''

''நீ வீட்டை விட்டு போய் விட்டால், யாருக்கும் எந்த கவலையும் இருக்காது....''

''.....''

''இத்தனை நாள் நீ என்னை தொடர்ந்து கண் காணித்து, என்மனசை மாற்றியதெல்லாம் வீணாகி மண் ணோடு மண்ணாக போகட்டும். நானும் செத்து போகி றேன்.....''

''நீ இல்லை என்றால் நான் செத்து போய் விடுவேன்'' என்று யசோதா அம்மா உணர்வு பூர்வமாக அடக்கி வைத்த கண்ணீருடன் சொன்ன வார்த்தையை கேட்ட பிறகு அவனால் பொய் கோபத்தை இழுத்து பிடித்து வைக்க முடியவில்லை. அவர் மனதில் அடக்கி வைத்து இருக்கும் உணர்வுகள் அந்த கட்டுபாட்டை மீற நினைக்கும்போது தான் இவர் உணர்ச்சி வசப்படுகிறார். பிரச்னை எழுகிறது.

குழந்தை பற்றி தர்ஷினியிடம் கேட்க வேண்டாம் என்று அவரை கிட்டத்தட்ட ஒரு மாதம் அடக்கி வைத்து இருந்ததால், இன்று தர்ஷினியிடம் கை நீட்டும் அள வுக்கு வந்து விட்டது. அந்த உணர்வு கசடுகளை வெளியேற்றும் முயற்சியில் அவன் சீண்ட சீண்ட, அவர் மனதில் இருந்த கோபத்திற்கு வடிவாக அவர் சில பொருட்கள் போட்டு உடைத்தும் வார்த்தைகளை அடக்காமல் வெளிகொட்டியதும் போதுமானதாக இருக்க

பிரேம்குமார் ஓடி வந்து கண்ணில் பெருகிய நீரோடு அவரை அணைத்து கொண்டான்.

''ஷ்! அம்மா, அந்த வார்த்தை மட்டும் சொல்லக் கூடாது என்று எத்தனை தடவை கடந்த நான்கு ஆண்டுகளில் கிளி பிள்ளைக்கு சொல்கிற மாதிரி சொல்லி இருக்கிறேன். திரும்பவும் சொல்லலாமா? இத்தனை நாட்கள் மாத்திரை மருந்து சாப்பிட்டதில், யோகா செய்ததில், நான் அன்பாக இருப்பதில் எந்த மாற்றமும் வரவில்லை என்றுதானே அர்த்தம்? நான் உங்க பிள்ளை தான். உங்க பிள்ளை மட்டும்தான். உங்களை விட்டு நான் எங்கேயும் போகமாட்டேன். இது உங்க மேலே சத்தியம். போதுமா?'' என்று அவரை அணைத்து கொண்டு சொல்ல அவர் அவனை தள்ளி விட்டார்.

''எதுக்குடா என் மேலே சத்தியம் பண்ணினாய்? என்னை நம்பாமல் தானே?'' என்று விசும்பிய யசோதாவை மீண்டும் அணைத்து கண்ணீர் வழிந்த கன்னங்களையும் கண்களையும் மென்மையாக துடைத்து விட்டான்.

''ஏன்மா, நானா நம்பவில்லை? உங்களுக்குதான் அப்பப்போ என் மேல் சந்தேகம் வருது. எனக்கு எந்த காலத்திலுமே சந்தேகம் இருந்ததே இல்லை. நான் கண் திறந்ததது முதல், மழலை வார்த்தை பேசியது முதல், என் பசிக்கும் தூக்கத்திற்கும், வலிக்கும் உங்களை தானே தேடி இருக்கிறேன். எனக்கு வேற யார் முகமுமே போட்டோ வடிவில் கூட தெரியாதே?''

''நாங்க சொல்லலை... அதுக்கும் சேர்த்து கூட உன் கோபம் இருக்கலாமே?''

''ஷ்! அம்மா, அப்படி இல்லை. அதை தெரிந்து கொள்ள நான் நினைக்கக் கூட இல்லை. எனக்கு நீங்க ரொம்ப முக்கியம் என்பதால் தான், உங்களின் சந்தோஷம் முக்கியம் என்பதால் தான், நான் என் பிறப்பு ரகசியத்தை கூட வேறு யாரிடமும் சொல்லவில்லை. என்னில் பாதியாக மணமுடித்து வந்தவளிடம் கூட நேரடியாக என்னால் சொல்ல முடியவில்லை...''

''அதான் கண்ணா இப்ப பெரிய பிரச்சனையாகி விட்டது. நீ எனக்காக பார்த்து பார்த்து இப்ப.....'' என்று மீண்டும் விசும்ப ஆரம்பித்தார் யசோதா.

''அம்மா நீங்க மறுபடி மறுபடி அழுது கொண்டே இருந்தால் நான் என்ன செய்வது? உங்களை சமாதானப் படுத்துவதா? தர்ஷினியை பார்ப்பதா? எனக்காக சொல்ல வரவில்லை. ஆனால் அப்பா மாமாவிடம் சொல்லி அவர் மூலமாக தெரிந்து விட்டபிறகு நான் பேச்சை அந்த பேச்சை ஜாடையாக கூட அவளிடம் எடுக்கவில்லை. எனக்கு எடுக்க பிடிக்கவில்லை. என்னை பார்த்து உங்கள் மேல் நம்பிக்கை இல்லையா என்று கேட்கிறீர்களா? நீங்க என்னை அப்படி உண்மையாகவே நினைத்து இருந்தால் எனக்கு உன்னிடமே முழு அதிகாரம் இல்லை என்ற அந்த வார்த்தை வந்து இருக்குமா?''

''ப்ச்! தப்புதான் பிரேம். எனக்கு கோபம் வந்தால் என்ன செய்கிறோம் என்றே தெரிய மாட்டேங்குது. நாலைந்து வருஷமா ஒன்றும் பிரச்சனை இல்லாமல் போனது. இப்பதான் உனக்கு கல்யாணம் ஆன நாளில் இருந்து உடனே குழந்தை வேண்டும் என்ற ஆசை

பரபரப்பு ரொம்ப அதிகமாக போய்.... நான் இப்படி எல்லாம்... ப்ச்! எப்படி எந்த முகத்தை வைத்து கொண்டு தர்ஷினியிடம் பேசுவது? அவள் தப்பாக எடுத்துக் கொண்டாள் இல்லையா? என்ன இருந்தாலும் அப்படி நான் கை நீட்டி அடித்து இருக்கக் கூடாது...'' என்று தன்னை தானே நொந்து கொண்டு சோபாவில் சரிந்து முகத்தை மூடி கொண்டவரின் அருகில் வந்து அமர்ந் தான் பிரேம்.

''அம்மா நான் தர்ஷினியின் கோபத்தை குறைக்க ஒரு வழி சொல்லட்டுமா?'' என்று அவரின் முகத்தை நிமிர்த்தி கேட்டான்.

''நான் என்ன செய்யணும் சொல்லு? இப்பவே அவள் வீட்டுக்கு போய் அவளிடமும் அவங்க அம்மா அப்பாவிடம் மன்னிப்பு கேட்கட்டுமா?''

''அதில்லைம்மா, இங்கே நடந்த பிரச்னையை தர்ஷினி அங்கே முழுசும் சொல்கிறாளோ இல் லையோ? சொல்லி அவர்கள் வந்து விசாரித்தால், நான் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன். அங்கே நீங்க போக தேவை இல்லை. நான் சொல்ல வருவது. தர்ஷினியின் கோபம் எதனால் வந்தது என்பதை புரிந்து கொண்டால், அந்த கோபத்தை தீர்க்கும் வழியும் புரிந்து விடுமே?'' என்று மீண்டும் குறிப்பு காட்டினான்.

''தர்ஷினிக்கு நான் அடித்ததுதானே கோபம்?'' என்று வருத்தத்துடன் யசோதா சொல்ல அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

''இல்லைம்மா, அவள் இங்கே வீட்டுக்குள் வரும் போதே கோபமாகத்தான் வந்தாள். உங்களின் செய்கை,

வீட்டை விட்டு வெளியேறத்தான் ஒரு கடைசி தூண்டு கோலே தவிர, அது முழு காரணம் இல்லை...'' என்று மீண்டும் பாதியில் நிறுத்தினான்.

அவனுக்கு அம்மாவின் ஆசையும் நிறைவேற வேண்டும். மனைவியின் ஆசைக்கும் தடை போட விரும்பவில்லை. இரண்டும் ஒரே சமயத்தில் நடக்க ஒரு வழி இருக்கு. அந்த வழியை தான் சொல்லி அம்மா ஏற்றுக்கொள்வதை விட, அவரே யோசித்து சொன்னால் நன்றாக இருக்குமே என்று தவிப்புடன் அவரையே பார்த்து கொண்டு இருந்தான் பிரேம்குமார்.



27

தர்ஷினியின் கோபத்தை குறைக்க ஒரு வழி இருக்கு என்று பிரேம் பூடகமாக சொன்னது என்னவாக இருக்கும் என்று தீவிரமாக யோசத்தார் யசோதா. வரும்போதே தர்ஷினிக்கு என்ன கோபம்? பிரேம் ஏற்கனவே அவளை போகவேண்டாம் என்று சொல்லி இருக்க வேண்டும். தனக்காக தன்னுடைய குழந்தை ஆசைக்காக. அவன் இவ்வளவு செய்யும் போது தான் அவனுக்கு திருப்பி ஏதாவது செய்ய வேண்டாமா?

சிங்கப்பூர் போக வேண்டாம் என்று பிரேம் சொன் னதில் தர்ஷினிக்கு கோபம் வந்து இருக்க வேண்டும். அப்ப அவள் வெளியூர் போக அனுமதி பிரேம் தந்து விட்டால் கோபம் போய் விடுமே! அவன்

சிரமப்பட்டாலும் பரவாயில்லை என்று தனக்காக யோசிக்கிறான். என்ன செய்ய வேண்டும் என்று முடிவு பண்ணி விட்டார் யசோதா.

''பிரேம், தர்ஷினிக்கு உடனே செக் அப் பண்ணு வோம். ஏற்கனவே குழந்தை உருவாகி இருப்பது உறுதி ஆகி விட்டால். அவளை தனியாக அனுப்ப வேண்டாம். நானும் அவளுடன் போகிறேன். அவளை என் கண்ணுக்குள் வைத்து பார்த்து கொள்கிறேன். அவளுக்கும் தன் ஆசை நிறைவேறின திருப்தி கிடைக் கும்'' என்று அவசரமாக சொன்னார் யாசோதா.

''அம்மா, ஒரு வேளை...''

''ம்ஹூம்! வேற எதுவும் பேசாதே. ஒரு வேளை இரு வேளை எல்லாம் கிடையாது. நூற்றுக்கு நூறு சத விகிதம். குழந்தை உருவாகி இருக்கும். நான் விடாமல் வேண்டி கொள்ளும், மாங்காடு மாரியம்மனும், அந்த கர்ப்ப ரட்சகாம்பிகையும் என்னை நிச்சயம் கை விட மாட்டாங்க என்று நம்பிக்கை எனக்கு இருக்கு. நாங்க ரெண்டு பெரும் சிங்கப்பூர் போயிட்டு வரோம். நீ அதுக்கு ஏற்பாடு பண்ணு. எங்களை கொண்டு வந்து விட்டுட்டு, ஒருவாரம் இருந்துட்டு நீ வா. நடுவில் நாங்க ஒரு முறை வருகிறோம். ஆறு மாசம் தானே ஆறு நிமிஷமா போய் விடும்....'' என்று முடித்த போது அவரின் பார்வை வாசலில் வந்து நின்ற தர்ஷினி மேல் பதிந்தது.

தன் அருகில் அமர்ந்து கை பற்றி பேசி கொண்டு இருந்த பிரேமை உதறி விட்டு பாய்ந்து எழுந்து வாசலுக்கு ஓடி வந்த யசோதா. தர்ஷினியின் கன்னத்தை

பற்றி, கண்ணில் நீர் வழிய, ''த..ர்...ஷி...னி! என் தங்கம். வந்துட்டியா ராஜாத்தி? இந்த புத்தி கெட்டவ ஏதோ கோபத்தில் தெரியாமல் செஞ்ச காரியத்தை மறந்து என்னை மன்னிச்சுட்டியா கண்ணு?'' என்று கெஞ்ச லாக கேட்க அவளின் கண்களிலும் நீர் பெருகி வழிந்தது.

ஏற்கனவே அப்பா அவர் பற்றி சொல்லி இருந்ததில் அவரின் மேல் கோபம் இல்லை. ஆனால் பிரேமின் மேல் கோபம் இருந்தது. எதையும் ஒழுங்காக விளக்கமாக திருமணத்திற்கு முன்பே சொல்லி இருந்தால் இந்த அசம்பாவிதமும், அனாவசியமான வாக்குவாதமும் நிகழ்ந்தே இருக்காதே என்று கோபம் இருந்தது. இப்போது தன்னை பார்த்த பின்பும், யசோதாம்மா ஓடி வந்து வரவேற்க, அவன் அழுத்தமாக இருந்த இடத்தில் இருந்தே பார்த்தது அந்த கோபதீக்கு மேலும் நெய் விட்டது. இவனை அப்புறம் கவனிச்சுக்கலாம்.

''இல்லைம்மா. எனக்கு உங்க மேலே கோபம் இல்லை...''

''உன்னை பார்த்த பின்புதான் என் மனசே அமைதி யாச்சு. ரெண்டு மணி நேரமா என் உயிர் என்னிடம் இல்லைடா. என்னை தயவு செய்து மன்னித்து விடு தர்ஷினி. நான் பெரிய தப்பு பண்ணிட்டேன். அப்படி உன்னை கை நீட்டி அடிச்சு இருக்கக் கூடாது...''

''பரவாயில்லைம்மா, எங்க அம்மா அந்த இடத்தில இருந்தாலும் இதையேதான் செஞ்சு இருப்பாங்க. எங்க அம்மாவையும் உங்களையும் நான் வேறே வேறேயாக பார்க்கவில்லை. நான் பேசியதும் தப்புதானே? அதனால்

நீங்க வருத்தப்பட தேவை இல்லை'' என்று சமாதான மாக சொன்னவள், அவரின் கண்களை துடைத்து விட்டாள்.

''என்னை அ...ம்..மா என்றா சொன்னாய் தர்ஷினி?'' என்று வியப்பாக கேட்டவரின் கண்களில் மேலும் கண்ணீர் பெருகி வழிந்தது.

''ஆமாம்மா! ஏன் உங்களை அம்மா என்று நான் சொல்லக் கூடாதாம்மா? உங்களுக்கு ஆஸ்திக்கு ஒரு பையன் மட்டும் போதுமாம்மா? ஆசைக்கு ஒரு பொண்ணு வேண்டாமாம்மா? அந்த பொண்ணா நான் இருக்கக் கூடாதாம்மா? ஏன் எங்க மேலே எல்லாம் நீங்க பாசம் வைக்க மாட்டீங்களாம்மா?'' என்று ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒரு அம்மா போட, அவரின் முகம் மேலும் கனிந்து கண்கள் குளமாகியது.

''சொல்லலாம் தர்ஷினி. நிச்சயம் சொல்லலாம். நீ சொல்லாமல் வேற யார் சொல்ல முடியும்? உனக்கு இல்லாத உரிமை இந்த வீட்டில் வேறே யாருக்கு இருக்கு? பையனை விட எனக்கு பொண்ணுதான் முதலில் வேணும் தர்ஷினி. அதனால் பிரேமை விட முன்னாடி நீதான் வருவாய். கவலையே படாதே இவ்வளவு நேரம் கழித்து தனியாகவா வந்தாய்'' என்று வாஞ்சை பொங் கிய குரலில் கேட்டார் யசோதா.

''தனி என்னம்மா தனி? இது நான் எப்பொழுதும் அலுவலகத்தில் இருந்து வரும் நேரம் தானே? அப்பா கூட வந்தாங்க. பைக் நிறுத்திட்டு வராங்க...'' என்ற தர்ஷினியின் வார்த்தையில் அதுவரை மாமியாரும் மருமகளும் நெகிழ்ந்து பேசிக்கொள்ளும் வார்த்தைகளை

கேட்டபடி சோபாவிலேயே சிலையாய் உறைந்து அமர்ந்து இருந்த பிரேம் எழுந்து வாசலுக்கு வந்தான்.

வரவேற்கும் பாவனையில் வாசலில் வந்து நின்ற பிரேம், குருமூர்த்தியின் கை பற்றி, ''ரொம்ப தேங்க்ஸ் மாமா, நீங்களே இவ்வளவு சீக்கிரம் தர்ஷினியின் கோபத்தை குறைத்து....'' வார்த்தைகள் வராமல் திக்க அவனின் பாவனை புரிந்து தோளில் தட்டினார்.

''தர்ஷினிக்கு உங்க அம்மாவின் மேல் கோபம் போய் விட்டது. ஆனால் உங்க மேலே இன்னும் இருக்கலாம். பார்த்து சரி பண்ணிக்கோங்க. அவளால உங்களுக்கு உங்க அம்மாக்கு எல்லாம் வீண் மன கஷ்டம். சின்ன பொண்ணுதானே? தெரியாமல் பேசிட்டா, அவளுக்காக நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்...''

''என்ன மாமா, நீங்க போய் மன்னிப்பு கேட்கறீங்க? உண்மையை சொன்னால் அம்மா கோபமா அப்படி நடந்து கொண்டதற்கு நான்தான் ப்ரியாவிடம் மன் னிப்பு கேட்கணும்.''

''அதெல்லாம் தேவை இல்லை பிரேம். அதை அவளே மறந்து விட்டாள். இப்ப கொஞ்சம் முன்னாடி தான் அப்பா சொன்ன விஷயங்களை ஒரு கோடி காட்டி இருக்கிறேன்...''

''என்ன மாமா சொல்றீங்க? ப்ரியாக்கு முன்னாடி விஷயமே தெரியாதா?'' என்று அதிர்ந்து போய் கேட் டான்.

''நீங்கதானே வேறு யாருக்கும்...''

''என்ன மாமா இது? வேறே யாருக்கும் என்றால் அதில் ப்ரியா எப்படி வருவாள்?'' என்று வேகமாக

கேட்டவனின் கண்கள் அம்மாவுடன் பேசிக்கொண்டு இருந்த ப்ரியாவை காதலோடு வருடியது.

'அவளிடம் தான் விஷயமே சொல்லவில்லையே?' என்று குற்ற உணர்விலும், 'தான் விஷயத்தை மறைத்து விட்டோம் என்ற எண்ணத்தில் கோபம் தன் மேல் இருந்த போதும் அப்பாவின் பேச்சை மதித்தது இங்கே வந்து விட்டாலே, சமத்து சக்கரை கட்டி தான்' என்று அவள் மேல் பொங்கிய காதலிலும் சிக்கி திணறியது.

தனக்குள் மூழ்கியதில் பிரேம் குருமூர்த்தி இருவரி டையே பேச்சு நின்று விட, அடுக்களையில் இருந்து வந்த நந்தகோபால், ''வாங்க சம்பந்தி வாங்க, என்ன பிரேம் வீட்டுக்குள் அழைக்காமல் அங்கேயே நிற்க வைத்து பேசிக்கொண்டு இருக்கிறாய்?'' என்று வரவேற் றார்.

''இல்லை சம்பந்தி, நான் கிளம்புகிறேன். நீங்க நாலு பேரும் மனசு விட்டு பேசி நல்ல முடிவு எடுங்க. இனிமேல் இந்த வீட்டில் எந்த பிரச்சனையும் வராமல் இருக்க அந்த ஆண்டவன் அருள் புரியட்டும். தர்ஷி னியை பார்த்துக்கோங்க. நான் நாளைக்கு புவனாவோடு வருகிறேன்.'' என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு தர்ஷினியை பார்த்தார் குருமூர்த்தி.

தர்ஷினி யசோதாவை அணைத்தபடி நின்று ஒப்புத லாக தலை அசைத்து வழி அனுப்ப, யசோதா கூப்பிய கரங்களுடனும், கண்ணில் நீருடனும் விடை கொடுக்க, அந்த காட்சியை கனிவோடு பார்த்து ரசித்து விட்டு பிரேம் நந்தகோபாலிடம் விடை பெற்று கிளம்பியவரின் மனம் நிறைந்து இருந்தது.

* * *

குருமூர்த்தி இந்த பிரச்சனையை நல்ல விதமாக தீர்த்து வைத்த மன நிறைவில் இருந்த நந்தகோபால், தர்ஷினியின் அருகில் சென்று, ''நீ உடனே திரும்பி வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம் தர்ஷினி, இது உன் வீடு. இங்கே உனக்கு என்ன வேண்டும் என்பதை உரிமையாக கேட்கலாம். இங்கே இருந்தே உன் உரிமையை நிலைநாட்டலாம். குழந்தை பற்றிய உன் விருப்பத்தையும் நிச்சயம் நாங்க பரிசீலனை செய்றோம் தர்ஷினி. இது என்னுடைய வாக்குறுதி..'' என்று உறுதியான குரலில் சொல்ல அவள் புன்னகைத்தாள்.

''அப்பா, மனிதன் நினைக்க மட்டும் தான் முடியும். அதை நிறைவேற்றி வைப்பது அந்த ஆண்டவன் கையில் இருக்கு. அம்மா அடிக்கடி சொல்ற மாதிரி நல்லதை நினைத்து நல்லதை பேசி, நல்லதையே செய்ய வேண்டும். அவ்வளவுதான். அப்படி பார்த்தால், இந்த வீட்டிலேயே அதிக பவர் புல்லான எண்ணங்கள் அம்மாக்கு தான் இருக்கு. அதனால் தான் கடவுள் உடனே அவங்க ஆசையை நிறைவேற்றி வைத்து விட்டார் என்று நினைக்கிறேன். அதை மாற்றி அமைக்கும் எண்ணம் எதுவும் எனக்கு நிச்சயம் இல்லை. ஆனால் எனக்குள் ஒரு கரு உருவாகி இருக்கிறது என்பதை நானே உணரும் முன்பு, அதை கண்டு பிடித்த ஹோம்ஸ் யசோம்மாவும் அவங்க பையனும் தான். ஹேட்ஸ் ஆப்...''

''தர்ஷினி நீ சொல்வது நிஜம் தானா? என்னுடைய சந்தேகம் கரெக்டா? உனக்கு எப்படி தெரியும்?'' என்று பரபரப்புடன் அவளின் கன்னம் பற்றி லேசாக உலுக்கி அவசரமாக கேள்விகளை அடுக்கினார் யசோதா.

''நீங்க எப்படி கணக்கு போட்டு எனக்குள் ஒரு குழந்தை இருக்கலாம் என்று தெரிஞ்சுகிட்டீங்களோ, அதே கணக்கை தான் நானும் சொல்றேன். இன்னும் யாரும் டெஸ்ட் பண்ணி முடிவா சொல்லலைம்மா. அதுக்குள்ள சொல்லவும் முடியாது. இன்னும் ரெண்டு வராமாவது போகணும். ஆனால் எனக்கும் உங்க பிரார்த்தனை மேலே அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கு. இனி உங்களுக்கு ஏமாற்றங்கள் எதுவுமே வராது. வர நாங்க விடவும் மாட்டோம்...'' என்று தர்ஷினி சொல்ல யசோதா நெக்குருகி போனார்.

''தர்ஷினி.. நான் பிரேமையே... நீ இப்ப.. எனக்கு என்ன சொல்றதுன்னே...'' என்று வார்த்தைகள் வராமல் திக்கியவர் அவளை இறுக அணைத்து கொண்டார். வார்த்தைகளால் சொல்ல முடியாத அவரின் உணர்வுகளை அவரின் கண்ணில் வழிந்த கண்ணீர் சொல்லியது.

''ஷ்! அம்மா, எனக்கு யார் அழுதாலும் சுத்தமா பிடிக்கவே பிடிக்காது. எங்க அப்பாவை கேளுங்க. நானே அழமாட்டேன். அப்படி இருக்கும்போது என் கண் முன்னால் எங்க அம்மா அழுதால் பிடிக்குமா? அதுவும் தூரத்து சொந்தம் என்பதற்கு தனி விளக்கம் சொல்லி என்னை சத்யா கல்யாண மேடையில் வாய் விட்டு அலற வைத்த யசோதா தி கிரேட் அழுதால் சுத்தமா பிடிக்காது..'' என்று கேலி பேச்சிலேயே அவரை சரிக்கட்ட முயன்றாள்.

அவள் கேலியாக சரிபடுத்த முயன்றதில் கொஞ்சம் கொஞ்சமாக தெளிந்த யசோதாவின் முகம் மலர்ந்தாலும், அவர் கேட்ட அடுத்த கேள்வி அவர்கள் மூவரை

யுமே கலங்க வைத்து கண்ணில் நீரை துளிர்க்க வைத்தது.

''சத்யா கல்யாணத்துக்கு முதல் நாள் நான் சொன்னது சரிதானே? பிரேம் எனக்கு தூரத்து சொந்தம் தானே?'' என்று யசோதா கேட்கும்போதே அவரின் கட்டுப்பாட்டையும் மீறி அவரின் விழிகளில் நீர் துளிர்க்க, ''அ...ம்...மா!'' என்று பிரேமும் ''சும்மா இருக்க மாட்டியா?'' என்று நந்தகோபாலும் யசோதாவை ஒரே நேரத்தில் அதட்டினார்கள்.

யசோதா கண்ணில் நீரோடு இந்த கேள்வியை தர்ஷினியிடம் கேட்டதே அருகில் இருந்த நந்தகோபாலுக்கும் பிரேமிற்கும் கண்ணில் ரத்த கண்ணீர் வர வழைத்தது என்றால், அதற்கு தன் கண்ணில் பொங்கி வழிந்த நீரை வேகமாக துடைத்து கொண்டு 'ஆமாம்' என்று தலை ஆட்டிய தர்ஷினியை பார்த்து இருவரின் இதயமும் மேலும் காயப்பட்டது.

நந்தகோபால் எழுந்து வெளியே போக திரும்ப, பிரேம்குமார் தன் கண்ணில் பெருகிய கண்ணீரை வெளி காட்டாமல் மறைக்க வேறு புறம் முகத்தை திருப்பி கொள்ள, அடுத்த வினாடியில் அவள் சொன்ன பதில் இருவரையும் கலங்கிய கண்ணீருடன் கண்கள் இருந்தாலும் இதழ்களை புன்னகையில் மலர வைத்தது.

''பாருங்க, உங்களுக்கும் பிரேமிற்கும் இடையில் மூன்றடி தூரமாவது இருக்கும். ஆனால் எனக்கும் உங்களுக்கும் இடையில் மூணு இன்ச் கூட இல்லை. அப்ப பிரேம் தூரத்து சொந்தம். நான் தான் நெருங்கிய சொந்தம். கரெக்ட் தானே?'' என்று அவர் கன்னத்தில்

தன் கன்னத்தை ஒட்டி வைத்து அழுத்தியபடி கேட்ட தர்ஷினியை பார்த்து இப்போது யசோதாவின் கண்களில் நீர் பெருகியது. ஆனால் அது ஆனந்த கண்ணீர்.



28

அன்று மாலை எப்படியோ ஆரம்பித்து சுமார் மூன்று மணி நேரத்திற்குள் என்னென்னவோ நடந்து இருந்தாலும், தர்ஷினியின் தூரத்து சொந்தத்திற்கான விளக்கம். அந்த வீட்டில் இருந்த நான்கு பேர்களின் மனதையுமே இலகுவாக்கி, சிரிக்க வைத்தது.

''அம்மாக்கு சாப்பாடு எடுத்துட்டு வாங்கப்பா. சாப்பிட்டு விட்டு மாத்திரை போட்டுக்கட்டும்'' என்று ஜாடையாக பிரேம் சொல்ல அதை கவனித்த யசோதா அவசரமாக மறுத்தார்.

''வேண்டாம் கண்ணா! கொஞ்ச நேரம் நான் தர்ஷினியுடன் பேசி கொண்டு இருக்கிறேன். மாத்திரை சாப்பிட்டால் தூக்கம் வரும்..'' என்று கெஞ்சலாக கேட்டார்.

''தர்ஷினி இங்கே தான் இருப்பாள். நீங்க தூங்கி எழுந்து காலையில் பேசலாம். அவளோடு நீங்க சிங்கப்பூர் போறதா வேற சொல்லி இருக்கீங்க. ஆறு மாசம் என் மனைவியை நான் பிரிந்து தனியா இருக்கணும். அவளும் நீங்களும் சிங்கப்பூர் கிளம்பும் வரை எனக்கு தான் என் மனைவி மேல் தனி உரிமை. முதல் உரிமை..

அதனால் நீங்க உடனே தூங்கி ஆகணும்'' என்று தீர்மானமாக சொன்னான் பிரேம். அவன் சொன்ன குரலில் இருந்த உண்மை உறைக்க, யசோதா அமைதியாகிவிட்டார்.

''ம்கூம், என் மனைவி, முதல் உரிமை, தனி உரிமை, இந்த வார்த்தைக்கு எல்லாம் அர்த்தம் தெரியுமாடா? மடையன் பெரிசா பேச வந்துட்டான்..'' என்று ஒரு சின்ன தலை சிலுப்பலுடன் முகத்தை திருப்பி கொண்ட தர்ஷினியை பார்க்க பார்க்க அவனுக்கு தெவிட்ட வில்லை. அவளின் கோபம் கூட அழகாக இருந்தது. மாலையில் வேளச்சேரியில் அவங்க வீட்டில் அவள் பேசியது எதுவும் அவனுக்கு நினைவில் இல்லை.

அப்பா கொண்டு வந்த ரசம் சாதத்தை, 'நானே சாப்பிடுகிறேன்' என்று கை நீட்டிய அம்மாவிற்கு வேண்டாம், நான் தருகிறேன்'' என்று மறுத்தபடி ஊட்டி விட, உணவு நேரம் முழுவதும் யசோதாவும் தர்ஷினியும் ஏதேதோ பேசி கொண்டே இருந்தார்கள்.

''அடி உதவுற மாதிரி அண்ணன் தம்பி கூட உதவ மாட்டாங்க என்றுதானே கன்னத்துல ஒண்ணு பலமா வச்சு என்னை ஆப் பண்ணினீங்க?'' என்று கேலியாக சிரித்த தர்ஷினியை பார்த்து ஒரு வினாடி யசோதா கண் கலங்க, பிரேமும் தர்ஷினியும் ஒரு விரல் காட்டி, 'அழக் கூடாது' என்று மிரட்டினார்கள்.

அந்த அன்பில் மேலும் நெகிழ்ந்தாலும் கண்ணீரை உள்ளுக்கு இழுத்தபடி, ''பழமொழியின் அர்த்தத்தை மாற்றி மாற்றி நம் இஷ்டத்திற்கு திரித்து சொல்வதே நமக்கு வேலையாக போய் விட்டது தர்ஷினி. அந்த

பழமொழியோட அர்த்தம் அது இல்லை'' என்று யசோதா கலங்கிய குரலை சீர்படுத்தி சொல்ல இருவரும் ஆச்சரியமாக பார்த்தாள்.

''வேற என்னம்மா அர்த்தம்?'' என்று இருவரும் ஒரே குரலில் கேட்டார்கள்.

''இந்த வாக்கியம் ராமாயாணத்தில் ராமர் பரதனிடம் தன் பாதுகையை கொடுத்து, அவன் அயோத்திக்கு திரும்பி சென்று ஆட்சி செய்ய சொல்லும் இடத்தில் வரும் வாக்கியம். என்னுடைய இந்த அடியை (பாதுகை) போல, உனக்கு நல்லாட்சி செய்ய வேறு யாராலும் உதவ முடியாது. இது உனக்கு உற்ற துணையாக இருக்கும். அது செய்யும் உதவியை, தூரத்தில் இருக்கும் இந்த அண்ணனாலோ, அல்லது என் தம்பியான லக்ஷ்மண னாலோ உடனடியாக செய்ய முடியாது என்று சொல்லும் ஒரு வாக்கியம். அதை நாம் செய்யும் ஒரு தவறான காரியத்திற்கு சப்பை கட்டு கட்ட எடுத்து கொள்ளக் கூடாது'' என்று யசோதா சொல்ல பெருமையாக இரு வரும் கை தட்டி தங்களின் பாராட்டை தெரிவிக்க அவரின் முகம் மலர்ந்தது.

''தர்ஷினி நான் உனக்காக போட்ட பக்கோடாவை கூட சாப்பிடலை. சாயங்காலம் வந்ததில் இருந்து நீ ஒண்ணுமே சாப்பிடலை. உனக்கு ஏதாவது சாப்பிட பண்ணி தரேன்'' என்று எழுந்த யசோதாவை மூன்று குரல்கள் ஒரே நேரத்தில் அதட்டி அமர வைத்தது.

''எனக்கு ஒண்ணும் வேண்டாம்மா. நீங்க முதலில் நல்ல ரெஸ்ட் எடுங்க'' என்று தர்ஷினியும், ''மூச் இந்த இடத்தை விட்டு எழுந்திரிச்சால் அடிதான். உன்

மருமகளுக்கு சாப்பாடு நான் தரேன்'' என்று நந்த கோபாலும், ''அஞ்சு நிமிஷம் படுக்க மாட்டீங்க'' என்று பிரேமும் அதட்டி அவரை படுக்க வைத்தனர்.

யசோதாவை படுக்க வைத்து விட்டு அறையில் இருந்து வெளியே வந்த உடனே, ''தோசை ஊற்றி சாப் பிட்டுட்டு படுங்க. காலையில் பேசிக்கலாம். அம்மாவை நான் பாத்துக்கறேன்'' என்று சொல்லி விட்டு பிரேம், தர்ஷினி இருவரின் தலையையும் அன்போடு வருடி விட்டு யசோதாவிற்கு பாலை எடுத்து கொண்டு அறைக்கு திரும்பி போன நந்தகோபாலை விழிகளில் நீர் கோர்க்க இருவரும் சில நிமிடங்கள் பார்த்து இருந் தனர்.

அப்பா உள்ளே சென்ற பிறகு, 'வா ப்ரியா, சாப்பிட லாம்'' என்று அழைத்தான் பிரேம்.

''பிரேம் எனக்கு சாப்பாடு வேண்டாம். நான் படுக்கப் போகிறேன்'' என்று அறைக்குள் செல்ல திரும்பியவள் கை பற்றி நிறுத்தினான். அவளின் முகம் சீரியஸாக இருந்தது.

''ஏன் ப்ரியா, இப்பதானே எல்லாம் பேசி முடித்து அம்மாவை சமாதானப்படுத்தி விட்டு வந்தோம். இன் னும் என்ன கோபம்? எப்படி மன்னிப்பு கேட்கட்டும் சொல்லு? அப்படியே கேட்கிறேன்.''

''ப்ச்! உங்க அம்மா மேலே எனக்கு கோபமே இல் லையே? எங்க வீட்டுல இருந்து கிளம்பும்போதே அம்மா மேலே எனக்கு கோபம் இல்லை. ஆனால் நீங்க.. உங்க மேலே இருக்கும் கோபத்திற்கு ஒரு அளவே இல்லை. எனக்கு ரொம்ப எரிச்சலா இருக்கு தெரியுமா?''

''என்ன ப்ரியா, இப்படி சொல்லி விட்டாய்? நான் உன்னை... உன் மேலே... எப்படி சொல்றது? நான் உன் மேலே எவ்வளவு ஆசை வச்சு இருக்கிறேன் என்று உனக்கு தெரியலை ப்ரியா....''

''கரெக்ட். எனக்கு தெரியலை. எனக்கு தெரிவது மாதிரி நீங்க சொல்லலையே? எப்படி தெரியும்? எப்ப பார்த்தாலும் உங்க அம்மாவின் ஆசைதான் முக்கியம் என்ற மாதிரி பேசினால் எனக்கு சங்கடமா இருக்காதா? அம்மா முக்கியம்தான். ஆனால் பெண்டாட்டியும் முக்கியம் என்று நீங்க நினைக்க வேண்டாமா பிரேம்?'' என்றவளின் குரலில் ஆதங்கம் இருந்தது.

''அம்மா எனக்கு முக்கியம் என்பதை விட அம்மா வுக்கு நான் அவங்களை அவசியமா நினைப்பது முக்கியம் ப்ரியா. நீ புரிந்து கொள்வாய் என்று நினைக் கிறேன். அம்மா மனரீதியா பாதிக்கப்பட்டவங்க. உடனே ஹார்ஷா பைத்தியமா என்று கேட்பவங்க தான் அதிகம். அதனால் இதை பொதுவா நாங்க வெளியே சொல்வதில்லை...'' என்று வேகமாக சொன்னவனின் குரலில் கோபம் தெரிய அவள் அவசரமாக மறுத்து பேசினாள்.

''சாரி. சாரி. நான் அவங்களை அப்படி சொல்லலை. என்ன ஆச்சு? நீங்க கொஞ்ச முன்னாடி அம்மாவிடம் பேசிட்டு இருந்ததை கேட்ட போது கொஞ்சம் வித்தி யாசமா தான் இருந்தது. ரொம்ப சின்ன குழந்தையிடம் பேசுவது மாதிரி பேசினீங்க. என்ன ப்ராப்ளம் அம்மா வுக்கு?''

''இங்கே பேச வேண்டாம் ப்ரியா. மேலே போய் விட லாம். அம்மா காதில் விழுந்தால் மறுபடியும் எமொஷ

னாகலாம்...'' என்று சொல்ல அவனை கவலையோடு பார்த்தாள்.

மொட்டை மாடியில் தரையில் அமர்ந்து சுவரில் சாய்ந்து கொண்ட பிரேமின் அருகில் அமர்ந்து அவன் தோளில் சாய்ந்தவளுக்கு பெருமூச்சு வந்தது. அப்பா சொன்னது எவ்வளவு உண்மை? யசோதாம்மாவின் அடி மனதில் எவ்வளவு சோகம் புதைந்து இருக்கிறது? இதை எல்லாம் மறைத்து வெளியே சிரிக்கும் இவர்கள் உண்மையிலேயே கிரேட்தான். ஆனால் இவன் செய்தது சரி இல்லை.

அக்னி சாட்சியாக, முப்பது முக்கோடி தேவர்களின் சாட்சியாக நிறுத்தி, ''மங்கலமான பெண்ணே! உன் னோடு இன்று நான் துவங்கும் இல்லற வாழ்வு நல்ல முறையில் இருக்க வேண்டும் என்று உறுதி அளித்து, இந்த திருமாங்கல்யத்தை உன் கழுத்தில் நான் அணி விக்கிறேன். என் இல்லற துணைவியாக, என் சுக துக்கங்களில் பங்கேற்று, நிறைந்த யோகத்துடன் நீ நூறாண்டு காலம் வாழ்வாயாக!'' என்று மந்திரம் சொல்லி கைப்பற்றியவன். தன்னிடம் சுக துக்கங்களை முழுமையாக பங்கிட்டு கொள்ளவில்லை. திருமணத் திற்கு முன்பு எப்படியோ? அதன் பிறகும் தன்னிடம் சொல்ல அவன் முயற்சி கூட செய்யவில்லை.

அவளின் யோசனையான முகத்தை தூரத்து மின் விளக்குகளின் மங்கலான ஒளியில் பார்த்தவன். ''ஐ ஆம் சாரி ப்ரியா...'' என்று வருத்தமாக சொன்னான்.

''எதுக்கு இப்ப சாரி சொல்றீங்க?''

''ப்ச்! நான் எல்லா விஷயமும் உனக்கு முன்பே சொல்லி இருக்கணும்...''

''ஏன் சொல்லலை? நான் இங்கே வரும்போது அதுக்காக உங்களிடம் சண்டை போடணும் என்றுதான் வந்தேன். உங்க அம்மாவிடம் மட்டும் தான் சமாதானம் ஆகி இருக்கேன். இன்னும் உங்களுடன் நான் சமாதானம் ஆகவில்லை...''

''எல்லா விஷயமும் உன்னிடம் சொல்லணும் என்று தான் ப்ரியா அன்னிக்கு உன் ஆபீசுக்கு வந்தேன். இங்கே கூட்டிட்டும் வந்தேன். ஆனால் அன்னிக்கு உன்னை இங்கே சன்ஷேடில் இருந்து தூக்கிய போது நான் என்னையே மறந்து போய் விட்டேன். அதுல எல்லாமே தலை கீழா மாறி விட்டது...''

''அதற்கு அப்புறம் கீழே எவ்வளவு நேரம் இருந்தோம்? பேச ஆரம்பிக்கவே இல்லையே நீங்க?''

''அப்போதைக்கு உன்னை தனிமையில் இங்கே அதிக நேரம் நிறுத்தி வைக்கக் கூடாது என்பது மட்டும் தான் என் மனசுல ஓடிட்டே இருந்தது. கிளம்பும்போது உன் குழம்பிய முகம் பார்த்து என் மனசை திறந்து விட்டேன். அதுவும் நான் எதிர்பாராதது தான். எல்லாம் பேசி சம்மதம் கேட்க வேண்டும் என்று நான் நினைத்து இருக்க, கொஞ்சமும் எதிர்பாராமல், உன் மனசும் புரிந்து, அம்மாவும் அங்கே சம்பந்தம் பேச சென்று விட்டார்கள் என்பது தெய்வ சங்கல்பமாக தோன்றியது...''

''சரி அன்னிக்கு சொல்லவில்லை. ஆனால் அதற்கு பிறகு, திருமணத்திற்கு முன்னால் நாம் எத்தனை தடவை சந்தித்து இருக்கிறோம்? அப்ப கூட என்னிடம் சொல்லவில்லை தானே?''

''ஓரிரண்டு முறை தனியாக பேச முயன்றேன் ப்ரியா. சந்தர்ப்பம் சரியாக வாய்க்கவில்லை. அதோடு.. அப்ப.. இதை பற்றி பேசி, ஒருவேளை இந்த திருமணத்தில் ஏதாவது தடங்கல் வந்து விடக் கூடாதே என்ற பயத்தில்...''

''பிரேம். என்னிடம் உண்மையை சொல்ல வேண்டாம் என்று நீங்க நினைத்தால், என் மேலே நம்பிக்கை இல்லை என்பதை தானே காட்டுது..''

''உன்மேலே நம்பிக்கை இல்லை என்று அதை எடுக்க முடியாது ப்ரியா. உன்னை இழக்க எனக்கு மனம் இல்லை என்று வேண்டுமானால் வைத்து கொள்ளலாம்..''

''ஓஹோ! அப்பாகிட்ட மட்டும் சொல்லலாம் போல..''

''உங்க அப்பாவிடம் சொல்ல உண்மையை சொன்னால் எனக்கு இஷ்டம் இல்லை. உன்னிடம் மட்டும் சொல்லலாம். இல்லை என்றால் யாரிடமும் சொல்லக் கூடாது என்பதுதான் என்னுடைய நிலை. ஆனால் அப்பா அங்கே சொல்லி விட்டேன் என்று சொன்ன பின்பு என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. 'வேறு யாருக்கும்', இது தெரியவேண்டாம் என்று வேண்டி கொண்டேன். அந்த 'வேறு யாருக்குமில்' அவர் உன்னையும் வைப்பார் என்று நான் சத்தியமாக எதிர்பார்க்க வில்லை..''

''வாட்? அப்பா என்னிடம் சொல்லி விட்டார் என்று நினைத்து இருந்தீர்களா? அதனால் தான் என்னிடம் சொல்லவில்லை என்று சொல்றீங்களா?''

''ஆமா ப்ரியா. ஏற்கனவே தெரிந்த ஒரு விஷயத்தை, என் மனசுக்கு சஞ்சலம் கொடுக்கும் விஷயத்தை, என்னுடைய தாயை குறைவாக நினைக்க வாய்ப்பு இருக்கக் கூடிய ஒரு விஷயத்தை, மீண்டும் மீண்டும் பேசுவது என் மனசுக்கு உவப்பாக இல்லை. அதனால்தான் பின்னால் நான் பேசவில்லை ப்ரியா. உன்னிடம் மறைக்க வேண்டும் என்று நான் நினைத்ததே இல்லை. உன்னிடம் சொல்ல வேண்டியது எனக்கு அவசியம் ஆச்சே? அப்போதுதானே நீ அம்மாவை புரிந்து, அவர்களின் நடவடிக்கையை சரியான கோணத்தில் எடுத்து, இணக்கமாக இருக்க முடியும். அப்படி இருக்கும்போது உனக்கு மறைக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை ப்ரியா. இது சத்தியம்...'' என்று அவன் அவசரமாக சொன்ன விதத்தில் அவன் ஆதங்கம் புரிந்தது.

''உங்களை நம்பாமல் இல்லை ப்ரேம். அப்படி நம்பி இருக்காவிட்டால், உங்கள் மேல் முழுசா கோபம் போய் இருக்காத நேரத்திலும், அப்பா சொன்னதற்காக இங்கே கிளம்பி வந்து இருக்க மாட்டேனே? கொஞ்சூண்டு கோபம்தான்''. என்று சொன்ன தர்ஷினியின் குரலில் அந்த கொஞ்சூண்டு கோபம் கூட காணாமல் போய் இருந்தது.

''பரவாயில்லை ப்ரியா. உனக்கு ஏற்கனவே தெரிந்து இருந்தாலும் நான் என்னுடைய திருப்திக்கு இன்னொரு முறை சொல்லி விடுகிறேன்..'' என்று பெருமூச்சோடு சொல்லி விட்டு, கண்களை மூடி தீவிரமான குரலில் பேச ஆரம்பித்தான்.



29

திருமணத்திற்கு முன்பே, ப்ரியதர்ஷினியிடம் முழுமையாக அம்மாவை பற்றிய விபரத்தை வெளிப்படையாக சொல்லிய பிறகே தன் மனதை திறந்து காட்ட வேண்டும் என்று எண்ணி அவளை அலுவலகத்தில் இருந்து அழைத்து வந்த பிரேம்குமார், வீட்டிற்கு வந்த பிறகு, அவனால் அன்று தான் எண்ணியதற்கு செயல் வடிவம் கொடுக்க முடியவில்லை. அந்த நாளை மீண்டும் ஒருமுறை எண்ணி பார்த்தவன் பெருமூச்சோடு பேச ஆரம்பித்தான்.

''அம்மாவிற்கு இருப்பது மனநோய் என்று சொல்லலாம். அதை சொன்னால் பலர் வித்தியாசமாக பார்ப்பார்கள். அதை இயல்பாக எடுத்து கொள்வதில்லை. கேன்சர், இருதயத்தில் அடைப்பு, கிட்னி பெய்லியர் இதை எல்லாம் இயல்பாக எடுத்து கொள்ளும் நம்மால், மனவியாதிகளுக்கும் தனி நபர் மட்டும் காரணம் இல்லை என்பதை ஏற்று கொள்ள முடிவதில்லை. இன்னும் சொல்ல போனால் மன நோயாளிகளுக்கு தான் சமூகமும் சுற்றுப் புறமும் கூடுதல் காரணிகள். அம்மாவை மன நோயாளி என்று சொல்ல எனக்கு மனசு வரலை. மன சிதைவு என்று சொல்லலாமா? அதை காரணம் காட்டி எனக்கு வரும் பெண்ணின் பெற்றோர் மறுக்கலாம் என்ற பயம் எனக்கு ஆரம்பத்தில் இருந்தது. இது

மரபு ரீதியாக வருவதில்லை என்று நிறைய பேருக்கு தெரியாது. மரபு ரீதியாக வர, அவங்க உதிரத்தில் நான் தோன்றவும் இல்லை என்று வச்சுக்கோ...''

''அவங்க உதிரத்தில் நீங்க வரலை ப்ரேம். ஆனால் உங்க உதிரத்தில் தான் அவங்க இருக்காங்க...''

''ஹேய் அதெப்படி உனக்கு தெரியும்? நாங்க யாரிட மும் இதை சொன்னதே இல்லையே?'' என்று ஆச் சரியமாக கேட்டான் பிரேம்.

''நீங்க கொஞ்சம் முன்னாடி உங்க அம்மாவிடம் சொல்லும் போதுதான் கேட்டேன். உங்க அம்மாவுக்கு மனதில் அழுத்தம் வந்ததற்கும் காரணம் நீங்கதான். அந்த நோய்க்கு மருந்தும் நீங்கதான் என்ற அரிய உண்மை புரிஞ்சுது...'' என்று பெருமிதமாக சொன்ன வளை ஒரு பெருமூச்சை வெளியேற்றி அணைத்து கொண்டான்.

''நிஜம் தான் ப்ரியா. அவங்களுக்கு வந்த நோய்க்கும் நானே காரணம். அந்த நோய்க்கும் மருந்தும் நானே தான். அப்ப நான் ப்ளஸ் டூ படிச்சுட்டு இருந்தேன். மேக்ஸ் என்று சொன்னால் காத தூரம் ஓடும் அதி புத்திசாலி...''

அவன் மிகுந்த தீவிரமான குரலில் தன்னை தானே நொந்தபடி பேசும் அந்த பாவனை பிடிக்காமல் அவனை இயல்பு நிலைக்கு மாற்ற, ''படிப்பு வராத மக்கா நீங்க? என்னை ஏமாற்றி உங்களை என் தலையில் கட்டி வச்சுட்டாங்களா?'' என்று கேட்டாள் தர்ஷினி.

அவள் கேலியாக சொன்ன அந்த வார்த்தைகள் அவனின் குற்ற உணர்வை மேலும் அதிகப்படுத்தியது.

''இதுதான், எங்க அப்பா சொன்ன இதே வார்த்தைதான் இப்ப இருக்கும் எல்லா குழப்பத்திற்கும் காரணம் என்றால் உன்னால் நம்ப முடிகிறதா?'' என்று அவன் கேட்க அவள் பதறி போனாள்.

''பிரேம்.. நான் சும்மா.. உங்களை ரிலாக்ஸ் பண்ண.. ஐ ஆம் சாரி பிரேம். எனக்கு அது தெரியாது. உங்களை காயப்படுத்தும் எண்ணம் எனக்கு நிச்சயம் இல்லை...''

''தெரியும் ப்ரியா. என்னை பெற்ற அம்மா விழுப் புரத்தில் ஒரு பள்ளியில் மேக்ஸ் டீச்சரா இருந்து இருக்காங்க. அதனால் ஒரு முறை, நான் ஸ்கூல் டெஸ் டில் கம்மியா மார்க் வாங்கியபோது அப்பா என்னை இதை சொல்லி திட்டினாங்க. உங்க அம்மா கணக்கு வாத்தியாரா இருந்து ஊரில் இருக்கும் எல்லா பிள் ளைக்கும் சொல்லி கொடுத்தாள். நீ இப்படி மக்கா இருக் கியே என்ற வார்த்தையில் ஆரம்பித்து, நான் அம்மா விற்கு பிறக்கவில்லை என்ற உண்மை எனக்கு அன்று தான் தெரியவந்தது. அது என் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியதா இல்லையா என்று எனக்கு இப்போது தெரியவில்லை. அந்த டீன் ஏஜ் அலட்சியத்தில் அடுத்து வந்த காலத்தில் நான் அம்மாவை சரியாக கவனிக்காமல் விட்டதும், அவர்களுடன் முன்பு போல ஒட்டி உற வாடாததும் அவர்களின் மனதில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள எங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆனது...'' என்று நிறுத்தியவனால் பேச்சை தொடர முடிய வில்லை.

அன்றைய நினைவில் இப்போதும் லேசாக உடல் நடுங்க, கண்ணில் நீர் சுரந்தது. அவன் கைகளை பற்றி

அழுத்தி மெல்ல அவனின் முதுகை வருடி, ''ப்ரேம். ரிலாக்ஸ். நடந்து முடிந்து விட்ட எதையும் நம்மால் மாற்ற முடியாது. ஆனால், இனிமேல் வரும் காலம் நம் கையில் தான் இருக்கு. அதை சந்தோஷமாக கழிக்க நம்மால் முடிந்த எல்லா முயற்சியும் செய்யலாமே?'' என்று அமைதிபடுத்த முயன்றாள் தர்ஷினி.

''அன்று நான் காலேஜில் படிப்பை முடித்து பட்டம் பெறும் உற்சாகமான கன்வகேஷனுக்கு அப்பாவையும் அம்மாவையும் வர சொல்லி வருவார்கள் என்று அவ் வளவு ஆவலாக எதிர்பார்த்து இருந்த போது அவங்க ரெண்டு பேருமே வரவில்லை. அவர்களோடு சண்டை போட வேண்டும் என்று ஆவேசமாக வீட்டிற்கு வந்த போதுதான் அம்மாவின் பிரச்னை புரிந்தது. அதுவும் மணிக்கட்டில் வெட்டி கொண்டு உயிருக்கு போராடும் நிலையிலும் மருத்துவ சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு கூட செல்லாமல், என்னை பார்க்கவேண்டும் என்று பிடிவாதத்தோடு இருந்த அந்த மாதிரி ஒரு நிலையில் அம்மவை பார்ப்பேன் என்று நான் நினைத்து கூட பார்க்கவில்லை. அந்த நிலைக்கு நான்தான் காரணம் என்று தெரிந்த போது.. கடவுளே..'' என்று கதறியவன் அவள் மடியில் படுத்து அழுது புலம்பினான்.

''அம்மாவுக்கு வந்தது மனசிதைவு. அதற்கு காரணம் நான் அவங்களை விட்டு விலகி விடுவேனோ என்ற பயம். அதை கொடுத்தது நான்தானே? தாம் மிக அதிகமாக நேசித்தவரின் திடீர் விலகல் அவரை கண்டதையும் எண்ணி தவித்தாரே? அந்த தவிப்பை நான் போக்க தவறி விட்டேன் தானே? என்னிடம் இருந்து என் அம்மா யார் என்ற உண்மையை மறைத்து

விட்டோம் என்றதில் அவருக்கு வந்த குற்ற உணர்வு. தனக்கு ஒரு குழந்தை பிறக்கவில்லையே என்ற நிறைவேறாத ஆசை. அதனால் வந்த ஏமாற்றம். சமூகத்தில் அவருக்கு ஏற்பட்ட அவமானம், புறக்கணிப்பு, இதெல்லாம் சேர்ந்து, அன்று அம்மா தன்னால் இந்த உலகில் யாருக்கும் பிரயோஜனம் இல்லை என்ற முடி விற்கு வந்து தற்கொலை செய்து கொள்கிற அளவுக்கு போனது என்னால் ப்ரியா..'' என்று சொல்லி அவன் கதறி அழுதவனை தேற்ற முடியாமல் தவித்து போனாள் தர்ஷினி.

''பிரேம் என்ன இது? எப்பவோ நடந்ததை போய் இப்ப நினைச்சு மனசை குழப்பிக்கிட்டு சின்ன குழந்தை மாதிரி அழலாமா? இப்பதான் எல்லாம் சரியாகிடுச்சே? உங்களால் அம்மாவுக்கு அப்படி ஆச்சு என்று ஏன் நெகடிவா நினைக்கறீங்க? அதனால் தான் அம்மா உங்க மேலே வச்சு இருக்கும் அளவில்லாத அன்பு வெளியே தெரிய வந்தது என்று பாசிடிவா நினைச்சு பாருங்க. இப்ப அவங்க சந்தோஷமா இருப்பதற்கு காரணம் நீங்களும், நீங்க அவங்க மேலே வச்சு இருக்கும் இந்த அன்பும்தானே? நீங்கதான் அவங்களுக்கு நோய் கொடுத்தீங்க என்று நினைக்காமல் நீங்கதான் அவங் களுக்கு மருந்தா இருக்கீங்க என்று நினைச்சு பாருங்க. நீங்க அழுதால் எனக்கு என்னவோ மாதிரி இருக்கு ப்ரேம். ப்ளீஸ் சியர் அப் பிரேம்..'', என்று மடியில் சரிந்த வனை நிமிர்த்தி, கண்களை துடைத்து தேற்ற அவன் பலவீனமாக புன்னகை செய்தான்.

''உண்மைதான் ப்ரியா. நடந்தது எல்லாம் நன் மைக்கே என்று தான் எடுத்து கொள்ள வேண்டும்.

அழுத்தி மெல்ல அவனின் முதுகை வருடி, ''ப்ரேம். ரிலாக்ஸ். நடந்து முடிந்து விட்ட எதையும் நம்மால் மாற்ற முடியாது. ஆனால், இனிமேல் வரும் காலம் நம் கையில் தான் இருக்கு. அதை சந்தோஷமாக கழிக்க நம்மால் முடிந்த எல்லா முயற்சியும் செய்யலாமே?'' என்று அமைதிபடுத்த முயன்றாள் தர்ஷினி.

''அன்று நான் காலேஜில் படிப்பை முடித்து பட்டம் பெறும் உற்சாகமான கன்வகேஷனுக்கு அப்பாவையும் அம்மாவையும் வர சொல்லி வருவார்கள் என்று அவ் வளவு ஆவலாக எதிர்பார்த்து இருந்த போது அவங்க ரெண்டு பேருமே வரவில்லை. அவர்களோடு சண்டை போட வேண்டும் என்று ஆவேசமாக வீட்டிற்கு வந்த போதுதான் அம்மாவின் பிரச்னை புரிந்தது. அதுவும் மணிக்கட்டில் வெட்டி கொண்டு உயிருக்கு போராடும் நிலையிலும் மருத்துவ சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு கூட செல்லாமல், என்னை பார்க்கவேண்டும் என்று பிடிவாதத்தோடு இருந்த அந்த மாதிரி ஒரு நிலையில் அம்மவை பார்ப்பேன் என்று நான் நினைத்து கூட பார்க்கவில்லை. அந்த நிலைக்கு நான்தான் காரணம் என்று தெரிந்த போது.. கடவுளே..'' என்று கதறியவன் அவள் மடியில் படுத்து அழுது புலம்பினான்.

''அம்மாவுக்கு வந்தது மனசிதைவு. அதற்கு காரணம் நான் அவங்களை விட்டு விலகி விடுவேனோ என்ற பயம். அதை கொடுத்தது நான்தானே? தாம் மிக அதிகமாக நேசித்தவரின் திடீர் விலகல் அவரை கண்டதையும் எண்ணி தவித்தாரே? அந்த தவிப்பை நான் போக்க தவறி விட்டேன் தானே? என்னிடம் இருந்து என் அம்மா யார் என்ற உண்மையை மறைத்து

விட்டோம் என்றதில் அவருக்கு வந்த குற்ற உணர்வு. தனக்கு ஒரு குழந்தை பிறக்கவில்லையே என்ற நிறைவேறாத ஆசை. அதனால் வந்த ஏமாற்றம். சமூகத்தில் அவருக்கு ஏற்பட்ட அவமானம், புறக்கணிப்பு, இதெல்லாம் சேர்ந்து, அன்று அம்மா தன்னால் இந்த உலகில் யாருக்கும் பிரயோஜனம் இல்லை என்ற முடி விற்கு வந்து தற்கொலை செய்து கொள்கிற அளவுக்கு போனது என்னால் ப்ரியா..'' என்று சொல்லி அவன் கதறி அழுதவனை தேற்ற முடியாமல் தவித்து போனாள் தர்ஷினி.

''பிரேம் என்ன இது? எப்பவோ நடந்ததை போய் இப்ப நினைச்சு மனசை குழப்பிக்கிட்டு சின்ன குழந்தை மாதிரி அழலாமா? இப்பதான் எல்லாம் சரியாகிடுச்சே? உங்களால் அம்மாவுக்கு அப்படி ஆச்சு என்று ஏன் நெகடிவா நினைக்கறீங்க? அதனால் தான் அம்மா உங்க மேலே வச்சு இருக்கும் அளவில்லாத அன்பு வெளியே தெரிய வந்தது என்று பாசிடிவா நினைச்சு பாருங்க. இப்ப அவங்க சந்தோஷமா இருப்பதற்கு காரணம் நீங்களும், நீங்க அவங்க மேலே வச்சு இருக்கும் இந்த அன்பும்தானே? நீங்கதான் அவங்களுக்கு நோய் கொடுத்தீங்க என்று நினைக்காமல் நீங்கதான் அவங் களுக்கு மருந்தா இருக்கீங்க என்று நினைச்சு பாருங்க. நீங்க அழுதால் எனக்கு என்னவோ மாதிரி இருக்கு ப்ரேம். ப்ளீஸ் சியர் அப் பிரேம்..'', என்று மடியில் சரிந்த வனை நிமிர்த்தி, கண்களை துடைத்து தேற்ற அவன் பலவீனமாக புன்னகை செய்தான்.

''உண்மைதான் ப்ரியா. நடந்தது எல்லாம் நன் மைக்கே என்று தான் எடுத்து கொள்ள வேண்டும்.

அளவிற்கு அதிகமான சிந்தனைக் குழப்பங்கள், பிடி வாதம், நினைவு தடுமாற்றங்கள், மித மிஞ்சிய கோபம், மவுனம் போன்ற மாற்றங்கள் அம்மாவிடம் ஏற்பட்ட போதே கண்டு பிடித்து சிகிச்சை எடுத்து இருக்க வேண்டும். ஆனால் நல்ல வேளையாக, காலம் கடப்ப தற்கு முன்பு கடைசி நேரத்திலாவது கண்டு பிடிக்க முடிந்ததே? அதற்கு சந்தோஷப்பட்டு கொள்ள வேண் டியதுதான். ரத்தம் சொட்ட சொட்ட அம்மா எனக்காக காத்து இருந்த அந்த நிமிஷம் என்னால் இன்னும் எத்தனை ஜென்மம் ஆனாலும் மறக்க முடியுமா தெரிய வில்லை. என் ரத்தமும் ஒத்துப்போக, அதையே அம்மா வுக்கு உடனே ஏற்றி, அவர் தேறி வீட்டுக்கு வர ஆன அந்த ஒரு மாதம் நாங்க பட்ட பாடு அந்த ஆண்டவன் மட்டுமே அறிவான். அதன் பிறகு, அம்மாவோடு அதிக நேரம் செலவழிப்பதும், அவரால் தான் இந்த குடும்பம் சிறப்பாக இருக்கிறது என்பதை வலியுறுத்தவும், அவரை கணினிக்கு பழக்கி அவரால் என்னென்னவோ சாதிக்க முடியும் என்று நம்ப வைத்து, அவரை இயல்புக்கு கொண்டு வந்து இருக்கிறோம். அதற்கு நான்கு ஆண்டு கள் பிடித்தது...''

''கிரேட் ஜாப் பிரேம். ஆனால் இப்ப அவங்களை பார்க்கும் யாரும் அவங்களுக்கு அப்படி ஒரு நோய் இருந்தது என்று சொன்னால் நம்ப கூட மாட்டாங்க...''

''முதல் நாலு வருஷம் நடுநடுவில், ஏதாவது பிரச் னையில் அவர்கள் உணர்ச்சி வசப்பட்டால் சின்ன சின்ன அத்து மீறல்கள் நடக்கும். ஆனால் பெரிதாக சேதம் என்றோ, மருத்துவமனைக்கு போகும் அளவுக்கு காயமோ ஏற்படவில்லை. தன்னிலை மறந்து சத்தம்

போட்டு கத்துவார்கள். அழுகை கொஞ்சம் அதிகமாக இருக்கும். சில மணி நேரத்தில் சரியாகி விடுவார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் அது கூட நடக்க வில்லை. அதனால்தான் இதை வெளியில் சொல்லவே வேண்டாம் என்ற முடிவிற்கு வந்தேன். இரவில் முழுமை யான தூக்கம், சரியான உணவு முறை. எப்போதும் யாருடனாவது அவர் பேசிப் பழகி கொண்டு இருக்கும்படி ஏற்பாடு செய்தது. காலை வேளை நடைப்பயிற்சி, இசையை கேட்கவும், நகைச்சுவை துணுக்குகளையும் பார்க்க பழகியது, கூடவே வேளாவேளைக்கு மருந்துகள், தொடர்ந்து உற்சாகமான மனநிலையில் அவரை வைத்து இருப்பது இப்படி எல்லாம் சேர்ந்த திட்டமிடல் தான் அம்மாவை இன்றைய நிலைக்கு கொண்டு வந்து இருக்கிறது..''

''அம்மாவை உற்சாகமாக வைக்க என்று நீங்க அவங்க சொல்வதற்கு எல்லாம் ஆமா சொல்வது மாதிரியும் தெரியலையே? நீங்க நிறைய சண்டை போடுறீங்களே? அது ஏன்?''

''இதுவும் டாக்டர் அட்வைஸ் தான். ரொம்ப பொத்தி பொத்தி வைக்கக் கூடாது. அப்புறம் வெளி உலகத்தை அவர்களால் எதிர்கொள்ள முடியாது. படிப்படியா நீங்களே உங்க வீட்டுக்குள்ளேயே எதிர்ப்புகளை கொடுத்து அதை அவங்களை ஏற்றுக்கொள்ள வைங்க என்று சொன்னார். அதனால் அப்பா அம்மா என்ன சொன்னாலும் சரி என்று சொல்வார். நான் அம்மா சொல்வது சரியாக இருந் தாலும், அதற்கு மாற்று கருத்துக்களை சொல்வேன். சின்ன விவாதத்திற்கு பின் அதை நான் ஒத்து

கொள்ளும்போது, அவர்களுக்கு ஒரு வென்ற உணர்வு வரும். மனதில் உற்சாகம் கூடும். அதே சமயம், தனக்கு மாற்றான அபிப்ராயங்கள் இருக்கக் கூடும் என்ப தையும் அவர்களின் மனதில் பதிய வைத்தோம். இது ஒரு மனவியல் ரீதியான அணுகுமுறை. இன்று வரை அதேதான். அதை தான் என் திருமணத்திலும் கடை பிடித்தேன். உன் விஷயத்தில் நான் சொல்லாமலே அவங்க எப்படி கண்டு பிடித்தாங்க என்று தெரிய வில்லை?'' என்று ஆச்சரியமாக சொன்னான் ப்ரேம்.

''அது எப்படி என்று எனக்கு தெரியும்..'', என்று அவள் சஸ்பென்ஸ் வைத்து விழி விரிக்க அவன் ஆச்சரியமாக பார்த்தான்.

''எனக்கே அம்மா என்ன நினைச்சாங்க என்பது தெரி யாத போது உனக்கு எப்படி தெரியும்?''

''அதுக்கு காரணம் இருக்கு சார். நீங்க உங்க காதலை உங்க அம்மாவிடமும் சொல்லலை. என்னிடமும் சொல்லலை. ஆனால் உங்க சிஸ்டம் பூரா சத்யா கல் யாண போட்டோஸ். அதுவும் பொண்ணு மாப்பிள்ளை கூட சைடா ஓரம் கட்டி இருக்கும் அழகு அழகான போட்டோஸ் வச்சு நிரப்பி இருந்தால். அதை பார்க்கிற எல்லோருக்கும் புரியும். சும்மா சாதாரணமா ஒரு பார்வை பார்க்கிற வெளி மனுஷங்களுக்கே புரியும் போது, உங்களை அக்கு வேறு ஆணி வேறா அலசி வச்சு இருக்க உங்க அம்மாவுக்கு புரியாமல் இருக்குமா?'' என்று கேலியாக கண் சிமிட்டி கேட்ட நேரத்தில் முகம் சிவந்து அவன் சிரித்த அழகு முகம் அவள் நெஞ்சில் அழுத்தமாக பதிந்தது.

''அது.. நான் வீடியோ மிக்சிங்குக்கு..'', என்று தெளி வில்லாமல் ஆரம்பித்த கூச்சமான குரல் அவளின் சிரிப்பில் தானாக நின்று போனது.

''உங்க தொழில் தொடர்பான வேலை எல்லாம் நீங்க லேப் டாப்பில் தான் பண்ணுவீங்க என்பது இந்த வீட்டுக்கு வந்து ஒரு மாசமான எனக்கே தெரியும்போது, இருபத்தி எட்டு வருஷமா உங்க கூட இருக்கும் எங்க அம்மாவுக்கு தெரியாதா? லூசு..'', என்று சிரித்தவளை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டவன், அவள் காதுகளில், நீ முதல் முறை வந்த போது பாஸ்வேர்ட் என்ன என்று கேட்டாயே? அப்ப என்ன வச்சு இருந்தேன் தெரியுமா?'' என்று கிசுகிசுப்பாக கேட்டான்.

''என்ன ப்ரேம் லவ்ஸ் ப்ரியாவா?'' என்று கேலியாக கேட்டாள்.

''அந்த அர்த்தம் தான். ப்ரேமிற்கு ப்ரியமானவள். அப்பதானே சஸ்பென்ஸ் தொடர்ந்து வச்சுக்க முடியும். அந்த சிஸ்டம் அம்மாவும் யூஸ் பண்ணுவாங்களே?'' என்று அவன் கேட்க அவள் விழுந்து விழுந்து சிரித் தாள்.

''ஆஹா! எவ்வளவு பெரிய சஸ்பென்ஸ்? உங்க அம்மாவால் எப்படி கண்டு பிடிக்க முடியும்? இதுல அவங்க எப்படி கண்டு பிடிச்சாங்க என்று கேள்வி வேற கேட்கறீங்களா?'' என்று அவள் சத்தமாக சிரித்த வேளை யில், ''ப்ரேம் ஒரு நிமிஷம் கீழே வரியா?'' என்று கீழே இருந்து நந்தகோபாலின் குரல் கேட்ட உடன் துள்ளி எழுந்தான் பிரேம்குமார்.

அப்பாவின் குரலில் பதட்டம் துளி கூட இல்லை என்றாலும் ப்ரேமால் அதை சாதாரணமாக எடுத்து

கொள்ள முடியவில்லை. அவசரமாக எழுந்தவன் படி களை இரண்டிரண்டாக தாவி வர, அவன் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை என்றாலும் வேகமாகவே பின் தொடர்ந்தாள் தர்ஷினி.

அம்மா கணினி முன்னால் அமர்ந்து இருக்க, அவரின் அருகில் எதையோ தேடியபடி குனிந்த வாக்கில் நின்று இருந்த நந்தகோபாலை பார்க்க ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும் அம்மாவிற்கு எந்த பிரச்னையும் இல்லை என்பதில் அவசரமாக ஒரு நிம்மதி பெருமூச்சை இரு வருமே வெளியேற்றினார்கள்.

''என்னம்மா சிஸ்டம் முன்னாடி இந்நேரத்துல என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க? உங்களை ரெஸ்ட் எடுக்க சொல்லிட்டு தானே நாங்க போனோம்? காலையில் பார்க்க முடியாத அளவுக்கு அப்படி என்ன அவசரம்'', என்று கேட்டபடி அருகில் வந்த தர்ஷினி யசோதாவின் தலையை வருடியபடி கணினி திரையில் பதித்த பார் வையை அவளால் விலக்கி கொள்ள முடியவில்லை.

''எதுக்குப்பா கூப்பிட்டீங்க?'' என்றபடி அருகில் வந்த பிரேமின் கண்கள் அப்பாவின் மீது இருந்ததால், தர்ஷினியின் வியப்பையும் சந்தோஷத்தையும் அவன் கவனிக்கவில்லை.

''இந்த பிரிண்டர் எப்படி ஆன் பண்றது? கொஞ்ம் சரி பண்ணி கொடு...''

''ராத்திரி ஒன்பது மணிக்கு அவசரமா என்னப்பா பிரிண்ட் எடுக்க போறீங்க?'' என்று கேட்டபடி கணினி திரையில் பார்வையை பதித்தவனின் முகம் பூவாக மலர்ந்தது. அவசரமாக தர்ஷினியை திரும்பி பார்த்தால் அவள் முகம் வியப்பின் எல்லையை தொட்டு இருந்தது.



30

அம்மாவிற்கு இரவு உணவை கொடுத்து விட்டு ரெஸ்ட் எடுக்க சொல்லி விட்டு மாடிக்கு போன சி நிமிடங்களில் அவர்கள் கணினி முன்பு அமர்ந்து தே கொண்டு இருந்த பாஸ்போர்ட் விண்ணப்பம் ஆ லைனில் சமர்ப்பிப்பது தொடர்பாக தேடி கொண்டு இரு தை பார்த்ததும் பிரேமிற்கும் தர்ஷினிக்கும் சந்தோஷ ஊற்றாக பெருகி ஓடியது.

அம்மா சொன்னது வெறும் வாய் வார்த்தையா இருக்கலாமோ என்ற சந்தேகம் இல்லா விட்டாலு இந்த அவசரம் பிரேம் எதிர்பார்க்கவில்லை. அப்பாவி பேச்சை கேட்டு இந்த வீட்டிற்குள் அவள் அடி எடு வைத்தபோது அவள் காதில் விழுந்த வார்த்தை அவள் மனதை குளிர்வித்து, யசோதாவின் மே அன்பை பெருக்கியது உண்மைதான். ஆனாலும் சொன் சொல்லை காப்பாற்ற இந்த நேரத்தில் இவ்வள தீவிரமாக தேடுவார் என்பது அவளை மேலும் நெக்குரு நிற்க வைத்தது.

''என்னம்மா இது திடீர்ன்னு பாஸ்போர்ட் அப் கேஷன் எல்லாம்? யாருக்கு?'' என்று மலர்ந்த முக தோடு சந்தோஷமாக விசாரித்தான் பிரேம்.

''என்னடா கேள்வி? என்னால எல்லோருக்கும் வளவோ பயன் இருக்கு என்று சொல்லி என்னை எழு

உட்கார வச்சால் போதுமா? என்னால் என் மருமகளுக்கு என்ன பிரயோஜனம் என்று நான் யோசிக்க வேண்டாமா? அதுக்கு தான் பாஸ்போர்ட். எனக்கு தான். என்னவோ தட்கல் ஸ்கீம்ல பத்து நாளில் பாஸ்போர்ட் வாங்கலாமாமே? அதுக்குதான் விண்ணப்பம் பார்த்து எடுத்துட்டு இருக்கேன். விண்ணப்பம் நிரப்பி வச்சுட்டா, டைம் வேஸ்ட் பண்ணாமல் நாளைக்கு காலையிலேயே கொண்டு போய் கொடுத்து விடலாம் பாரு. அவளோட துணைக்கு நான் கூடவே இருக்கேன். நீ நடுவில் ஆடி மாசம் அதிகம் வேலை இல்லாத போது ஒரு முறை வா. நாங்க நடுவில் ஒரு முறை வந்தால் ரொம்ப நாள் பிரிந்து இருந்த மாதிரி தெரியாது. ஆறு மாசம் நிமிஷமா ஓடிடும்''. என்று யசோதா அடுக்க, அவரின் பேச்சில் நெகிழ்ந்து போய் தர்ஷினியின் கண்களில் நீர் பெருகி வழிய ஆரம்பித்தது.

''அம்மா நிஜமாவா சொல்றீங்க? நீங்க என்னோடு வரீங்களா? இங்கே பிரேமும் அப்பாவும் சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவாங்க?''

''இதென்ன நிஜமா பொய்யா என்று கேட்கிற? அவங்களுக்கு என்ன? ரெண்டு பேருக்கும் சமைக்க தெரியும். வெளி வேலை வீட்டை விட்டு போக வேண்டியது என்று தனியா எதுவும் இல்லை. உனக்கு தான் ஆபீஸ் வேலை. சின்ன பொண்ணு. மாசமா வேற இருக்க. உனக்குத்தான் இப்ப அவசியம் துணை வேண்டும். உங்க அம்மா வந்தால் சத்யாவுக்கு யார் பார்ப்பா? அதுவும் போக நீயே சொன்ன மாதிரி உங்க அப்பாவுக்கு சமையல் கட்டு எந்த பக்கம் இருக்கு என்று கூட தெரியாது. அவர் என்ன பண்ணுவார்? அதனால்

நான் வரதுதான் இருப்பதிலேயே ஈசி. எல்லோருக்கும் குறைந்த பட்ச கஷ்டம் கொடுக்கக் கூடியது. நாம் ரெண்டு பேரும் கொஞ்ச நாள் சந்தோஷமா தனி குடித்தனம் நடத்திட்டு வரலாம். உன்னை நான் என் பொண்ணு மாதிரி கண்ணுக்குள்ளே வச்சு பார்த்துப்பேன். நீ கவலை படாதே.''

''இல்லைம்மா, பிரேமிடம் நான் சிங்கப்பூர் போகலை என்று சொல்லலாம் என்று இருந்தேன்...''

''ச்சே ச்சே, அதெல்லாம் வேண்டாம். நீயே சொன்ன மாதிரி இது அபூர்வ சான்ஸ் என்றால் அதை ஏன் மிஸ் பண்ணனும்? நீ எங்களுக்காக இந்த ட்ரிப்பை விட்டுடலாம் என்று நினைக்கும் போது நான் உனக்காக, என்னோட செல்லக் குட்டி பேரக் குழந்தைக்காக இதை செய்ய மாட்டேனா? நான் முடிவு பண்ணிட்டேன். இனிமேல் அதை யாராலும் மாற்ற முடியாது...'', என்று தீர்மானமாக சொல்ல மூவரும் கண்கலங்கி நின்றனர்.

''ஒரு நல்ல விஷயம் சொன்னால்... ஒண்ணு இல்லை ரெண்டு நல்ல விஷயம் இருக்கும்போது மூணுபேரும் கண்ணுல தண்ணியோடு நின்னுகிட்டு இருக்கீங்க? மருமகளுக்கு ஒரு ஸ்வீட் செஞ்சு தரலாம் என்று தோணுதா? ஏதாவது உடனே செஞ்சு எடுத்துட்டு வாங்க'', என்று விரட்ட பிரேம் கண்களை துடைத்துக் கொண்டு பிரிண்டருக்கு இணைப்பு கொடுக்க நந்த கோபால் உள்ளே சென்றார்.

''ம்மா.. ஐ லவ் யூம்மா.'' என்று அணைத்துக் கொண்ட தர்ஷினியின் கண்களில் கண்ணீர் வழிய, ''ஷ்! இப்ப எதுக்கு அழுகை. உன் கண்ணுல இனி ஒரு சொட்டு

கண்ணீர் பார்த்தேன் உன்னை இல்லை, பிரேமை அடி பிச்சுடுவேன். பிரேமிற்கு அடி விழவேண்டாம் என்று நினைத்தால் இனிமேல் அழக்கூடாது'', என்று அதட்டிய வரின் மனம் அவரின் ஆசைகள் நிறைவேறி விட்ட சந்தோஷத்தில் மலர்ந்து இருந்தது.

''அப்பா இந்நேரத்துக்கு மேலே நீங்க அடுப்படியில் நிற்க வேண்டாம்பா. அஞ்சே நிமிஷத்துல நான் அவ ளுக்கு ரொம்ப பிடிச்ச ஸ்வீட் வாங்கி வந்து விடுகிறேன். நாளைக்கு நீங்க பண்ணி கொடுங்க''. என்று பிரேம் கிளம்ப மூன்று பேருமே தடுத்தனர்.

''பைக்கில் போனால் ரெண்டே நிமிஷம். இதோ வந் துடுறேன்...'', என்று சிரித்தபடி சொன்னவன் கண்களில் தர்ஷினிக்கான பிரத்யேகமான சேதி இருந்ததால், அவள் சிரிப்போடு வாயை பொத்தி கொள்ள, அவன் கிளம் பினான்.

ஐந்தே நிமிடத்தில் ஸ்வீட் பாக்ஸோடு வந்தவன், முதலில் யசோதாவிடம் நீட்ட, ''எனக்கு எதுக்குடா, முதலில் அவளுக்குத்தான் கொடுக்கணும்'', என்று அதில் ஒரு துண்டை எடுத்து ஊட்டிவிட, அடுத்து நந்த கோபால் தொடர்ந்தார்.

''பாஸ்போர்ட் அப்ளிகேஷன் நான் பில் பண்ணி வைக்கிறேன். நீங்க படுத்து நிம்மதியா தூங்குங்க..'' என்று பிரேம் சொல்ல யசோதா இடையிட்டார்.

''நீங்க ரெண்டு பேரும் இன்னும் சாப்பிடவே இல் லையே? நான் தோசை ஊற்றி கொடுக்கட்டுமா?'' என்று எழுந்த அம்மாவை ஒரு விரல் காட்டி மிரட்டி னான்.

''நானும் என் மனைவியும் கொஞ்ச நேரம் தனியா பேசணும். நீங்க சும்மா சும்மா குறுக்கே வந்து தொந்தரவு பண்ண வேண்டாம். காலையில் ஆறு மணி வரைக்கும் உங்க ரூமை விட்டு வர உங்களுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இது எங்க ஏரியா. உள்ளே வராதீங்க. ரெண்டு பேரும் ஓடுங்க உங்க ரூமுக்கு'', என்று ஒரு கையை காட்டி அவன் கேலியாக சொல்ல, நந்தகோபால் பேச்சின்றி சிரிப்போடு செல்ல, யசோதா வந்து தர்ஷினியின் கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்தார்.

''உனக்கு ஏதாவது வேண்டும் என்றால் என்னிடம் சொல்லு. ஓடு ஓடு, என்று விரட்டும் இந்த சிடுமூஞ்சி யிடம் சொல்ல வேண்டாம். நான் பண்ணி தரேன்'', என்று கண் சிமிட்ட, தர்ஷினி அவரை கட்டி அணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

''அங்க பாரு அவனுக்கு வயிறு எரியுது. அவனுக்கு கொஞ்சம் மிச்சம் வச்சுக்கோ...'' என்று அவளின் கன் னத்தில் தட்டி விட்டு யசோதா அவரின் அறைக்கு செல்ல, அவன் சிரித்தபடி அடுப்படிக்குள் சென்றான். பேச்சு இல்லாமல் சந்தோஷ சிரிப்புடன், தோசை ஊற்றிய பிரேம், ''சாப்பிடு ப்ரியா..'', என்று சொல்ல, அவனை திரும்பி முறைத்தாள் தர்ஷினி.

''என்ன அப்படி முறைச்சு பார்க்கிற?'' என்று புரி யாமல் விழித்தான்.

''சாயங்காலம் சண்டை போடும்போது என்ன சொன் னீங்க? அதுக்குள்ள மறந்தாச்சா?'' என்று இடுப்பில் கை வைத்து முறைத்தபடி கேட்டாள் தர்ஷினி.

''என்ன சொன்னேன்? எது சம்பந்தமா? புரிய லையே?''

''ப்ச்! அம்மாவையும் என்னையும் கம்பேர் பண்ணி என்ன சொன்னீங்க?''

''என்ன சொன்னேன்? ரெண்டு பேரும் எனக்கு ஒண்ணுதான் என்று சொன்னேனே? அதையா கேட் கிறாய்?'' குழப்பத்தோடு விளக்கம் கேட்டான்.

''சரியான டியூப் லைட். அதைதான் சொன்னேன்.''

''அதுக்கு என்ன? அதுல கோபப்பட என்ன இருக்கு புரியலையே?''

''ஹாஆஆஆஆஆ! எனக்கு வர கடுப்புக்கு..''

''ஹேய்! நிஜமாவே புரியலை. சாரி, வார்த்தையால் சொன்னால் போதுமா? இல்லை தோப்பு கரணம் போடணுமா? நீ என்ன கேட்டாலும் இனிமேல் மறுத்து பேசுவதில்லை என்று முடிவு பண்ணி விட்டேன். இந்த ஒரு வாட்டி சொல்லும்மா. ப்ளீஸ், என் செல்லம் இல்ல...'' என்று அவளின் தாடையை பிடித்து கொஞ்ச அவளின் முகம் இளகியது.

தோசையையும் பொடியையும் ஒரு தட்டில் வைத்து அவனிடம் நீட்டியவள், ''உங்க அம்மாக்கு மட்டும் அங்கே ரூமில் ஊட்டி விட்டீங்க. எனக்கு மட்டும் விரோ திக்கு சொல்ற மாதிரி சாப்பிடு ப்ரியாவா? அதெல்லாம் முடியாது. உங்க வார்த்தையை நீங்க காப்பாற்றியே ஆகணும். இந்த விஷயத்துல என்னால் விட்டு கொடுக் கவே முடியாது. சுப்ரீம் கோர்ட் போனாலும் என்னுடைய ரைட்சை விட்டு தர மாட்டேன் சொல்லிட்டேன்..'',

என்று தீவிரமான குரலில் அவள் சொல்ல அவளையே பார்த்தவன் முகம் அளவில்லாத காதலில் மலர்ந்தது.

''உன் மேல் கோபம் இல்லை. எனக்கு நீ என்றென்றும் வேண்டும்'' என்ற ஒரு மென்மையான விஷயத்தை கூட எவ்வளவு அதிகாரத்தோடு சொல்கிறாள்? இது தான் ப்ரியதர்ஷினி. இவள் என்னுடையவள். என்னை நேசிப் பவள். எனக்கு மட்டுமே சொந்தமானவள். மனம் எல்லை இல்லாத காதலில் மலர்ந்து மணம் வீசினாலும் வாய் வம்பு வளர்த்தது.

''விரோதி எல்லாம் வீட்டுக்குள்ளே கூப்பிட்டு உட் கார வச்சு சாப்பிடு என்று சொல்ல நான் ஒன்றும் கௌதம புத்தர் இல்லை ப்ரியா. எங்க அம்மா, எங்க அப்பா, என் பொண்டாட்டி, என் குழந்தை என்று அவங் களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு சாதாரண மனுஷன் நான்'', என்று சீண்ட, அவன் முதுகில் செல்லமாக ஒரு அடி வைத்தாள்.

''பேச்சை குறைடா பசிக்குது..'' என்று சிணுங்க, ''தோசை ரெடி சாப்பிடு..'' என்று அவனும் அவளை மாதிரியே சொல்லி காண்பித்தான்.

''வே..ண்..டா..ம்! இது வரைக்கும் செல்லமா கொஞ்சி பேசும் தர்ஷினிதான் பார்த்து இருக்க. என்னோட இன்னொரு டெரர்பேஸ் பார்த்தால் தாங்க மாட்ட..'', என்று சூப்பர் ஸ்டார் பாணியில் அவள் சொல்ல, அவளை அருகிழுத்து இடுப்பை வளைத்தவன், ''வேண்டாம் ப்ரியா ரொ..ம்..ப ப..ய..ம்..மா இருக்கு. நீ சொன்னதை உடனே செஞ்சுடுறேன்'', என்று நடுங்கிய குரலில் சொல்லி கண்சிமிட்டியவன், அவளின் கன்னத்தில் ஒரு

முத்தம் வைத்து ''ரூமிலே போய் சாப்பிடலாமா?'' என்று கிசுகிசுப்பாக கேட்டான்.

''ரூமுக்கு வேண்டாம் பிரேம். மாடிக்கு போகலாமா?'', என்று அவன் கேட்டதை விட சத்தம் குறைந்த குரலில் காதுக்குள் கிசுகிசுக்க, அவனால் மறுக்க முடியவில்லை.

கையோடு கொண்டு வந்த உணவை, 'நீ பாதி நான் பாதி' என்று பகிர்ந்து உண்டதில், வழக்கமாக அவர்கள் உட்கொள்ளும் உணவுக்கு மேலே வயிற்றுக்குள் தஞ்சம் அடைந்து இருந்தது.

''இன்னும் ஒண்ணு சாப்பிடு ப்ரியா..'' என்றவனை பார்த்து பதறினாள்.

''ஹய்யோ! போதும் ப்ரேம். வயிறு புல். ரொம்ப ஜாஸ்தி சாப்பிட்டுட்டேன் என்று நினைக்கிறேன்..'' என்று சிரிக்க, அவன் வயிற்றில் காது வைத்து கேட்டு விட்டு ''நீ போதும் என்று சொன்னால் எப்படி? என் குட்டி பொண்ணுக்கு இன்னும் வேண்டுமாம். இன்னொரு தோசை நெய் விட்டு சுட சுட முறுகலா ஊற்றி எடுத்துட்டு வரவா செல்லம்?'' என்று சொல்லியபடி மழலையின் இருப்பிடத்தில் இதழ் பதித்து கொஞ்சினான் ப்ரேம்.

''அதுக்குள்ளே பொண்ணு என்று முடிவு பண்ணி, நெய் தோசை கொடுக்க கூட்டணி வேற வச்சாச்சா?'' என்று செல்லமாக அவனின் உச்சியில் குட்டியவள், ''அவளுக்கு தோசை வேண்டாமாம். ஆனால்..'' என்று நிறுத்தினாள் தர்ஷினி.

''சாப்பாடு வேண்டாம் என்றால் வேறென்ன வேண்டும் ப்ரீ குட்டிக்கு?''

''அம்மாவும் அப்பாவும், எனக்கு ஸ்வீட் கொடுத்தாங்க. அப்கோர்ஸ் நீங்க வாங்கிட்டு வந்ததுதான். ஆனாலும் நீங்க எனக்கு ஸ்வீட் கொடுக்கவே இல்லை. அதனால் நானும் என் பொண்ணும் ரொம்ப ரொம்ப கோபமா இருக்கோம்'' என்று சொன்னவளின் கண்கள் சிரித்தது.'''ஓ! ப்ரியா கோபமா இருக்கீங்களா? கோபத்தை காட்ட என்ன செய்யப் போறீங்க?'' என்று கொஞ்சியவன் விரல்கள் அவளின் கன்னத்தை வருடி இதழ்களுக்கு இறங்க, ஒரு விரலை அவசரமாக கடித்தாள்.

''இதுதான் கோபத்தின் வெளிப்பாடா ப்ரீ குட்டிக்கு?''

''அதுதான் ஆரம்பம்..''

''அப்ப அடுத்த ஸ்டேஜ் என்னவோ?''

''சன்ஷேடில் சாப்பிடாமல் சத்தியாக்ரகம்.. அட! தலைப்பு நல்லா இருக்கு இல்ல?'' என்று கண் சிமிட்டியவள் அவனின் கன்னத்தில் மென்மையாக முத்திரை பதித்தாள்.

''வார்த்தை விளையாட்டில் எதுகை மோனையோடு பேசுவது நல்லாத்தான் இருக்கு. ஆனால் செயல்தான் அவ்வளவு சந்தோஷமா இல்லை. விளையாட்டுக்கு கூட அந்த மாதிரி எல்லாம் இனி சன்ஷேடில் இறங்கும் வேலை வச்சுக்காதே, புரிஞ்சுதா?''

''புரிஞ்சுது. நீங்க இந்த சாப்பாட்டு தட்டை கீழே கொண்டு போய் போட்டுட்டு நீங்க எனக்காக ஸ்பெஷலா வாங்கி வந்ததை எடுத்துட்டு வரீங்களா?'' என்று கொஞ்ச அவன் சிரித்தான்.

''நான் என்ன உனக்காக வாங்கி வந்தேன்? ஏதாவது கனவு கண்டாயா என்ன?''

''ஏன் இந்த திருட்டு புத்தி? சீக்கிரம் போய் எடுத்துட்டு வா ப்ரேம் கண்ணா. ஐஸ்க்ரீம் வேணும். அதுவும் அப்பா ஆசை ஆசையா ஊட்டி விடுற வெனில்லா ஐஸ்க்ரீம் வேண்டுமாம். உங்க பொண்ணு காலை உதைச் சுட்டு அழறது தெரியலையா?'' என்று பாவனையோடு உரிய ஏற்ற இறக்கங்களோடு சொல்ல அதற்கு மேல் அவனால் தாக்கு பிடிக்க முடியவில்லை.

''ஒரே நிமிஷம். இதோ எடுத்துட்டு வரேன்,'' என்று சொல்லி விட்டு ஓடியவன் வேகமாக ஐஸ்க்ரீம் கப்புடன் திரும்பி வந்தபோது அவளை காணவில்லை.

''ஹேய் ப்ரியா அதுக்குள்ளே எங்கே போய்ட்ட?'' என்று கேட்டபடி சுற்றிலும் பார்வையை ஓட்டும் போது மின்னல் அடித்தது. கடவுளே இவளை எதையாவது செய்யாதே என்று சொன்னால் அதை கட்டாயம் செய்து விடுவாள் போல இருக்கே என்று எண்ணியபடி குனிந்து பார்த்தான். சன்ஷேடில் கால்களை கீழே தொங்க போட்டு ஆடியபடி அமர்ந்து அவனை பார்த்து கண் சிமிட்டி சிரித்தாள்.

''கம்..கம்..'' என்று அவள் கை அசைத்து கூப்பிட, ஒரு கணம் யோசிக்காமல் அவனும் இறங்கி விட்டான். ஒரு கப் ஐஸ்க்ரீமை உருகி உருகி கொஞ்சி பேசியபடி இது நான் உனக்கு தருவது. இது நான் என் பெண்ணுக்கு தருவது. இது நான் என் பிரேமுக்கு தருவது. இது என் பொண்ணு அவங்க அப்பாவிற்கு தருவது. என்று மாறி மாறி கதை பேசி ஐஸ்க்ரீமை உண்டு முடித்த பின்புதான்

உறைத்தது. இருவரும் சன்ஷேடில் இருந்தால் எப்படி மேலே ஏறுவது?

அன்று தான் மேலே இருந்ததனால் அவளை தூக்கி விட்டோம். 'இப்போ என்ன பண்ண' என்று யோசித்த வனுக்கு இவள் தன்னை எப்படி யோசிக்க விடாமல் முழு பைத்தியமாக மாற்றி விட்டாள் என்று சந்தோஷம் தோன்றிய அதே நேரம், இப்போது பத்திரமாக கீழே இறங்க வேண்டிய அவசியமும் உறைத்தது.

''ப்ரியா பைத்தியமே! இந்த சன்ஷேடிற்கு ஒரு படிக்கட்டு சீக்கிரமே நிரந்தரமா கட்டிடுறேன். நாளைக்கே ஒரு ஏணி வாங்கி வச்சுடுறேன். ஆனால் இனிமேல் இதுல தயவு செஞ்சு இறங்காதே தாயே. முதலில் எனக்கு ப்ராமிஸ் பண்ணி கொடு'' என்று கை நீட்டினான்.

சிரித்தபடி அவன் கையில் தன் கை வைத்து அழுத்தியவள். ''ஓகே உங்களுக்காக ப்ராமிஸ் பண்றேன். உங்க குட்டி பொண்ணு பத்திரமா வெளியே வரும் வரைக்கும் இந்த சன்ஷேடில் இறங்க மாட்டேன்'', என்று சொல்லி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''ஹய்யோ பாவம் உன்னை உங்க அம்மா எப்படித் தான் வச்சு சமாளிச்சாங்களோ? உன் பொண்ணும் உன்னை மாதிரியே வாலாக இருந்தால் நான் ரெண்டு வாலை வச்சு சமாளிக்கணும்'', என்று கொஞ்சலாக சலித்தவன் கீழே குதித்தான்.

பிரேம்குமாரின் வாய் பொய்யாக சலித்து கொண்டாலும், அவன் கரங்கள் விரிந்து, கண்கள் காதலோடு அழைப்பை விடுக்க, மேலே இருந்து குதித்தவளை ஒரு பூங்கொத்தாய் தாங்கி, வாரிசை தாங்கும் மனைவியை

மார்போடு சேர்த்து அணைத்து கொண்டான். அந்த அணைப்பு மேலும் இறுகும்போது அவனின் மொபைல், 'மாங்கல்யம் தந்துனானே மமஜீவ ஹேதுநா..'' என்று முழங்க அந்த செல்போன் இசையுடன் அவர்களின் சிரிப்பொலியும் இணைந்து கொண்டது. இந்த சிரிப்பு என்றென்றும் நிலைத்திருக்க முப்பது முக்கோடி தேவர் களும் அருள் புரியட்டும்.

